# மே17 இயக்கக் குரல்

www.may17iyakkam.com

தமிழின புலிசார் அரசியல் செய்தி இதழ்

குரல்: 03 முழக்கம்: 05 திருவள்ளுவராண்டு 2051 திங்களிதழ் (தனிச்சுற்றுக்கு) பக்கங்கள் 131 நன்கொடை ரூ. 20

மின்னிதழ் வடிவம்

சித்திரை–வைகாசி / மே 2020

பக்கம்

# பொருளடக்கம்


03 **கருத்துப்படம்**

04 **அஜித்ராம் பிரேமிள் – கவிதை**

05 **அஜித்ராம் பிரேமிள் – சிறுகுறிப்பு**

06 **மறுக்கப்படும் தமிழினப் படுகொலைக்கான நீதி**

09 **அவதூறுகளுக்கு மறுப்பு**
ப்ரெமன் தீர்ப்பாயம் தொடர்பாக மே 17 இயக்கத்திற்கு எதிராக சொல்லப்பட்ட அவதூறுகள் மீதான அறிக்கை

14 **'வெள்ளை' மாளிகையை நடுங்கவைத்த கருப்பின எழுச்சி**

16 **ஈழம் ஏகாதிபத்தியங்களின் ஆடுகளம்**

30 **அயோக்கிய அமெரிக்க தீர்மானமும் மே பதினேழு இயக்கமும்**

41 **தமிழினப் படுகொலையில் பங்கேற்ற நாடுகள்**

56 **புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்தப் போவதாக மத்திய அரசு அறிவிப்பு**
மே 17 இயக்கத்தின் கண்டன அறிக்கை

57 **இசுலாமியரும், தமிழீழப் போராட்டமும்**
தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் இசுலாமியச் சிக்கல்

62 **கொரோனா பேரிடர்**
நிவாரணப் பணியில் மே 17 இயக்கம்

65 **மேரி கொல்வின்**

72 **மாநில உரிமைகளை பறிக்கும் இந்திய அரசு**
இணையவழி போராட்டத்தில் மே17 இயக்கம்

74 **'பேரிடரிலும் தொடரும் ஈழத்துயரம்'**
கொரொனாவும் தொடரும் ஈழ இன அழிப்பும்

79 **இனப்படுகொலை எதிர்ப்பு ஓவியங்கள்**

90 **OBC பிரிவினரின் இட ஒதுக்கீட்டு உரிமைகளை பறிக்கும் ஆர்எஸ்எஸ்–பாஜக**
மே 17 இயக்கத்தின் கண்டன அறிக்கை

92 **மலேயா தொழிலாளர்கள், தமிழர்களின் எழுச்சிக்கு வித்திட்ட தோழர் 'மலேயா' கணபதி, தோழர் வீரசேனன்**

95 **தமிழீழ இனப்படுகொலைக்கான 11–ஆம் ஆண்டு நினைவேந்தல்**
பல்வேறு கட்சிகள் மற்றும் இயக்கங்களின் அறிக்கைகள்

103 **உயிரா? உரிமையா?**
கொரொனா வைரஸ் முன்வைத்து அரசுகள் கேட்கும் மனிதாபிமானமில்லா கேள்வி

109 **'கொரொனா' தொற்றுக்கான தீர்வைத் தேடி...**

117 **கொரோனா பெயரில் தனியார்மயம்**

123 **அரசுப்பணிகளில் புதிய பணியிடங்கள் உருவாக்க தடை**
மே 17 இயக்கத்தின் கண்டன அறிக்கை

124 **நிழல் போல் மாறும் கொரோனா கால கண்காணிப்பு தொழில்நுட்பங்கள்**







வரலாறு எம்மை விடுதலை செய்யும்



ஓவியம்: உஸ்மான் காதர் அகமது
குருதிஸ்தான்

## மானுடம்

ஒரு ஜூலை ஒன்பது நாள்
சிங்கள வெறியின்
குதறலில் சிக்கி
இலங்கையில் அலறிற்று
தமிழ்ச் சனம்.
அலறலைக் கேட்ட
உலகத்துக்கு
இலங்கைத் தமிழ்
விளங்கவில்லை.
ஆயினும் மானுடம்
ஒரே இனம்.
அலறல் மெஷின்கள்
உறுமலாய் மாறிற்று—
ஓர்ர்ரே பொணம்!


அஜித் ராம் பிரேமிள்



## (அஜித்ராம்) பிரேமிள்

'பிரமிள்' தமிழீழத்தில், திரிகோணமலையில் 1939இல் பிறந்தவர். தமிழீழம், தமிழ்நாடு என இரு தளங்களிலும் இயங்கிய படைப்புலக ஆளுமையாக விளங்கியவர். முன்னனி கவிஞராகவும், சிறுகதையாசிரியராகவும் ,விமர்சகராகவும், ஓவியராகவும், சிற்பகலைஞராகவும் அழியாத தடம் பதித்தவர். தமிழ்த்தேசபடைப்புலகின் முதன்மையான ஆளுமையாக விளங்கியவர். இவரது படைப்புகளை 'லயம் வெளியீடு' தொகுத்துள்ளது. இவரது 'சிறீலங்காவின் தேசிய தற்கொலை' எனும் கட்டுரை, 1984இல் எழுதப்பட்டிருந்தது. அன்று இருந்த இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கைப் பார்வையில் எழுதப்பட்டிருந்த போதிலும் இது தமிழீழ அரசியல் சார்ந்த, இலங்கை அரசியல் சார்ந்த தமிழ்–சிங்கள அரசியலை எவ்வித சார்புமின்றி விமர்சித்து எழுதப்பட்ட மிகமுக்கியமான கட்டுரையாக பார்க்கப்படுகிறது. இக்கட்டுரையை 'தமிழோசை பதிப்பகம்' 2009ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறது.

தமிழ்ப் படைப்புலகின் தனித்துவம் பெற்ற பிரமிள் 1997இல் மறைந்தார்.




தலையங்கம்

# மறுக்கப்படும் தமிழினப் படுகொலைக்கான நீதி

போர்ச்சுக்கீசு அரசாலும், டச்சு அரசாலும் பின்னர் இங்கிலாந்தினாலும் காலனியாக்கப்பட்ட இலங்கையில் தமிழர்களின் போராட்டம் கூர்மையானது. 1802இல் ஆங்கிலேயரின் கையில் வந்த தமிழீழமும், சிங்கள தேசமும் ஒன்றாக நிர்வகிக்கப்பட்டு இலங்கை என்றாக்கப்பட்டதிலிருந்து இன்று வரை தமிழர்கள் அரசுரிமை, அதிகாரமிழந்து இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்பட்டு வருகிறார்கள். இதை எதிர்த்த தொடர் போராட்டத்தின் ஒரு பெரும் அழிவாய் நம் கண்முன் முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நடந்தது. இந்த காலனியச் சுரண்டலுக்கான நிர்வாகக்கட்டமைப்பாக இன்றும் தொடர்கிறது இலங்கை எனும் நாடு. சுரண்டலை பாதுகாக்கும் கட்டமைப்புகள் அகற்றப்படாதவரை காலனியம் முடிந்ததாகச் சொல்லிவிட முடியாது. தனது காலனிய வணிகத்திற்கும், நலத்திற்குமான நிலப்பரப்பை இன்றளவும் பாதுகாத்து வருகிறது ஆங்கிலேயப் பேரரசின் எச்சமான இங்கிலாந்தும், அமெரிக்காவும். இந்தப் பெருங்கடலில் தனது பாதுகாப்பை, தனது ஆரிய இனவெறியை பாதுகாப்பதற்காக காற்றில் பறக்கவிட்டிருக்கிறது இந்தியப்பேரரசு. இந்த சர்வதேச இராணுவ-வணிக போட்டிக்கான சூதாட்டத்தில் தமிழர்களுக்கான நலனை பாதுகாப்பதில் தவறியதுமட்டுமல்லாமல், இந்தியப் பேரரசிற்கு தமிழீழத் தமிழர்களை காட்டிக்கொடுத்தும், தமிழகத் தமிழர்களை அடக்கி ஒடுக்கியும் சதிக்கு துணைபோன தமிழக அரசியல் ஆளுமைகளான திமுகவின் இந்திய



**ஏழைகள் ஒன்றாய்**
**இணைந்து விட்டால் – இங்கு**
**எஞ்சியுள்ளோர் நிலை என்ன மச்சான்?**
**சில பேழைவயிற்றுப் பெருச்சாளிகள் –**
**எதிர் காலத்தை எண்ணித் தெளிவாரடி**
**வல்லமையாலே வளம் பெறுவோம் –**
**பசித் தொல்லை அகலத்**
**தொழில் புரிவோம்!**

புரட்சி கவிஞர் பாரதிதாசன்

பார்ப்பனிய சரணாகதியை தமிழர்கள் என்றும் மறந்துவிடக் கூடாத அரசியல் பாடம். அரசியல்கட்சியிடம் தனது இறையாண்மையை அடகுவைக்கும் தற்கொலை அரசியலை தமிழர்கள் கைவிட வேண்டுமென்பதை அதிமுக-திமுகவின் இந்திய சார்பு நிலைப்பாடுகள் தொடர்ந்து நமக்கு அம்பலப்படுத்திய பொழுதிலும் தமிழர்கள் தொடர்ந்து சறுக்குகிறார்கள். அரசியல்கட்சிகளின் முதலமைச்சர் வேட்கை என்றுமே தமிழர்களை பலிகொடுத்தே நிகழ்ந்து வந்திருக்கிறது. இந்திய கட்டமைப்பிற்குள் தமிழர்களுக்கான அரசியல் உரிமையை பெற்றுக்கொடுப்பது பகல்கனவாகவே நீண்டிருக்கிறது. சக தொப்புள்கொடி உறவுகள் இனப்படுகொலைக்குள்ளாவதை தடுக்க இயலாத கட்டமைப்பிற்குள் வாழ்கிற தமிழகத் தமிழர்கள் தங்களை அரசியலாக வளர்த்தெடுத்துக் கொள்வதே அவர்களுக்கான எதிர்கால பாதுகாப்பு கவசமாகிறது.

காலனிய கட்டமைப்பினை உடைத்தெறியும் போராட்டம் தமிழீழத்தில் நீடித்துக் கொண்டிருக்கிறது. காலனிய ஆட்சி என்பது சனநாயகமற்ற, அனைத்து குடிமக்களுக்கான ஆட்சி அமைப்பு அல்ல. இப்படியான ஆட்சிமுறை அகற்றப்பட்டு மக்களுக்கான குடியாட்சி அவரவர் ஏற்படுத்திக்கொள்ள தேசிய இனங்களுக்கான உரிமை உண்டு என்பது சர்வதேச விதியாக காலனியத்திலிருந்து விடுபட உருவாக்கப்பட்டது. இந்த உரிமை அடிப்படை மனித உரிமையாகவும் பார்க்கப்படுகிறது. இப்படியான சுதந்திர உணர்ச்சியின் அடிப்படையிலான கோரிக்கை சனநாயகமானதே. தன்னாட்சி, சுயாட்சி என்பது முழுவதுமாக பொருளாதார இறையாண்மையோ, அரசியலான கட்டமைப்போ ஏற்படுத்த இயலாத சமயங்களில், அல்லது மக்களுக்கு வழங்கப்படும் ஆட்சி முறையாக அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. பழங்குடிகள், பூர்வகுடிகள், சிறுபான்மையினர் என பலவிதமான மக்கள் சமூகங்களுக்கு இந்தத் தீர்வுகள் முன்வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக அமெரிக்க கண்டங்களில் இத்தகைய தீர்வு பூர்வகுடிகளுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் முழுவளர்ச்சியடைந்த தேசிய இனங்கள் நிறைந்த ஆசியக் கண்டத்தில் சுயநிர்ணய உரிமை என்பது தமக்கான குடியாட்சியை ஏற்படுத்திக்கொள்ளும் அடிப்படை உரிமையாக உறுதிசெய்யப்படுவதே காலனிய நீக்கத்தினை நிறைவு செய்யும் போக்காகும். ஏகாதிபத்திய நலனுக்காக பாதுகாக்கப்படும் எந்த ஒரு அரசியல் கட்டமைப்பும் உடைத்தெறியப்படவேண்டியது என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க இயலாது.



ஆனால் இந்த அரசியல் சுயநிர்ணய உரிமையை தனது பிராந்திய நலனுக்காகவே ஏகாதிபத்தியம் இதுவரை பயன்படுத்தி வந்திருக்கிறது. தனது நலன்களுக்கு முரணான தேசிய இன உரிமைகளை முற்றிலுமாக மறுத்து வந்திருக்கின்றன ஏகாதிபத்திய நாடுகள். தமிழீழ இனப்படுகொலை நடந்த அதே காலகட்டத்தில் சூடானிலும் போர் நடந்து தெற்கு சூடான் மக்கள் பலியிடப்பட்டார்கள். தெற்கு சூடானின் விடுதலைக்குப் போராடிய மக்கள் மீது இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதாக மேற்குலகமும், ஐ.நாவும், மனித உரிமை அமைப்புகளும் குரல் கொடுத்த அதே சமயத்தில் தான் தமிழினப்படுகொலை குறித்து மௌனம் காத்தன. தெற்கு சூடானின் அரசியல் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு விடுதலையை அறிவித்தவர்கள், அதே 2008ஆம் வருடத்தில் நடந்த தமிழீழப்படுகொலைக்கு வேறுவிதமான தீர்வினை முன்வைத்தார்கள். சூடானின்

வளங்களை கொள்ளையடிக்கும் தனது திட்டத்திற்கு ஏதுவாக அரசியல்சுயநிர்ணய உரிமை என்பதை உறுதி செய்யும் பொதுவாக்கெடுப்பினை ஏகாதிபத்தியமும், அதன் தொங்கு சதையாக விளங்கும் ஐ.நா மன்றமும் அறிவித்தன. இதனால் தெற்கு சூடான் தனிநாடானது. ஆனால் இலங்கை நிகழ்த்திய இனப்படுகொலையை முற்றிலும் வெள்ளையடித்து மறைத்த இந்த நாடுகள், ஒன்றுபட்ட இலங்கையின் இறையாண்மையை பாதுகாக்க உறுதி பூண்டிருப்பதாக வெளிப்படையாக அறிவித்தன. இனப்படுகொலைக்குள்ளான தமிழீழ மக்களுக்கான அரசியல் சுயநிர்ணய உரிமையை முற்றிலுமாக மறுத்தன. இன்றுவரை மறுத்தும் வருகின்றன. தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விசாரணை நடத்த வேண்டுமென்று முன்மொழிந்த இந்நாடுகள், இசுரேல் பாலஸ்தீனத்தின் மீது 2009இல் நடத்திய தாக்குதலைக் கண்டித்து இருதரப்பின் மீதும் (அதாவது பாலஸ்தீன போராளிகள், இசுரேல் இராணுவம்) சர்வதேச விசாரணை வேண்டுமென்று முடிவெடுத்தன. ஆனால் இதைவிட மோசமான இனப்படுகொலை, போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றம் புரிந்த இலங்கை இராணுவத்தின் மீது எவ்விதமான சர்வதேச விசாரணையையும் இந்நாடுகள் அறிவிக்கவில்லை. அமெரிக்க அரசு இலங்கையில் ஆட்சி மாற்றம் கொண்டு வர ஒரு தீர்மானத்தை ஐநா மனித உரிமை அவையில் கொண்டுவந்தது. அன்றிலிருந்து தொடர்ந்து தமிழீழ புகைப்படங்கள், காணொளிகள், தகவல்கள், சமூகவளைதள பக்கங்கள் என பலவற்றை இணைய நிறுவனங்கள் தேடித்தேடி முடக்கின. இன்றும் கூட சமூகவளைதளத்தில் தமிழீழத் தேசியத்தலைவர் படத்தினை பதிவு செய்துவிட முடியாத நிலைஉண்டு. இட்லர், முசோலினி, பிற இனவெறியர் படங்களைக்கூட தடை செய்யாத சமூகவளைதளங்கள் தேசியத்தலைவர் படத்தை தடை செய்வதென்பது இந்தியா-இலங்கைக்குள்ளாக மட்டுமல்ல என்பது நாம் கவனிக்க வேண்டிய நடவடிக்கை. இவ்வாறு இனப்படுகொலை நீக்கம், அல்லது இனப்படுகொலை மறுப்பு அரசியலை சர்வதேசம் மிகக்கவனமாக திட்டமிட்டு செய்துவருகிறது. இந்நிலையிலேயே தமிழ்நாட்டில் தமிழீழ அரசியல் விடுதலை என்பதை அரசியல்-பொருளியல் கண்ணோட்டத்திலும், இந்திய பார்ப்பனிய அடக்குமுறை அரசியலைப் பொறுத்திப் பார்த்தும் விவாதிக்க வேண்டி உள்ளது. ஒரு இனப்படுகொலைக்கு எதிரான மக்கள் திரள் அரசியல் என்பது அப்பிராந்தியத்தில் இனிமேலும் ஒரு அநீதி நிகழாமல் தடுக்கும் முற்போக்கு அரசியல் ஆகும். இதை இந்திய அரசு இன்றளவும் குற்றமாக முத்திரைக் குத்தி வருகிறது. ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தின் விடுதலையை தள்ளிப்போடலாமே ஒழிய, அதை தவிர்த்துவிட இயலாது. தமிழீழ விடுதலை அரசியலே தெற்காசியப் பிராந்தியத்தில் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வரலாற்று நிகழ்வாக அமைய முடியும். இந்தப்பெருங்கடல் பிரதேசமே காலனியத்தின் நுழைவாயிலாக இருந்திருக்கிறது. 280 வருடங்களுக்கு முன் குளச்சலில் டச்சு கப்பற்படைகளை எதிர்த்து நடைபெற்ற வீரமிக்க போர் இப்பெருங்கடல் பகுதியின் ஆபத்தினை நமக்கு விளக்கும். இந்த போரில் தமிழர்களின் வீரம் வெற்றியை ஈட்டியது. தமிழர்களின் இந்த சமர், டச்சு ஆதிக்கம், காலனியமாக்கல் தென்னிந்தியப் பிராந்தியத்தில் நுழைவதை தவிர்த்தது அல்லது தள்ளிப்போட்டது. இந்தப் போரினால் நாம் அறியமுடிவதையே தமிழீழப் போரில் கடல் எதிர்ப்பு என்பது எத்தகைய பாதுகாப்பை 35 ஆண்டுகளாக தமிழர்களுக்கு வழங்கியது என்பது புலப்படும். பனிப்போர் காலமெனும் சோவியத்-அமெரிக்காவின் பனிப்போர் காலகட்டத்திலிருந்து, அதன் பின்பான அமெரிக்காவின் ஒற்றைத்துருவ ஆதிக்கம் நிறைந்த 2009 வரை விடுதலைப்புலிகளின் கடல்படை என்பது இக்கடலை பாதுகாத்தது. தமிழர்கள் தங்களுடைய பாதுகாப்பினை உறுதி செய்யும் அரசியல் என்பது தேர்தல் கட்சி சார்ந்து கிடைப்பதல்ல என்பதை உணர்ந்து கொள்வது மிக அவசியம் என்பதை தமிழீழம், தமிழகம் எனும் இரண்டு நிலப்பரப்புகளில் நடக்கும் தேர்தல் அரசியல் களம் நமக்கு உணர்த்துகிறது. தமிழினப் படுகொலை முடிந்த பதினோறாவது வருடம் வரையில் சர்வதேச அரசுகளின் துரோக அரசியலை புரிந்து கொள்ள முடிந்த தமிழ்ச்சமூகத்தினால் தமிழரல்லாத பிற மக்களிடத்தின் ஆதரவை ஈட்டும் அரசியலை வலுப்படுத்தமுடியாமல் போனதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். புலம்பெயர் நாடுகளில் உருவான 2009க்கு பின்பான அரசியல் கட்டமைப்புகள் என்பவற்றில் பெரும்பாலானவை பிரித்தானிய தமிழர் பேரவை, உலகத் தமிழ்ப்பேரவை (க்ளோபல் தமிழ் அமைப்பு) ஆகியவை அரசுகளுடனான உறவின் மூலம் விடுதலை அரசியலை வென்றெடுத்துவிட முடியுமெனும் கானல் நீர் அரசியலை முன்னெடுத்தன. இந்த நகர்வுகள் இங்கிலாந்து, அமெரிக்க அரசுகளுக்கு நலன் பயப்பவையாகவே அமைந்தனவேயன்றி தமிழர்களுக்கு எவ்வித நலனையோ, முன்னேற்றத்தையோ கொடுத்துவிடவில்லை. இராசதந்திர நகர்வுகள் எனும் இவர்களது முயற்சிகள் மேற்குலகின் பிராந்திய நலத்திட்டங்களுக்கு துணைபோயின. இதே போல சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அம்னெஸ்டி, ஹியுமன் ரைட்ஸ் வாட்ச் போன்றவை தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையை மனித உரிமை மீறலாக மட்டுமே சித்தரித்து இலங்கையில் அமெரிக்க சார் அரசியல் மாற்றத்தை கொண்டு வரும் நிகழ்விற்கு துணை போயின. இதே பணியையே இலங்கையின் நிமால்கா பெர்னாண்டோ, அகிலன் கதிர்காமர் போன்ற நபர்களும் செய்தார்கள். இவர்களையெல்லாம் எதிர்த்து அம்பலப்படுத்திய அரசியல் போராட்டத்தை மே பதினேழு இயக்கம் 2010இலிருந்து தொடர்ந்து நடத்தியது. இவர்களது அமெரிக்க-இந்திய சார்பு அரசியலை தொடர்ந்து அம்பலப்படுத்தி இவர்களது அரசியல் தமிழகத்தில் வேர் ஊன்றாமல் தொடர்ந்து போராடி வெற்றியீட்டியது. தமிழீழ விடுதலை அரசியல் ஆதரவு நிலை என்பதை தமிழகத்தின் தேர்தல் கட்சி அரசியலோடு பின்னிப் பிணைத்து தீர்வு கண்டுவிடும் கனவு அரசியலைக் கடந்து தமிழர்கள் கண்ணுக்கு முன்னர் எழுந்து நிற்கும் ஏகாதிபத்தியத்தின் தடைக்கல்லை உணராமல் தமிழீழம் என்பது சாத்தியமில்லை. தமிழீழத்தில் இனப்படுகொலை குற்றவாளியான கோத்தபய ராஜபக்சேவின் ஆட்சி அமைவது அமெரிக்காவின் ஆசியுடன் நடைபெற்றது என்பது வெட்டவெளிச்சமான உண்மை. மகிந்த ராஜபக்சேவின் ஆட்சியை உதறிய அமெரிக்கா, தற்போது அவரது சகோதரர் கோத்தபயாவின் ஆட்சியை கொண்டு வந்திருப்பதை வரவேற்றிருக்கிறது. இந்த கோத்தபயா ராஜபக்சே அமெரிக்காவின் குடிமகன் என்பதும் கவனிக்கவேண்டிய உண்மை. இந்தப் பெருங்கடல் பகுதியில் தொடர்ந்து தீவிரமடைந்து வரும் மேற்குலகம்-ஜப்பான் - இந்தியாவின் இராணுவ கூட்டமைப்பு மற்றும் இதற்கு எதிரான சீனாவின் நகர்வுகள் ஆகியவற்றிற்கு இடையில் பலியிடப்படும் மக்களாக தமிழ்த்தேசிய இனம் அமைந்துவிடக் கூடாது. அப்படியான வரலாற்று சூழலில் தமிழர்கள் தங்களுக்கான அரசியலாக முற்போக்கு, பார்ப்பனிய எதிர்ப்பு மக்கள் நலன் சார்ந்த இயக்க அரசியலே தமிழினத்தின் அரணாக அமைய முடியும் என மே பதினேழு இயக்கம் உறுதியாக கருதுகிறது. ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

# அவதூறுக்கு மறுப்பு

## ப்ரெமன் தீர்ப்பாயம் தொடர்பாக மே 17 இயக்கத்திற்கு எதிராக சொல்லப்பட்ட அவதூறுகள் மீதான அறிக்கை

### 'இலங்கை மீதான மக்கள் தீர்ப்பாயம்' - விளக்க அறிக்கை



தமிழீழத்தில் நிகழ்ந்த இனப்படுகொலையைப் பற்றிய விவாதத்தை சர்வதேச மட்டத்தில் எழுப்பிய நிகழ்வாக ‘மக்கள் தீர்ப்பாயங்கள்’ அமைந்தன. குறிப்பாக உலகப்புகழ்பெற்ற ’நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்’ எனும் அமைப்பு புகழ்பெற்ற பெர்ட்ரண்ட் ரசல் அவர்களால் வியட்நாம் மீது அமெரிக்கா தொடுத்த போரில் நிகழ்த்தப்பட்ட குற்றங்களை விசாரித்து உலகிற்கு அம்பலப்படுத்த உருவாக்கப்பட்டது. உலகெங்கும் ஏகாதிபத்திய அரசுகளால், வல்லாதிக்க அரசுகளால் நிகழும் இனப்படுகொலை, போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றம் குறித்த மக்கள் சார் பிரதிநிதிகள், அறிஞர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சிந்தனையாளர்கள், பேராசிரியர்கள் போன்ற பலரை நீதிபதிகளாகக் கொண்டு விசாரிக்கப்பட்டு அக்குற்றங்கள் அம்பலப்படுத்தப்பட்டன.

இப்படியானதொரு தீர்ப்பாயம் தமிழீனப்படுகொலைக்காக தமிழீழ ஆதரவு சிங்கள செயற்பாட்டாளர்களால் 2010இல் அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் துவக்கப்பட்டது. இந்த தீர்ப்பாயமே முதன்முதலாக தமிழீழத்தில் நிகழ்ந்த படுகொலைகளை உலகிற்கு ஆதாரப்பூர்வமாக வெளிச்சமிட்டு காட்டியது. இந்த தீர்ப்பாயம் பல்வேறு முடிவுகளை முன்வைத்தது. அதில் குறிப்பாக தமிழீழத்தில் நிகழ்ந்ததை ‘இனப்படுகொலை’ என விசாரித்து அறிவிக்கவேண்டுமென முடிவினை வெளிப்படுத்தியது. இத்தீர்ப்பாயத்தினால் கடுமையான நெருக்கடிக்குள்ளான ஐநா மன்றத்தின் தலைவராக இருந்த பான்கீமூன், உடனடியாக ஒரு விசாரணைக் குழுவை இலங்கைத் தொடர்பில் 2010 பிப்ரவரியில் அறிவிக்க நேர்ந்தது. மேலும் ராஜபக்சேவை ஒரு உள்நாட்டு விசாரணைக் குழுவையும் உருவாக்கும் சூழலை உருவாக்கியது. இதுவே உலகளவில் அழுத்தம் தருவதற்கு காரணமாக அமைந்த நிகழ்வு. இந்த புகழ்பெற்ற டப்ளின் தீர்ப்பாயத்தின் இரண்டாம் கட்ட விசாரணை, தமிழீழத்தில் நிகழ்ந்தது ‘இனப்படுகொலையா’ எனவும் அதில் பங்கேற்ற நாடுகள் குறித்துமான விசாரணையை ஜெர்மனியின் பிரேமன் நகரில் 2013இல் துவக்கியது. இந்த விசாரணையில் இலங்கை அரசின் இனப்படுகொலை, அதில் பங்கெடுத்த நாடுகளான இங்கிலாந்து, அமெரிக்கா குறித்த விசாரணையை நடத்துவதென டப்ளீன் நகரில் எடுத்த முடிவின் அடிப்படையில் நிகழ்த்துவது என முடிவானது.

இதன் பின்னர் இந்தியா அரசின் பங்களிப்பினைப் பற்றியும் விசாரணைக்குட்படுத்துவது என இறுதிகணத்தில் முடிவெடுக்கப்பட்டது. இந்தியா அரசின் பங்களிப்பு பற்றிய விவரங்களை சமர்ப்பிக்க மே17 இயக்கம் அழைக்கப்பட்டது. இதன்படி மே17 இயக்கம் தனது ஆவணங்களை சமர்ப்பித்தது. இந்நிகழ்வு 2013 டிசம்பரில் நிகழ்ந்தது. இதன் பின்னர் 2015 ஆகஸ்ட் மாத அளவில் இத்தீர்ப்பாயத்தில் மே17 இயக்கம் இந்தியா குறித்த ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்கவில்லை எனும் அவதூறு பரப்பப்பட்டது. அமெரிக்காவின் சதிகார தீர்மானத்தினை எதிர்த்து போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் இந்த அவதூறு மே17 இயக்கத்திற்கு நெருக்கடியை கொடுக்கவேண்டுமென்கிற உள்நோக்கத்தில் பரப்பப்பட்டது.

## இந்த அவதூறின் சுருக்கவடிவமாக

- ப்ரெமன் தீர்ப்பாயத்தில் இந்தியாவிற்கு எதிரான ஆதாரங்களை சமர்பிக்க மே 17 இயக்கத்தையோ, திருமுருகன் காந்தியையோ தீர்ப்பாயம் அழைக்கவில்லை என்றும்.

- ப்ரெமன் தீர்ப்பாயத்தில் திருமுருகன் காந்தி வேண்டுமென்றே இந்தியாவிற்கெதிரான ஆதாரத்தை வைக்கவில்லை என்றும் அவதூறை பரப்பினார்கள்.

மே17 இயக்கத்தின் மீதான நம்பிக்கையை சிதைக்க வேண்டும். அதன் கட்டமைப்பினை சிதைக்கவேண்டும், அதன் தோழர்களின் உழைப்பினை கொச்சைப்படுத்த வேண்டும், தோழர்களை சோர்வுறச் செய்யவேண்டுமென நடத்தப்பட்ட அவதூறு பிரச்சாரத்திற்கு பலரும் மேடை அமைத்துக் கொடுத்தார்கள். இந்த அவதூறுகள் குறித்து மே17 இயக்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாக பதில் அளிக்கவில்லை, அவதூறுகளுக்கு பதில் அளிப்பதில்லை எனும் மே17 இயக்கத்தின் முடிவின் அடிப்படையில் இது குறித்து எந்த அதிகாரப்பூர்வ வெளியீடும் செய்யப்படவில்லை.

'ப்ரேமன்' நகரில் 2013இல் தீர்ப்பாயம் நடந்த பொழுது, அதன் நீதிபதிகளாக இருந்தவர்கள் 'இனப்படுகொலை குற்றச்சாட்டு', 'அமெரிக்காவின் பங்களிப்பு', 'இங்கிலாந்தின் பங்களிப்பு' என மூன்று முக்கிய குற்றச்சாட்டுகள்/ விவாதங்களின் மீது ஒரு இரவிற்குள் முடிவெடுக்க வேண்டிய நேர நெருக்கடி இருந்தது. இந்த பங்களிப்புகள் குறித்தும், சர்வதேச இனப்படுகொலை சட்டங்கள் குறித்தும் ஆய்ந்து முடிவெடுக்கும் கடுமையான பொறுப்பு அவர்கள் மீதிருந்தது. இந்த தீர்ப்பாயத்தின் நீதிபதிகளாக இருந்தவர்கள், ஐநாவின் துணைப் பொதுச்செயலாளராக இருந்தவர் தலைவராக இருந்தார். அர்ஜெண்டினாவின் 'இனப்படுகொலை ஆய்வுத் துறையின் பேராசிரியர், ருவாண்டா இனப்படுகொலை விசாரணையில் பங்கெடுத்தவர், நமீபிய இனப்படுகொலை குறித்து ஆய்வு செய்தவர், சிரெபிரெனிகா-செர்பிய இனப்படுகொலை விசாரணையில் பங்காற்றியவர், ரொகிங்கியா இனப்படுகொலைக்கு எதிரா -ஆர்மீனிய இனப்படுகொலைக்கான நீதிக்கான போராட்டத்தில் இருந்தவர்கள், குர்து மக்கள் மீதான இனப்படுகொலைக்கு எதிராக இயங்கும் துருக்கியப் பேராசிரியர் எனப்பலரும் இத்தீர்ப்பாயத்தில் நீதிபதிகளாக பங்காற்றியவர்கள்.

பிற மூன்று முக்கிய குற்றச்சாட்டுகளான 'இனப்படுகொலைப் பற்றிய முடிவு', 'அமெரிக்கா-இங்கிலாந்தின் பங்களிப்பு' என்பதைப் பற்றிய கவனத்தை முதன்மையாக செலுத்தவேண்டிய தேவை 'டப்ளீன் தீர்ப்பாயம்-2010'இல் ஏற்பட்டது. எனவே அக்குற்றச்சாட்டுகளுக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். எனவே இவர்களுக்கு இந்தியா குறித்த அறிக்கைகளை, ஆவணங்களை படித்தறிந்து முடிவெடுக்கும் நேரமில்லாமல் நீதிபதிகளுக்கு நெருக்கடி ஏற்பட்டது. முதல்நாள் பிற்பகலில் தொடங்கிய நீதிபதிகளுக்குள்ளான ஆய்வு-விவாதம் இரவு முழுவதும் தொடர்ந்தது. முதல் மூன்று முக்கிய குற்றச்சாட்டுகள் பற்றிய முடிவெடுக்க அதிகப்படியான நேரம் ஒதுக்க வேண்டி வந்ததால், இந்தியா குறித்து முழுமையாக வாசித்து முடிவெடுக்கும் நேர அவகாசம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் இனப்படுகொலையில் 'இந்தியாவின் பங்களிப்பு' பற்றி தனியாக சிறப்பு தீர்ப்பாயத்தினை உருவாக்குவது என முடிவானது. இந்த தனிச்சிறப்பு தீர்ப்பாயத்தில் இந்தியா பற்றி விவாதித்து முடிவெடுப்பது என 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின்' ஒருங்கிணைப்பாளர்கள் முடிவெடுத்து அறிவித்தார்கள்.

இப்படியான புகழ்பெற்ற தீர்ப்பாயத்தினை கொச்சைப்படுத்தும் விதமாகவும், இதில் பங்களித்த மே17 இயக்கத்தினை கொச்சைபப்டுத்தும் விதமாகவும், இந்த தீர்ப்பாயத்தில் ஒருங்கிணைத்த தோழர்களை கொச்சைப்படுத்தும் விதமாகவும், அவதூறு முன்வைக்கப்பட்டது. இந்த பின்னனி தகவல்களை எல்லாம் மறைத்து, மே17 இயக்கம் இந்தியாவின் மீதான குற்றச்சாட்டை திட்டமிட்டு முன்வைக்கவில்லை எனும் அவதூற்றினை பிரச்சாரம் செய்தார்கள். இப்படியான அவதூறு பிரச்சாரத்தினை 2018இல் பிரேமன் தீர்ப்பாயத்தினை ஒருங்கிணைத்த செயற்பாட்டாளர்கள் அறிந்து கொண்டார்கள். இது குறித்து விசாரித்து, சக ஒருங்கிணைப்பாளர்கள், செயற்பாட்டாளர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றார்கள். பின்னர் இந்த அவதூறு பற்றிய விளக்க அறிக்கையை வெளியிடுவதென முடிவெடுத்து மே17 இயக்கத்திற்கு தெரியப்படுத்தினார்கள். இந்த அவதூறு ஆதாரமற்றது என்று விரிவான ஒரு விளக்க அறிக்கையை இந்த தீர்ப்பாயத்தினை ஒருங்கிணைத்த செயற்பாட்டாளர்களான தோழர்.விராஜ் மெண்டிஸ் மற்றும் தோழர். ஜூட்லால்பெர்னாண்டோ ஆகியோர் இணைந்து 2018 ஆகஸ்ட்டு மாதத்தில் வெளியிட்டார்கள். இந்த அறிக்கையின் தமிழாக்கத்தையும் ஆங்கில அறிக்கையையும் நாங்கள் உங்கள் முன் வெளியிடுகிறோம்.

இதுபோல ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாகவும், போராடும் இயக்கங்களை கொச்சைப்படுத்தும் விதமாகவும் நடைபெறும் முயற்சிகளை, இம்முயற்சிகளைமுன்னெடுக்கும் நபர்களை தமிழ்ச்சமூகம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென்பதற்காகவே இந்த அறிக்கையை இப்போது வெளியிடுகிறோம். அவதூறுகளால் மே17 இயக்கத்தை ஒருநாளும் முடக்கிவிடமுடியாது என்பதை சொல்லிகொள்ள விரும்புகிறோம்.

ப்ரெமென் தீர்ப்பாய அறிக்கையின் தமிழாக்கம்

## ப்ரெமென் தீர்ப்பாயத்தை மையமாக வைத்து மே 17 இயக்கம் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பற்றிய அறிக்கை

‘இலங்கைக்கான மக்கள் தீர்ப்பாயத்தின்”பெயரை பயன்படுத்தி, தமிழ் நாட்டில் இயங்கும் மே 17 இயக்கத்தின் மீது அவதூறுகள் பரப்பப்படுவது எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஈழ இனப்படுகொலையில், இந்தியாவையும் குற்றவாளியாக ப்ரெமென் தீர்ப்பாய நீதிபதிகள் தீர்ப்பளிக்காமல் போனதற்கு காரணமே மே 17 இயக்கம் தான் என்றும், இந்தியாவை காப்பாற்றும் நோக்குடன் ஆதாரங்களை மே 17 இயக்கம் முன் வைத்தது என்றும், மே 17 இயக்கத்தின் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகின்றன. ப்ரெமென் தீர்ப்பாயத்தை ஒருங்கிணைத்தவர்கள் என்ற முறையில், இந்த குற்றச்சாட்டுகள் எந்த வித அடிப்படையும் அற்றவை என்பதை நாங்கள் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இலங்கை மீதான இனப்படுகொலை குற்றத்துடன் சேர்த்து, ஈழ இனப்படுகொலையில், அமெரிக்க, ப்ரித்தானிய மற்றும் இந்திய அரசுகளின் பங்கையும் சேர்த்து ப்ரெமென் தீர்ப்பாயத்தில் விசாரிக்கலாம் என்று நாங்கள் முடிவு செய்தோம். 'தமிழ்நெட்' இணைய தளத்தில் திருமுருகன் காந்தியின் நேர்காணல்களை நாங்கள் ஏற்கனவே பார்த்திருந்ததால், இந்தியாவின் பங்கை தீர்ப்பாயத்தில் முன்வைக்க மே 17 இயக்கம் சரியாக இருக்கும் என்று நாங்கள் முடிவு செய்தோம்.

ஒன்றை முதலிலேயே சொல்லி விட வேண்டும். ப்ரெமென் தீர்ப்பாயம் செய்து முடிக்க நினைத்தவைகளுக்கான போதிய கால அவகாசம் அதனிடம் இல்லை. 2010இல் டப்ளின் தீர்ப்பாயத்தில் இலங்கை மீதான இனப்படுகொலை குற்றத்தையும் விசாரிக்க நாங்கள் எண்ணியிருந்தோம். ஆனால் அந்த கால கட்டத்தில் அது சாத்தியப்படவில்லை. அதனால் 'போர் குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்' ஆகியவற்றை மட்டும் விசாரித்தோம். அதே சமயம் இலங்கை மீதான இனப்படுகொலை குற்றத்தை பின் வரும் காலங்களில் விசாரிக்க போதுமான ஆதரங்களை நீதிபதிகளிடம் அளித்தோம். அமெரிக்கா மற்றும் ப்ரித்தானிய அரசுகளின் மீதான இனப்படுகொலை குற்றங்களின் ஆதாரங்களையும் ஏற்கனவே கொடுத்திருந்தோம். டப்ளின் தீர்ப்பாயத்தில் நாங்கள் முன் வைத்த ஆதாரங்களே, அமெரிக்கா மற்றும் ப்ரித்தானிய அரசுகளின் மீதான இனப்படுகொலை குற்றங்களுக்கு ஆதாரமாக அமைந்தன. மூன்று வருடங்கள் கழித்து ப்ரெமென் தீர்ப்பாயத்திலும் அதை நாங்கள் மறுபடியும் முன்வைத்தோம்.

ஒரு குறுகிய கால கட்டத்தில், பல்வேறு தகவல்களை நீதிபதிகள் ஆராய வேண்டியிருந்தது. இனப்படுகொலை ஒரு சிக்கலான விவகாரம் என்பதால், கடைசி கட்ட போரின் நேரடி சாட்சியங்களின் அனுபவங்களை கேட்டு அதன் அடிப்படையில் முடிவு எடுக்க நீதிபதிகள் முயற்சித்தனர். இதனால் ஈழ இனப்படுகொலையில் சர்வதேச நாடுகளின் பங்கை விசாரிக்க போதுமான நேரம் இல்லாமல் போனது.

அமெரிக்கா மற்றும் ப்ரித்தானிய அரசுகளின் பங்கு பற்றி நீதிபதிகள் டப்ளின் தீர்ப்பாயம் தொட்டே அறிந்திருந்தனர். ஆனால் இந்தியாவின் பங்கு என்பது இந்த தீர்ப்பாயத்தில் தான் முதன் முறையாக விசாரிக்கப்பட்டது. அமெரிக்கா மற்றும் ப்ரித்தானிய அரசுகள் ஈழ விடுதலைக்கு முதலில் இருந்தே எதிர் நிலையில் இருந்தன. ஆனால் இந்தியா தன் போக்கை இடையில் தான் மாற்றிக் கொண்டது. இவை எல்லாமே இந்தியா மீதான விசாரணையை சிக்கலாக்கின. இதை எல்லாம் கணக்கில் கொண்டு, மே 17 இயக்கத்திற்கு கூடுதல் நேரம் அளிக்க நினைத்தோம். ஆனால் கடைசியில் அமெரிக்க மற்றும் ப்ரித்தானிய அரசுகளின் பங்கை விசாரிக்க எவ்வளவு குறுகிய நேரம் ஒதுக்கப்பட்டதோ, அதே அளவு நேரம் தான் இந்தியாவை விசாரிக்கவும் ஒதுக்க வேண்டியதாயிற்று. வேறு வழியில்லாமலேயே நாங்கள் இதைச் செய்தோம். தீர்ப்பாயத்திற்கு பிறகு நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில், இந்தியாவிற்கு ஈழ இனப்படுகொலையில் பங்கு இருக்கிறது என்பதை தாங்கள் நம்புவதாகவும், அதை வருங்காலங்களில் மேலும் நிச்சயமாக விசாரித்து முடிவு செய்ய இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இனப்படுக்கொலையில் இந்தியாவின் பங்கு நிரூபிக்கப்படாமல் போனதற்கு மே 17 இயக்கம் தான் காரணம் என்ற குற்றச்சாட்டு எவ்வளவு அபத்தமானது என்பதை சுட்டிக்காட்டவே நாங்கள் இவ்வளவு விளக்கங்களை தருகிறோம். தமிழ்நாட்டில் இயங்கும் ஒரு துடிப்பான இயக்கத்தின் பெயரை கெடுப்பதற்கு ப்ரெமென் தீர்ப்பாயத்தின் பெயர் பயன்படுத்தப்படுவது எங்களுக்கு மிகுந்த மன வேதனை அளிக்கிறது.

இப்படிக்கு



**விராஜ் மெண்டிஸ்**
சர்வதேச மனித உரிமைச் சங்கம்
ப்ரெமென்



**ஜூட் லால் பெர்னாண்டோ**
இலங்கையில் அமைதிக்கான
ஐரிஷ் மன்றம்

02.08.2018

# Statement regarding allegations made against the May 17 Movement regarding the Bremen Tribunal



It has been brought to our attention that the 'People's Tribunal on Sri Lanka' is being used in a widespread campaign to discredit the Tamil Nadu based 'May 17th Movement'. It has been alleged that the reason that the jurors at the Bremen Tribunal did not rule on the issue of Indian complicity to genocide was because the May 17th Movement presented the evidence in such a manner as to deliberately sabotage the possibility of the jurors finding India guilty. As the organisers of the Bremen session of the 'People's Tribunal on Sri Lanka', we wish to state that these allegations are unfounded.

We had decided that, as well as the charge of Genocide against the Sri Lankan State, we would add US, British and Indian complicity to the list of accusations for the panel of jurors at the Bremen session to examine. We had seen video interviews with Mr. Thirumurugan Gandhi of the May 17th Movement on tamilnet.com and decided that this movement would be well placed for putting forward the case for Indian complicity.

It must be said from the outset that the goals that the Bremen Tribunal had set for itself was difficult to achieve – due to the time limitations. Of course the Bremen session was the second part of the 'Peoples Tribunal on Sri Lanka'. Originally, we had intended to include the charge of genocide against the Sri Lankan state at the Dublin Tribunal (held in 2010). However, at that time preliminary discussions with members of the panel of judges convinced us that this was not practical at that time and so we decided to restrict our accusations to 'war crimes' and 'crimes against humanity'. At the same time, we provided enough evidence in Dublin to convince the panel of judges that the charge of genocide should be considered in the future. It was the same with the question of US and British complicity. Our evidence in Dublin (see background document presented to the panel in Dublin in 2010 http://pptsrilanka.org/accusations/crimes-against-peace/) laid the basis for the accusations regarding British and US complicity – which we also put forward three years later in Bremen.

In reality the panel of jurors had to process an enormous amount of information in a short period of time. As Genocide was a controversial issue, the panel of judges were pushing to hear evidence from witnesses who had direct experience of the last stages of the war – so that they can make an informed decision on this central accusation. This generated a time squeeze, and the time allocated for international complicity had to be reduced.

Whereas the judges had previous knowledge of US/UK complicity, from Dublin tribunal onwards, Indian complicity was new to the panel. Further, India's changing role during the period of the Eelam struggle (as distinct to the US and UK's constant opposition to it) added to the complexity. To compensate for these hurdles, we intended to give the May 17th movement extra time to make their presentation on Indian complicity. But due to time overrun we had to reduce the time slot for India to the same level as for US and for UK. We took this decision with a heavy heart. The judges stated at the press conference that although they 'believed' that India was in fact complicit, that they would like to examine this issue further at a later date to make a considered determination.

We explain this to show the reader that it is baseless to suggest that the May 17th movement deliberately sabotaged the Indian complicity determination. We are disturbed that the name of the Bremen Tribunal has and is being used to undermine a vibrant political movement in Tamil Nadu.



**Viraj Mendis**

for the Internationaler Menschenrechtsvere in Bremen e.V



**Jude Lal Fernando**

for the Irish Forum for Peace in Sri Lanka

**02.08.2018**

## 'வெள்ளை' மாளிகையை நடுங்கவைத்த

# கருப்பின எழுச்சி

அமெரிக்க ஒன்றியத்தில் வெள்ளையின காவல்துறையினரால் கருப்பினத்தைச் சார்ந்த ஜார்ஜ் ப்ளாய்டின் படுகொலை நிகழ்வு பெரும் கிளர்ச்சியை உருவாக்கி இருக்கிறது. இந்த எழுச்சி அலை ஐரோப்பாவின் வீதிகளில் எதிரொளிக்கிறது. வாரக்கணக்கில் நடந்து வரும் இந்தப் போராட்டம் பலதரப்பு மக்களை ஒருங்கிணைத்திருக்கிறது. கருப்பின மக்களோடு வெள்ளையினத்தைச் சார்ந்த பலரும் கைகோர்த்திருப்பது இப்போராட்டத்தின் தீவிரத்தை உணர்த்தியிருக்கிறது. கொரொனொ தொற்றினால் லட்சம் அமெரிக்கர்கள் இறந்து கொண்டிருக்கும் காலத்தில் நடந்த இந்த மக்கள் எழுச்சியானது ஊரடங்கு போன்ற கட்டுப்பாடுகளையெல்லாம் வெட்டியெறிந்துவிட்டு அரசை ஆட்டம் காணச் செய்திருக்கிறது. நோய்த்தொற்று, மரணபயத்தைவிட உரிமைக்கான போராட்டம் என்பது முதன்மையானது என்பதை இப்போராட்டம் சொல்லுகிறது. கொரொனோ தொற்றினை மிக மோசமாக கையாண்ட அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் ட்ரம்பினால் பெருமளவில் மக்கள் மாண்டார்கள். இதில் பெரும்பான்மையோர் கருப்பின, பிற நிறத்தவர், ஏழை எளியவர்கள் என்பது அமெரிக்காவின் கொடூர முதலாளித்துவ, லாபநோக்கிலான சுரண்டல் அமைப்பை அம்பலப்படுத்தியது. அப்படியான ஒரு ஏற்றத்தாழ்வு வெளிப்படையான காலத்தில் நடந்த இந்தப்படுகொலை மக்களை ஒன்றுதிரட்டி இருக்கிறது. மக்கள் அலை அலையாக திரண்டெழுந்து வெள்ளைமாளிகையை முற்றுகைக்குள்ளாக்கினார்கள். அமெரிக்க வரலாற்றில் முதன்முறையாக அமெரிக்காவின் அதிபர் வெள்ளைமாளிகையின் பதுங்குகுழிக்குள் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. நிறவெறி, அடிமைவணிகம் செய்தவர்களின் சிலைகள் உடைத்தெறியப்பட்டன. கொலம்பஸ் போன்ற இனவெறியரின் சிலைகள் அப்புறப்படுத்தப்பட்டன. இது இங்கிலாந்திலும் தொடர்ந்தது. கருப்பின மக்களை இழிவுபடுத்தும்வகையில் காட்சியமைத்திருந்த உலகப்புகழ்பெற்ற திரைப்படமான 'கான் வித் த விண்ட்' காணொளிப் பதிவுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. காவல்துறையினரை மையமாக வைத்து எடுக்கப்பட்ட நெடுந்தொடரை தொலைக்காட்சி நிறுவனம் நிறுத்தியது. ஜார்ஜ் ப்ளாய்ட்டினை படுகொலை செய்த மின்னியாப்போலீஸ் நகரசபை காவல்துறை அமைப்பை கலைப்பதாக தீர்மானம் நிறைவேற்றியது. பல இடங்களில்





ஆனாலும் அமெரிக்க அதிபரின் வெள்ளை இனவெறி ட்விட்டர் செய்திகள் வன்முறையை தூண்டும் விதத்திலேயே வெளிப்பட்டன. இம்முறை நடக்கும் இந்த ‘கருப்பின வாழ்க்கை முக்கியமானது’ எனும் வாசகத்துடனான போராட்ட எழுச்சியில் இடதுசாரிக் கொள்கையாளர்களும், அக்கருத்தியலும் எழுச்சிப் பெற்றது. இன்னும் சொல்லவேண்டுமெனில் ப்ளாக் பேந்தர்ஸ் எனப்படும் கருஞ்சிறுத்தை அமைப்பும், கருப்பின மக்களின் விடுதலைக்காக ஏகாதிபத்திய-வெள்ளை இனவெறி அரசியலை துணிச்சலாக போர்க்குணத்தோடு எதிர்த்த புரட்சிப் போருக்கு அணியமாகச் செய்த மால்கம் எக்ஸ்சின் கருத்தியல் முகாமையான பாத்திரத்தை வகிக்கிறது. தீவிர இடதுசாரித்தன்மை இப்போராட்டத்தில் வெளிப்படுவதாக மேற்குலக பத்திரிக்கைகள் தொடர்ந்து கட்டுரை வெளியிட்டன. மால்கம் எக்ஸ், மார்ட்டின் லூதர் கிங்கின் போராட்ட காலமான 1960களில் இருந்து இன்றுவரை அமெரிக்க கருப்பின மக்களின் வாழ்நிலை முன்னேற்றத்தைக் காணவில்லை எனும் பொருளாதார ஏற்றத்தாழ்வு அப்பட்டமான உண்மை. 1960களில் வெள்ளை இனத்தவரின் வருமானம் என்பது கருப்பின குடும்பத்தினரின் வருமானத்தை விட 7 மடங்கு அதிகமாக இருந்தது. 60 ஆண்டுகள் கழித்தப் பின்னர், ஒரு கருப்பினத்தைச் சார்ந்தவர் -ஒபாமா- அதிபராக வந்த பின்னர் இந்த வருமான வேறுபாடு என்பது 6.6 சதமாக இன்றளவும் நிலவுகிறது. இந்த வர்க்க வேறுபாடும், சமூக அநீதியும் கருப்பின மக்களை எழுச்சியுற வைத்திருக்கிறது. இந்தப் போராட்டம் என்பது இனவெறிக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல, கட்டற்ற லாபநோக்குடன் தன் சொந்த மக்களையே சுரண்டிய அமெரிக்க முதலாளித்துவத்திற்கு எதிரான மக்கள் எழுச்சி. இந்த எழுச்சி அமெரிக்காவை மட்டுமல்ல மேற்குலகம் முழுவதையுமே ஆட்டம் காண வைத்திருக்கிறது. இது போன்றதொரு எழுச்சி இந்தியத் துணைக்கண்டத்தில் எழுவதற்கான அனைத்துச் சூழலையும் இந்துத்துவ அரசு உருவாக்கி வைத்திருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இந்தப் போராட்டம் இந்தியாவின் பாசிஸ்டுகளை அச்சம் காண வைத்திருக்கிறது. ஏகாதிபத்தியம், பாசிசம், நிறவெறி, சாதியவெறி ஆகியவற்றின் வீழ்ச்சியை இந்த நூற்றாண்டு உருவாக்கும் எனும் நம்பிக்கையே நாம் இந்த பூவுலகிற்கு கொடுக்கும் நம்பிக்கைக் கீற்றாக இருக்க முடியும்.


இம்மாதிரியான வலதுசாரி உலக ஒழுங்கில் தமிழ்த்தேசிய எழுச்சியே தமிழர்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கும் அரசியல் கருத்தியலாக அமைகிறது. தமிழர்களின் அரசியல் உரிமைகள் நசுக்கப்பட்டு அடிமைகளாக மாற்றப்படுவது தொடர்கிறது. இந்திய அரசின் இந்த எதேச்சதிகாரப் போக்கினைக் கண்டித்து எந்த ஒரு தேசியக் கட்சியும் குரல் எழுப்பவில்லை. மாநில உரிமைகள் அடிப்படையில் தேசிய இன உரிமைகளே. மிகக்குறைந்த உரிமைகளோடு இயங்கி வந்த மாநில உரிமையைக் கூட பறித்துக் கொண்டிருக்கிறது இந்திய மோடி அரசு. இதற்கு மேலும் தமிழர்கள் தங்களது உரிமைகளுக்காக ஒன்றுகூடவில்லையெனில் தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாகவே வாழவேண்டிய நெருக்கடி ஏற்படும். இந்த இழிநிலையை தேர்தல்கள் மாற்றிடாது. ஆட்சி மாற்றங்கள் சாத்தியம் செய்திடாது. ஒன்றுபட்ட மக்கள் விழிப்புணர்வே இந்த மாற்றங்களுக்கு வழிவகுக்கும். ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க may17voice@gmail.com

# ஈழம்
# ஏகாதிபத்தியங்களின் ஆடுகளம்

14 அக்டோபர் 2011 அன்று கீற்று இணைய தளத்தில் வெளியான தொடர் கட்டுரையின் மறுபிரசுரம் இது. 9 ஆண்டுகளுக்கு முன் மே17 இயக்கம் எடுத்த நிலைப்பாடுகளை இன்றைய நிலையோடு பொறுத்திப் பார்த்து உண்மையை அறிந்து கொள்ளவே மறுபிரசுரம் செய்கிறோம். இக்கட்டுரை வெளிவந்தது அமெரிக்காவும் மேற்குலகமும் இலங்கையில் நடந்த குற்றங்களுக்கு தமிழர்களுக்கான நீதியைப் பெற்றுத் தருகிறோம் என்று பிரச்சாரம் செய்த காலகட்டம். தமிழர்களுக்காக ஐ.நாவில் தீர்வினை முன்மொழிகிறோமென தமிழர்களை மேற்குலக நலனுக்காக வளைத்துக் கொண்டிருந்த காலத்தில் வெளியிடப்பட்டது.






▲ **வள்ளுவர் கோட்டம், சென்னை** – 16 டிசம்பர் 2012

2012லேயே ஐ.நாவின் மனித உரிமை கவுன்சிலில் இலங்கைக்கான தீர்மானம் முன்மொழியப்பட்டது. இத்தீர்மானம் தமிழர்களின் கோரிக்கைகளை புறந்தள்ளி முன்வைக்கப்பட்டது. இதை எதிர்பார்த்தே 2011இலேயே மே17 இயக்கம் மேற்குலகின் சதிகளை அம்பலப்படுத்தும் பிரச்சாரங்களை மேற்கொண்டது. 2012இல் துவங்கிய மேற்குலகின் ஐநா மனித உரிமை அவை நாடகம் 2015இல் முழுவதுமாக இலங்கைக்கு சாதகமாகவும், தமிழர்கள் எனும் வார்த்தைகளே அற்ற தீர்மானமாகவும் நிறைவேறியது. இதை வைத்துக் கொண்டு இலங்கையில் தனக்கு சாதகமான ஆட்சியை மேற்குலகம் உருவாக்கியது. இதை முன்கூட்டி கணித்த மே17 இயக்கம் தனது வாதங்களை 2011 மே மாதத்திலேயே வெளியிட்டது. இதை தொகுத்து சிறுபிரசுரமாக 2011 அக்டோபரில் இணையத்திலும் பின் அச்சிலும் வெளியிட்டது.

2011 ஏப்ரலில் ஐநா நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கையில் நடந்தது ஒரு போர்க்குற்றமாக அறிவித்தது. இனப்படுகொலை என்பதை முழுவதுமாக மறைக்கவே போர்க்குற்றமென ஐநா மனித உரிமை அவை திரிக்கிறது என மே17 இயக்கம் குற்றம் சாட்டியது. தமிழ்நாட்டிலும் இதை போர்க்குற்றம் எனப் பிரச்சாரம் செய்த திரிபுவாதிகளை எதிர்த்து பிரச்சாரத்தை முன்னெடுத்து 50,000 பொதுமக்கள் திரண்ட நினைவேந்தலை சென்னையில் நடத்தியது. ஈழத்தில் நிகழ்ந்தது போர்க்குற்றமல்ல, அது ஒரு இனப்படுகொலை எனும் முழக்கத்தை தொடர்ந்து வலுப்படுத்தியது. ஐநாவின் மனித உரிமை அவையில் மேற்குலகம் கொண்டு வந்த பிரச்சாரங்களையும், தீர்மானத்தையும் எதிர்த்து பல அரங்குகளில் போராடியது. தமிழர்களின் போராட்டத்தினை தனக்கு சாதகமாக ஏகாதிபத்திய அரசு இந்திய அரசின் துணையோடு திசை திருப்ப முயன்றதை தமிழகத்தில் மே17 இயக்கம் மற்றும் தோழமை இயக்கங்களின் துணையோடு வெற்றிகரமாக முறியடித்தது.

2011இல் ஈழத்தில் நிகழ்ந்தது போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றமென ஆரம்பித்த ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கை பின்னர் அமெரிக்காவினாலும், இங்கிலாந்தினாலும் முன்மொழியப்பட்ட தீர்மானத்தில் வெறும் போர்க்குற்றமாக 2012இல் மாற்றப்பட்டு, பின்னர் படிப்படியாக வார்த்தைகள் இலங்கைக்கு சாதகமாக 2013, 2014இல் மாற்றப்பட்டன. இதனடிப்படையில் போர்க்குற்றம் எனும் வார்த்தை பின் நீக்கப்பட்டு மனித உரிமை மீறல் என சேர்க்கப்பட்டது, தமிழர்கள் எனும் வார்த்தையே அறவே நீக்கப்பட்டு இலங்கை மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறலாக திரிக்கப்பட்டது. பின்னர் இனவெறி தாக்குதல் என்பது முழுமையாக மறைக்கப்பட்டு மதங்களுக்கு எதிரான வன்முறை என மாற்றப்பட்டது. இத்தீர்மானங்கள் ஒன்றுபட்ட இலங்கையை பாதுகாக்கும் தீர்மானம் என்ற வரையரையுடனேயே வரையப்பட்டது. இத்தீர்மானம் 2015இல் நிறைவேறும் பொழுது ஐநா மனித உரிமை அவையில் மே17 இயக்கம் தனது கடுமையான எதிர்ப்பை பதிவு செய்தது. மேற்குலக ஆதரவு ஈழ புலம்பெயர் அமைப்புகளும், தமிழ்த்தேசக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், சம்பந்தன் ஆகியோரும், தமிழ்நாட்டில் திமுகவும் அதன் ஆதரவு அமைப்புகளும் இந்த தீர்மானத்தை வரவேற்றன. இந்த திரிபு அரசியலை 2011 ஏப்ரலில் இருந்து அம்பலப்படுத்திய கருத்துக்களின் தொகுப்பாக வெளியிடப்பட்ட பதிவினை மீண்டுமொறுமுறை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். இந்தியாவின் பங்களிப்பைப் பற்றி பல

பிரச்சாரங்களை மேற்கொண்ட மே17 இயக்கம், ஐநாவின் வழியே மேற்குலகம்-ஏகாதிபத்திய அமெரிக்கா மேற்கொண்ட சதிகளை அம்பலப்படுத்த கொண்டு வரப்பட்டது. இப்பிரசுரம் மேற்குலகின் குறிப்பாக அமெரிக்காவின் ஏகாதிபத்திய நலன் குறித்து பேசிய பதிவு. 2009 இனப்படுகொலையில் அமெரிக்காவின் பங்களிப்பினைப் பற்றி வெளிவந்த முதல் பதிவு.

ஐ.நா அறிக்கையினை வைத்துக்கொண்டு தனது பிராந்திய நலனை வலுப்படுத்திக்கொள்ள வல்லரசுகள் முயற்சிப்பது தமிழீழ விடுதலையை மேலும் தள்ளிப்போட அல்லது மறுப்பதற்கான முயற்சியை சமீபத்திய நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தினை கட்டுப்படுத்துவதும் அதிலும் முக்கியமாக தனது பசிபிக் கட்டளை கடற்படைக்கு வலுவான ஒரு தளத்தினை உருவாக்கும் அமெரிக்காவின் 30 ஆண்டுகால் முயற்சியின் வெற்றியின் இறுதி கட்டத்தினை நாம் பார்க்கிறோம்.

அவசியம் ஏனெனில் திட்டமிடப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் பல குற்றம் புரிந்தார்கள்; அதற்கான தண்டனையை அவர்கள் அனுபவிக்க வேண்டும்; அதுவே பலிகொடுக்கப்பட்ட தமிழர்களுக்கு அளிக்கப்படும் நீதி எனும் வாதம் முன்வாசல் வழியாக நமக்கு வைக்கப்படுகிறது. பின் வாசல் வழியே அமெரிக்காவின் இராணுவ நலனும், இந்தியாவின் தரகுமுதலாளிகளின் வர்த்தக நோக்கமும் மட்டுப்படுத்தப்பட்ட சீனாவின் ஊடுருவலோடு வைக்கப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே மனித உரிமை மீறல்கள் மட்டுமே பேசப்பட்டு விடுதலை கோரிக்கை பின்னுக்குத் தள்ளப்பட்டதை நாம் இங்கு காண்கிறோம். மனித உரிமையைப் பற்றி மட்டும் பேசுவதானால் புலிகளின் மீதும் சில அவதூறுகளை வைப்பதன் மூலமாக விடுதலைப் போரை நடத்திய தமிழர் பிரதிநிதிகளான அந்த தியாகப் போராளிகளை குற்றவாளிகளாக மாற்றிவிட்டு, அந்த போராளிக்குழு எந்த அடிப்படை காரணத்திற்காய் தமிழர்களின் ஆதரவோடு தமிழர்களுக்காகப் போராடியதோ அந்தக் காரணத்தை





16 டிசம்பர் 2012


புலிகள் இருக்கும் வரை தனது பிராந்திய கனவான திரிகோணமலையை வசப்படுத்துவதும் இலங்கையின் கிழக்கு கடற்கரையை தனது கட்டுப்பாட்டு வளையத்திற்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெறாது என உணர்ந்த அமெரிக்க அரசு புலிகளை இலங்கை அரசினை கொண்டு வீழ்த்தியதை பல்வேறு தகவல்கள் நமக்கு உறுதி செய்கின்றன. அமெரிக்காவின் இந்த திட்டத்தினுடனேயே இந்தியா தனது தமிழர் எதிர்ப்பு நிலைப்பாட்டின் காரணமாக களத்துணைகொண்டு இந்த இனப்படுகொலையை நடத்தியது. இலங்கையே விரும்பாமல் இருந்திருந்தாலும் இந்தப் போர் நடந்தே இருக்கும்.


விடுதலைப் புலிகளை வீழ்த்த பெரிதும் பயன்பட்ட இராசபக்சே தற்போது முழு அதிகாரத்துடன் இலங்கையை வசப்படுத்துவதும், சீன நலன்கள் முன்னுக்குத் தள்ளப்படுவதும் விரும்பாத அமெரிக்கா புலிகளை ஒடுக்க பயன்படுத்திய பிறகு ராசபக்சேக்கள் தேவையில்லை எனும் நிலையை எடுத்து இருக்கிறாா்கள். அதாவது இராசபக்சேவை தண்டிப்பது


பின்னுக்கு சுலபமாகத் தள்ளிவிடலாம். சுருக்கமாக பார்த்தால் 'இராசபக்சே தண்டிக்கப்படலாம்; ஆனால், தமிழர்களுக்கு விடுதலைத்தமிழீழம் இல்லை' என்பதே. இதற்கான காரணங்களாய் ஏராளமான ஆதாரங்களை நாங்கள் வைக்கமுடியும்.

ஐ.நாவிற்கான நிபுணர் குழு போரில் இலங்கை புரிந்த குற்றங்களை மிகச்சரியாக பதிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் விசாரணை ஒன்றுபட்ட இலங்கை அரசின் நீதி பரிபாலனைகளுக்கு ஏற்ப நடைபெறுமாவெனில் அதற்கான சாத்தியப்பாடும் இருக்கிறது. அதாவது இராசபக்சே தூக்கி ஏறியப்பட்டு அந்த இடம் வேறொரு தலைமை மூலம் நிரப்பப்பட்டு அது இந்த விசாரனையை மேற்கொள்ளலாம். புதிய இலங்கை அரசானது போர்க் குற்றவாளிகளாக சிலரைப் பிடித்து விசாரணையை சர்வதேச கண்காணிப்புடன் நடத்தி பின் தண்டிக்கும். மேலும் தமிழர்களுக்கு வழங்கப்படும் நீதியாக 'வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைப்பதற்கான சட்ட வரைவு கொண்டு வரப்பட்டு




▲ 16 டிசம்பர் 2012

இலங்கை அரசே முன்வந்து தமிழர்களுக்கான நீதியை பேரினவாதத்தை எதிர்கொண்டு நடத்தி காட்டும்' இதை நடத்திக் காட்ட தோதாக ஒரு வரதராசப்பெருமாளை இந்தியா முன்னிருத்தலாம். அமெரிக்காவிற்கு நேர்மையான சுயஇராணுவ துணையற்ற தமிழர்களுக்கு ஒரு பொம்மை தலைவரை வைப்பதன் மூலம் திரிகோணமலையிலும் இதர கிழக்கு கடற்கரையிலும் அமெரிக்கா தனது கப்பற்படைக்கான கடல் தளம், பொழுதுபோக்கு குடியிருப்புகள் உள்ளிட்ட கேளிக்கை வசதிகளை அமைத்து தனது பசிபிக் கட்டளை கடற்படையை வலுப்படுத்தலாம். இந்த தமிழர்களுக்கான நீண்ட கால அரசியல் தீர்வை இந்தியா மூலம் செய்து தந்து அமெரிக்காவின் எடுபிடி இந்தியா தமிழ்நாட்டில் தமிழீழத் தமிழர்களுக்கு தீர்வு வழங்கி விட்டதாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும். இதன் வழியாக காங்கிரசோ, பா.ச.கட்சியோ அல்லது ஏனைய தேசிய கட்சிகளோ தமிழர்களை தமிழ்த்தேசிய, தமிழீழ ஆதரவு மற்றும் இந்திய எதிர்ப்பு நிலையிலிருந்து மாற்றி தனது ஓட்டு வங்கியாக மாற்றிக் கொள்ள முடியும். மேலும் நீண்டகால கனவான சம்பூர் அனல்மின் நிலையம் இழுத்தடிக்கப்படாமல் இறுதி செய்யப்படும். 2007 முதல் தட்டிக்கழிக்கப்பட்டு வரும் செபா பெரு வர்த்தக ஒப்பந்தம் மிக எளிதாக கையொப்பமிடப்படும். இலங்கைக்கு நிதியுதவியாக கொடுக்கப்பட்ட 1000 கோடி ரூபாய்க்கான கட்டுமானத்திட்டங்கள் இந்திய தரகுமுதலாளித்துவ நிறுவனங்களுக்கே அளிக்கப்படும். கூடுதலாக சீனாவின் அச்சுறுத்தலையும் குறைக்க முடியும். ராசபக்சேவை மிரட்டுவதன் மூலமும், அகற்றுவதன் மூலமும் நீளும் பயன்கள் ஏகாதிபத்திய அமெரிக்காவிற்கும் அதன் ஆசிய கைக்கூலி இந்தியாவிற்கும் மற்றும் அதன் பெருமுதலாளிகளுக்கும் ஏராளம்.

பின்வரும் தகவல்களை நீங்கள் முழுமையாக படித்தபின் நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை இறுதியில் விவாதித்து இருக்கிறோம். தமிழர்கள் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டத்தில் ஒரு நேர்மையான வெளிப்படையான ஒற்றைத் தலைமை நம் முன்னால் இல்லாத ஒரு சூழலில் இருக்கிறோம் என்பதை நாம் முன்பே கண்டோம். நமக்குள் நடக்கும் ஆழமான விவாதமும், பகிர்வுகளும் அதன் அடிப்படையில் நடக்கும் களப்பணிகளுமே நம்மை நேர்கோட்டில் செலுத்தும் என உறுதியாய் நம்புகிறோம்.

## அமெரிக்கா மற்றும் அமெரிக்கா

பயன்படுத்தியபின் தூக்கி எறியும் பழக்கம் கொண்ட அமெரிக்கா ஜியா உல் ஹக், சதாம் உசேன், அன்வர் சதாத் போன்று இராசபக்சேவும் எறியப்படலாம். ஏனெனில் பல வழிகளில் ராசபக்சே ஆபத்தானவராக, சீன ஆதரவாளராக அமெரிக்காவிற்கு தெரிகிறார். அதே போல இராசபக்சேவை தூக்கி எறிய தேவைப்படும் ஒரு வலுவான காரணமாக தமிழர்கள் இனப்படுகொலை முன்வைக்கப்படும். ஆனால், இனப்படுகொலையாக இல்லாமல் போர்குற்றமாக வைக்கப்படலாம். அதாவது போர் நியாயமானது, ஆனால் அதில் நடைபெற்ற குற்றமானது மனித குல விரோதமானது எனும் வாதம் மிகச் சன்னமாக வைக்கப்படுகிறது. இதை அமெரிக்காவின் இராபர்ட் பிளேக் நமக்கு மிக மேலும் புரிய வைக்க முயற்சி செய்கிறார். அதாவது பின் லேடனும், பிரபாகரனும் ஒன்று எனும் போது அவர் இந்தப் போரை பயங்கரவாதத்திற்கு எதிரான போராக நிறுவுகிறார். இலங்கை அரசின் நலனையும் உறவையும் அமெரிக்கா

மேற்கொள்ளும் அல்லது கவனத்தில் கொள்ளும் எனும் போது இலங்கை விட்டுக் கொடுக்கப்பட மாட்டாது எனும் குறியீடு வைக்கிறார்கள்.

இதை புரிந்து கொள்ளவேண்டுமானால் சதாம் உசேனுக்கும் – குர்து இன மக்களுக்கும் நடைபெற்றதைத் திரும்பி பார்க்க வேண்டும். குர்து இனமக்கள் தனது இனவிடுதலைக்காக போராடினார்கள், அதன் காரணமாக ஈராக்கில் சதாம் உசேனாலும், ஈரானிய அரசாலும், துருக்கிய அரசாலும் ஒடுக்கப்படுகிறார்கள். வடஈராக்கில் உள்ள குர்து இன நகரில் சதாமின் ஒடுக்குமுறைக்கு உள்ளான ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை வைத்து வழக்கு தயாரிக்கப்பட்டது. இதில் 144க்கு சற்று அதிகமான குர்து மக்களைகொன்ற வழக்கில் சதாம் விசாரிக்கப்பட்டு தூக்கில் ஏற்றப்பட்டார். இந்த வழக்கின்போது குர்து இனமக்களுக்கு நீதி கிடைத்துவிடும் என்பது போன்ற மாயை அப்பாவி மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டதை நாம் கவனிக்க வேண்டும்.

அதே போன்றதொரு நிலையே இங்கும் இன்று ஏற்படுத்தப்படுகிறது. ஆட்சி மாற்றம் நடைபெறலாம். இராசபக்சே தண்டனை பெறலாம் அல்லது சூடான் அதிபர் ஒமர் அல் பஷிர் போல மேற்குலத்திற்கு தேவையான எண்ணை வளம் நிறைந்த தெற்கு சூடானை பகிர்ந்து அளித்துவிட்டு தனது தலையை காப்பாற்றிக் கொள்ளலாம்.

இதே போல தமிழர்களுக்கு மேற்குலகம் முன்வைக்கும் ஒருதீர்வை ஒத்துக் கொண்டு, மிக முக்கியமாக மேற்குலனின் நலனை கவனத்தில் கொண்டு, இராசபக்சே நடந்து கொள்ளும்போது எல்லாம் சரியாகலாம். தமிழர்கள் அனைவருக்குமான அப்பம் அளிக்கப்பட்டுவிடும், அதில் தமிழர்களுக்கு தமிழீழம் மட்டும் இருக்காது. கிடைப்பதை பெற்று நிறைவுறும் கோடாரிக்காம்பு குழு ஒன்று உலகின் மிக முக்கிய, பெரிய செய்தி தொலைக்காட்சிகளில் தமிழர்களுக்கு கிடைத்த நலனை பூரிப்புடன் விளக்கி நன்றி பாராட்டுவார்கள். பி.பி.சி யும், லே மாண்டேவும், சி.என்.என்னும், ஏன் சின்ஹுவாவும் கூட வழிமொழியும். அதற்கான அனைத்து ஒத்திகைகளும் இப்போது நடைபெறுவதை நாம் காண்கிறோம். இவ்வாறு வைக்கப்படும் தீர்வை அரசியல் சக்தியாக மூன்று இடங்களில் பிரிந்து இருக்கும் தமிழ் சமூகமாகிய தமிழீழத் தமிழர்களின் பிரதிநிதியாக தமிழ் தேசிய கூட்டணியும், தமிழர்களின் பலம் பொருந்திய பகுதியாக பார்க்கப்படும் தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்படும் தமிழர்களின் தலைவியாக செயலலிதாவும் முன் நிறுத்தப்படுவார்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்களில் தமிழீழமே தீர்வு என உறுதியாக இருக்கும் சக்திகள் அந்தந்த நாடுகளால் கடுமையாக ஒடுக்கப்படுவார்கள். (இதை நாம் இப்போது காணமுடிவதாக உள்ளது). நேர்மையானவர்கள் தவிர்த்து ஒரு பொம்மைத் தலைவரை மேற்குலகம் முன்னிறுத்துவார்கள் அல்லது முன்னிருத்தப்பட்ட தலைவரை பணிய வைப்பார்கள். இந்தியா செயலலிதாவின் பின்னணி சக்தியாக காய் நகர்த்தும். இதற்கு ஏதுவாகத்தான் செயலலிதா– இரணில் விக்கிரமசிங்கே சந்திப்பை இந்தியா உருவாக்குகிறது. இந்தியாவின் வரலாற்றில் முதல்முறையாக (எமக்கு தெரிந்து) ஒரு மாநில முதல்வரும், அண்டை நாட்டின் முன்னால் அதிபரும் அந்த நாட்டின் பிரச்சனையை பேசப்போகிற காட்சியை நாம் பார்க்கிறோம். இதற்கு பிள்ளையார் சுழியாய் இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் சூரியநாரயண் ஜெயலலிதா பேசுவதற்கான பின்னணியின் கருத்துருவாக்கத்தை உருவாக்க ஆரம்பித்து இருக்கிறார். (காலச்சுவடு பத்திரிக்கையால் கொண்டாடப்படுபவர்; நீண்ட நாளய தமிழீழ எதிரி; ஆழ்ந்த ஆராய்ச்சியாளர் என அவரது நண்பர்களால் சொல்லப்படுபவர். இந்த நபர் இந்திய அதிகாரவர்க்கத்தின் குரலாக தெற்காசிய பிராந்தியத்தினை பற்றி கருத்துக்களை பதிய வைப்பவர்.)

ஆக இரணில்–ஜெயலலிதா சந்திப்பு இந்த திட்டங்களைஉறுதிசெய்கிறது. இதனுடன் இராபர்ட் பிளேக்கின் தமிழ் தேசிய கூட்டணித் தலைவர்களான சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர்களை சந்தித்ததை நாம் கவனத்தில் கொள்ளுதல் நலம். மேலும் இந்த நிகழ்ச்சிகளின் ஊடாக மேற்கு–இந்திய அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இராசபக்சே இந்தியாவின் வர்த்தக ஒப்பந்தங்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்பதை ஜி.எல் பெரிஸ்சின் இந்திய வருகையின்போது அவர் உறுதிபடுத்தியுள்ளார். செபா பெருவர்த்தக ஒப்பந்தத்தினையும், சம்பூர் அனல்மின் நிலைய வேலைகளையும் உறுதி செய்தது அந்த சந்திப்பு. அந்த சந்திப்பின் பின்னான பேச்சுவார்த்தை குறிப்புகள் இதை உறுதிப்படுத்துகிறது. அதே வாரத்தில் தமிழகத்தில் ஈரோட்டில் உள்ள ஒரு கட்டிட நிறுவனத்திற்கு 2000 வீடுகள் கட்டும் ஒப்பந்தமும் வழங்கப்படுகிறது. மேலும் இதே சமயத்தில் யாழ்பாணத்தில் உயர் பாதுகாப்பு வளையத்தில் அபகரிக்கப்பட்ட நிலத்தை பசில்–ராசபக்சே தமிழர்களுக்கு வழங்கி மற்றவர்களுக்கு தான் இன்னமும் தமிழர்களுக்கான தீர்வில் உறுதியாய் செயல்படுவதாக காட்ட முற்படுகிறார். இந்த சமயங்களில் தமிழ் பிரதிநிதிகள் அதிகாரப்பகிர்வு பற்றி விரிவாக பேசுவதை கவனிக்கமுடிகிறது. மற்றும் ஆட்சி மாற்றத்தை பேசவேண்டிய அவசியம் இல்லை என இராசபக்சேவின் அரசு முணுமுணுப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அனைத்து தரப்பிற்கும் வெற்றி எனும் தீர்வாக இந்த மாற்றங்கள் நிகழும். இதை நாம் ஏற்றுக் கொள்கிறோமா என்பதே நம் முன் நிற்கும் மிக முக்கியமான கேள்வி.

இப்பொழுது நிகழும் அனைத்து நிகழ்வுகளும் அமெரிக்க அரசால் நகர்த்தப்படும் நகர்வுகள். இதை இராபர்ட் பிளேக்கின் 2008 அக்டோபரில் சென்னை பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரை விரிவாக விளக்குகிறது. இதில் "கொழும்பு புலிகளை ஒடுக்குவதற்கான காலம் நெருங்கி விட்டதுஞ் புலிகளுக்கு பின்னான சமூகத்தில் இந்தியாவின் இலங்கைக்கான தீர்வே இறுதியானது" அதாவது தமிழர்களின் தீர்வில் இந்தியாவும்– அமெரிக்காவும் ஒன்று எனும் செய்தி தெளிவாக அவரால் உணரவைக்கப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளாக மிகத் தீவிரமாக பின்னணியில் வேலை செய்த அமெரிக்காவினை நாம் புரிந்து கொள்ளுதல் அவசியம். அமெரிக்காவின் பிராந்திய நலனுக்கான திட்டமும் நமது விடுதலையும் பிணைந்துள்ளன. இனி வரும் காலத்தில் நாம் மிகத் தீவிரமாகவும், நுணுக்கமாகவும், ராசதந்திர நோக்குடன்

நமது மக்கள் போராட்டத்தையும், அதிகார வட்டத்திலான பேச்சுவார்த்தையையும் நடத்துதல் அவசியம். இவை இரண்டும் ஒரு சேர நகரவேண்டும்.

பின்வரும் தகவல்களை கூர்ந்து கவனித்தால் அமெரிக்கா எவ்வாறு இலங்கை அரசின் மூலமாக தனது போரை நடத்தியது என்பதை கவனிக்கலாம். இதன் அர்த்தம் இந்தியா இதில் பங்காற்றவில்லை என்பதல்ல. அமெரிக்காவின் நோக்கத்தில் இந்தியா தனது வக்கிரத்தையும் இணைத்துக் கொண்டது. அமெரிக்கா மூலமாக தனது பிராந்திய ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள விரும்புகிறது. அமெரிககாவால் இந்தியாவின் தலைமை மொத்தமாக விலைக்கு வாங்கப்பட்ட பின் இந்தியா இவ்வாறே தனது தலைவனின் நலனுக்கு தக்க நடந்துகொள்கிறது.

## அமெரிக்காவும் இலங்கையும்

இந்திய அரசு அமெரிக்காவின் கட்டுக்குள் வந்த 90களின் இறுதியில் அமெரிக்கா தனது நீண்ட நாள் திட்டமான திரிகோணமலை கப்பற்படை முகாமை அமைத்துக் கொள்வதற்கான நகர்வுகளை மேற்கொள்கிறது. இதற்கான அடிப்படையை 2002 ஆண்டு தனது அக்ஸா ஒப்பந்த்திற்கான முதல் கட்ட பேச்சுவார்த்தை மூலமாக வைக்கிறது. 70களில் இந்திரா அரசால் கடுமையாக எதிர்க்கப்பட்டு பின்னர் இலங்கையும்–அமெரிக்காவும் உறுதியாக இருப்பது கண்டு தமிழ் போராளிகளுக்கு பயிற்சி அளிப்பது வரை சென்றது என்பது இதே ஒப்பந்தத்தினை முடக்குவதற்காகவே. இந்த முறை அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தினை பேசியபொழுது இந்திய அரசு வாய் திறக்கவே இல்லை. 9/11 இரட்டை கோபுரத்தாக்குதலை காரணமாக வைத்து பல நகர்வுகளை அமெரிக்கா மேற்கொள்கிறது. அதில் ஒன்று புலிகளை பயங்கரவாத குழுவாக சித்தரித்து அதன் மூலமாக தெற்காசியா பகுதி அரசியல் விவாதத்தினை தனக்குள் மேற்கொள்கிறது. இதன் அர்த்தம் தற்பொழுது கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்தி தனது தெற்காசிய ஆதிக்கத்தினை நிலைநிறுத்த முயற்சிக்கிறது. இந்த சந்தர்ப்பத்தினை இலங்கையுடன் உபயோகித்து உறவு நிலையை மேற்கொள்கிறது. இலங்கை இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்கிறது. அமெரிக்க அரசால் உயர்பதவியில் இருந்த ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ் 2004 இல் இலங்கைக்கான தினசரி நடவடிக்கையை கவனிக்க நியமிக்கப்படுகிறார். இதற்கு முன்னதாக 2002இல் அமெரிக்காவின் இராணுவ தளபதி திமோத்தி கோர்மல்லி, கடற்படை பயணப்படையின் பிரிகேடின் தளபதி, அமெரிக்காவின் தெற்காசிய துணை அரச அதிகாரியான கிரிஸ்டினா ரோக்காவுடன் இலங்கையின் ரணில் விக்கரமசிங்கே, பாதுகாப்பு அமைச்சர் திலக் மரப்போனா மற்றும் இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் பலாலி இராணுவ முகாமில் சந்திக்கிறார்கள். இதற்கு அடுத்த மாதம் ரகசிய பயணம் ஒன்றை அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் சட்ட நிபுணர் குழு இலங்கைக்கு பயணிக்கிறது. இதற்கான காரணமாக பயங்கரவாதத்திற்கு எதிரான பயிற்சிக்கான ஒத்துழைப்பு என சொல்லப்படுகிறது.

இந்த ஒப்பந்தமானது பாகிஸ்தானில் இருக்கும் தனது தளம் ஒருவேளை அகற்றப்படவேண்டிய கட்டாயம் ஏற்படுமானால் ஆசியாவில் உள்ள தனது தொடர் கடற்பாதுகாப்பு தளத்தின் மையமாக இலங்கையை மாற்ற உதவும் என்று அமெரிக்கா நினைத்ததன் விளைவாக உருவானதுதான். இது அமெரிக்காவை மேலும் பலம் உள்ளதாக மாற்றும். தற்போதைய நிலைப்படி, பாகிஸ்தானுக்கு பிறகு அமெரிக்கா இந்தோனேசியாவின் மலாக்க சலசந்தியின் அருகே தான் நிலை கொண்டுள்ளது.

இந்த சமயத்தில் தான் இராபர்ட் பிளேக் புலிகள் தான் தமிழர்களுக்கான அரசியல் தீர்வில் தடைக் கற்களாக இருக்கிறார்கள் எனச் சொல்லி அதற்கு புலிகளுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதே போன்றதோரு கருத்தைத்தான் பாலத்தீனத்திலும் "பாலத்தீன தீர்விற்கு யாசர் அராபத் எதிராக தடைகல்லாக இருக்கிறார்" என்றார்கள். அதன் பின்னர் அவர் அகற்றப்பட்டார். இதே போன்றதொரு நிலையை இலங்கையில் தமிழர்களின் தலைவர்களுக்கு ஏற்படுத்த திட்டமிட்டே புலிகளின் நிதி ஆதாரத்தையும், ஆயுத ஆதாரத்தையும் அழிக்க இரு குழுக்களை ஏற்படுத்தி ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, இங்கிலாந்து, ஜப்பான், மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து எனப் பல நாடுகளில் உள்ள புலிகளின் நிதி ஆதாரங்களையும் ஆயுத ஆதாரங்களையும் அழித்தார். இதுவே புலிகளின் பின்னடைவிற்கு காரணமாக இருந்தது. மேலும் புலிகளின் கடல்வழித்தடத்தினை மறித்து ஆயுதக் கப்பலை அழிப்பதற்கு உதவியதும் இவரே. பிரபாகரனின் மறைவிற்குப் பிறகு இலங்கைத் தமிழர்களுக்கு தீர்வு அளிக்காமல் ஒருவேளை சென்றால், இந்தியாவும் அமெரிக்காவும் விட்டுவைக்காது என போர் நடந்து கொண்டு இருந்த 2009 மார்ச் மாதம் 11ஆம் தேதி கொழும்புவில் தெரிவித்தார். ஆக, தலைவர் பிரபாகரனை தீர்த்துக்கட்டுவதில் வேறு எவரையும் விட அமெரிக்காவே கவனமாக இருந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும். மேலும் இதற்காகவே பிரபாகரனின் நகர்வுகளை செயற்கைக்கோள் மூலம் இலங்கை அரசுக்கு அறிவித்ததாகவும் சொல்லப்படுகிறது இப்பொழுது இவரே தமிழர்களுக்கான பேச்சுவார்த்தை, தீர்வை முன்னின்று பேசுகிறார். இதுவே நமது கவலைக்குரிய ஒன்று.

ராபர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு முன்பு இருந்த அனைத்து நாடுகளான துனிசியா, எகிப்து, நைஜீரியா, அல்ஜீரியா என அனைத்து நாடுகளிலும் (நைஜீரியா தவிர்த்து) வெற்றிகரமாக ஆட்சிமாற்றம் ஏற்பட்டு விட்டது. நைஜீரியாவில் இனவிடுதலை போராட்டம் இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. அமெரிக்காவினுடய மிகச்சிறந்த அதிகாரிகளுள் ஒருவராக வெற்றிகரமாக அமெரிக்காவின் திட்டத்தை செயல்படுத்தியவராக இன்று ராபர்ட் பிளேக் திகழ்கிறார். இவரே இலங்கையின் எதிர்காலத்தையும் தமிழர்களின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கவராக மாறினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் இவரின் திட்டம் பிற்போக்கானதாகத்தான் இருக்கும் என்பதில் நமக்கு அய்யமேதுமிருக்கப் போவதில்லை. ஏனெனில், நாம் இவரின் தமிழர் போராட்டத்தைப் பற்றிய கருத்துருவாக்கம் என்பதை நாம் கவனிக்க வேண்டும், "ஒசாமா பின்லேடனும், பிரபாகரனும் பயங்கரவாதிகள்.."



▲ கிளிநொச்சி இறுதி ஈழப்போரில் தமிழீழ மக்களின் இடப்பெயர்வு

என்று ராபர்ட் ஓ பிளேக் மே மாதம் 5ம் தேதி, 2011ல் கூறியதை மறக்கமுடியாத ஒன்று.

## அமெரிக்காவும் தமிழீழப்போரும்

2002இல் அமெரிக்கா முன்னெடுத்த அக்சா ஒப்பந்தத்திற்கு பிறகு வெகு வேகமாக காய்களை நகர்த்துகிறது. இரணிலின் சூழ்ச்சி நிறைந்த அரசியல் நகர்வுகள் இந்தியாவின் கொல்லைப்புறத்தின் வழியே நகர்த்தினார். இதில் முக்கியமாக அமெரிக்க அதிகாரிகளின் வருகை. வெகுகாலத்திற்கு (8 ஆண்டுகளுக்கு பிறகு) அமெரிக்காவின் ஹாப்பர் போர்க்கப்பல் ஏப்ரல் 2002இல் கொழும்பு வந்தது. இந்தியாவிற்கு தெரியாமல் திரிகோணமலையில் அமெரிக்காவிற்கு பெட்ரோலிய எண்ணை கிடங்குகளை அமைக்க இரணில் அரசு ஒப்பந்தம் ஏற்படுத்த முயன்றதை டிசம்பர் மாதம் 2002இல் வாச்பாயி அரசு அறிந்து கொழும்புவிற்கு தூதுவர்களை அனுப்பி அதிருப்தியை வெளிப்படுத்தியபோது ரணில் மறுத்தார்.

2004 பிப்ரவரி 8 ஆம் தேதியில் அமெரிக்காவிற்கான இலங்கையின் தூதர் தேவிதா சுபசிங்கே இலங்கையின் அமெரிக்க வாழ்மக்களிடத்தில் இலங்கையின் சுதந்திர தினத்தில் பேசும்போது அமெரிக்காவின் இலங்கைக்கான முக்கியத்துவத்தைப் பற்றி பெருமையடித்தார். அவரின் பெருமையில் உண்மை இருந்தது. அமெரிக்கா இலங்கையின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் உதவும் அறிகுறியையே அவர் பெருமையாக பேசினார். அதற்கான ஆதாரமும் இருக்கவே செய்தது. அமெரிக்காவின் பசிபிக் கடற்படையின் தளபதியை அவரும், இலங்கை கடற்படையின் வைஸ் அட்மிரல் (துணை கப்பற்படைத்தளபதி) தயா சந்தாகிரியும் சந்தித்து இருதரப்பு பாதுகாப்பு இராணுவ உறவுகளை பேசி இருந்தனர். இதில் ஆயுதம் மற்றும் பாதுகாப்பு கருவிகள் சார்ந்த பேச்சும் நடைபெற்றது. மேலும் இலங்கையின் முத்தரப்பு தளபதிகள் அமெரிக்காவின் முத்தரப்பு தளபதிகளை சந்தித்துப் பேசி பகிர்ந்த பின்னரே இந்த தூதரின் பேச்சு அமைந்தது. அதாவது இந்தியா அறியாமல் எதுவும் அமெரிக்காவிடம் பேச மாட்டோம் என கூறிய இரணில் மிகத்திறமையாக இந்திய அரசின் முதுகுப்புறத்தில் அமெரிக்காவிடத்தில் உறவுகளை உறுதிபடுத்தி இருந்தார். இதில் மிகமுக்கியமாக இலங்கை அமெரிக்க உறவுகள் கடலோரக்காவல் படையை பலப்படுத்துவதாக அமைந்தது. இந்த காலக்கட்டத்தில் தான் தமிழக மீனவர்கள் வேறு எப்போதையும் விட அதிக அளவில் கொல்லப்பட்டனர்.

இந்த அறிவிப்பு நடந்த ஒரு வருடத்தில் 21 பிப்ரவரி, 2005இல் அமெரிக்கா இலங்கைக்கு முதல் முறையாக ஒரு போர்க்கப்பலை வழங்குகிறது. இந்த வசதி மிக்க கப்பல் கடலோர பாதுகாப்பை திறம்பட செய்கிறது. இந்தக் கப்பலே பின்னர் சமுத்திரா என இலங்கையால் அழைக்கப்படுகிறது.

இதற்கு நடுவே இலங்கை அரசின் கப்பற்படை அமெரிக்காவின் கடல்படையால் பெருமளவு பயிற்சியளிக்கப்பட்டது. இதன் விளைவிலேயே இலங்கை தனது காலி துறைமுகத்தை காக்கவும், திரிகோணமலையில் மீதான தாக்குதலை முறியடிக்கவும் முடிந்தது, அதற்கு பின்னணியில் அமெரிக்காவின் பயிற்சி உதவியது என்பதை நாம் சொல்லித்தெரியவேண்டியதில்லை. இதற்கு பின் 2006இல் அமெரிக்கா 1000 கப்பற்படை வீரர்களுடன் இலங்கையின் அம்பந்தோட்டா அருகே மாபெரும் கடற்போர் பயிற்சியை செய்தது. இந்த பயிற்சியானது விடுதலைப் புலிகள் ஜெனீவாவில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சற்று முன்னதாக நடைபெற்றது என்பது கவனிக்கத்தக்கது. இது சரியாகச் சொல்லப்போனால் புலிகளுக்கு எச்சரிக்கை விடுப்பதாக இருந்தது.

இதற்கு இரு வருடங்களுக்கு முன்னதாக மறைந்த புலிகளின் அரசியல்பிரிவுச் செயலாளர் சுப. தமிழ்ச்செல்வன் எரிக் சோல்ஹைமிடம் தமக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக தெரிவித்ததை அவர் அமெரிக்க தூதரகத்தில் தெரிவித்து இருந்தார். இதை தனது தலைமையகத்திற்கு தெரிவித்த தொடர்பில் தூதரகம் பின் குறிப்பாக "..இப்பொழுதுதான் புலிகளுக்கு புரிகிறது.." எனக் கிண்டலாக அனுப்பப்பட்டு இருந்ததை சமீபத்திய விக்கீலீக்ஸ் தெரிவிக்கிறது. அமெரிக்கா தனது போர்க்கப்பலை இலங்கைக்கு கொடுத்த அதே நேரம் அய்ரோப்பிய ஒன்றியம் புலிகளை பயங்கரவாத இயக்கம் என அறிவிக்கக் கேட்ட இலங்கை அரசின் கோரிக்கையை அய்ரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதரகம் ஒப்புதல் அளித்து தனது தலைநகரான புரஸ்ஸல்ஸ்க்கு பரிந்துரைகளை அனுப்புகிறது. அதாவது அமைதிப் பேச்சுவார்த்தையில் புலிகள் ஈடுபட்டுக் கொண்டு இருந்த அதே நேரத்தில் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என அய்ரோப்பிய ஒன்றியம் தடைசெய்கிறது; அமெரிக்கா ஒருபடி மேல்சென்று இலங்கையை போருக்குத் தயார் செய்கிறது. இதன் நடுவிலேயே துரோகி கருணாவின் பிரிவும் அமெரிக்க-அய்ரோப்பிய-இந்திய உளவு துறைகளின் உதவியால் நடைபெறுகிறது. நவம்பர் 21, 2006இல் வாசிங்டன் நகரில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைக்கான நடுவத்தின் நாடுகளான ஜப்பான், நார்வே, அய்ரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, இலங்கை மற்றும் புலிகளின் ஒப்பந்த மீறலைக் கண்டிக்கின்றனர். இதில் தமிழர்களின் பிரச்சனைகள் கவனமாக மறைக்கப்பட்டு இலங்கைக்கு ஆதரவான நிலையை வெளிப்படுத்துகின்றனர். அமெரிக்காவின் நிக்கோலஸ் பர்ன்ஸ் இலங்கை அரசின் புலிகள் மற்றும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதுடன் புலிகளை ஓரங்கட்டுகின்றனர். அதாவது புலிகளை பயங்கரவாதிகள் என அய்ரோப்பிய ஒன்றியம் முடிவெடுத்த பின் இது நடக்கிறது.

2004 இல் இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அமெரிக்காவின் கைப்பாவையாக மன்மோகன் சிங் பதவி ஏற்றதும் நிலைமைகள் வெகுவாக இலங்கைக்கு சாதகமாக நகருகின்றன. அமெரிக்காவால் தெற்காசியாவில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை சார் நகர்வுகள் எதுவும் இந்தியாவால் கேள்வி கேட்கப்படுவதில்லை. முழுமையாக அமெரிக்கவின் மாநிலமாக மாற்றப்பட்டதைப் போல இலங்கையில் அமெரிக்காவின் எந்த ஒரு காலடிபதிவும் இந்தியாவின் கவனத்திற்கு வரமறுக்கின்றன. இந்த சமயத்தில் தான் இந்தியாவில் தேசிய பாதுகாப்பு செயலாளர் ஜெ.என் தீக்சித்திற்குப் பிறகு எம்.கே நாரயணன் நியமிக்கப்படுகின்றார். இவர் அமெரிக்காவின் போர்டு பவுண்டேசனின் நிதியில் செயல்படும் சென்டெர் பார் செக்யூரிட்டி அனாலிசிஸில் பணிபுரிந்து கொண்டு இருந்தபோது இந்தப் பதவிக்கு கொண்டு வரப்படுகிறார். இவரே போர்க்காலத்தில் அமெரிக்க-இந்தியாவின் அச்சமான தமிழகத்தில் அதன் அரசியல்வாதிகளாலும், அரசாலும் எதிர்ப்பு வரக்கூடாது என கருணாநிதி அரசை மிரட்டி பணிய வைத்தவர். ஏனெனில், அமெரிக்காவிற்கு அதன் துணை நாடான இந்தியாவில் அதன் மாநிலத்தில் தேசிய இனப்பிரச்சனை வரக்கூடாது எனக் கவலை. ஒருவேளை இந்தியா அம்மாதிரியான இனப்பிரச்சனைகளில் சிக்குவது அமெரிக்காவின் வர்த்தக நலனையும் பாதுகாப்பு நலனையும் கடுமையாக பாதிக்கும். எனவே தான் தமிழகத்தை அடக்குவதற்கு எம்.கே நாரயணன் அமெரிக்க ஆளும் வர்க்கம் மற்றும் இந்திய தரகுமுதலாளி அரசின் பிரதிநிதியாக முயற்சி எடுத்தது முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் இவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்றாக இவரின் உறுதியான தமிழின எதிர்ப்பும் இந்திய தரகுமுதலாளித்துவ அடிவருடித்தனமும் அமைந்தது. பிரதமரின் ஆலோசகராக இருந்த இவர் இந்தியாவின் ரா உளவுத்துறையின் தலைவர் ரபிந்திரசிங் அமெரிக்காவிற்கு உளவுத் தகவல்களை கடத்தியதையும் பின் அவர் அமெரிக்காவிற்கு தப்பிச் செல்ல உதவி செய்த தோமர் என்பவரை அமெரிக்காவிலேயே பதவியேற்க வைத்தவர் இந்த எம்.கே.நாராயணன். ஆக அமெரிக்கா தனது திட்டத்திற்கு ஏற்ப வலையை எற்படுத்தியது.



இந்த எம்.கே.நாராயணன் காலத்தில் தான் இலங்கையின் வடக்குப் பகுதியில் அமெரிக்காவின் கடல் பாதுகாப்பை கவனிக்கும் அதி நவீன ராடார்கள் பொருத்தப்பட்டது. இதை இந்தியாவின் பாதுகாப்பு செயலர் எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்காவின் ராடார்களை தெற்கு பகுதிக்கு நகர்த்திவிட்டு வடக்கில் இந்தியா அளித்த ராடார்களை நிறுவச் சொன்னார். அதனை அமெரிக்காவிடம் தெரிவித்த இலங்கையின் கமடோர் இலங்கோகோன். இதற்கு அவரிடம் அமெரிக்கா இந்தியாவிடம் உறுதியாக இருக்கவும் என்று சொன்னதுடன் தேவைப்பட்டால் இந்தியாவின் எதிர்ப்பை மீறி செயல்படுமாறும் அறிவுறுத்தினார். இது 2007இல் நடைபெற்றது. இந்தியாவினை சந்தித்தபோது இந்தியா அவரிடம் தனது ஆட்சேபணையை திரும்பப் பெற்றது எனச் சொல்லப்பட்டது, அவசியமெனில் இந்தியாவின் ராடார்களை அமெரிக்க ராடார் கவனிக்காத சிறு சிறு இடைவெளிப் பகுதிகளில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த சமயத்தில் தான் புலிகளின் ஆயுதக்கப்பல்கள் மறிக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன. இதை அமெரிக்காவின் உளவு தகவல்களுடன் இலங்கை

செய்து முடித்தது. இலங்கை அரசின் வார்த்தைகளில் கூறுவதெனில் புலிகளின் கப்பல்களைப் பற்றிய தகவல்கள் மட்டுமல்ல அதில் இருந்தவர்களை பற்றியத் தகவல்களும் இலங்கை அரசுக்கு அமெரிக்காவால் அளிக்கப்பட்டன.

2007, மார்ச் 5 இல் தெற்காசியாவின் மிக முக்கியமான அக்ஸா ஒப்பந்தம் அமெரிக்காவின் ராபர்ட் பிளேக்குக்கும், இலங்கையின் கோத்தபயா ராசபக்சேவிற்கும் கையெழுத்தாகிறது. அதாவது கோத்தபயா ஓர் அமெரிக்க பிரஜை, ராபர்ட் பிளேக்கும் அமெரிக்க பிரஜை. இருவரும் இலங்கைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார்கள். இப்பொழுதும் இந்தியா அமைதி காக்கிறது. இந்த கையெழுத்திற்கிடையே இலங்கைக்கு அமெரிக்கா இஸ்ரேலிடம் இருந்து ஆயுதம் வாங்க உதவி செய்கிறது. இதற்கு அர்த்தம் அமெரிக்கா இந்த ஆயுதத்திற்கு நிதியளிக்கும் என்பது. இதுவே இந்த ஒப்பந்தத்தில் இலங்கைக்கு கிடைத்த உடனடி பலன். அமெரிக்காவின் இந்த மாபெரும் உதவியை கோத்தபய ராசபக்சே கொழும்புவின் சர்வதேச கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் நன்றி பாராட்டிப் பேசுகிறார்; இதை இலங்கையின் பயங்கரவாதத்திற்கான பேராசிரியர் ரோகன் குணரத்தன அதே மாநாட்டில் உறுதி செய்கிறார்.

போருக்கு முந்தைய தயாரிப்புகளில் அமெரிக்காவின் பங்கு எத்தகைய முக்கியமானதோ அதே முக்கியத்துவம் போரின் போதும் அதற்கு பின்னர் நடைபெற்ற இனப்படுகொலையின் போதும் முக்கியத்துவமானது. இலங்கையை தனது பிடியினுள் முழுமையாக கொண்டுவந்த அமெரிக்கா தனது திட்டத்தின் கடைசி கட்டமான அமைதியாக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழர்களை ஒரு போலி- ஊழல் மிகுந்த தமிழர் தலைமையின் கீழ் அமைத்து தனது கப்பல்படைத் தளத்தையும் அதனூடாக எண்ணைய்க்கிடங்கு மற்றும் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த கட்டுமானங்களை உருவாக்கப் போகிறது. இந்த திட்டத்திற்கு தமிழீழத்தில் பொம்மை பிரதிநிதிகள், இந்தியாவில்-தமிழகத்தில் தமிழர்களால் நம்பக்கூடியவாறு ஜெயலலிதா அரசை உருவாக்குதல், புலம்பெயர் நாடுகளில் தமிழீழம் கேட்கும் நேர்மையான கட்டமைப்புகளை உடைத்தல், புலித்தலைவர்களை நெருக்குதல் என பல்வேறு கட்டங்கள் நம் கண்முன் நடைபெறும்.

வேறு எங்கேயும் விட தமிழீழப்போராட்டம் என்பது பலவழிகளில், தனித்துவம் பெற்றது. ருவாண்டாவைபோல இது இனக்கலவரம் அல்ல, சூடானைப்போல ஒற்றை அதிபரால் ஆளப்படும் சர்வாதிகார அரசு அல்ல. போஸ்னியா, செர்பிரினிக்காவில் நடைபெற்ற இனப்படுகொலை என்பது ஓர் இனவிடுதலை போராட்டம் சார்ந்த இனப்படுகொலை அல்ல. தமிழீழத்தில் நடைபெற்றது ஒரு விடுதலைப் போராட்டம். உலகின் 40க்கும் அதிகமான நாடுகளின் ஆதரவு தீர்மானத்தினைக் கொண்டுள்ள காசுமீர் போராட்டத்தினைப் போன்றதல்ல. அந்த விடுதலை போராட்டத்திற்கு சனநாயக ரீதியிலான பின்புலமாக ஒரு மக்கள் வாக்கெடுப்பும், அகிம்சை முறையிலான போராட்டமும் உள்ளது. மேலும் இந்த 2009 இனப்படுகொலைக்கு முன் தமிழர்கள் முற்றிலுமாக 2005 இல் இலங்கை அதிபர் தேர்தலை புறக்கணித்ததையும், புலிகளின் ஆயுதப் போராட்டத்தின்பின் அணிதிரண்டதையும் நாம் கவனிக்க வேண்டும். இரணிலோ, இராசபக்சேவோ, சந்திரிகாவோ என யார் வந்தாலும் இந்தப் படுகொலைப் போர் நடந்தே இருக்கும். இதை தடுக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் தடுக்கப்பட்டதும், அமெரிக்காவின் பின்னணியும் தமிழீழ விடுதலைப் போரின் பின்னடைவிற்கு காரணம்.

## அமெரிக்காவின் தொண்டு நிறுவனமும் போரும்

2009இல் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒவ்வொரு வாரமும் அமெரிக்காவின் தொண்டு நிறுவனமான யு.எஸ்.எய்ட் போரில் பாதிக்கப்படும் மக்களைப் பற்றியும், அவர்களுக்கான உதவிகள் பற்றியும் தகவல் அனுப்பிக் கொண்டு இருந்தது. (இந்த தொண்டு நிறுவனம் உலகின் பல்வேறு நாடுகளில் தான் செயல்பட்ட இடங்களில் ஆட்சிக்கவிழ்ப்பையும், அரசியல் நிலையற்ற தன்மையையும் உருவாக்கியது என 'பொருளாதார அடியாளின் வாக்குமூலத்தில்' அதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.) புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்குள் செயல்பட்ட பெருமளவு தொண்டு நிறுவனங்கள் புலிகளுக்கு எதிரான உளவு வேலையை திறம்படச் செய்தது. இந்த தொண்டு நிறுவனம் பிப்ரவரி மாதம் இரண்டு-மூன்றாம் வார செய்தியில் முல்லைத்தீவு பகுதியில் போருக்கு நடுவே மாட்டிக் கொண்ட உள்ளூர் அகதிகள் என 70,000 மக்களே உள்ளார்கள் என தகவல் அனுப்பியதைக் காணலாம். இந்த எண்ணிக்கையை தானே இலங்கை அரசும் பேசியது, இந்தியாவின் பிரணாப் முகர்ஜியும் உறுதிப்படுத்தினார். இது எப்படி சாத்தியம் என்பது புரியவில்லை, ஏனெனில் அங்கு இருந்த மக்கள் தொகையை தமிழர்கள் மறுவாழ்வு மையமும், இலங்கை அரசின் தமிழர் பகுதி அரசாங்க ஏஜெண்டும் வேறு ஒரு கணக்கை முன் வைத்து இருக்கிறார்கள்.

## போருக்குப் பிறகான சூழலும் சர்வதேசமும்

போருக்கு பிறகான ஐ.நாவின் மனித உரிமை அமர்வில் அமெரிக்கா-மேற்குலகம் சார்ந்த அரசுகள் சாராத எதிர் கூட்டணி (இக்கூட்டணியும் ஈழ ஆதரவிற்காகவன்றி தத்தமது ஆளும்வர்க்க நலனுக்கு சார்பாக உருவானதுதான்) இந்தியாவின் பெரும் முயற்சியினால் முறியடிக்கப்பட்டது. இலங்கைக்கு ஆதரவாக கொணரப்பட்ட இந்த தீர்மானத்தில் இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்க-மேற்குலக எதிர்ப்பு மற்றும் முன்னால் எதிர்ப்பு நாடுகளின் ஆதிக்கம் அதிகமிருந்தது. இதன் மூலம் இலங்கையானது மேற்குலக எதிர்ப்பு முகமூடியை முன்வைத்து செயல்பட்டது. இந்த அடிப்படையிலேயே இலங்கையை தண்டிப்பது என்பது மேற்குலகிற்கு எதிரான ஒரு நாட்டின் தீவிரவாதத்திற்கு எதிரான போரை வளரும் மற்றும் பின் தங்கிய நாடுகள் ஆதரிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் நகர்வுகளை இந்தியாவும் சீனாவும் மேற்கொண்டன. இந்த வேசத்தை இலங்கை 2009இன் பிற்பகுதியில் மிகச்சிறப்பாக மேற்கொண்டது. இதைப் பற்றி கேட்டபோது இலங்கையின் அதிகாரி ஒருவர் பத்திரிக்கையாளரிடம் சொன்னதானது "அமெரிக்க எதிர்ப்பு என்பது இங்குள்ள பொதுமக்களை ஏமாற்றவே, அதாவது பார்வையாளர்களை குசிப்படுத்தவே."..

இது பெருமளவு இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் உதவி செய்தது. ரசியா மற்றும் மூன்றாம் உலக நாடுகள் அணிசேரா நாடுகளின் ஆகப்பெரும் தலைவராக செயல்படும் இந்தியாவின் பின் அணிவகுத்தன. இதில் ரசியா பெரும் முனைப்பெடுத்து இலங்கை அரசைக் காத்தது. அதாவது இந்த ஏகாதிபத்தியங்களின் சடுகுடு ஆட்டத்தில் கிட்டத்தட்ட ரசியாவின் தலைமை திட்டமிட்டு ஏமாற்றப்பட்டது எனவும் கருத வாய்ப்பிருக்கிறது. ஆனால் ரசியாவிற்கு இலங்கை இரு எண்ணை தோண்டும் ஒப்பந்தமும், துறைமுகம் கட்டும் ஒப்பந்தமும் கொடுத்து அதையும் ஆறுதல்படுத்தியதையும் நினைவில் வைப்போம். தமிழர்களுக்கு ஆதரவாக நின்றிருக்க வேண்டிய நாடுகள் நமக்கு எதிரணியிலும், தமிழர்களுக்கு எதிரான இப்போரை நடத்திய நாடுகள் நமக்கு ஆதரவான குரலை அளிப்பது போன்ற நிலையையும் இன்று காண்கிறோம். கூர்ந்து கவனித்தால், புலிகளை தடை செய்த அரசுகள் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவது போன்று செயல்படுகின்றன (பிரான்சு இன்று வரை கள்ளமௌனம் சாதிக்கிறது) புலிகளை தடை செய்யாத அரசுகள் இலங்கைக்கு ஆதரவாக செயல்படுகின்றன. இந்த சூது தமிழர்கள் பக்கம் யாரும் இல்லாத நிலையை மிகக் கவனமாக கொண்டு வந்து இருக்கிறது. இரண்டு பக்கங்களிலும் இலங்கையை காய் நகர்த்த விட்டு இறுதியில் அமெரிக்கா வெற்றி பெறும் நிலையை அடைந்து இருக்கிறது.

சீனா இலங்கையில் நுழைந்தது ரசியா-சீனா பாதுகாப்பு கூட்டு நடவடிக்கையான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பிற்கு (shangaai cooperation - SCO) வலுசேர்க்கும் என போடப்பட்ட கணக்கு பொய்ப்பது போன்ற சூழலை நாம் காண்கிறோம் (ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பது (shangaai cooperation - SCO) மேற்குலகின் நேட்டோ படைபலத்தை சமனாக்க ரசியா-சீனாவினால் உருவாக்கப்பட்டது. இதில் இலங்கை 2009இல் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றது. இந்த கூட்டமைப்பின் மூலமும் இலங்கை ரசிய-சீன உதவிகளை தமிழ் இன அழிப்புப் போருக்கு பெற்றது. இந்தக் கூட்டமைப்பில் ஒருவேளை இலங்கை ஒரு முக்கிய பொறுப்பையேற்றால் இந்த அமைப்பானது இந்தியப் பெருங்கடலில் வலிமை பெறும்). ஆக இது போன்ற பெரும் நாடுகளின், முக்கியமாக சீனா-அமெரிக்கா, திட்டத்தையும் நகர்வையும் நாம் புரிந்து கொண்டால் நமது வருங்கால திட்டங்களுக்கு உதவலாம். ஏனெனில் அமெரிக்கா, சீனா ஆகிய இரு நாடுகளின் ஏகாதிபத்திய நலன்கள் எதிர்மறையாக தமிழீழ விடுதலையோடு பிணைந்து இருக்கிறது.

## இந்தியப் பெருங்கடலில் சீனாவின் கடல்சார் ராணுவப்பாதுகாப்பு

சீனா தன்னுடைய ஆப்பிரிக்க-அரேபிய முதலீடுகளையும், மூலப்பொருளுக்கான நாடுகளையும் பாதுகாக்க முத்துமாலை திட்டத்தை முன்னெடுத்தது. இதற்காக 25 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டது ('இந்து' பத்திரிக்கையின் ஆசிரியர் ராம் சீனாவின் இந்த நலனை பாதுகாக்கவே தமிழர்களுக்கு எதிராகவும், தமிழர்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள், பாசிஸ்டுகள் என தமிழின விடுதலைப்போரை மனிதகுலத்திற்கு விரோதமாகவும், இந்தியாவிற்கு விரோதமாகவும் கருத்துக்களை கட்டமைத்தார். அதாவது இந்தியாவின் துணையுடன் தமிழர்களை கிழக்கு கடற்கரை பகுதியிலிருந்து வெளியேற்றுவது அல்லது அகற்றுவது. இலங்கை அரசிற்கு சீன தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததில் இந்து பத்திரிக்கை ஆசிரியர் என். ராமிற்கு பெரும் பங்குண்டு).

முத்துமாலைத் திட்டம் எனப்படுவது, சீனா தனது கடல்வழிப் போக்குவரத்தை பாதுகாக்க அதனுடைய கிழக்குமுனையிலிருந்து இந்தோனிசிய கடல், பர்மா, வங்காளதேசம், இலங்கை, பாகிஸ்தான் வழியாக அமைத்த துறைமுகங்கள், விமானதளங்கள். பாகிஸ்தான், இலங்கை, பர்மா, பங்களாதேசம், இந்தோனேசியா, கம்போடியாவிலிருந்து சூடான் துறைமுகம், சோமாலியா என விரிவடைந்து செல்லும் சீனாவின் 'முத்துமாலை யுக்தி' நகர்வில் மிக முக்கியமான இடத்தில் இலங்கையும், தமிழீழமும் வருகிறது.

மேலும் உலகின் மிகக்குறுகிய ஜலசந்தியான மலாக்காய் (Malacca), ஹோர்முட்ஸ் (Hormuz), பாப் எல் மண்டெப் (Bab el Mandeb) ஆகிய குறுகிய-கடல்சார் சிக்கல்களை சரிசெய்து பாதுகாப்பாய் நகரவேண்டிய கவலை எந்த ஒரு வல்லரசுக்கும் அல்லது வல்லரசாகும் ஆசை உள்ள நாடுகளுக்கு உண்டு. இதன் காரணமாகவே சீன அரசு இந்த பகுதிகளில் சிக்கல்களை நீக்க முறையே இந்தோனீசிய, பாகிஸ்தான், ஏமன் பகுதிகளில் கவனம் செலுத்தத் தொடங்கியது. இதற்கான கட்டுமானப் பணிகளையும், ஒப்பந்தங்களையும் நிறைவேற்றியது. இதற்கான முயற்சிகளை மிக நிதானமாக 20 ஆண்டுகளுக்கும் மேலாக நகர்த்தியது. இவ்வாறான கட்டுமானம் என்பது கச்சா எண்ணெய், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், மூலப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கு மட்டுமல்ல, உலகின் 70 சதவிகித வணிகம் கடல் வழியாகவே நடைபெறுகிறது. மேலே குறிப்பிட்ட ஜலசந்தி கடல்வழியே கிட்டத்தட்ட உலகின் பாதிக்கும் மேலான கச்சா எண்ணெய்ப் போக்குவரத்து நடக்கிறது. இந்த வணிகப் போக்குவரத்து பகுதியே ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக வரலாறு எங்கும் பார்க்கப்படுகிறது. (ஏனெனில் இந்த இந்தோனிசியாவின் மலாக்கா ஜலசந்தியை பாதுகாக்கவே ராசராச சோழன், ராசேந்திர சோழன் கடல்படையை அனுப்பியதாக சோழப் பேரரசின் வரலாற்றில் சொல்லப்படுகிறது). இந்த குறுகலான சிக்கல் நிறைந்த பகுதிகளை கடப்பதில் இலங்கை ஒரு முக்கிய தொடர்பு புள்ளியாக இருந்து வருகிறது.

ஆக இந்த முத்துமாலைத்திட்டத்தில் மிகமுக்கியமான ஒன்றாக இலங்கை மாறியது. இலங்கையில் இதன் காரணமாக பெரும் முதலீடுகளை சீனா செய்ய ஆரம்பித்தது. இலங்கையின் தென்கோடி அம்பந்தோட்டா துறைமுகம் இவ்வாறே உருவாக்கப்பட்டது.

அரசியல் நேர்மை மற்றும் மனித உரிமைகள் பற்றிய கவலைகள் ஏதும் இல்லாமல் தனது லாப நோக்கை மட்டும் குறிக்கோளாக செயல்பட்டு வந்த அரசாக சீன அரசு செயல்படுவதை பர்மா, இலங்கை, இஸ்ரேல் முதல்

சூடான் வரை நாம் காணமுடியும். இந்தியா பெருங்கடலில் பெரும் துறைமுகங்களையும், தரை–வான்வழி போக்குவரத்து தளங்களையும், கண்காணிப்பகத்தையும் நிர்மாணித்து அதன் முதுகெலும்பாய் வர்த்தக நிறுவனங்களை நிர்மாணிக்க ஆரம்பித்தது. பேராசான் மாவோவிற்கு பிறகான சீன அரசு. உலகமயமான திறந்த சந்தைப் பொருளாதாரத்திலும் வர்த்தகத்திலும் வெற்றிகரமானதோர் அரசாகத் திகழ திட்டமிட்ட நகர்வுகளே இவைகள்.

இந்த நகர்வுகள் வெற்றி பெறும்போது சீன அரசானது வல்லரசுகளின் கனவான 'நீலநீர்' கடற்படையை கட்டமுடியும். இந்த கடற்படை வலிமை என்பது, தரைத்தள உதவி இல்லாமலே நீண்ட தொலைவு படைகளை நகர்த்து சென்று தாக்குதல் நடத்தும் திறனாகும். இந்தத் திறன் அமெரிக்காவிற்கும், ரசியா, இங்கிலாந்து, பிரான்ஸ்சுக்கு மட்டுமே உண்டு. இந்த வலிமை வரவேண்டுமானால் சீனா தனது முத்துமாலை திட்டத்தை முழுமையாக நிறைவேற்றவேண்டும்.

இந்தப் பின்னணியில் தான் அமெரிக்காவின் கடந்த பத்தாண்டுகால நகர்வையும், இரட்டை கோபுரத்தாக்குதலுக்கு பின்னான அதன் வெளியுறவுக் கொள்கை மாற்றமும் முக்கியத்துவம் பெறுகிறது.

## ஜாஸ்மின் புரட்சியும் சீனாவும்

துனிசியாவில் ஆரம்பித்த மக்கள் புரட்சியானது அரேபிய, பாரசீக, ஆப்பிரிக்க நாடுகளில் பரவி ஆட்சியாளர்களைத் தூக்கியெறிந்தது. விக்கிலீக்ஸும் கார்டியன் பத்திரிக்கையும் ஒரு செய்தியை வெளியிடுகிறது. அதாவது, எகிப்திய புரட்சியில் செயலாற்றிய நபர்களுக்கு 2007-2008 ஆண்டுகளில் அமெரிக்காவில் போராட்டம் நடத்துவதைப் பற்றிய வகுப்புகள் எடுக்கப்பட்டன என்பதே அது. இவ்வாறே இந்த புரட்சி அதன் ஆட்சியாளர்களைத் தூக்கியெறிவதை மட்டும் குறிக்கோளாக கொண்டிருந்தது. அந்த ஆட்சியாளர்களின் பின்னால் இருக்கும் அமெரிக்காவை எதிர்க்காமல் ஊழலை மட்டுமே மையப்படுத்தி ஆட்சி மாற்றம் நடக்கிறது. இந்த போராட்டம் எதற்காக நடக்கிறது என்று பார்த்தால் இந்த அமெரிக்காவின் கைப்பாவை அரசுகள் சௌதி அரசையும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசையும் விட அனைத்து நாடுகளிலும் முக்கியத்துவமான தனது முதலீட்டை சீனா செய்திருந்தது. அதாவது அல்ஜீரிய, துனீசியா, ஒமென், ஏமன் மற்றும் முக்கியமாக சூடான் என சீனா முதலீடு செய்த அனைத்து நாடுகளிலும் இந்த மாற்றம் நடக்கிறது. இதன் சூட்டை உணர்ந்த பாகிஸ்தான், சீனாவின் மிக முக்கிய மத்திய மேற்கு ஆசியப் பங்காளியாக இருந்து ஒசாமா பின்லேடனுக்கு பாதுகாப்பு கொடுக்கிறது. இப்படியாக சீனாவின் தற்போதைய நிலைப்பாடுகளும் அதன் முத்துமாலை திட்டத்திற்கான நடவடிக்கைகளும் அமெரிக்காவை நிலைகுலைய வைக்கிறது. இதன் தொடர்ச்சியில் முக்கியமான தொடர்புப் புள்ளியான அம்பந்தோட்டை துறைமுகம் இலங்கையில் இருக்கிறது. இலங்கைக்குப் பிறகு சீனாவின் திட்டத்தில் பர்மாவின் துறைமுகம் இருக்கிறது, பர்மாவிலும் ஓர் இனவிடுதலை போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. 'கரன்' எனப்படும் அந்த இனத்தின் மீதான தாக்குதலை கவனிக்க விஜய் நம்பியார் அனுப்பப்படுகிறார். விஜய் நம்பியாரின் இந்த புதிய பதவியை எதிர்க்கும் அந்த கரன் இனமக்கள் தமிழினப் படுகொலை விடயத்தில் விஜய் நம்பியாரின் செயல்பாடுகளை சுட்டிக்காட்டி அவரை திரும்பப் பெறச் சொல்கிறார்கள். இந்த ஏகாதிபத்திய நாடுகள் இதேபோல தெற்கு சூடானில் நடைபெற்ற இனப்படுகொலையை கண்டுகொள்ளாமல், தடுக்காமல் விட்டு பின் தங்களது நலனுக்காக சூடானை இரண்டாகப் பிரிக்க உதவினார்கள். அய்.நாவின் வாக்கெடுப்பை நடத்தினார்கள்; கச்சா எண்ணை அதிகம் நிறைந்த தெற்கு சூடான் தனி நாடாகிறது. இதிலிருந்து நாம் ஒன்றை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அது என்னவெனில் ஈழத்தில் இனப்படுகொலையில் தொடங்கி அதன் பின்னான போர்க்குற்ற விசாரணை, இனப்படுகொலை விசாரணை என அனைத்தும் ஏகாதிபத்திய நாடுகள் தங்களது பொருளாதார, ராணுவ நலன்களை மையப்படுத்தி செயல்படுத்தின; இனியும் செயல்படுத்தும்.

## அமெரிக்காவின் 'திருகோணமலை' தாகம்

அமெரிக்காவின் வலிமை வாய்ந்த பசிபிக் கமாண்ட் கடற்படையின் வலை திரிகோணமலை இல்லாமல் முழுமை பெறமுடியாது. அதன் வலைப்பின்னலாகிய பாகிஸ்தான், டியாகோ கார்சியா தீவு (30 போர்க்கப்பல்களும், 2000 அமெரிக்க படையினரும் கொண்டுள்ள தளமாகும்) இந்த தளத்தை அமைப்பதற்காக இங்கிலாந்திற்கு சொந்தமான அந்த தீவில் இருந்த பூர்வகுடி மக்களை தீவைவிட்டு வெளியேற்றினார்கள். அதாவது தனது பாதுகாப்பு தளத்தை அமைக்க இங்கிலாந்து–அமெரிக்க அரசு எந்த செயலையும் செய்யும் என்பதை இது உணர்த்தும். இந்த தீவைவிட மிகமுக்கியமான திரிகோணமலை துறைமுகத்தை கைக்கொள்ள அமெரிக்கா எந்தவொரு பலியிடலையும் செய்யும் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவும், திரிகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவும் பங்கு போடுவதும் இதன் அடிப்படையில் தான். இதில் சீனா தனது நீல– நீர் கப்பல்படை திறனை வளர்த்தெடுப்பதற்கு முன் சீனாவின் இந்த முத்துமாலை திட்டத்தை தகர்க்க அமெரிக்க முடிவெடுக்கிறது.

இலங்கையின் கிழக்கு கடற்கரையை தனது வசமாக்கவும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதும், அதற்கு முட்டுகட்டையாக இருக்கும் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு பக்கபலமாக துணை நிற்கும் மக்களும் அதனோடு அழிக்கப்பட வேண்டும் என்பது அமெரிக்க அரசின் திட்டம். இது திட்டமிடப்பட்டவாறு நடத்தப்பட்டது. எவ்வாறு ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் பெருமளவு மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அதன் மூலமாக மக்களிடமிருந்து எழும்பும் அதிருப்திகளை போராளிகளின் மீது திருப்பி அவர்களையும் மக்களையும் முடக்குவது என்பது போர் யுக்தியாக கடைபிடிக்கப்பட்டதோ அதே யுக்தி இங்கும் நடத்தப்பட்டது. புலிகள் மீது விமர்சனமாகிய 'மக்கள் கேடயமும்' இவ்வாறே உருவாக்கப்பட்டது (இங்கிலாந்து ராணுவம் இராக்கின் பாஸ்ரா நகரில் மேற்கொண்ட தாக்குதலையும், இஸ்ரேலின் லெபனான் மீதான தாக்குதலையும், எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்காவின் வியட்நாம், இராக்கிய, யுகொஸ்லாவிய, ஆப்கானிய, சோமாலியப் போர்களையும் நீங்கள் நினைவில் கொள்ளுதல் இதுபற்றி மேலும் புரிந்துகொள்ள உதவும்).

இந்தக் கட்டுரை முழுமை பெறவில்லை ஏனெனில் இது நமது சமகாலத்தில் நடக்கும் நிகழ்வுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு எழுதப்பட்டது.

சர்வதேச சமூகத்திற்கும், தமிழினத்திற்கும் மே பதினேழு இயக்கத்தின் கோரிக்கையும் வேண்டுகோளும்:

மே பதினேழு இயக்கம் ஐ.நா வினுடைய நிபுணர் குழுவின் அறிக்கையை தமிழீழ இனப்படுகொலையில் ஒரு குறைந்தபட்ச ஆரம்ப முயற்சியாக வரவேற்கிறது. இந்த அறிக்கை போர் பற்றிய இலங்கை அரசின் குற்றங்களை பதிவு செய்யும் முக்கிய ஒரு அறிக்கையாக பார்த்தாலும் ஒரு முழுமையடையாத ஒன்றாக பார்க்கிறது. தமிழீழத்தில் நடைபெற்ற போர் எனப்படுவது ஒரு இனப்படுகொலை அடிப்படையிலான போர் மற்றும் இதன் பின்னணியாக 60 ஆண்டுகால விடுதலைப் போராட்டம் உள்ளது என்பதை அங்கீகரிக்க வேண்டும். போரில் 1,46,679 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது என்பது மட்டுமின்றி 1,00,000 தமிழர்கள் கடந்த 30 ஆண்டுகளாக இந்த விடுதலை கோரிக்கையின் அடிப்படையில் இலங்கை அரசால் படுகொலைக்கு உள்ளாயினர். ஆக 2,50,000க்கும் மேலாக தமிழர்களை படுகொலை செய்த அரசின் முக்கிய நோக்கமானது தமிழீழத்தமிழர்களின் விடுதலை கோரிக்கையை முடக்கவே என்பதை ஐ.நா மன்றம் அங்கீகரித்தல் அவசியம். தந்தை செல்வா அவர்களின் தலைமையில் தமிழீழ மக்கள் இலங்கையிலிருந்து பிரிந்து தனது சுதந்திர நாடாக தமிழீழம் அடைய வேண்டி அளித்த 'வட்டுக்கோட்டை தீர்மான' வாக்கெடுப்பை ஐ.நா கவனத்தில் எடுக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே பின்னர் நடந்த ஆயுதப்போராட்டத்திற்கு தமிழர்கள் அங்கு துணை நின்றார்கள் என்பதை ஐ.நா அங்கீகரிக்க வேண்டும்.

வெகு காலத்திற்கு முன்பே நடந்த கருத்து வாக்கெடுப்பான வட்டுக்கோட்டை தீர்மானத்தையே ஐ.நா அங்கீகரித்திருக்க வேண்டும். இந்த நிபுணர் குழு இந்த விவரங்களை அதன் விசாரணை வரையறையில் கொண்டு வராவிட்டாலும், இனி வரும் விவாதங்கள் இந்த கருதுகோளின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும். இந்த வாதங்களை புறந்தள்ளி அல்லது கணக்கில் எடுக்காமல் ஐநா (அ) சர்வதேச சமூகம் செயல்படுமானால் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமை தமிழர் சமூகத்திற்கு உண்டு என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். மேலும் டப்ளின் தீர்ப்பாயம் அமைதி பேச்சுவார்த்தையில் இருந்து போரின் இறுதி வரையிலான ஒரு அடிப்படை விசாரணையை மேற்கொண்டது. அதன் முடிவு அறிக்கையானது எவ்வாறு சர்வதேசம் தமிழீழத்திற்கு துரோகம் இழைத்தது என்பதை வரையறுத்துக் கூறியது. மே பதினேழு இயக்கம் அந்த அறிக்கையை மையமாக வைத்தே தனது பிரச்சாரத்தை அறிக்கை வெளியான காலத்தில் மேற்கொண்டது. புலம்பெயர் தமிழர்களின் இடைவிடாத அயராத முயற்சியினால் டப்ளின் தீர்ப்பாயத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் ஐ.நாவினை நெருக்கியதன் காரணமாக தனது ஆலோசனைக் குழுவினை உருவாக்கியது. ஆனால் முழுமையான விசாரணையை மேற்கொள்ளும் பட்சத்தில் மேற்குலகமும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்கிற காரணத்தால் ஐ.நா நிபுணர் குழுவின் விசாரணை எல்லையை தமிழீழத்தில் இறுதியில் நடைபெற்ற போரை மட்டுமே அடிப்படையாக கொள்ளச்செய்யப்பட்டது. இது அங்கு நடந்த விடுதலைப் போரை (ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரை) ஒரு ராணுவத்திற்கும், மற்றொரு குழுவிற்குமிடையேயான போராக சித்தரித்தது. இதன் அடிப்படையிலேயே இரு தரப்பிலும் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன என்று அறிக்கை வாசிக்கப்பட்டது. இது குற்றங்களை மட்டுமே கணக்கில் எடுக்குமேயன்றி விடுதலையை கணக்கிலெடுக்காமல் போவதற்கான சாத்தியங்கள் உண்டு. எனவே, போர்குற்றம் என்பதை காட்டிலும் இனப்படுகொலை அதுவும் விடுதலையை கோரியவர்களுக்கு எதிரான இனப்படுகொலை என முன்வைத்து போராடுதல் அவசியம். மேலும், போராளிகளும் போர்குற்றமிழைத்தார்கள் எனச் சொல்வதன் மூலம் அவர்கள் மறுபடியும் தமது விடுதலைக் கோரிக்கையை முன்னெடுக்காமல் பின்னுக்கு நகர்த்துதல் சாத்தியப்படும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் போர்க்குற்ற விசாரணைக்கான கோரிக்கை என்பது ஒரு நீதிமன்ற போராட்ட வழிமுறையை, அரசியல் கோரிக்கையாக நாம் முன்வைக்க வேண்டியது "தமிழீழ விடுதலையை அறிவி" என்பது மட்டுமே. 1.46 லட்சம் மக்களை இழந்த ஒரு சமூகத்திற்கு விடுதலை என்பது மட்டுமே நீதியாக அமையும்.

சர்வதேச விசாரணை என்பது இராஜபக்சே மட்டுமன்று அதற்கு முன்னதாக இருந்த அரசான ரணில் விக்கிரமசிங்கே, சந்திரிகா குமாரதுங்கா, பிரேமதாசா, ஜெயவர்த்தனா மற்றும் முன்னைய இலங்கை அரசுகள் தொடர்ச்சியாக இனப்படுகொலைகளை செய்து வந்து இருக்கிறார்கள். இவர்களும் விசாரணைக்கு உட்படுத்தாமல் செயல்படும் ஒரு விசாரணை முழுமையானது மட்டுமின்றி தமிழர்களுக்கான நீதியை புறந்தள்ளுவதாகவே தமிழ் சமூகம் கருதும். ஆகவே இவர்களையும் விசாரணைக்கு உட்படுத்துகின்ற வகையில் ஐ.நா மற்றும் சர்வதேசச் சமூகம் நடந்துகொள்ளும் என்று நம்புகிறோம். மேலும், இலங்கை அரசில் நடக்கும் ஒரு ஆட்சி மாற்றமோ அல்லது தனி நபர் தண்டித்தலோ இந்த குற்றத்திற்கான தீர்வாகாது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். மேலும் தமிழர்களுக்கான வாழ்வு, சுயமரியாதை பாதுகாப்பு பண்பாட்டு சுதந்திரம், மொழியுரிமை, நிலப்பாதுகாப்பு, கடல் மற்றும் இயற்கை ஆதாரங்களின் பாதுகாப்பு என்பது ஒன்றுபட்ட இலங்கையில் சாத்தியம் கிடையாது என்பதை உலகிற்கு நாங்கள் உணர்த்த விரும்புகிறோம். அங்கு நடந்தது ஒரு இனக்கலவரமோ, இன முரண்களோ மட்டுமல்ல அதையும் தாண்டி நடைபெற்ற விடுதலைப் போர் என்பது சர்வதேசச் சமூகத்தால் உணரப்பட்டு, இந்த படுகொலைகளை நடத்திய சர்வாதிகாரிகளால் அல்லாமல் சிங்கள பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசே என்பதை நாங்கள் உலகிற்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

தமிழர்களின் மறுவாழ்வு, தாய் நிலமீட்சி, புதிய கட்டுமானங்கள் என்பது சுதந்திரத் தமிழீழத்தில் தமிழர்களாலேயே நடத்தப்படும். அதற்கு சர்வதேச சமூகம் துணை நிற்க வேண்டும். இப்படியான நிரந்தர பாதுகாப்பு, சுயமரியாதை உறுதி செய்யப்படும் "சுதந்திர தமிழீழமே" சர்வதேசம் தமிழர்களின் பால் நியாயமாக நடந்து கொண்டது என்பதற்கான ஆதாரமாக அமையும்.

ஈழம் என்னும் வரலாற்றுக்கடமையை இளந்தோள்களில் ஏந்திக்கொள்வோம்.

சிங்கள இனவெறி, தரகு முதலாளித்துவ அரசை உடைத்தெறிந்து தனித்தமிழீழம் படைப்போம்

தமிழர்களின் தாகம் தமிழீழத்தாயகம் ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க may17voice@gmail.com

# மே 1
# உழைப்பாளர் நாள் உறுதி ஏற்போம்!

**நம் உழைப்பில் உருவான அரசுத்துறைகளை**
**தனியார்மயமாக்கும் சதியை தடுத்திடுவோம்!**



**இந்திய அரசே!**

- காரப்பேரேட் நிறுவனங்களின் லாபவெறிக்காக ஆட்குறைப்பு, ஊதியக்குறைப்பு செய்ய அனுமதிக்காதே!
- சிறு, குறு தொழில் நிறுவனங்கள் மீண்டிட உடனே வட்டியில்லா கடனை வழங்கிடு!
- உழைக்கும் தமிழ் மக்களின் விடுதலையே தமிழ்த்தேசியம்!

**மே பதினேழு இயக்கம்**
1 மே 2020

# தமிழகத்தில் சாதிய கொடுமைகளும், தலைவர்களின் சிலைகளை அவமதிக்கும் போக்கும் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

## தமிழக அரசு உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க மே17 இயக்கம் வலியுறுத்தல் – 3 மே 2020

தமிழகத்தில் சாதிய கொடுமைகளும், தலைவர்களின் சிலைகளை அவமதிக்கும் போக்கும் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கிறது. தமிழக அரசு உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் – மே17 இயக்கம்

தமிழகத்தில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சாதிய கொடுமைகளும், சாதியத்தின் பெயரைச்சொல்லி நாட்டிற்கு உழைத்த தலைவர்களின் சிலைகளை சேதப்படுத்தும் சம்பவங்களும் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

தற்போது கடலூர் மாவட்டத்தில் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை போட்டு அவமதிக்கிறார்கள்.கடந்த காலங்களில் இதே போல தந்தை பெரியார் அவர்களின் சிலைகளை சேதப்படுத்துவதும் நடந்திருக்கிறது. அதுமட்டுமில்லாமல் ஆணும் பெண்ணும் விரும்பி திருமணம் செய்தால் அதில் சாதியை காரணம் காட்டி இணையர்களை பிரிப்பதும், கொலைசெய்வதும், தேர்தலில் வெற்றிபெற்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தலைவரை அவரது நாற்காலியில் உட்கார விடாமல் கீழே உட்கார வைத்து வன்கொடுமை செய்வதும், அரசுப்பள்ளிகளில் இருக்கும் சத்துணவு கூடங்களில் இன்னார் சமைத்தால் சாப்பிட மாட்டோம் என்று ஊர் கூடி அவரை மாற்ற வைப்பதுமான சாதிய ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

இதனையெல்லாம் மேலும் மேலும் ஊக்குவிக்கும் விதமாகவே தமிழக அரசின் மௌனமும் இருக்கிறது. இப்படி சாதிய ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படையாக செய்யும் நபர்களை மிகக் கடுமையாக தண்டித்தால் மட்டுமே சமூகத்தில் இது போல் மீண்டும் நடக்காமல் இருக்கும். மேலும் சாதி குறித்தான விழிப்புணர்வை அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பும் அரசிடமே இருக்கிறது. இதை எதையும் செய்யாமல் ஓட்டுக்காக வேடிக்கை பார்ப்பது மேலும் மேலும் தமிழ்ச் சமூகத்தை செங்குத்தாக பிளக்கவே செய்யும்.

ஆகவே அரசியல் மாச்சரியங்களை கடந்து சமூக நல்லிணக்கம் என்ற ஒற்றை குறிக்கோளை கொண்டு தமிழக அரசு சாதி ஏற்றத்தாழ்வுகளை செய்யும் நபர்களையும், நாட்டுக்கு உழைத்த தலைவர்களின் சிலையை சேதப்படுத்தும்/தூண்டிவிடும் நபர்களையும் மிகக் கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று மே 17 இயக்கம் வலியுறுத்துகிறது.

# கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அறிக்கை

03 மே, 2020

**மூன்றாம்கட்ட கொரோனா ஊரடங்கு**

- குடும்பத்திற்கு ரூ.5 ஆயிரம் உதவித்தொகை உடனடியாக வழங்க வேண்டும்!*
- மதுக்கடைகளை திறக்கக் கூடாது!*
- கேபிள் டிவி கட்டணம், மின் கட்டணம், வீட்டு வாடகையை ரத்து செய்ய வேண்டும்!*
- வெளி மாநிலங்களில் சிக்கியவர்களை அழைத்துவர சிறப்பு ரயில்களை இயக்க வேண்டும்!*

**மத்திய மாநில அரசுகளுக்கு கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு வலியுறுத்தல்!**

**இதுதொடர்பாக கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறியிருப்பதாவது**

## குடும்பத்திற்கு ரூ.5 ஆயிரம் உதவித்தொகை உடனடியாக வழங்க வேண்டும்!

கொரோனா ஊரடங்கு நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் இன்று மே.03ம் தேதியுடன் முடிவடையும் நிலையில், மே 17 வரை மேலும் 2 வாரங்களுக்கு ஊரடங்கை நீட்டித்து மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.ஏற்கனவே இரண்டு கட்டமாக அமல்படுத்தப்பட்ட 40 நாள் ஊரடங்கு காரணமாக ஏழை-எளிய மக்கள் உள்ளிட பல கோடிக்கணக்கான மக்கள் பெரும் இன்னல்களையும், துயரங்களையும் எதிர்கொள்ள நேரிட்டது. அத்தியாவசிய பொருட்கள் வாங்க முடியாமலும், பொருட்கள் வாங்க வருமானம் இல்லாமலும் மக்கள் கடும் அவதியுற்றனர். ஆகவே, அரசு அளித்த ரூ.1000 உதவித்தொகையுடன் கூடுதலாக ரூ.5 ஆயிரம் உதவித்தொகையை ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் அரசு அதனை செயல்படுத்த அக்கறை காட்டவில்லை. இந்நிலையில், மூன்றாம் கட்டமாக ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கு உடனடியாக அரசு உதவிக்கரம் நீட்டினால் மட்டுமே மக்களை பசி-பட்டினியிலிருந்து காக்க முடியும். கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அக்கறை காட்டும் மத்திய மாநில அரசுகள் மக்களின் நிலை குறித்தும் அக்கறை காட்ட வேண்டும். ஆகவே ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடனடியாக ரூ.5 ஆயிரம் உதவித் தொகையை அரசு வழங்க வேண்டும் என்று கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

## மதுக்கடைகளை திறக்கக் கூடாது!

கொரோனா பாதிப்பு பகுதிகளை மூன்று மண்டலங்களாக அடையாளப்படுத்தியுள்ள அரசு, பாதிப்பு இல்லாத பச்சை மண்டலங்களில் மதுபானக் கடை, பான் மசாலா கடைகளை திறக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த அனுமதியை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். பல அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் எல்லாம் பூட்டப்பட்டிருக்கும் நிலையில் மதுபானக் கடையை திறக்க அவசியம் என்ன வந்தது. வேலையில்லாமல் வருமானம் இன்றி ஒவ்வொரு குடும்பங்களும் தவித்துவரும் சூழலில் மதுபானக்கடை திறப்பு என்பது கோடிக்கணக்கான குடும்பங்களின் நிலையை மேலும் மோசமாக பாதிக்கும்.

மதுக்கடைகளை திறக்க மத்திய அரசு அனுமதி அளித்தாலும் தமிழக அரசு மதுக்கடைகளை திறக்க அனுமதிக்கக் கூடாது. பூரண மதுவிலக்கை கொள்கையாக ஏற்றுக்கொண்டுள்ள அதிமுக அரசு இந்த வாய்ப்பை பயன்படுத்தி மதுவிலக்கை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 40 நாட்களாக மதுக்கடைகள் திறக்காமல் இருந்த காரணத்தால், மதுவுக்கு அடிமையானவர்கள் கூட குடியை மறந்துள்ளனர். குடிப்பழக்கத்தை மறக்கும் பயிற்சியை பெற்றுள்ளனர். ஆகவே, இந்த வாய்ப்பை பயன்படுத்தி பூரண மதுவிலக்கை அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆகவே தமிழக அரசு மதுக்கடைகளை மீண்டும் திறக்கக் கூடாது என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

## கேபிள் டிவி கட்டணம், மின் கட்டணம், வீட்டு வாடகையை ரத்து செய்ய வேண்டும்!

கொரோனா பரவலை தடுக்க அரசு அறிவித்துள்ள ஊரடங்கு உத்தரவு காரணமாக, அனைத்து மக்களும் வீடுகளில் முடங்கி கிடப்பதால் வருமானம் இன்றி மக்கள் பெரும் கஷ்டங்களை சந்தித்து வருகின்றனர். தினக்கூலிகளான அன்றாடங் காய்ச்சிகள் அடுத்தவேளை உணக்குக்கூட செய்வதறியாது தவித்து வருகின்றனர். இந்த சூழலில் சுட்டெரிக்கும் வெயில் காரணமாகவும் தொலைக்காட்சி, மின்விசிறி உள்ளிட்ட மின்சாதனங்கள் பயன்பாடு அதிகளவில் உள்ளது. இதனால் வழக்கத்திற்கு மாறாக மின் பயன்பாட்டு அளவு அதிகரித்து மின் கட்டணமும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஆகவே, மின் கட்டணம், கேபிள் டிவி கட்டணத்தை அரசு ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம்.அதுபோல் ஊரடங்கு காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்காக கூட மக்களிடம் எவ்வித வருமானமும் இல்லாத நிலையில் அவர்களால் வீட்டு வாடகையை செலுத்துவது என்பது இயலாத காரியம். ஆகவே தமிழக அரசு வீட்டு வாடகையை ரத்து செய்து அறிவிப்பு வெளியிட வேண்டும் எனவும் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

## வெளி மாநிலங்களில் சிக்கியவர்களை அழைத்துவர சிறப்பு ரயில்களை இயக்க வேண்டும்

வெளி மாநிலங்களில் சிக்கியுள்ள பிற மாநிலத்தவர்களை அவரவர் மாநிலங்களுக்கு அனுப்ப மத்திய அரசு அனுமதித்துள்ளது. இதற்காக ஒவ்வொரு மாநில அரசும் சிறப்புக் குழுவை அமைத்து பேருந்துகளை ஏற்பாடு செய்து சமூக இடைவெளியுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. பேருந்துகளில் சமூக இடைவெளியுடன் வெளிமாநிலங்களில் சிக்கியுள்ளவர்களை மீட்டுக்கொண்டுவருவது என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும். ஆகவே, சிறப்பு ரயில்கள் மூலம் இலவசமாக சமூக இடைவெளியுடன் அழைத்துவர மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு

**கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு**

- பழ. நெடுமாறன்
- தொல். திருமாவளவன், MP
- கொளத்தூர் மணி
- பேராசிரியர் ஜவாஹிருல்லா
- தி. வேல்முருகன்
- தெஹ்லான் பாகவி
- திருமுருகன் காந்தி
- கே. எம். ஷரீஃப்
- இனிகோ இருதயராஜ்
- வன்னி அரசு
- நெல்லை முபாரக்
- அப்துல் சமது
- பெரியார் சரவணன்
- சுப. உதயகுமாரன்



# அயோக்கிய அமெரிக்க தீர்மானமும் மே பதினேழு இயக்கமும்

**தமிழீழ விடுதலையை அழிக்க ஐநா மனித உரிமை அவையில் அமெரிக்காவால் 2012லிருந்து 2015வரை முன்மொழியப்பட்ட தீர்மானம் குறித்தான அலசல்.**

த தமிழருக்கெதிராக நடந்த இனப்படுகொலையை அடுத்து உலகநாடுகள் ஒவ்வொன்றும் அவரவர்களின் நலனை கருத்தில்கொண்டு தமிழர்களுக்கு தீர்வு தருகிறோமென்று பேசினார்கள். இதில் கொடுமை என்னவென்றால் யாரெல்லாம் 2009இல் ஈழத்தமிழர்களை அழித்தார்களோ அவர்களே முன்னின்று இந்த வேலையை செய்தார்கள். அதில் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து இவர்களின் பங்கு மிகப்பெரியது. தமிழர்களின் 60ஆண்டுகால விடுதலை போராட்டத்தை நசுக்கும் வேலையை 2009க்கு பின்னர் ஏனைய நாடுகளே செய்தது. அதாவது தமிழர்களுக்கு தீர்வு என்ற பெயரில் 2012லிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஐநா அவையில் அமெரிக்காவின் சார்பில் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டது.

2012இல் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து இப்போது ஏன் பேச வேண்டுமென்று சிலருக்கு தோன்றும். அதாவது




▲ பாலச்சந்திரன் மாணவர் இயக்கம் நடத்திய போராட்டம் - 2013

இந்த அமெரிக்க தீர்மானத்தை முன்வைத்து தான் ஈழ விடுதலை என்பது இலங்கைக்குள் தமிழர்களுக்கான தீர்வாக சுருக்கப்பட்டு இன்று முட்டுச்சந்தில் போய் நிற்கிறது. மேலும் இந்த தீர்மானத்தை ஆதரிப்பது இல்லை எதிர்ப்பது என்ற நிலையை வைத்து தான் ஈழ விடுதலை அரசியலின் போராட்ட போக்கே தமிழகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் மாற்றப்பட்டது. ஆகவே தான் இந்த அமெரிக்க தீர்மானங்கள் குறித்து நாம் மீளாய்வு செய்வது அவசியம். அதுவே எதிர்காலத்தில் தமிழர்களின் போராட்ட அரசியலில் நாம் சரியான நிலைப்பாட்டினை எடுக்க உதவும்.

## அமெரிக்காவும் ஈழத்தமிழர் சிக்கலும்:

அமெரிக்க தீர்மானங்கள் குறித்து பார்ப்பதற்கு முன் 14,933கிலோ மீட்டர் தள்ளி இருக்கும் இலங்கையின் மீது அமெரிக்காவுக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்பதை நாம் புரிந்துகொண்டால் மட்டுமே இந்த தீர்மானங்களை எளிதாக புரிந்துகொள்ளமுடியும். இலங்கையின் வழியாக தனது பிராந்திய நலன்களை தெற்காசிய பிராந்தியத்தில் நிலைநிறுத்தவும், ஆசிய பசுபிக் பெருங்கடலில் தனது கப்பற்படையை அமைக்கவும் மேலும் உலகின் புதிய சக்தியாக உருவாகிவரும் சீனாவின் ஆதிக்கத்தை தடுத்து தனது செல்வாக்கை வளர்த்துக்கொள்ளவும், விரும்பிய மேற்குலகத்திற்கு மிகப்பெரும் சவாலாக பசுபிக் கடல் பகுதியில் உருவாகி வந்த தமீழீழமக்களின் விடுதலை கோரிக்கையும் அதனை முன்னின்று களத்தில் செயல்பட்ட தமிழீழமக்களின் பிரதிநிதிகளான விடுதலைபுலிகளின் போராட்டமும் இருந்தது. இதன் விளைவாக அவர்களை அழித்தால்தான் தனது செல்வாக்கை நிலைநிறுத்த முடியும் என்ற நிலையில் இலங்கையின் வழியாக அதை செய்துமுடித்தது அமெரிக்கா. இதற்க்கு ஏராளாமான சான்றுகள் கடந்த காலங்களிலிருந்து தரமுடியும். உதாரணமாக

"1950களில் அமெரிக்காவின் இராணுவத்தலைமை அந்நாட்டு அமைச்சகத்துக்கு ஒரு அறிக்கை தருகிறது. அதில் தெற்காசியபிராந்தியத்தில் நமது செல்வாக்கு இருக்கவேண்டுமானால் இலங்கையிலுள்ள இயற்கை துறைமுகமான திரிகோணமலை நம் கட்டுபாட்டிலிருக்க வேண்டும்"




இதன் பின் 1970களிலிருந்து தொடர்ச்சியாக இலங்கைக்கு அமெரிக்கா இராணுவ பயிற்சி அளிப்பதும், இஸ்ரேல் வழியாக ஆயுதங்களை வழங்குவதும், இன்னொரு புறத்தில் நார்வே மூலம் பேச்சுவார்த்தை எனும் நாடகம் போடுவதுமாக இருந்தது. இதனை குறிப்பிட்டு தான் பிரபாகரன் அவர்கள். 'அமெரிக்காவின் அமைதி முகம் நார்வே, ஆயுதமுகம் இஸ்ரேல் என்று சொன்னார்'. அத்தோடு அமைதி பேச்சுவார்த்தையில் இருந்த காலகட்டத்தில் அதனை மீறி 2006இல் திரிகோணமலை பகுதியில் தாக்குதல் நடத்தி இலங்கை அரசை அமைதி பேச்சுவார்த்தையை மீறச்செய்து தமிழர்கள் மீது போரை நடத்தசெய்ததும் அமெரிக்காதான். இதன்விளைவாகவே 2009இல் 1,46,679தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.

## அமெரிக்க தீர்மானமும் அமெரிக்காவின் நரித்தனமும்:




இதில் மேலே சொன்னது ஈழப்போரில் அமெரிக்கா செய்த பங்களிப்பின் மிக மிகச் சிறிய தொகுப்பு தான். இன்னும் விரிவாக தெரிந்துகொள்ள இதற்கு முந்தைய கட்டுரையான 'ஈழம் ஏகாதிபத்தியங்களின் ஆடுகளம்' என்ற கட்டுரையையும், 'ஈழப்போரில் அமெரிக்காவின் பங்கு' என்ற மே17 இயக்கத்தின் சிறு வெளியீட்டு நூலையையும் படித்தால் புரிந்துகொள்ளலாம். இவ்வளவு உதவிகளை செய்த அமெரிக்கா தான் 2012லிருந்து ஐநா அவையில் தமிழர்களுக்கு தீர்வு தருகிறோமென்று தொடர்ந்து தீர்மானங்களாக கொண்டு வந்து ஈழவிடுதலை என்ற ஒன்றை இன்று சர்வதேச மட்டத்தில் இல்லாமல் செய்துவிட்டது.



அதாவது 2009இல் தமிழர்களின் உரிமையை கோரிய மக்களையும் அந்த மக்களை ஒன்றிணைந்து போராடிய விடுதலைபுலிகளையும் இலங்கை அரசின் வழியாக அழித்தவிட்ட அமெரிக்காவுக்கு, அவர்களின் விடுதலைகோரிக்கையை அழிக்கமுடியவில்லை. அதை இல்லாமல் செய்வதற்கு தான் அயோக்கிய ஐ.நா தீர்மானங்கள்..







உதாரணமாக அதுவரை தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டுமென்று இருந்த சர்வதேச விவாதத்தினை அமெரிக்கா தனது வஞ்சக தீர்மானம் மூலம் உள்நாட்டு விசாரணை அதாவது குற்றவாளியே தன்னை தானே விசாரித்துக்கொள்ள (LLRC) வேண்டுமென்று மாற்றி 2012ல் முதன்முதலில் ஐநா அவையில் தீர்மானமாக வைக்கிறது. இப்போது சிலருக்கு சந்தேகங்கள் எழக்கூடும். அதாவது சர்வதேச அளவில் எப்போது இதுபோன்ற விவாதம் அதிகார மட்டத்தில் நடந்தது அதை அமெரிக்கா கெடுத்ததென்று.



இனப்படுகொலை முடிந்த சில தினங்களில் மே26, 2009அன்று ஐநா மனித உரிமைகள் கூட்டத்தில் அதனுடைய அப்போதைய தலைவர் நவநீதம் பிள்ளை இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறினார். <http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=8823&LangID=E>




அதனை தொடர்ந்து ஐநாவின் தலைமை அலுவலகத்தில் ஜூன் மாதம் தொடங்கி பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றன. அப்பொழுது பேசிய ஐநா அலுவலர்கள் பலரும் ஒரு விசயத்தில் ஒத்த கருத்தை கொண்டிருந்தனர். அவைகளுள் சில,

- இலங்கையின் கடந்தகால உள்நாட்டு விசாரணையின் செயல்பாடுகள் இலங்கை அரசை உண்மையான பொறுப்புதாரியாக அடையாளம் காட்டவில்லை.
- இலங்கையில் ஐநா செயல்படுவதற்கான போதிய அரசியல் வெளி இல்லை.
- நீதி மற்றும் விசாரணை தொடர்பான விசயங்களில் ஐநாவின் திட்டமிடலுக்கும், வழிகாட்டலுக்கும் தேவையான அறிக்கையினை மனித உரிமை கமிசன் தயாரிக்க வேண்டும்.



இதன்படி ஜூன்23, 2009அன்று முடிவுற்ற அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நவநீதம் பிள்ளை தலைமையிலான மனித உரிமை கவுன்சில், இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறியது.

அதன் பிறகு ஐநாவில் மூவர் குழு என்னும் பெயரில் நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக்குழு தனது அறிக்கையினை 2011மார்ச் இறுதியில் வழங்கியது. அந்த அறிக்கையின் முதல் பரிந்துரையாக இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கூறியது. மேலும் இலங்கை அரசு அமைத்த LLRC என்னும் அமைப்பும் அதில் உள்ள அதிகாரிகளும் நேர்மையானவர்கள் இல்லை என்றும் கூறியது.

இப்படி ஐநாவின் நடைமுறைகளின் படி அதனுடைய மட்டத்தில் சர்வதேச விசாரணையை பற்றிய விவாதங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் தான் அமெரிக்கா 2012ல் லிலிஸிசி அடிப்படையில் உள்நாட்டு விசாரணைக்கோரி ஒரு தீர்மானத்தினை முன்வைக்கின்றது. அதாவது உச்சநீதிமன்றத்தில் வழக்கை நடத்துவதை பற்றி தன்னிச்சையாக உச்சநீதிமன்றமே முன்வந்து செயலாற்றிக் கொண்டிருக்கும்போது, உச்ச நீதிமன்றத்தில் வழக்கை நடத்தவேண்டாம் கட்டப்பஞ் சாயத்து செய்து வழக்கினை முடித்துக்கொள்ளலாம் என்று கூறுவதை போல்தான் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அமைகின்றது. இதுபோன்ற நிகழ்வு என்பது, குற்றவாளியை பாதுகாப்பதற்கான ஒரு நகர்வே அன்றி குற்றவாளியை தண்டிப்பதற்கோ அல்லது பாதிக்கப்பட்டவனுக்கு நீதி, நிவாரணம் வழங்குவதற்கோ மேற்கொள்ளப்பட்ட நகர்வு அல்ல.

கடந்த 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் அமெரிக்கா முன்வைக்கும் தீர்மானங்கள் ஐநாவே முன்வந்து ஒரு சர்வதேச விசாரணையை நடத்திவிடக்கூடாது என்பதற்காக, உள்நாட்டு விசாரணையை முன்வைத்தே இருந்தது. இப்படிப்பட்ட உள்நோக்கங்களை கொண்ட அமெரிக்கா,

இனப்படுகொலைக்காக இல்லாமல் போர்குற்றங்களுக்காக அதுவும் பாதிக்கப்பட்ட தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலை புலிகளையும் சேர்த்து விசாரிக்கக் கோரி ஒரு தீர்மானத்தினை முன்வைத்தால் அது தமிழர்களை ஒட்டுமொத்தமாக முடக்குவதற்கான செயலே.

## போர்குற்ற விசாரணையும் அமெரிக்காவின் சதியும்:

போர்குற்ற விசாரணை என்பது இரு தரப்பினர் மீதும் விசாரிக்கும் நடைமுறை கொண்டது. அதனை ஏன் அமெரிக்கா ஐநா கொண்டு வரும் போது தடுத்தது தற்போது தானாக கொண்டுவர வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பு. இதற்கான பதில் மிக எளிமையானது ஏற்கனவே அமெரிக்காவின் பங்கு என்பது தனது பிராந்திய நலன் சார்ந்ததாகும். இந்த இனப்படுகொலையை இலங்கை வழியாக செய்து முடிந்தபின் அதனை வைத்து தனது நலனை முன்னிறுத்த விரும்பிய அமெரிக்காவுக்கு இராசபக்சேவின் அதிதீவிரமான சீனாவின் பாசம் இடைஞ்சலை ஏற்படுத்துகிறது. 2012 & 2013 ஆகிய இரண்டு தீர்மானங்கள் வழியாக அமெரிக்கா இலங்கையின் பக்கம்தான் என்று சொல்லாமல் சொல்லிய பிறகும் இராசபக்சே அரசு சீனாவின் பக்கமே சாய்ந்தது. எனவே இப்போது இராசபக்சே அமெரிக்காவுக்கு தேவையில்லை. அந்த இடத்தில் அமெரிக்க சார்பு ஆட்களை உட்கார வைத்துவிட்டு தமிழர்களை கொலை செய்தவனை தண்டித்து விட்டோம் என்று சொல்லி அமையவிருக்கும் புதிய அமெரிக்க சார்பு அரசை கொண்டு தமிழர்களுக்கு நல்லிணக்கம் அதாவது சில உதவிகள் செய்துகொடுக்கப்பட்டு தமிழர்களுக்கும் தீர்வு தந்துவிட்டோமென்று தமிழீழவிடுதலையை முற்றும் முழுவதுமாக அழித்துவிடும் சதி தான் இதன் பின்னால் இருப்பது. இதைதான் அமெரிக்கா 2014 தீர்மானத்தின் போது செய்தது. அதாவது இலங்கையில் இறுதி கட்ட போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறலை விசாரிக்க ஐநாவின் மனித உரிமை மன்றம் மார்ட்டி அத்திசாரி (Martti Ahtisaari) என்பவர் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்தது. இவர்கள் புலிகளையும் விசாரிக்க வேண்டுமென்றும்

- இலங்கையில் நடந்தது ஒரு மதச் சிறுபாண்மையினருக்கான மோதல் என்ற ஒரு அபத்தத்தை வரையறுத்தது. தமிழர்களை ஒரு தனித்த தேசிய இனம் என்பதை திட்டமிட்டு மறைத்தது. இது போன்ற ஒன்றை தான் இதுவரையில் தீர்மானங்களாக முன்வைத்து வந்தது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள். இந்த தீர்மானம் எந்தவகையிலும் தமிழர்களுக்கு தீர்வில்லை என்பதை தாண்டி இலங்கைக்கும் எந்த பாதிப்பும் இல்லாதது. இதனை இராசபக்சேவே சொன்னார்.

உதாரணமாக இந்த தீர்மானம் குறித்து இராசபக்சே மற்றும் கோத்தபய இராசபக்சேவின் கருத்தை பார்த்தாலே தெரியும் இதை ஏன் இராசபக்சே வகையறாக்கள் எதிர்க்கிறார்கள் என்று.

“மார்ச் 22,2014 அன்று தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசிய இராசபக்சே இலங்கையின் எதிர்கட்சிகள் சர்வதேச சக்திகளுடன் ஒன்று சேர்ந்துகொண்டு எனது அரசை நீக்க ஐநா அவையை பயன்படுத்துகிறது” என்றார் <http://www.thehindu.com/news/international/south-asia/rajapaksa-sees-opposition-bid-to-topple-him-with-global-support/article5822275.ece>

இப்போது அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானமென்பது நாட்டிற்கு ஆபத்தை தருமென்று ஒரு பொய் பிரச்சாரத்தை செய்கிறார்கள். இந்த தீர்மானத்தால் நாட்டுக்கு எந்த பாதிப்புமில்லை. மாறாக இலங்கையில் இராசபக்சேவின் அரசை மாற்றி விட்டு மேற்குலகு சார்புடைய ஒருவரை நியமிப்பதற்காக நடக்கும்





















வேலைதான் இந்த தீர்மானம். "இது கோத்தபய இராசபக்சே மார்ச் மாதம் இலங்கை இராணுவ விழாவில் பேசியது"

அது சரி இந்த தீர்மானத்தால் தமிழர்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்துகள் பற்றி பார்ப்போம். அதாவது இந்த போரில் விடுதலை புலிகளும் இலங்கையின் இராணுவம் குற்றமிழைத்திருக்கிறார்கள் எனவே இருவரையும் விசாரிக்க வேண்டும் என்பதே போர்குற்ற விசாரணை. இரு தரப்பையும் விசாரிக்கவேண்டும் என்னும் நடைமுறை பின்பற்றப்பட்டால், இலங்கை இராணுவ அதிகாரிகள் யாரையும் கைது செய்யும் சூழல் இல்லை. ஏனெனில், இனப்படுகொலையை நிகழ்த்திய இராணுவ தளபதிகள் பலரும் ஐநாவின் அதிகாரிகளாகவோ, வெளிநாட்டு தூதர்களாகவோ நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இவர்களை உலகிலுள்ள எந்த அரசாலும் அமைப்பாலும் கைது செய்ய முடியாது. இதற்கு உதாரணம் வேண்டுமென்றால் 2014இல் அமெரிக்காவை உளவு பார்த்ததாக இந்தியாவை சேர்ந்த அதிகாரி 'தேவயானி கோபர்கடே' அமெரிக்க அரசால் கைது செய்யப்பட்டார். உடனே இந்திய அரசு அவரை ஐ.நாவில் அமைந்திருக்கும் இந்திய தூதரகத்தின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமித்தது. இதனால் அமெரிக்க அரசால் அவரை மேற்கொண்டு விசாரணை ஏதும் செய்யமுடியாமல் இந்தியாவுக்கே அனுப்பிவிட்டது.. இந்திய அதிகாரி தேவயாணி விவாகரத்தில் அவரை ஐநாவின் அதிகாரியாக இந்தியா நியமித்ததும் அவரை அமெரிக்க அரசாங்கம் கைது செய்ய முடியாத சூழலை கவனித்தால், எந்தவொரு ஐநா அதிகாரியையும் உலக அரசாங்கங்கள் கைது செய்ய முடியாது என்பது எளிதில் புரியும்.

ஆனால் தமிழர்கள் தரப்பில் போர்குற்றம் விசாரணை என்ற பெயரில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பலரும் விடுதலை புலிகள் அமைப்பினர் என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்படக்கூடும். புலிகள் அமைப்பிலிருந்து இறுதி காலத்தில் பாதுகாப்பாக வெளியேறிய பலரும் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்படுவார்கள். இப்படி தேடப்படும் குற்றவாளியாக ஒருவரை அறிவித்தால் உலகில் இருக்கும் அனைத்து நாடுகளும் அவரையும் அவருடன் இணைந்து செயலாற்றிய அனைவரையும் தங்களது நாட்டிற்குள் நுழையவோ, தங்களது நாட்டில் வசிக்கவோ அனுமதி மறுப்பதோடு மட்டுமின்றி அவர்களை கைது செய்யவும் முயலும். இது விடுதலை புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி தமிழீழ ஆதரவு செயற்பாட்டாளர்கள் அனைவர் மீதும் நீளும். அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் ஈழத்திற்கான போராட்டங்கள் ஒட்டுமொத்தமாக முடக்கப்படும்.

உலகில் இருக்கக்கூடிய 193நாடுகளில் 32நாடுகளில்தான் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டிருந்தது. அதில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகள் மட்டும் 27ஆகும். இப்போது அங்கும் தடைகள் நீக்கப்பட்டுவிட்டன. அப்படிபார்த்தால் உலகில் மொத்தம் 5நாடுகள் மட்டுமே விடுதலை புலிகள் இயக்கத்தை தடை செய்த நாடுகளாக இருக்கிறது. இதனை விரும்பாத அமெரிக்கா முன்வைக்கும் திட்டமே இந்த போர்குற்ற விசாரணை. அவ்வாறு ஒரு விசாரணை

முன்மொழியப்பட்டால் . விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாட்டாளர்கள் மட்டுமின்றி, தமிழீழ ஆதரவு அரசியல் செயற்பாட்டாளர்கள் அனைவரும் உலகெங்கும் இருக்கும் அனைத்து நாடுகளாலும் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்படும் நிகழ்வுகள் நடந்தேறும். இது ஏறத்தாழ உலகில் இருக்கும் அனைத்து நாடுகளும் தமிழீழத்திற்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்ளும் நிலைக்கு தள்ளப்படும் ஒரு சூழலை உருவாக்குவதற்க்காக அமெரிக்கவால் முன்னெடுக்கப்படும் ஒரு செயலாகவே இது இருக்கின்றது.

இதை ஏதோ யூகத்தின் அடிப்படையில் சொல்லவில்லை. 2014இல் இந்த தீர்மானம் நிறைவேறிய உடனேயே இலங்கை அரசு விடுதலைப் புலிகளோடு தொடர்பென்று சொல்லி 16அமைப்புகளையும் 424 தனிநபர்களையும் தடைசெய்தது. மேலும் இலங்கை அரசு தடை செய்த அதே அமைப்புகளையும் தனிநபர்களையும் இந்தியாவும் தடை செய்ததும் இதனடிப்படையில் தான். இனி புலம்பெயர் நாடுகளுக்கு சென்று தமிழக தமிழர்களோ, தமிழீழத்தமிழர்களோ அவர்களுடன் அரசியல் செயற்பாடுகளை செய்ய முடியாது மீறி செய்தால் அது தண்டனைக்குரிய குற்றமென்று கைது செய்யும் சூழல் உருவாகும். இப்படிப்பட்ட தீர்மானத்தை தான் அமெரிக்கா 2014இல் நிறைவேற்றி ஒரே நேரத்தில் தனக்கு எதிரான இராசபக்சேவையும், தமிழர்களின் விடுதலையையும் ஒடுக்க முயன்றது.

இந்த நேரத்தில் இலங்கையில் நடந்த சனாதிபதி தேர்தலில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து இராசபக்சே அரசை மாற்ற இராசபக்சே கட்சிக்குள்ளேயே இருந்த 2009 தமிழினப்படுகொலையின் போது இராசபக்சே அமைச்சரவையில் அங்கம் வகித்த மைத்திரிபால சிறீசேனாவை பிரித்து இராசபக்சேவுக்கு எதிராக நிற்கவைத்து அவருடன் இலங்கை எதிர்கட்சிகளான இரணில் விக்ரமசிங்கே மற்றும் சந்திரிகாவையும் கூட்டணி சேரவைத்து ஜனவரி 08'2015 வெற்றியும் பெறவைத்தது. இதற்கு பலனாக இலங்கையில்சீனாகட்டிவரும்துறைமுகப்பணியை நிறுத்திவைப்பதாக வந்தவுடனே சிறிசேனா அரசு அறிவித்தது. தனக்கு சாதகமான அரசு இலங்கையில் வந்தவுடன் 2014இல் ஐநா உருவாக்கிய மார்டி அத்திசாரி தலைமையில் உருவாக்கப்பட்ட குழுவின் அறிக்கையை 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் வைக்கவிடாமல் 6மாதகாலம் அவகாசம் என்று இலங்கையை இந்தியாவும் அமெரிக்காவும் காப்பாறியது. இதன்பின் இந்த அறிக்கையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து இன்றுவரை அந்த அறிக்கையை ஐ.நாவில் சமர்பிக்கவிடாமல் தடுத்து இலங்கையை சர்வதேச மட்டத்திலிருந்து முற்றிலும் அமெரிக்காவும் இந்தியாவும் காப்பாற்றிவிட்டது. ஆனால் அமெரிக்கா தீர்மானம் தமிழர்களுக்கு விடிவு தரும் நம்புங்கள் என்று










தமிழர்களுக்கு சொன்னவர்கள் இதுகுறித்து இன்றுவரை வாய்திறக்கவில்லை. ஒரு லட்சம் தமிழர்களின் இறப்புக்கு நீதி என்பது அமெரிக்கா இந்தியாவின் சதியால் இன்று நிர்கதியில் இருக்கிறது.

## அமெரிக்க தீர்மானமும் மே 17 இயக்கமும்:

ஈழ விடுதலை என்ற கொள்கையில் ஒருநாளும் மே 17 இயக்கம் சமரசத்திற்கோ அல்லது தவறான நிலைப்பாட்டையோ எடுத்ததில்லை. இயக்கம் ஆரம்பித்த காலத்தில் மே 17'2010இல் திருநெல்வேலியில் நடத்திய முதல் பொதுக்கூட்டத்திலேயே 'ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்றும் இலங்கை அரசை இனப்படுகொலை அரசு என்று அறிவிக்கவேண்டுமென்றும் கோரிக்கையை வைத்தது இயக்கம்.








2012-ஆம் ஆண்டு




இதில் இன்றளவும் எந்தம் மாற்றமில்லாமல் இயக்கம் இயங்கி வருகிறது. அதனோடு இந்த கோரிக்கையை சிதைக்க நினைக்கும் சக்திகளை சமசரசமின்றி எதிர்த்து அம்பலப்படுத்தியிருக்கின்றோம். அதன்படி தான் ஐ.நாவிலும் நடக்கும் அனைத்து நாடகங்களையும் ஆரம்ப கட்டத்திலிருந்து பல்வேறு வழிகளில் அம்பலப்படுத்தியிருக்கின்றோம்.

அதாவது 2011இல் ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கை வெளியிட்ட பொழுதில் மே17 இயக்கம் இது சமரசத்திற்கு வழி செய்யும் சதியை உள்ளடக்கமாக வைத்திருக்கிறது என்று 2011 மே மாதம் 28 ஆம் தேதி சென்னை தியாகராயர் நகரில் இருக்கும் செ.தெ.நாயகம் பள்ளியில் கருத்தரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்து அறிவித்தோம். அதோடு ஐ.நாவின் மூலமாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் முன்வைக்கும் சதிகளையும் விவரித்தோம். இதன் காரணமாக போர்க்குற்றம், போன்ற வார்த்தைகளை ஏற்க மறுப்பதும், இனப்படுகொலைக்கான தீர்வு தேவை என்றும், அத்தீர்வு பொதுவாக்கெடுப்பு என்றும் முன்வைத்தோம்.

அதன் பிறகு 2012இல் அமெரிக்கா இலங்கை அரசு செய்த உள்நாட்டு விசாரணையான LLRC அறிக்கையை முன்வைத்து தீர்மானம் கொண்டு வந்த பொழுதிலும் மே17 இயக்கம் 18,மார்ச் 2012இல் சென்னை மெரினாவில் சுமார் 7000 மக்களை திரட்டி பொதுவாக்கெடுப்பு, சர்வதேச விசாரணை என்றும் அமெரிக்க தீர்மானத்தை நிராகரிக்கிறோம் என்றும் பதிவு செய்தோம். இலங்கையின் அரசியல் சாசனத்தையும், LLRC அறிக்கையையும் எரித்தோம்.

இதை 2012 மேமாதம் நினைவேந்தலில் இக்கோரிக்கையை வலியுறுத்தி ராம்விலாஸ் பாஸ்வான் அவர்களைக் கொண்டு அழுத்தமாக ஊடகத்தில் பதிவு செய்தது மே17 இயக்கம்.

2013 அமெரிக்க தீர்மானம் கொண்டு வரும் முன்னர் ஐ.நா அலுவலகத்தினை முற்றுகையிட்டு தீர்மானத்தினை வலிமையானதாகவும், சர்வதேச விசாரணை கோருகின்ற வழிமுறையை முன்வைக்க வேண்டுமென்று பதிவு செய்தோம். இதை செய்ய மறுக்கும் ஐ.நாவின் கொடி எரிக்கப்பட்டது.

2013 இல் அமெரிக்க தீர்மானத்தை எதிர்க்க வேண்டுமென்கிற காரணங்களை மாணவர் தலைவர்களிடம் புரியவைத்து அக்கோரிக்கையை முன் நகர்த்தினோம்.

அமெரிக்க தீர்மானம் மூலமாக அனைத்து தீர்வும் கிடைக்கும் என்று விவாதங்களை எதிர்கொண்டு அதன் பொய்மைத் தன்மையை அம்பலப்படுத்தினோம். 2013 மார்ச் மாதம் 17ஆம் தேதி சென்னை மெரினாவில் மக்களை திரட்டி அமெரிக்கத் தீர்மானத்தை எரித்தோம். மாணவர்களால் அமெரிக்க தீர்மானம் பல இடங்களில் எரிக்கப்பட்டது.

2014இல் ஐ.நாவில் அமெரிக்கா கொண்டுவரும் அயோக்கிய தீர்மானத்திற்கு எதிராக தமிழர்களின் கோரிக்கைகள் அடங்கிய 'தமிழர்களின் தீர்மானம்' ஒன்றை ஈழத்தமிழர்கள், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மே 17 இயக்கம் இணைந்து தயாரித்து அதனை தமிழகத்தில்











பல்வேறு அரசியல் கட்சிகளின் ஒப்புதலோடு பத்திரிக்கையின் வாயிலாக சர்வதேச சமூகத்திற்கு தமிழர்களுக்கான தீர்மானத்தை வெளியிட்டோம். மேலும் அந்த தீர்மானத்தின் நோக்கம் குறித்து விளக்கும் கருத்தரங்கத்தையும் ஏற்படுத்தியிருந்தோம்.

ஆனால் தமிழர்களின் கோரிக்கையை மறுத்துவிட்டு அமெரிக்கா தனது நலன் சார்ந்து ஒரு அயோக்கிய தீர்மானத்தை முன்மொழிந்தது. எனவே அமெரிக்காவின் தூதரகத்தினையும், ஐநாவின் அலுவலகத்தினையும் முற்றுகையிட்டு அமெரிக்க தீர்மானம் தமிழர்களுடைய இறைமையையும், இனப்படுகொலைக்கான நீதியையும் மறுக்கிறது என்று பதிவு செய்தோம். அமெரிக்க தீர்மானமும் ஐ.நாவின் கொடியும் எரிக்கப்பட்டது.

2015இல் ஐ.நாவின் அலுவலகம் இத்தீர்மானத்தின் மூலமாக இலங்கையை காக்கிறது என்றும், இத்தீர்மானம் தமிழர்களை மேலும் பின்னடையச் செய்கிறது என்றும் ஐ.நா அலுவலகம் மற்றும் இரண்டு முறை (மார்ச் & செப்டம்பர்) அமெரிக்க தூதரகத்தினை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினோம். இதில் ஐநா மற்றும் அமெரிக்க கொடிகள் எரித்து சாம்பலாக்கப்பட்டது.




2015 ஜனவரியில் அமெரிக்காவின் அதிகாரி ஐ.நாவிற்கு மாற்றப்பட்டு அவர்கள் மூலமாக இலங்கை அரசே விசாரணை நடத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அம்பலப்படுத்தினோம்.

இந்த தமிழீழ எதிர்ப்பு கொள்கை அரங்கு (anti-eelam coalition platform ) என்பது அமெரிக்காவின் தலைமையிலான கூட்டணி நாடுகளாக அமெரிக்கா-இங்கிலாந்து-இந்தியா-இலங்கை எனும் கூட்டமைப்பு (cooperation ) தங்களுடைய சுயநலம் மற்றும் தம்முடைய ராணுவ-பொருளாதார பொது நலன்களை குறித்து உருவாக்கி வளப்படுத்தி இருக்கும் புதிய இந்தியப் பெருங்கடல் கூட்டு செயல்திட்டத்தின் (co-optive aaction plan) நடவடிக்கைகளின் கொள்கை ரீதியாகவும் (ideological orientation towards regional hegemonic interests of India and Imperialist interest designs of west) பல கருத்தரங்குகளை தமிழகம் முழுவதும் நிகழ்த்தியது மே17 இயக்கம்.

2016இல் அமெரிக்கா, இங்கிலாந்து இந்தியாவின் பேச்சைக்கேட்டுக்கொண்டு ஐநா இலங்கை குறித்தான அறிக்கையை மேலும் இரண்டு ஆண்டுகள் தள்ளிவைத்ததை கண்டித்து ஐநா அலுவலகம் மே 17 இயக்கத்தினால் முற்றுகை இடப்பட்டது.



ஈழமும்
சர்வதேச சதிகளும்
கருத்தரங்கம்
தோழர்.கொளத்தூர் மணி
திராவிடர் விடுதலை கழகம்
தோழர்.அருள் முருகன்
மே பதினேழு இயக்கம்
மீத்தேன் நூல் குறித்து-
சுப்ரபாரதி மணியன்
எழுத்தாளர்
மே பதினேழு இயக்கத் தோழர்கள்
கருத்தரங்கம் மற்றும் புத்தகங்கள் அறிமுகம்
ஹோட்டல் அரோமா,
குமரன் சாலை
திருப்பூர்
ஏப்ரல்-17
மாலை 5:00
வெள்ளிக் கிழமை
மே பதினேழு இயக்கம்
98840 72010

ஈழமும்
தமிழகமும்
கருத்தரங்கம்
ஈழவிடுதலையை நசுக்கும்
சர்வதேசமும், நமது கடமைகளும்.
இனப்படுகொலைக்கான விசாரணையை
மறுக்கும் ஐ.நாவும், அமெரிக்காவும்,
ஈழவிடுதலையை முடக்கச் செயல்படும்
இந்தியாவும். இலங்கை தேர்தலும்
தமிழர்களின் எதிர்காலமும் குறித்த அரங்கம்.
22 ஆகஸ்டு
மாலை 5 மணி
செ.தெ.நாயகம் பள்ளி
சென்னை
மே பதினேழு இயக்கம்
9884072010




ஈழமும் சர்வதேச சதிகளும்
கருத்தரங்கம்
தமிழீழ இனப்படுகொலைக்கு உதவி புரிந்த நாடுகளும்
எதிர்கொள்ளும் சிக்கல்களும் குறித்த ஓர் ஆய்வு
கரூர்
ஏப்ரல்-25
திருச்சி
ஏப்ரல் - 25
திண்டுக்கல்
ஏப்ரல் - 26
மதுரை
ஏப்ரல் - 26
பி.எல்.ஏ.பிளாசா,
பேருந்துநிலையம் ரவுண்டானா,
கரூர்.
ஏப்ரல் - 25
காலை 10:00 சனிக்கிழமை
சமூக பணிமையம் (Tassos),
மார்ச்சிங் பேட்டை,
பீமா நகர் அருகில், திருச்சி.
ஏப்ரல் - 25
மாலை 5:00 சனிக்கிழமை.
V.G.S.மஹால்,
J.P.ஹோட்டல் எதிரில்,
பேருந்து நிலையம் அருகில்,
திண்டுக்கல்.
ஏப்ரல் - 26
காலை 10:00, ஞாயிறு.
இறையியல் கல்லூரி,
அரசரடி,
மதுரை.
ஏப்ரல் - 26
மாலை 4:00, ஞாயிறு
மே பதினேழு இயக்கம்
9884072010







இப்படியாக ஈழ விடுதலைக்கு எதிரான அமெரிக்க – இந்திய – இங்கிலாந்து – இலங்கை கூட்டணியை எல்லா இடங்களிலும் அம்பலப்படுத்தியது மே 17 இயக்கம்.

இதன் விளைவாக அமெரிக்க அதிகார மட்டத்திலான உயரதிகாரிகளிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2011 இல் முதன்முதலில் மே17 இயக்கம் முழங்கிய இலங்கை அரசை இனப்படுகொலை அரசு என தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவி என்ற கோரிக்கையும், ஈழத்தமிழர்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்து என்ற கோரிக்கையும் சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இதுமட்டுமில்லாமல் ஐநா அரங்கினுள்ளே சென்று ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை தான் என்று முதன்முதலில் பதிவு செய்ததும் மே17 இயக்கமே. இப்படி அனைத்து விதங்களிலும் ஈழவிடுதலைக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்த்து சமரசமில்லாமல் நின்றது மே 17 இயக்கம்.

ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்டு நீதிக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடும் மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்திகள் ஒன்று உண்டென்றால், அது எந்தச் சபையோ, பேரவையோ, அமைப்போ, அமெரிக்காவோ, இந்தியாவோ விடுதலையை வென்று தராது என்பது தான். மனித உரிமைகள் மீதான இவர்களின் அக்கறை என்பது ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதையின்றி வேறல்ல..

விடுதலையின் பாதையை தமிழர்களாகிய நாமே தீர்மானிப்போம். தமிழீழம் வெல்வோம். •

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com



# தமிழினப் படுகொலையில்
# பங்கேற்ற நாடுகள்



ஓவியம்:
க்ளியோன் பீட்டர்சன்

இ ந்தியா:

இந்தியா தமிழீழத்தை எப்போதும் தனது துருப்புசீட்டாகவே பயன்படுத்திவந்தது. அந்தவகையில் தான் ஆரம்பத்தில் அதாவது இந்திரா காந்தி காலத்தில் தனது நலன் சார்ந்து ஈழத்தமிழர்களுக்கு உதவிகள் செய்தது. ஆனால் இந்தியாவிலுள்ள உயர்சாதிகளின் திட்டத்திற்கு ஈழத்தமிழர்கள் இணைங்க மாட்டார்களென்று தெரிந்த பின் நிலைமைகள் வெகுவாக மாறியது. ஈழத்தமிழர்களை கொல்ல இந்திய அமைதிப்படையை (IPKF) அனுப்பியதிலிருந்து நிறைய சொல்லலாம். அதேநேரத்தில் தனது நோக்கம் தமிழகத்தில் பலத்த எதிர்ப்பை உண்டாக்கியதை அடுத்து இராஜீவ் காந்தியின் கொலையை காரணமாக காட்டி தமிழீழ மக்களை ஒடுக்கவும் தனது வன்மத்தை மறைக்கவும் அதனை பயன்படுத்தியது. இலங்கை எவ்வளவு தூரம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்ததுவோ, அதே அளவு இந்திய அரசாங்கமும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. ஒரே வித்தியாசம், இலங்கை அரசாங்கத்தை விட, இந்தியா உலக அளவில் தன் ஆளுமையை செலுத்தக் கூடிய நாடாக இருந்தது. ஒரு வேளை இந்தியா விடுதலைப் புலிகளை ஆதரித்திருந்தால், தனித் தமிழீழத் தேசம் மலர்ந்திருக்கும்.

இந்தியா இரண்டு விடையங்களுக்காக அஞ்சியது

- தமிழீழம் விடுதலை அடைந்தால், தமிழ்நாடும் விடுதலைக் கோரும். இது இந்தியாவின் புவிசார் அரசியல் நிலையையும், பொருளாதாரத்தையும் பாதிக்கும்.
- தமிழீழம் அங்கீகரிக்கப் படாத நாடாக இருந்த காலத்தில், பிற அங்கீகரிக்கப் படாத நாடுகளைக் காட்டிலும், இராணுவம் மற்றும் தொழில் நுட்பத்தில் முன்னேறி இருந்தது. அமைதி காலகட்டத்தில் (2001-2006) தமிழீழம் அடைந்திருந்த வளர்ச்சி இந்திய உயர்சாதியினர்களுக்கு எரிச்சலை கொடுத்தது.

1991க்கு பிறகு, இலங்கைக்கு பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை இந்தியா தொடர்ச்சியாக அளிக்கத் தொடங்கியது. மூன்றாம் ஈழப் போரின் போது, விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான பல யுத்தங்களை வென்ற போது, இலங்கை அரசுடன் இராணுவ வர்த்தகத்திலும், நிதியுதவி அளிப்பதிலும் இந்திய அரசாங்கமே முன்னிலையில் இருந்தது.

2018 ஆம் ஆண்டு, முன்னாள் பிரதமர் வாஜ்பாயி இறப்பிற்கு இரங்கல் தெரிவிக்க இந்தியா வந்த முன்னாள் இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்கே “நான் இலங்கையின் பிரதமராக இருந்த போது, விடுதலைப் புலிகள் அமைப்பு மிகவும் பலமாக இருந்தது. எங்களின் பொருளாதாரமும் நலிந்திருந்தது. திரு.வாஜ்பாயி அவர்கள் தான் எங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவினார். எங்களுக்கு தேவையான இராணுவ பயிற்சிகளையும் அளித்தார். இந்த உதவிகளாலேயே கடல் புலிகளை எங்களால் கட்டுக்குள் கொண்டு வர முடிந்தது” என்று கூறினார்.

இலங்கையின் இன்றைய அதிபரான கோத்தபய இராஜபக்சே, “காங்கிரஸ் அரசாங்கத்துடனும், அதன் அதிகாரிகளுடனும் எங்களுக்கு நல்ல உறவு இருந்தது. விடுதலைப் புலிகளை தோற்கடிப்பத்தில் எங்களுக்கு அவர்களின் முழு ஆதரவு இருந்தது” என்று கூறியுள்ளார்.

இலங்கையில் கடைசி கட்ட போரின் போது, இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியே நடைபெற்றது. சோனியா காந்தியின் கட்டுப்பாட்டில் தான் காங்கிரஸின் ஆட்சி இருந்தது.



▲ **2009இல் ஒருலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதை கொண்டாடும் தமிழினப்படுகொலையின் கூட்டுக்குற்றவாளிள் சோனியா மற்றும் மகிந்த இராசபக்சே கூட்டம்.**



▲ **2014இல் தமிழினப்படுகொலை குற்றவாளியோடு கைகுலுக்கும் நரேந்திர மோடி**

- இந்தியாவின் நலன்களை இலங்கையில் பாதுக்காக்கவும், பாக்கிஸ்தான் மற்றும் சீனா இலங்கையில் நிலைபெறுவதை தடுக்கவும், விடுதலைப் புலிகளை அழிப்பதும், பிரபாகரனைக் கொல்வதும் மட்டும் தான் ஒரே வழி என்ற நிலைப்பாட்டை எடுத்த சோனியா காந்தியின் அதை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொள்ளவும் செய்தார். அமைதி காலத்தின் போது ஈழச் சிக்கலுக்கு இராணுவத் தலையீட்டின் மூலமே முடிவு காண வேண்டும் என்று சோனியா காந்தி விடாப்பிடியாக இருந்தார். இராணுவ உத்திகள், பொதுமக்களை கட்டுப்படுத்துதல், ஊடகங்களை ஒடுக்குதல் அகியவற்றுடன் முற்று முழுதான போரிற்கான அறிவுரைகளை அமைதி காலத்திலும் கூட சோனியா காந்தி இலங்கை அரசாங்கத்திற்கு அளித்து வந்தார். கருணா மற்றும் கே.பி ஆகியோர் உட்பட விடுதலைப் புலிகள் தலைமையில் பிளவு ஏற்பட சோனியா காந்தி மற்றும் ரணில் விக்கிரமசிங்கே ஆகியோர் முக்கிய பங்காற்றினர்.
- “The Statesman” இதழின் பத்திரிக்கையாளர், சாம் ராஜப்பாவின் கூற்றுப் படி: இலங்கையில் நடைபெறும் இன விடுதலைக்கான போராட்டத்தை இராணுவ நடவடிக்கை மூலம் முடிவு கட்டுவதற்கு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு பச்சைக் கொடி காட்டியது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானையும் கொல்வதற்கு தேவையான அனைத்து இராணுவ உதவிகளையும்



▲ கலைஞர் கருணாநிதி ஈழ போர் எதிர்ப்பை திசைதிருப்ப நடத்திய உண்ணாவிரத நாடகம்

அளிக்கத் தயார் என்று சோனியா காந்தி கூறியதாக கொழும்புவில் இருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. இந்திய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணன், வெளியுறவுத் துறை செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோர் உட்பட பிரதமர் அலுவலகத்தில் இருந்த பல்வேறு அதிகாரிகள் தேசிய நலனை விட சோனியா காந்தியின் நலனிற்கு முக்கியத்துவம் கொடுத்து, இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு உதவி செய்தனர். உலகமே இலங்கையில் நடந்தவற்றை கண்டு கொந்தளித்துக் கொண்டு இருந்த போது, இந்திய அரசாங்கம் மட்டும் அமைதியாக இருந்தது. இராஜபக்சேவும் அவரது கூட்டாளிகளும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் இனப்படுகொலை மற்றும் போர் குற்றங்களுக்காக நிறுத்தப்படும் பட்சத்தில், இந்திய அராங்கம் மட்டும் தப்பித்து விட முடியாது. தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த கருணாநிதி அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இந்தியாவிற்கு துணை நின்றார். அவரின் அமைதியும் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அளித்த ஆதரவும் கேடு விளைவித்தது. பிரபாகரன் கோரிய உதவிகளை புறம் தள்ளிவிட்டு, தமிழ்நாட்டில் இருந்த விடுதலைப் புலிகளின் சொத்துகளை பறிமுதல் செய்து, காங்கிரஸ் கூட்டணிக்கு தன்னுடைய ஆதரவை விலக்கிக் கொள்ள மறுத்தார்.

- TamilNadu Coastal Security Group உதவியுடன், இந்திய உளவுத் துறை அமைப்பான RAW 2007 இல், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செயல்பாட்டையும், விடுதலைப் புலிகள் தலைவர்கள் தமிழ்நாட்டிற்கு தப்பி வருவதை தடுக்கவும், ஆயுதங்கள் பெறுவதற்கு தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் வைத்திருந்த தொடர்புகளையும் முடக்கியது.
- இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கவும், இனப்படுகொலை மற்றும் போர் குற்றத்திற்கு காரணமானவர்களை விசாரிக்க ஐ.நா'வில் தீர்மானம் கொண்டு வரவும் வற்புறுத்தி, தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் 2011 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, மத்திய அரசு செயல்படுத்த போதிய அழுத்தங்களை கருணாநிதி மத்திய அரசிற்கு அளிக்கவில்லை. ஐ.நா மனித உரிமை அவையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதில் இந்திய அரசாங்கம் முக்கியப் பங்காற்றியது. அதையும் கருணாநிதி கண்டிக்கவில்லை. தங்கள் வற்புறுத்தலின் பெயரிலேயே தீர்மானம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டது என்று மன்மோகன் சிங் கடிதம் வாயிலாக கூறிய பிறகும் கூட கருணாநிதி அமைதி காத்தார்.
- அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்புப் பட்டியலில் வைப்பது, ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாப்பது, கனடாவின் வலதுசாரி கட்சிகளில் உள்ள இந்தியர்களை கொண்டு விடுதலைப் புலித் தலைவர்களை தடை செய்யும் தீர்மானத்தைக் கொண்டு வருவது போன்ற அரசியல் ரீதியான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் செய்தது.

**“ இலங்கையின் கடற்படை தளபதியான வசந்தா கரணகோடா “விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல்கள் இந்திய கப்பற்படை அளித்த தகவல்களை கொண்டு ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டன. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்கு எல்லா வகையான பொருட்களும் கொண்டு செல்லப்படுவது தடுக்கப்பட்டது. இதனால் எங்களால் வேகமாக முன்னேற முடிந்தது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் கட்டியமைத்திருந்த தேசத்தை எங்களால் அழிக்க முடிந்தது.” என்று கூறியுள்ளார்.**

- இராணுவ ரீதியில், இலங்கை அரசாங்கத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர்களை கடனாகவும், போர் விமானங்கள், தாக்குதலுக்கு தேவையான ஹெலிகாப்டர்கள், ஆயுதங்கள் ஆகியவற்றை இந்தியா அளித்தது. அமைதி காலத்தில் மட்டும் இந்திய அரசாங்கம்: JY 11 3D ரேடார் கருவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு 5 மில்லியன் டாலருக்கு விற்றது; இரண்டு Indra IN-PC-2D ராடார் கருவிகள், இலவசமாக அளித்தது; 13 MiG போர் விமானங்கள், நூற்றுக்கணகான போர்வீரர்கள் அணியும் உடுப்புகள், மற்றும் தாக்குதலுக்கு தேவையான ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றை வழங்கியது.

- இந்தியாவின் செயற்கைக்கோள்களை பயன்படுத்திக் கொள்ள இலங்கை இராணுவத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன் மூலமும், தானியங்கி விமானங்கள் (Drone) மூலமும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை இராணுவம் கண்காணித்தது. கடல் புலிகளின் கலன்கள் மீது, ஆயுதம் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீது இந்திய விமானப் படை தொடர் தாக்குதல்களை நடத்தியது. விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இறக்குமதி செய்வதை, விடுதலைப் புலிகள் தலைவர்கள் தப்பிச் செல்வதையும் தடுக்க இந்திய கப்பற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்திய கப்பல் படை, விடுதலைப் புலிகளின் கிடங்குகளாக பயன்படுத்திய பத்து கலன்களை (floating warehouses)அழித்தது. இதனால் கடற் புலிகள் அமைப்பு மிகவும் பலவீனம் அடைந்தது. கடற்பகுதிகளை கண்காணித்து, சேகரித்த தகவல்களை இலங்கையின் கடற்படைக்கு அளித்தது, கடற் புலிகளின் கலன்கள் மீது விமானப் படைத் தாக்குதல்களையும் நடத்தியது. இந்தியாவில் இராணுவ பயிற்சி பெறும் முதன்மை நாடாக இலங்கை இருந்தது. 2008 இல், இலங்கை இராணுவத்திற்கு வருடாந்திர பயிற்சிகளை அளிக்கவும் இந்தியா ஏற்பாடுகள் செய்தது. இந்தியாவின் பாதுகாப்புச் செயலாளர், வெளியுறவுத் துறை செயலாளர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் இராஜபக்சேவின் சகோதரர்கள் மற்றும் அவர்களின் செயலாளர்கள் அதிகாரப்பூர்வமாக அல்லாமால், தனிப்பட்ட முறையில் தகவல்களை பறிமாறிக்கொள்வதற்கான முறைமைகள் ஏற்படுத்தப்பட்டன. 2007-2009 கால கட்டத்தில் இவர்கள் பல முறை சந்தித்துக் கொண்டனர்.

- இலங்கையின் கடற்படை தளபதியான வசந்தா கரணகோடா “விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல்கள் இந்திய கப்பற்படை அளித்த தகவல்களை கொண்டு ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டன. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்கு எல்லா வகையான பொருட்களும் கொண்டு செல்லப்படுவது தடுக்கப்பட்டது. இதனால் எங்களால் வேகமாக முன்னேற முடிந்தது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் கட்டியமைத்திருந்த தேசத்தை எங்களால் அழிக்க முடிந்தது.” என்று கூறியுள்ளார்.

இலங்கை அரசு மீதான சர்வதேச போர் குற்றங்களை விசாரிக்க ஐநா மனித உரிமைகள் ஆணையம் எடுக்கும் முயற்சிகளை இந்திய அரசாங்கம் இன்றளவும் விடாப்பிடியாக தடுத்து வருகிறது.

### சீனா:

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் கடைசி கட்டத்தில்தான் இலங்கையின் மிக முக்கியமான நட்பு நாடாக சீனா உருவெடுத்தது. சீனா தன்னுடைய "பட்டுச் சாலை" திட்டத்தை தொடங்கியிருந்தது. அண்டை நாடுகளுக்கு கடன் கொடுத்து அவர்களின் துறைமுகங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை(Debt Traps) மேற்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகள் வசம் இருந்த திரிகோணமலை துறைமுகமும், இலங்கை அரசாங்கத்தின் வசம் இருந்த ஹம்பந்தோட்டா துறைமுகத்தின் மீதும் சீனா ஆர்வம் காட்டியது. இதைக் காட்டியே, விடுதலைப் புலிகளை தோற்கடிக்க உதவுமாறு சீனாவை இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

7 பில்லியன் டாலர் நிதி உதவியை இலங்கை இராணுவத்திற்கு சீனா வழங்கியது. ஆறு F-7 போர் விமானங்களை இலவசமாக இலங்கைக்கு அளித்த சீனா, 37.6 மில்லியன் டாலர் மதிப்பிலான, வெடி குண்டுகள், பீரங்கிகள், குறிபார்த்து அழிக்கும் ஏவுகணைகள்(Guided missiles), ராக்கெட் லான்சர்கள், தரையில் இருந்து



▲ தமிழர்களை அழிக்க உதவியதற்கு கைமாறாக 2013 மே 28 இல் இலங்கையில் சீனா முதலீட்டை அதிகரிக்க ஒப்பந்தம் கையெழுத்தான நேரத்தில் சீனாவின் ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் குடித்து மகிழும் தமிழினப்படுகொலை குற்றவாளி இராசபக்சே.

வானத்திற்கு சென்று விமானங்களை அழிக்கும் ஏவுகணைகள் (surface-to-air missiles), ஊடுருவி அழிக்கும் வெடிகுண்டுகள் மற்றும் ராக்கெட்டுகள், பீரங்கி குண்டுகள், இரவு நேரங்களில் பார்வைக்காக பயன்படுத்தப்படும் கண்ணாடிகள், பாதுகாப்பு இயந்திரங்கள், பீரங்கிகள், போர் விமானங்கள், கப்பல்கள், ராடார் மற்றும் தொலை தொடர்பு கருவிகள் ஆகியவற்றையும், இலங்கை வான் படை வீரர்களுக்கான பயிற்சியையும் அளித்தது.

“The Independent UK” பத்திரிக்கை சீனாவின் பங்களிப்பை விவரிக்கிறது: 1 பில்லியன் டாலர் பணத்தை இலங்கை அரசிற்கு சீனா கொடுத்ததுடன் பல மில்லியன் டாலர்கள் மதிப்பிலான நவீன ஆயுதங்கள், இலவசமாக ஆறு F7 போர் விமானங்கள் ஆகியவற்றையும் இலங்கைக்கு அளித்தது. இலங்கைக்கு ஆயுதங்களையும்,

போர் விமான பயிற்சியும் அளிக்க தனது நட்பு நாடான பாக்கிஸ்தானிடம் சீனா கூறியது. மிக முக்கியமாக, ஐநா பாதுகாப்பு அவையில் இலங்கை பற்றிய விவாதம் எழாமல் பார்த்துக் கொண்டது. Norinco என்ற சீன உற்பத்தி நிறுவனம் மட்டும் 200 மில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை இலங்கை அரசிற்கு அளித்துள்ளது. Poly Technologies என்ற சீன ஆயுத உற்பத்தி நிறுவனம், 120 mm மோர்டார் குண்டுகளை இலங்கை அரசிற்கு விற்றது. 70,000 முறை சுடுவதற்கான குண்டுகள் மட்டும் 10.4 மில்லியன் டாலருக்கு விற்கப்பட்டது. இதுமட்டுமல்லாமல், 20 மில்லியன் டாலர் மதிப்பிலான 152mm பீரங்கி வெடிகுண்டுகள், 3.7 மில்லியன் டாலர் பெருமானமுள்ள வெடி குண்டுகள் ஆகியவற்றை சீனாவில் இருந்து இறக்குமதி செய்தது இலங்கை அரசு. இலங்கை கடற்படைக்கு மட்டும் 2.7 மில்லியன் டாலர் பெருமானமுள்ள ஆயுதங்கள், 14.5mm தோட்டாக்கள், இரண்டாயிரம் RPG-7 ராக்கெட்டுகள், ஐநூறு 81mm மோர்டார் குண்டுகள் ஆகியவற்றை சீனா அளித்தது. இதுமட்டுமல்லாமல் போர் கப்பல்களில் பயன்படுத்தப்படும் ஐம்பது 14.5mm வகை இரட்டைக் குழல் துப்பாக்கிகள், இருநூறு 12.7mm கனரக இயந்திரத் துப்பாக்கிகள், இருநூறு 7.62mm இயந்திரத் துப்பாக்கிகள், ஆயிரம் 7.62 2mm துணை இயந்திரத் துப்பாக்கிகள், உட்பட ஷியாங்காய் தரத்திலான போர்ப் படகுகள் ஆகியவற்றையும் சீனா வழங்கியது. 2008க்கு பிறகு இலங்கை கப்பல் படையில் நாலில் ஒரு பங்கு சீனா அளித்த படகுகளே இருந்தன.

போர் முடிந்த பிறகு, இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை விசாரிக்கக் கூடாது என்றும், இலங்கை அரசு எந்த தப்பும் செய்யவில்லை என்றும் சீன வெளியுறவுத் துறை அதிகாரிகள் ஐநா மனித உரிமை ஆணையத்தை வற்புறுத்தினர்.

## பாக்கிஸ்தான்:

200 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான இராணுவ உதவிகளையும், ஆயுதங்களையும், துப்பாக்கிகளையும், ராக்கெட் குண்டுகளையும், கண்ணி வெடிகளையும், தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்களையும், உளவுத் தகவல்களையும், போர் விமானங்களையும், தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் ஹெலிகாப்டர்களையும் வழங்கியது.

ஜூன் 1999 – டிசெம்பர் 2007 கால கட்டத்தில் பாக்கிஸ்தானிடம் இருந்து 50 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான போர் கருவிகளை இலங்கை வாங்கியுள்ளது. 2009 இல் இது 150 மில்லியன் டாலராக உயர்ந்தது.

பாக்கிஸ்தானின் ISIயிடம் பயிற்சி பெற்ற இஸ்லாமிய பாதுகாப்பு படையினர் (home-guards) விடுதலைப் புலிகளின் கிழக்கிலும், மேற்கில் சில பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை பற்றி உளவுத் தகவல்களை சேகரித்து இலங்கை அரசுக்கு கொடுப்பதில் முக்கியப் பங்காற்றினர். இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் (இந்து மற்றும் கிருஸ்தவர்கள்) இடையே பிளவுகள் ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றினர்.



▲ தமிழினப்படுகொலையில் இலங்கைக்கு உதவியதற்காக பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஜெனரல் கமர் ஜாவேத் பாஜ்வாவுக்கு வாழ்த்துச் சொல்லும் இலங்கை ராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கா.

பாக்கிஸ்தானின் விமானப்படைத் துணைத் தளபதி(Vice-Marshal) ஷெஹ்சாத் அஸ்லாம் சௌதிரி இலங்கைக்கான ஆணையராக நியமிக்கப்பட்டார். அவரின் நியமனத்திற்குப் பிறகு 15 – 17 அனுபவமுள்ள இராணுவ விமானப்படை வீரர்கள் பாக்கிஸ்தானில் இருந்து வரவழைக்கப்பட்டு, இலங்கை விமானப்படை வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநோச்சி மற்றும் முல்லைத் தீவு ஆகிய பகுதிகள் மீதான தாக்குதலிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

மே 2008 இல், இலங்கை தளபதியாக இருந்த சரத் ஃபொன்சேகா, பாக்கிஸ்தான் இராணுவத்துடன் இராணுவ தளவாடங்கள் வாங்குவது தொடர்பான பேச்சு வார்த்தையின் ஈடுபட்டார். 22 Al-Khalid MBT பீரங்கிகளை 100 மில்லியன் டாலருக்கும் அதிகமாக கொடுத்து இலங்கை அரசு வாங்கியது. 20 மில்லியன் டாலர் மதிப்பிலான 1,50,000 60mm பீரங்கி குண்டுகள், 1,50,000 கை எறி குண்டுகள் ஆகியவற்றையும் பாக்கிஸ்தான் அரசு வழங்கியது.

25 மில்லியன் டாலர் பெருமானமுள்ள 81 mm, 120 mm மற்றும் 130 mm மோர்டர் குண்டுகளை ஒரே மாதத்திற்கு தருமாறு இலங்கை அரசு பாக்கிஸ்தான் அரசிடம் ஏப்ரல் 2009 இல் கேட்டுக் கொண்டது.

## அமெரிக்கா:

அமைதி ஒப்பந்தத்தை முறிப்பதிலும், இலங்கைக்கு இராணுவ உதவிகளை அளிப்பதிலும் அமெரிக்க அரசு முதன்மை பங்காற்றியது.

500 மில்லியன் டாலர் பெருமானமுள்ள இராணுவ உதவிகளை அளித்தது அமெரிக்கா. இராணுவ தளவாடங்கள் வாங்குவதைத் தாண்டி, இராணுவ பயிற்சிகளும் அமெரிக்காவால் அளிக்கப்பட்டது. 2002 இல் இரணில் விக்கிரமசிங்கே ஆட்சி காலத்தில் இராணுவப் பயிற்சிகள், இராணுவத் தொழில்நுட்பங்கள், உளவுத் தகவல்கள், மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான சிறப்பு இராணுவப் பயிற்சி

ஆகியவற்றிற்கான ஒப்பந்தங்கள் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையே கையெழுத்தானது. அமைதி காலத்தின் போது, அமெரிக்காவின் பசிஃபிக் பெருங்கடல் படை தளத்திலிருந்து 2002 செப்டம்பர் 12 முதல் அக்டோபர் 24 வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இலங்கையின் கப்பல் படை, விமானப் படை, இராணுவம் ஆகியவற்றிற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

இலங்கை இராணுவங்களின் பலவீனங்களை கண்டறிந்த அமெரிக்கா, கொத்து வெடிகுண்டுகளை பயன்படுத்தப் பரிந்துரைத்தது. 2010 ஆம் ஆண்டு வரை கொத்து வெடிகுண்டுகள் பயன்பாடு உலக அளவில் தடை செய்யப்படவில்லை. அது மட்டுமில்லாமல் கிஃபிர் மற்றும் MI-24 போர் விமானங்களில், வழிகாட்டுதலின் படி இலக்கை தேடி அழிக்கும் ராக்கெட் குண்டுகளைப் பயன்படுத்தவும் பரிந்துரைத்தது.

அமெரிக்கா தானமாக கொடுத்த "சமுத்ரா" என்ற போர் கப்பலைக் கொண்டே, கடல் புலிகளின் நடவடிக்கைகளை கண்காணித்தது இலங்கை அரசு. மேலும் தரையிலும் வேவு பார்ப்பதற்கான விமானங்களை இலங்கை அரசிற்கு அளித்தது. வன்னிக் காடுகளில்



▲ **தமிழர்களை அழிக்க உதவியதோடு தமிழர்களின் கோரிக்கையை அழிக்க ஐ.நா சபைமூலம் உதவுமாறு கேட்க 2013ஆம் ஆண்டு தமிழினப்படுகொலை குற்றவாளி குடும்பத்துடன்அமெரிக்க அதிபர் ஒபாமவை சந்தித்த போது**

விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை இதை வைத்து இலங்கை அரசு அறிந்தது. இதுவரையிலான காலத்தில், இலங்கை அரசிடம் இத்தகைய கருவிகள் இல்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

2006 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரை மீண்டும் தொடங்க ஊக்குவித்த அமெரிக்க அரசு, ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவிகள் புரிந்தது. அமெரிக்கா மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் அளித்த உதவிகள் காரணமாகவே இலங்கை இராணுவம் பலம் பொருந்திய ஒரு இராணுவமாக உருவெடுத்தது என்று கூட சொல்லலாம்.

கிளர்சியாளர்களுக்கு எதிரான போர் முறைகளில் பயிற்சி மற்றும் உளவுத் தகவல்களை இலங்கைக்கு அளித்ததை அமெரிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. கடற்பகுதிகளை கண்காணிக்க பயன்படும் ராடர் கருவிகளை அமெரிக்கா கொடுத்தது. இதைக் கொண்டே இந்தியாவில் இருந்து ஈழத்திற்கு சரக்குகள் ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப் பட்ட பாதை முடக்கப்பட்டது. அமெரிக்காவிற்கு நெருக்கமாக இருக்கும் இஸ்ரேல் மற்றும் பாக்கிஸ்தான் அரசுகள், இலங்கையின் இராணுவ தளவாட கட்டமைப்பிற்கு வலு சேர்த்தது. அமெரிக்காவின் அழுத்தத்தின் காரணமாகவே கனடாவும், ஐரோப்பிய ஒன்றியமும் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தது. ஆயிரக்கணக்கான புலம் பெயர் ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு அளித்து வந்த நிதி உதவி இதன் மூலம் தடை பட்டுப் போனது.

மகிந்த இராஜபக்சே தேர்தலில் வெற்றி பெற்ற இரண்டு வாரங்கள் கழித்து, அமெரிக்க தூதுவர் ஜெஃப்ரி லுன்ஸ்டெட் விடுதலைப் புலிகளை இலங்கை அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்றும், அப்படி இல்லை என்றால், பலம் வாய்ந்த இலங்கை இராணுவத்தை எதிர் கொள்ள நேரிடும் என்று எச்சரித்தார். மேலும் "எங்களின் இராணுவப் பயிற்சிகள் மூலமும், தீவிரவாதத்திற்கு எதிரான ஆதரவு நடவடிக்கைகள் மூலமும், இலங்கை அரசாங்கம் தன் மக்களை காப்பதற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்க உதவியிருக்கிறோம். இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடு பட வேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கவில்லை" என்றும் கூறினார்.

அமெரிக்காவின் கப்பற் படை இலங்கை அரசாங்கத்திற்குத் தேவையான உளவுத் தகவல்களை கொடுத்தது. இதை வைத்து கடற் புலிகளை வேட்டையாடியது இலங்கை கப்பற் படை. விடுதலைப் புலிகளின் நான்கு கலன்களும் இந்த தகவல் கொண்டு அழிக்கப்பட்டன.

இராஜபக்சே இதை பின்நாட்களில் உறுதி செய்தார். கடற்புலிகளின் கப்பல்களை அமெரிக்கா தன்னுடைய தானியங்கி போர் விமானங்கள் கொண்டு அழித்தது. மேலும் தன்னுடைய செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தும் உரிமையையும் இலங்கை இராணுவத்திற்கு அளித்தது. இதைப் பயன்படுத்தி, இலங்கை அரசு வன்னிக் காட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கண்காணித்ததுடன், இந்தியப் பெருங்கடலில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்முதலையும் தடுத்தது.

போரில் வெற்றி பெற்ற உடன் இராஜபக்சே ஆற்றிய உரையில் "ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடைவிதிப்பதிலும், புலிகளின் ஆயுதக் கொள்முதலை தடுப்பதிலும் அமெரிக்க அரசாங்கமே உதவியதாக" தெரிவித்தார்.

அமெரிக்காவின் நிலைப்பாடு, ஒபாமா ஜனவரி 2009 இல் அதிபர் ஆன பிறகு மாறியது. சிங்கள அறிவுஜீவி ஜூட் லால் ஃபெர்னாண்டோ அமெரிக்க-பிரித்தானிய கூட்டணி நாடுகளே 2009 தமிழீழ இனப்படுகொலைக்கு முக்கிய காரணம் என்று கூறுகிறார். "அமைதிப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றிருக்குமேயானால் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். அரசியல் ரீதியான 2009 அழிவிற்கு அமெரிக்காவும் ஒரு காரணம். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் வழங்கும் பொருட்டு தமிழர்களுக்கும், சிங்களவர்களும் சேர்த்து ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது

(Post-Tsunami Operational Management Structure). இலங்கைத் தீவில் இருந்த அனைவருமே சுனாமியால் சமமான அளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். அமைதிப் பேச்சுவார்த்தையில் அங்கமாக இருந்த அமெரிக்க அரசு, தீவி வலதுசாரிகளுடன் கூட்டு சேர்ந்துக் கொண்டு இதற்கு எதிரிப்புத் தெரிவித்தது. இதைத் தொடர்ந்தே ஜாதிக ஹேல உருமையா, மற்றும் ஜனதா விமுக்தி பெருமானா ஆகிய கட்சிகள் இந்த கட்டமைப்புக்கு எதிராக இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. அமைதிப் பேச்சு வார்த்தை தோல்வி அடைவதிற்கு முக்கிய காரணமாக அமெரிக்கா இருந்தது. 2005இல் அமெரிக்க இராணுவ அதிகாரிகள், இலங்கையின் பாதுகாப்புத் துறை செயலாளருக்கு ஒரு கடிதத்தை அளித்தனர். அதில் திரிகோணமலை தளத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்ற வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அமைதிப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த ஒரு அரசாங்கம், சிங்கள தமிழ் தலைமைகள் இருவருமே போருக்கு தயாராக இல்லாத நிலையில், சிவில் சமூக ஆர்வலர்கள் அனைவரும் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்த பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் தான் இப்படி ஒரு செயலை அமெரிக்க அரசு செய்தது.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த ஹிலாரி கிளின்டன் மே 4, 2009 அன்று அனுப்பிய ஒரு மின் அஞ்சலில் இவ்வாறு எழுதியுள்ளார்: " மிவிதி (சர்வதேச நிதியம்) நடத்திய கூட்டம் ஒன்றில் நான் கிரித்னருடன் இருந்தேன். அதில் நீங்கள் மிவிதி இலங்கை அரசிற்கு நிதி உதவி அளிப்பதை நிறுத்த வேண்டும் என்று உங்கள் வரம்புகளை மீறி கூறியதாக தெரிவிக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தில் உள்ளவர்கள் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்றே கருதுகிறார்கள். அந்த போரில் பொதுமக்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டால் கூட அது ஏற்றுக் கொள்ளக் கூடியது தான் என்பது என் கருத்து"

## இஸ்ரேல்

இலங்கை அரசாங்கத்திற்கு எல்லா காலங்களிலும் இஸ்ரேல் இராணுவ உதவிகளை செய்து வந்துள்ளது. 1980களில், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்குப் பகுதிகளில் சிங்கள இராணுவக் குடியிருப்புகளை உருவாக்குவதற்கு உதவிசெய்தது. -இராணுவ உதவிகளுடன் சேர்த்து இராணுவ உத்திகளில் ஆலோசனையையும் வழங்கியது. அமெரிக்காவின் அனுமதியுடன் கிஃபிர் போர் விமானங்கள், மற்றும் ஆளில்லா விமானங்களையும் இலங்கைக்கு அளித்தது.

போர் காலம் முழுவதிலும், இஸ்ரேலின் "ஷாயிடெட் 13" கமாண்டோ பிரிவினர் இலங்கை இராணுவத்திற்கு தொடர்ந்து பயிற்சிகளை அளித்து வந்தது.

பல மில்லியன் டாலர் பெருமானமுள்ள இராணுவ உதவிகளை இலங்கை அரசுக்கு அளித்ததுடன், இலங்கை விமானப்படைக்கு ஏழு IAI Kfir விமானங்களை கொடுத்தது. Super Dvora விரி மிமி ரக கண்காணிப்பு படகுகளையும், தாக்குதலுக்கு பயன் படும் Dvora மற்றும் Shaldag ரக படகுகளையும் கொடுத்தது இஸ்ரேலிய அரசு. இலங்கை கப்பற் படையின் ஒரு முக்கிய அங்கமாக இன்றளவும் இவை திகழ்கின்றன.

இஸ்ரேலின் கிஃபிர் போர் விமானங்களையும் ஃப்ரான்ஸின் Mirage போர் விமானங்களையும் கொண்டு மட்டும் 1996இல் இலங்கை போர்படையின் Squadron 10 பிரிவு உருவாக்கப்பட்டது. இந்த பிரிவில் உள்ளவர்கள் இஸ்ரேலுக்கு சென்று பயிற்சிகள் எடுத்து வந்தனர். தரைப் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பயன்படும் MIG-29 விமானங்கள் பலவற்றை இலங்கை அரசாங்கம் வாங்கியது.



▲ தமிழினப்படுகொலை குற்றவாளி மகிந்த இராசபக்சே இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்தபோது.



▲ தமிழினப்படுகொலை குற்றவாளி மகிந்த இராசபக்சே ஈரான் சனாதிபதி ஹசன் ரூஹானியை சந்தித்தபோது

2006 ஆம் ஆண்டு, இஸ்ரேல் அரசாங்கம் Blue Horizon UAV எனும் கண்காணிக்கும் இயந்திரத்தை இலங்கைக்கு அளித்தது. இதைக் கொண்டு கடல் புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை அரசால் துல்லியமாக கண்காணிக்க முடிந்தது. 2006-09 கால கட்டத்தில் மட்டும் 1300 நடவடிக்கைகளை கடற்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் இந்த இயந்திரத்தைக் கொண்டு நடத்தியது. Blue Horizon UAV இயந்திரத்தைக் கொண்டு, 24 மணி நேரமும், எந்த ஒரு வானிலையிலும், இரவும் பகலும் கடற் புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை அரசால் கண்காணிக்க முடிந்தது.

கடற்புலிகள் Swarm Tactic என்ற போர் யுக்தியை பயன்படுத்தி வந்தனர். ஒரு இலக்கை பலர் எல்லா திசைகளில் இருந்து தாக்குவது தான் அந்த யுக்தி. இஸ்ரேல் கொடுத்த Dvora மற்றும் Shaldag ரக போர்ப் படகுகளையும், Blue Horizon UAV கண்காணிப்பு வசதியையும் கொண்டே இந்த யுக்தியை இலங்கை அரசால் வெல்ல முடிந்தது.

இஸ்ரேல் தனது ஏவுகணை பரிசோதனைகளை இலங்கை கடற் பரப்பில் இருந்தே செய்து வருகிறது.

## ஈரான்

விடுதலைப் புலிகளின் கரும்புலிப் படை இலங்கையின் அனுராதபுர இராணுவ விமான தளத்தை தாக்கி 20 போர் விமானங்களை அழித்தது. சுமார் 40 மில்லியன் டாலர் அளவிலான இழப்பு இலங்கை அரசிற்கு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஆளில்லா விமானங்களையும், கண்காணிப்பு கருவிகளையும் வாங்குவதற்கு ஈரான் அரசாங்கத்திடம் குறைந்த வட்டியில் கடன் கேட்டது சிங்கள அரசு.

இலங்கையின் கோரிக்கையை ஏற்ற ஈரான் அரசு, ரகசியமாக தேவையான நிதியை வழங்கியதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை அதிகாரிகள் சிலரை பயிற்சிக்காக அழைத்தது.

ஈரான் அரசின் “கிழக்கை நோக்கி” (Look East) என்ற திட்டத்தின் ஒரு அங்கமாகவே இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை மும்முரமாக ஈரான் அரசு வழங்கியது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

1.05 பில்லியன் டாலர் மதிப்பிலான கச்சா எண்ணெயை இலங்கை இராணுவத்திற்கு வழங்கியது.

2007 இல் மட்டும், 140.9 மில்லியன் டாலர் மதிப்பிலான இராணுவ ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்டது.

ஆயுதங்களையும், வெடி குண்டுகளையும் கொடுத்ததுடன், தன்னுடைய இராணுவ தளவாடங்களை மாதக் கணக்கில் இலவசமாக பயன்படுத்தும் உரிமையை இலங்கை அரசுக்கு அளித்தது.

ஈரானின் உதவிகளைப் பற்றி இலங்கையின் அமைச்சர் விமர் வீரவம்சா கூறும் போது “பிற நாடுகள் எங்களை கைவிட்ட போதிலும் கூட, ஈரான் அரசு எங்களை என்றுமே கைவிட்டதில்லை. இலங்கை நாடே ஈரானுக்கு நன்றிக் கடமைப்பட்டுள்ளது”

“The Island” பத்திரிக்கை ஈரானுக்கும் இலங்கைக்குமான உறவை பற்றி எழுதும் போது: “யாழ்பாணத்தில் நடைபெற்ற யுத்தத்தில் விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தை தோற்கடிக்கும் தருவாயில் இலங்கை இராணுவத்திற்கு ஈரான் உதவிகள் செய்தது. இலங்கை அரசு உதவி கோரிய உடனேயே ஈரானின் இராணுவ தளவாடங்கள் பல விமானங்கள் மூலம் இலங்கைக்கு கொண்டு வரபட்டது”என்றும் “ஈரானும் இலங்கையும் சேர்ந்து சிறு படகுகள் மூலம் தாக்குதலை நடத்துவதற்கான பல வியூகங்களை வகுத்தன” என்று கூறுகிறது.

## பிரித்தானிய அரசாங்கம்

1980 களில் இருந்தே இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானிய அரசு இராணுவ பயிற்சிகளை அளித்து வந்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் சிறப்பு படைப் பிரிவுகளான STF மற்றும் LRRP ஆகியவை பிரித்தானிய சிறப்பு விமானப் படை அதிகாரிகளே தொடங்கினர்.

அதிநவீன தொழில்நுட்பங்களை கொண்ட இராணுவ தளவாடங்களை 2009 வரை இலங்கைக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது.

2001ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளை தீவிரவாத இயக்கமாக அறிவித்த பிரித்தானிய அரசு, அதற்கான



▲ தமிழனப்படுகொலையை மறைக்க 2013இல் இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் மற்றும் தமிழினப்படுகொலை குற்றவாளி மகிந்த இராசபக்சே சந்தித்தபோது.

எந்த நியாயமான காரணங்களையும் கூறவில்லை. பிரித்தானியாவில் வாழும் 3,00,000 ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதிப் பங்களிப்பதையும் தடுத்தது. நான்காம் ஈழப் போரில் விடுதலைப் புலிகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதிற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

விடுதலைப்புலிகள் தீவிரவாத இயக்கமாக இலங்கை அரசாங்கமே கூட அறிவிக்காத காலகட்டத்தில், இலங்கை அரசை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்த நிலையில், 11/9 தாக்குதல் அமெரிக்காவில் நடைபெறுவதற்கு முன்பே இப்படி ஒரு தடையை பிரித்தானிய அரசாங்கம் அறிவித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

பண்டாரநாயகே சர்வதேச விமான தளத்தின் மீது விடுதலைப் புலிகள் அமைப்பு தாக்குதல் நடத்தியதால்

இலங்கை அரசு 358 மில்லியன் டாலர்களை இழந்தது. இதனால் இலங்கைக்கான சுற்றுலா வரத்தும் குறைந்தது.

இந்த தாக்குதலுக்கு பிறகு, இலங்கை அரசாங்கத்திற்கு நிதி உதவி செய்ததில் முக்கிய பங்காற்றியது பிரித்தானிய அரசு. பிரித்தானிய, அமெரிக்கா மற்றும் இந்திய அரசுகளின் அழுத்தத்தின் காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தது.


அமைதி காலத்தில் அமைக்கப்பட்ட "Sri Lanka Monitoring Mission" அமைப்பின் தலைவராக இருந்த ஸ்வீடனின் இராணுவ தளபதி மேஜர். உல்ஃப் ஹென்றிக்சன், பிரித்தானிய மற்றும் அமெரிக்க அரசுகள் அமைதிப் பேச்சுவார்த்தையை குலைப்பதாகவும், பிற நாடுகளை விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்ய வற்புறுத்துவதாகவும் குற்றம் சாட்டினார்.

2008 இல் மட்டும், இலங்கைக்கும் 4 மில்லிய யூரோ பெருமானமுள்ள இராணுவ தளவாடங்களையும் 3 மில்லியன் யூரோ அளவிலான ஆயுதங்களையும் பிரித்தானிய அரசு இலங்கைக்கு விற்றது.

பல ரகத் துப்பாக்கிகள் உட்பட இராணுவம் பயன்படுத்தும் ஆயுதங்கள் 3,30,000 யூரோக்களுக்கும், பாதுகாப்பு கவசங்கள் 6,55,000 யூரோக்களுக்கும் இலங்கைக்கு விற்கப்பட்டது. 2006-2009 கால கட்டத்தில் மட்டும் 12 மில்லியன் யூரோக்கள் பெருமானமுள்ள ஆயுதங்களை பிரித்தானிய அரசு இலங்கைக்கு ஏற்றுமதி செய்தது.

## இரஷ்யா

இலங்கை இராணுவத்திற்கு இராணுவ பயிற்சியை அளித்ததுடன், 300 மில்லியன் டாலர் அளவிலான ஆயுதங்களை இலங்கைக்கு ரஷ்யா கொடுத்தது.



Russian President Vladimir Putin | Former President Mahinda Rajapaksa | Former Defence Secretary Gotabaya Rajapaksa

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் அனைத்து தீர்மானங்களிலும், இலங்கைக்கு ஆதரவாகவே இரஷ்யா நின்றது. 2009 இறுதி போரின் போதும், கனடா, மெக்சிகோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போர் நிறுத்ததிற்கான தீர்மானத்தை ஐ.நாவில் கொண்டு வர முயற்சித்த போது அதை இரஷ்யாவும், சீனாவுமே எதிர்த்து வாக்களித்தன.

அதே போல் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்காக மேற்கத்திய நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை சீனா மற்றும் பல நாடுகளுடன் சேர்ந்து இரஷ்யாவும் எதிர்த்தது.

இலங்கை அரசிற்கு பல ஆயுதங்களையும், போர் விமானங்கள் மற்றும் இராணுவ வாகனங்களை கடைசி கட்டப் போரில் இரஷ்யா வழங்கியது.

Mikoyan-Gurevich MiG-27, Antonov An-32, Mil Mi-17 வகை போர் விமானங்கள், T-54/55 பீரங்கிகள், BTR-80 APC இராணுவ வாகனங்கள் மற்றும் 158.5 மில்லியன் டாலர் மதிப்பிலான Gepard ரக விரைவுப் போர்க் கப்பல்கள் ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை.

## ஐக்கிய நாடுகள்

ஈழத்தமிழர்களை பாதுகாக்க எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்காத ஐநா, இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் இராணுவத் தாக்குதலுக்கு ஆதரவாக நின்றது.

போர் பகுதியில் இருந்த தமிழர்கள் மீது எந்த அக்கறையும் ஐ.நா காட்டவில்லை. இஸ்ரேல்-காசா போரின் போதும் சரி, குர்திஸ்தானுக்கும் துருக்கிக்கும் இடையே நடந்த போரின் போதும் சரி, ஐ.நா வின் கடும் கண்டனத்தின் காரணமாகவும், சர்வதேச சமூகத்தின் தலையீடு காரணமாகவும் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் ஈழத்தமிழர் பிரச்சனையில் ஐநா தன் கண்களை மூடிக் கொண்டது. 2008இல் போர்



▲ **தமிழர்கள் இலங்கை அரசால் இனப்படுகொலை செய்யப்படும்போது அதனை தடுக்கதவறிய ஐ.நா பொதுச்செயலாளர் பான்-கீ-மூன் போர் முடிந்த பின் இலங்கைக்கு பார்வையாளராக சென்று இனப்படுகொலை குற்றவாளி இராசபக்சேவை சந்தித்தபோது.**

முற்றிய சூழலில், தன்னுடைய பணியாளர்களையும், மனித நேய சேவை செய்ய சென்றவர்களையும் வன்னிப் போர் பகுதியில் இருந்து வெளியேறுமாறு ஐ.நா கூறியது. காயம்பட்ட பொதுமக்களை காப்பாற்ற அங்கு மருத்துவர்களும், தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்களும் மட்டுமே எஞ்சி இருந்தனர்.

இறுதிப் போரின் போது, பிரபாகரன் ஐநா அதிகாரிகளையும், எரிக் சோல்ஹைம் உட்பட நார்வே அமைதி பேச்சுவார்த்தையில் ஈட்டுபட்டவர்களையும் தொடர்பு கொண்டார். அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு இஸ்ரேலுக்கும் காசாவிற்கு நடந்த போரில்

ஐநா தலையிட்டு தீர்மானம் நிறைவேற்றியதைப் போல, சர்வதேச சமூகமும் ஐநா மனித உரிமைகள் ஆணையமும் தலையிட்டு விடுதலைப் புலிகளையும் பொதுமக்களையும் பாதுகாத்து, ஒரு தீர்வை எட்டும் என்று பிராபாகரனிடம் கூறினர்.

ஏப்ரல் மாதத்தில், பிராபகரன் போர் நிறுத்தத்திற்கு சம்மதித்த போதும் கூட, சரணடைந்த விடுதலைப் புலிப் போராளிகளும், அதிகாரிகளும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். பொதுமக்கள் மீது குண்டுகள் போடப்பட்டது. பிரபாகரனிடம் உறுதி அளித்ததற்கு மாறாக ஐ.நா எதுவும் செய்யாமல் அமைதி காத்தது.

போர் முடிந்த பிறகு இலங்கைக்கு சென்ற ஐநா பொதுச் செயலாளர் பான்-கி-மூன் போர் பகுதிகளை முப்பது நிமிடங்களே பார்வையிட்டார். தமிழர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த முகாம்கள் எவற்றிற்கும் அவர் செல்லவில்லை. போரில் வெறும் 7000 தமிழர்கள் தான் கொல்லப்பட்டனர் என்று குறைவான எண்ணிக்கையை கூறினார்.

மனித உரிமைகளுக்கான ஆணையர் நவிபிள்ளையும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மீது அக்கறை காட்டவில்லை. தீவிர விடுதலைப் புலி எதிர்பை வெளிப்படுத்திய நவிபிள்ளை, இலங்கை இராணுவத்தின் தீவிரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்ட 1,50,000 தமிழ் குடும்பங்களை சந்திக்கவும் இல்லை. 2013இல் இலங்கையில் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் பேசிய நவிபிள்ளை “நான் ஒரு தென் ஆஃப்ரிக்கர் என்பதில் பெருமை கொள்கிறேன். விடுலைப் புலிகள் பல குற்றங்களைப் புரிந்த, பல உயிர்களை பறித்த ஒரு கொலைகார அமைப்பு. விடுதலைப் புலிகளால் 1999இல் கொல்லப்பட்ட பிரபல அரசியல்வாதியும், அறிஞருமான நீலம் திருச்செல்வத்தின் நினைவு நாள் விழாவில் பங்கேற்க நான் இலங்கை சென்றிருக்கிறேன். விடுதலைப் புலிகள் போன்ற ஒரு மனிதாபிமானற்ற இயக்கத்தை நினைவில் வைத்திருக்கக் கூடாது என்று நான் புலம் பெயர் ஈழத் தமிழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்” என்று ஒரு தலைபட்சமாக கூறினார்.

மே 2, 2009 அன்று கூடிய ஐநா மனித உரிமைகள் ஆணையம் விடுதலைப் புலிகள் அமைப்பும், இலங்கை அரசும் மேற்கொண்ட போர் குற்றங்களை விசாரிக்க சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியது. அதில் இரண்டு தீர்மானங்களைப் பற்றி விவாதிக்கப்பட்டது; ஒன்று, சர்வதேச விசாரணை. மற்றொரு சர்வதேசம் இலங்கையில் நடைபெறும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது. இரண்டாவது தீர்மானத்தை முன்மொழிந்தது இலங்கை அரசு. ஈழத் தமிழர்களை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து காப்பாற்றியதற்காக பாராட்டிய இந்த இரண்டாவது தீர்மானம், ஈழத்தமிழர்கள் தாக்குதலில் கொல்லப்பட்டது தொடர்பாகவோ, தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் செல்ல சர்வதேச அமைப்புகளுக்கான அனுமதி தொடர்பாகவோ எதுவும் பேசவில்லை. 70,000 ஈழத்தமிழர் கொல்லப்பட்டதற்கு காரணம் இலங்கை இராணுவத்தின் தாக்குதல் தான் என்று ஒத்துக் கொண்ட ஐ.நா அவை, இந்த இரண்டாவது தீர்மானத்தை மட்டும் நிறைவேற்றி முதல் தீர்மானத்தை கைவிட்டது.

2010 ஏப்ரலில், ஐநாவின் குழு கடைசி கட்ட போரை ஆய்வு செய்து, இலங்கை விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தது. பொது மக்கள் சாவிற்கு முழு காரணம் இலங்கை இராணுவத்தின் தாக்குதல் தான் என்றும், தடுப்பு முகாம்களில் நடைபெற்ற பாலியல் சித்திரவதைகள் குறித்தும், மனிதர்கள் வாழத் தகுதியற்ற சுகாதரமற்ற வாழ்விடங்கள் முகாம்களில் நிலவியதைப் பற்றியும் இந்த அறிக்கை குறிப்பிட்டது. இதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை மத்திய கிழக்கு நாடுகள், மத்திய அமெரிக்க நாடுகள், இந்தியா, சீனா, ரஷ்யா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் எதிர்த்தன.

ஐ.நா வின் உள்ளக ஆய்வறிக்கை (பெட்ரி அறிக்கை) ஐ.நாவின் தோல்விகளை பட்டியலிடுகிறது:

## அறிக்கை பகுதி 13

“ஐ.நா வின் அச்சுறுத்தல்களை இலங்கை அரசு தந்திரமாக கையாள நினைத்ததால் ஐ.நா விற்கும் இலங்கை அரசுக்குமான உறவுகளில் பல சிக்கல்கள் இருந்தன. பல வருடங்களாக இலங்கை அரசை கண்டிக்கும் அதிகாரிகளுக்கு, நுழைவுச்சீட்டு வழங்குவதை தன்னுடைய அதிகாரங்களை கொண்டு தடுத்து வைத்திருந்தது இலங்கை அரசு. பல உள்ளூர் ஒருங்கிணைப்பாளர்களை வெளியேற்றியும், அவர்களின் விசா இரத்தாகும் என்று அச்சுறுத்தியும், நெருக்கடி நிலைகளை கையாளும் அனுபவம் உள்ள மாற்று அதிகாரிகள் நியமனத்தை நிராகரித்தும் வந்திருக்கின்றது இலங்கை அரசு”



▲ 2013ஆம் ஆண்டு அப்போதைய ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவிபிள்ளை இலங்கைக்கு பயணம் மேற்கொண்டபோது இனப்படுகொலை குற்றவாளி மகிந்த இராசபக்சே சந்தித்தபோது

இலங்கை அரசின் இந்த அச்சுறுத்தலைப் பற்றி எல்லாம் பான்-கி-மூன் க்கு தெரியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவர் என்ன செய்தார்? ஒன்றும் செய்யவில்லை.

தன்னுடைய அதிகாரிகளே இலங்கை அரசால் அச்சுறுத்தப்படும் சூழல் ஏற்பட்ட போதும் கூட அவர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.. குறைந்த பட்சம் இராஜபக்சேவை தொடர்பு கொண்டு இப்படிப்பட்ட செயல்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல என்றாவது கூறியிருக்கலாம். அதைக் கூட அவர் செய்யவில்லை என்றால் அவர் இராஜபக்சேவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஐ.நா.வால் பாதுகாக்கப் பட வேண்டிய ஈழதமிழர்களை கைவிட்டார் என்பதே அர்த்தமாகும்.

ஐ.நா ஊழியர்கள் ஈழத்தமிழர் நிலங்களில் இருந்து இலங்கை அரசால் வெளியேற்றப்பட்டனர். இப்படிப்பட்ட ஆபத்தான நகர்வுகளுக்கு பான்-கி-மூன் என்ன வினையாற்றினார்? ஒன்றுமில்லை

## அறிக்கை பகுதி 15

ஐ.நா வெளியேறுவதற்கு ஆயத்தமானவுடன் ஐ.நா அதிகாரிகளை மக்கள் அணுகி "சர்வதேச அமைப்புகள் இருப்பதால் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சில குடும்பங்கள் கிளிநொச்சி நகருக்கு வந்துள்ளன"; "மனிதாபிமான நிறுவனங்கள் வெளியேறும் பட்சத்தில் இலங்கை அரசு கிளிநொச்சியை குண்டுவீசித் அழிக்கும் வேலையை தொடங்கும், அதனால் மக்களின் பாதுகாப்பும் ஆபத்துக்குள்ளாகும்"; "ஐ.நா இல்லாத பட்சத்தில் நடப்பவைக்கு சாட்சியங்கள் இல்லாத சூழல் உருவாகும்" என்று மன்றாடினர். வரப்போகும் ஆபத்து முன் கூட்டியே தெரிந்திருந்தும் பான்-கி-மூன் என்ன செய்தார்? ஒன்றுமில்லை.

தனது நண்பர் பான்-கி-மூன் எந்த எடுக்க மாட்டார் என்று இராஜபக்சேவிற்கு தெரிந்திருக்க வாய்ப்புகள் அதிகம்.

மார்ச் 19, 2009 இல், மனித உரிமைகளுக்கான ஆணையர் விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் செயல்கள் "மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக கருத்தப்பட வாய்ப்புள்ளது என்றும், சர்வதேச சட்ட விதி மீறல்களைப் பற்றி பேசும் போதெல்லாம் இலங்கை அரசாங்கத்தை ஐ.நா குறிப்பிடுவதைத் தவிர்த்தது" என்று கூறினார்.

ஐநா அதிகாரிகளோ, இலங்கை அரசைக் குறை கூறினால், களத்தில் அங்கு வேலை பார்க்க முடியாது என்று கூறினர். ஒரு மனித உரிமைகள் ஆணையம் இப்படியான சப்பைகட்டு கட்டுவது ஏற்றுக் கொள்ளமுடியாததாகும். வன்னியில் நிலைமை மோசமடைய துவங்கிய சூழலில், வன்னியில் நிலவும் சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதநேய சட்டங்களின் நிலை பற்றி எந்த தகவல்களும் வெளிவருவதில்லை என்று ஐ.நா பாதுகாப்பு அவையின் உறுப்பு நாடுகளும், ஐ.நா பொதுச் செயலாளர் அலுவலக அதிகாரிகளும் குறை கூறினார்கள். ஐ.நா பொதுச் செயலாளராக இருந்த பான்-கி-மூன் தான் இதற்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

## அறிக்கைப் பகுதி 31

மே 18 2009 வாக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியமான தலைவர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது. சக விடுதலைப் புலி போராளிகளுடன் நடந்த சண்டையில் அவர்கள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் கோரியது. (அதாவது விடுதலைப் புலிகளுக்குள்ளேயே நடந்த சண்டையில் அவர்கள் கொல்லப்பட்டார்களாம்!)

மே 18, 2009 அன்று அரசு கட்டுப்பாடுப் பகுதிக்கு வெள்ளைக் கொடியுடன் நிராயுதபாணியாக வந்தவர்களை அரசாங்கமே சுட்டுக் கொன்றது என்று நம்பகமான வட்டாரங்களில் இருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. சரணடைய வந்தவர்களை கொல்வது என்பது போர்குற்றமாகும். அதைத் தான் இலங்கை இராணுவம் செய்தது.

## அறிக்கைப் பகுதி 33

"போர் காலம் முழுவதிலும், பாதுகாப்பு சபையிலோ, மனித உரிமை சபையிலோ, பொதுச் சபையிலோ உறுப்பு நாடுகள் இலங்கைப் பற்றிய விவாதிக்க ஒரு முறைக்கூட சந்திக்கவில்லை"

ஐ.நா பொதுச் செயலாளர் பான்-கி-மூன் நினைத்திருந்தால் இவற்றில் கூட்டம் நடத்தியிருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. குறிப்பாக பாதுகாப்பு அவையை இலங்கை பற்றி விவாதிக்க கூடாமல் இருந்தார் என்பது அவர் கொலைகார இராஜபக்சே அரசிற்கு எவ்வளவு தூரம் துணை நின்றார் என்பதையே காட்டுகிறது.

இராஜபக்சேவை போல் இவரையும் குற்றவாளியாக கருத இடம் உள்ளது.

## அறிக்கைப் பகுதி 35

"போர் முடிந்த உடன், 22 மற்றும் 23 மே 2009 இல், சில உயர் ஆலோசர்கள் எச்சரித்ததையும் மீறி ஐ.நா பொதுச் செயலாளர் இலங்கைக்கு பயணித்தார்".

போர் முடியும் வரை ஏன் பான்-கி-மூன் காத்துக் கொண்டிருந்தார் என்பதை அவர் தான் விளக்க வேண்டும். முன்பே குறிப்பிட்டது போல, போரால் பேரழிவுகளை சந்தித்த முல்லைத் தீவு பகுதிகளை விமானம் மூலம் பார்வையிட்ட பான்-கி-மூன் , தான் இது போல் வேறு எங்கும் கண்டதில்லை என்று கூறினார். தமிழர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம் ஒன்றிற்கு மட்டும் சென்று விட்டு, மாலை மரியாதை வாங்கி விட்டு அங்கிருந்து சென்று விட்டார். அவ்வளவு தான் ஐ.நா பொதுச் செயலாளரின் நடவடிக்கைகள். இதன் பிறகு தான் இலங்கை தன்னைத் தானே பாராட்டி ஐ.நா மனித உரிமை அவையில் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டது.

## அறிக்கைப் பகுதி 36

போர் முடிந்த நாளான மே 19 அன்றே ஐ.நா மனித உரிமை அவையில் இலங்கைப் பற்றிய சிறப்பு விவாதம் நடத்த 17 உறுப்பு நாடுகள் ஆதரவு அளித்தன. விவாதம் நடக்க மே 26, 27 ஆகிய தினங்கள் குறிக்கப்பட்டன. இலங்கை அரசு இத்தகைய சிறப்பு விவாதத்தை விரும்பாத போதிலும், விவாதம் நடப்பது உறுதி ஆனதும் அவசரமாக ஒரு வரைவுத் தீர்மானத்தை சமர்பித்தது. சிறப்பு விவாதம் நடத்த முயற்சித்த உறுப்பு நாடுகளை முந்திக் கொண்டதன் மூலம், நடைமுறைச் விதிகளின் படி இலங்கை

அரசின் தீர்மானமே அவையின் நடவடிக்கைகளுக்கு அடிப்படையானது. உள்நாட்டு அகதிகளுக்கு ஆதரவு அளித்ததைப் பாராட்டியும், மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசு எடுக்கும் முயற்சிகளை வரவேற்றும், சர்வதேச சமூகத்தை இலங்கைக்கு ஒத்துழைக்கக் கூறியும் இலங்கை அரசு கொடுத்த வரைவுத் தீர்மானத்தை அவை நிறைவேற்றியது. கூட்டு அறிக்கையை அங்கீகரித்த போதிலும், பொறுப்பாண்மை(Accountability) பற்றி அந்த தீர்மானம் குறிப்பிடவில்லை.

## அறிக்கைப் பகுதி 38

செப்டம்பர் 14,2009 அன்று ஐ.நா பொதுச் செயலாளர் இலங்கை அதிபருக்கு எழுதிய கடிதத்தில் பொருப்பாண்மைக் குறித்து "எனக்கு அறிவுரைக் கூறவும் உங்களுக்கு உதவவும் வல்லுனர் ஆணையம் ஒன்றை நியமிக்க இருக்கிறேன்" என்று கூறினார். இராஜபக்சே இதற்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. சர்வதேச நெக்கடிக் குழுமம் உட்பட பல அரசு சாரா தொண்டு நிருவனங்களிடம் இருந்து, பொருப்பாண்மை குறித்த சர்வதேச நடவடிக்கைகளை கோரும் விதிமீறல்கள் குறித்த ஆவண அறிக்கைகள் மே 2010 வாக்கில் வெளிவந்தன. மே 6 2010 இல் இலங்கை அரசாங்கம் போரில் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையம் (Lessons Learnt and Reconciliation commission, LLRC) என்ற உள் நாட்டு விசாரணை அமைப்பை உருவாக்கியது.

## அறிக்கைப் பகுதி 41

"யுத்ததின் போதும் அதற்கு பின்பும், ஐ.நா ஊழியர்களுக்கான சிறப்பு உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள், சர்வதேச மனித உரிமை மற்றும் மனித நேய விதிகள் இவை அனைத்தும் இருந்த போதிலும் ஐ.நா அலுவலர்கள் தகாத முறையில் நடத்தப்பட்டனர்"

பான்-கி-மூன் என்ன நடவடிக்கை எடுத்தார்? ஒன்றுமில்லை

## அறிக்கைப் பகுதி 44

"ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படும் சூழல் குறித்து உறுப்பு நாடுகளிடமோ பொதுவெளியிலோ ஐ.நா விளக்கவில்லை. இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு உத்திரவாதம் அளிப்பதில் இருந்து பின்வாங்கியதற்கு ஐ.நா அமைப்பு ரீதியாக ஆற்றிய எதிர்வினை ஒரு பெரும் தோல்வியைக் குறிக்கிறது"

## அறிக்கைப் பகுதி 46

வன்னியில் மட்டும் இறுதி கட்ட யுத்ததின் போது 3,60,000 உள்நாட்டு அகதிகள் இருந்ததாக வன்னி அதிகாரிகள் லிலிஸிசி க்கு வாக்குமூலம் அளித்தார்கள். உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் அக்டோபர் 2008இல் தமிழீழ பகுதியில் இருந்த மக்கள் தொகை 4,29,000. ஆனால் இலங்கை அரசாங்கம் 70,000 பேருக்கு மேல் போர் பகுதியில் இல்லை என்று வற்புறுத்தி வந்தனர். 3,00,000 மக்கள் போர் பகுதியில் சிக்கியுள்ளனர் என்று ஐ.நா நம்பியது. உண்மையான புள்ளி விவரங்களை அரசாங்கம் மறுத்து வந்ததன் மூலம் மனிதாபிமான உதவிகளை வாகனங்கள் மூலம் கொண்டு செல்வதை தேவைக்கு அதிகமானது என்று வாதிட்டது. மேலும் அதிகமான உயிரிழப்புகள் நேருவதாக வந்த அறிக்கைகளை மறுக்கவும் அது உதவியது. செப்டம்பர் 2008 இல் இருந்து மே 2009 வரையிலான கால கட்டத்தில் ஐ.நா வின் உதவிகளின் மூலம் அளிக்கப்படும் உணவு விநியோகம் மொத்தத் தேவையில் 20% இருந்து 0% க்கு குறைந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினாலும், மருந்துகள் இல்லாததாலும் மடிவதாக வன்னியில் இருந்த மருத்துவர்கள் கூறினர்.

## அறிக்கைப் பகுதி 47

"உதவிகளைத் தடுப்பது சர்வதேச விதிகளின் கீழ் தான் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளுக்கு எதிரானது என்ற ரீதியில் அரசாங்கத்தை ஐ.நா எதிர்கொள்ளவில்லை"

## ஐரோப்பிய ஒன்றியம்

இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து அரசுகளின் வற்புறுத்தலின் காரணமாக மே 2006 இல் விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது.

அமைதி காலத்தில் அமைக்கப்பட்ட "Sri Lanka Monitoring Mission" அமைப்பின் தலைவராக இருந்த ஸ்வீடனின் இராணுவ தளபதி மேஜர். உல்ஃப் ஹென்ரிக்சன், விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தது மிகப்பெரிய தவறு என்றும், "பேச்சுவார்த்தைக்கு அவர்களை வரவழைக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தான் நாங்கள் உங்களிடம் கூறினோம். ஆனால் விடுதலைப் புலிகளை தடை செய்வது இப்போது தேவையில்லாதது" என்றும், எல்லாம் மிக வேகமாக நடைபெற்றது. இலங்கை அரசாங்கத்திடம் இருந்தும், அமெரிக்க அரசாங்கத்திடம் இருந்து அழுத்தங்கள் வந்து கொண்டே இருந்தன. முல்லைத் தீவிற்கு அருகே நடந்த ஒரு சம்பவத்தில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்தின் பேச்சை மட்டும் கேட்டது. எங்களுக்குத் தொடர்பு கொண்டு என்ன நடந்தது என்று அவர்கள் கேட்கவில்லை. ஏன் என்றால் எங்களிடம் அந்த நிகழ்வைப் பற்றிய மாற்றுக் கருத்துக்கள் இருந்தன. இலங்கை அரசாங்கம் சொல்வதை மட்டுமே கேட்டுக் கொண்டு விடுதலைப் புலிகள் மீது தடை பாய்ந்தது. தடை விதித்து விடுதலைப் புலிகளை தீவிரவாதிகள் என்று அறிவித்தன் மூலம் இலங்கை அரசாங்கம் என்ன வேண்டுமானலும் செய்து கொள்ளலாம் என்று பச்சைக் கொடி தீவிரவாதத்திற்கு எதிரான போராக அது மாறியது. சர்வதேச சக்திகள் அனைவரும் அதை விரும்பினர். என்னைப் பொருத்த வரையில் அது ஒரு பெரிய தவறு. விடுதலைப் புலிகளை அமைப்பை தீவிரவாதிகள் பட்டியலில் வைப்பீர்கள் என்றால் இலங்கை அரசையும் வையுங்கள் என்று நான் வாதிட்டேன். ஏன் என்றால் இலங்கை அரசாங்கமும் அத்தகைய நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டுக் கொண்டு இருந்தது. இது எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆக இந்த தடை மிகப்பெரிய தவறு என்று நான் கூறுவேன். இந்த தடையின் காரணமாகவே பேச்சுவார்த்தையின் மூலம் சுமூகமான தீர்வு காணுவது இயலாமல் போனது. இலங்கை அரசாங்கமும் அத்தகைய தீர்வை விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின்

தடை ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிகழாமல், பிரசல்ஸ் நகரின் தேநீர் கடைகளில் அமெரிக்க-பிரித்தானிய அழுத்தத்தால் ஏற்பட்டது" என்றும் கூறினார்.



▲ ஏப்ரல் 09,2009இல் லிபியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பொருளாதார, இராணுவ ஒப்பந்தங்களை லிபிய அதிபர் முஅம்மர் கடாபியும், தமிழினப்படுகொலை குற்றவாளி மகிந்த இராசபக்சேவும் கையெழுத்திட்ட போது

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை தான் விடுதலைப் புலிகளின் வரலாற்றிலேயே மிகப் பெரிய அரசியல் பின்னடைவாகும். ஐரோப்பாவில் வாழும் தமிழர்களின் நிதியை தான் விடுதலைப் புலிகள் அமைப்பு பெரிதளவு நம்பி இருந்தது. ஐரோப்பா எங்கிலும் விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் முடக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன. ஐரோப்பாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதி அளிப்பது தடை செய்யப்பட்டது. மீறி நிதி அளித்தவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் வாழும் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு 300 மில்லியன் அமெரிக்க டாலர் நிதி அளித்து வந்தனர். இந்த தடை காரணமாக இது பெரிதளவும் குறைந்தது.

மனித உரிமைகள் பற்றி உபதேசித்தாலும், 2007 இல், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளான பல்கேரியா, செக் குடியரசு, ஸ்லோவாக்கியா, இத்தாலி, லித்துவேனியா, நெதர்லாந்து மற்றும் போலாண்ட் ஆகிய நாடுகள் மட்டும் 4.09 மில்லியன் யூரோக்களுக்கு ஆயுதங்களை இலங்கை அரசுக்கு வழங்கியது.

விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பவர்களை தத்தமது நாடுகளில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கைது செய்ததுடன், கடற்புலிகள் சம்மந்தமான உளவுத் தகவல்களை அளிப்பது மற்றும் எண்ணற்ற ஆயுதங்களை கொடுப்பது என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இலங்கை அரசுக்கு உதவி புரிந்தன.

2016 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் உச்சநீதிமன்றம், விடுதலைப் புலிகள் மீதான தடை தவறு என்று அந்த தடையை விலக்கியது, பிரித்தானிய, அமெரிக்க மற்றும் இந்திய அரசுகள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி ஐரோப்பிய ஒன்றியத்தை மிரட்டியே விடுதலைப் புலிகளை தடை செய்ய வைத்தன என்பது இதில் இருந்து புலப்படுகிறது.

## லிபியா

இலங்கை மற்றும் லிபிய அரசுகள் இடையே எண்ணை இறக்குமதி மற்றும் விநியோகத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இவையே இறுதி கட்டப் போரில் இராணுவ வாகனங்களுக்கு எரிபொருளாக பயன்படுத்தப்பட்டது.

## தென் கொரியா

இரு நாட்டு நல்லுறவின் பொருட்டும், விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டதற்கு பிறகு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், 531 மில்லியன் டாலர்கள் இலங்கை அரசிற்கு இந்த போர் காலத்தில் தென் கொரியா கொடுத்தது.

## செக் குடியரசு

RM-70 வகை ராக்கெட் ஏவும் ஆயுதங்களும், Praga V3 வகை வாகனங்களும் 2008 ஆண்டு இலங்கை அரசிற்கு வழங்கியது செக் குடியரசு.

## உக்ரைன்

நான்கு Mig-27 வகை போர் விமானங்கள் 9.8 மில்லியன் டாலருக்கு இலங்கை இராணுவத்திற்கு விற்றது.

## ஃப்ரான்ஸ்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்த ஃப்ரான்ஸ் அரசாங்கம், விடுதலைப் புலிகளின் கப்பல்கள் பற்றிய தகவல்களை இலங்கை அரசிற்கு அளித்தது.

Mirage ரக போர் விமானங்களையும், இராணுவ உதவிகளையும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் வற்புறுத்தலில் பெயரில் இலங்கை அரசிற்கு வழங்கியது ஃப்ரான்ஸ் அரசாங்கம்.

## ஜப்பான்

அமைதி பேச்சுவார்த்தை காலகட்டத்தில், இலங்கை அரசிற்கு வந்த வெளிநாட்டு உதவிகளில் 45% ஜப்பான் அளித்தது.

கடற்புலிகளின் நடவடிக்கைகளைப் பற்றி உளவுத் தகவல்களை அளித்த ஜப்பான், இரண்டு கப்பல்களை இலங்கை இராணுவத்திற்கு அளித்தது. மேலும் தங்கள் நாட்டில் உள்ள விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களையும் கைது செய்தது.

## மாலத்தீவு

இந்தியப் பெருங்கடலின் மேற்குப் பகுதியில், இலங்கை அரசாங்கத்திற்கு தேவையான உளவுத் தகவல்களை திரட்டித் தருவதில் முக்கியப் பங்காற்றியது மாலத்தீவு. கடற்புலிகளின் நடவடிக்கைகளைப் பற்றி துப்புக் கொடுத்து உதவியதுடன், விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றையும் கைப்பற்றியது.



▲ கடந்த 24ஆண்டுகளுக்கு பிறகு செப்டம்பர் 7,2014இல் தான் சப்பானின் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருக்கிறார். இந்த பயணத்தில் இலங்கை சப்பான் இடையே இராணுவம் கடல்பாதுகாப்பு, பொருளாதார உள்ளிட்ட 8ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இந்நிகழ்வில் சப்பானின் பிரதமர் ஷின்சோ அபே, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சே ஆகியோர் கலந்து கொண்டபொது.

## ஸ்லோவாக்கியா

2006-09 காலகட்டத்தில் மட்டும் 1.1. மில்லியின் யூரோக்கள் மதிப்பிலான ராக்கெட்டுகளை இலங்கை அரசிற்கு கொடுத்தது.

## ஸ்விட்சர்லாந்து

அமெரிக்கா, பிரித்தானிய அரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வற்புறுத்தலின் காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்பு மீது தடை விதித்தது.

ஸ்விட்சர்லாந்தில் உள்ள 40,000 தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதி அளிப்பதை தடை செய்ததுடன், விடுதலைப் புலிகளுக்கு நிதி அளிப்பவர்களை கைது செய்யத் தொடங்கியது.

தற்சமயம், ஸ்விட்சர்லாந்து நீதி மன்றம் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்கியுள்ளது.

## ஆஸ்திரேலியா

இலங்கை அரசிற்கு 27 மில்லியன் டாலர் இராணுவ உதவிகளை 2008-2009 கால கட்டத்தில் செய்தது.

ஆஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர் ஈழத் தமிழர்கள், பெரும் நிதிப் பங்களிப்பை விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு செய்து வந்தனர்.

2006ஆம்ஆண்டுவிடுதலைப்புலிகள்அமைப்பை தீவிரவாத அமைப்பாக அறிவித்த ஆஸ்திரேலிய அரசு, அங்குள்ள 30,000 ஈழத்தமிழர்கள் நிதி அளிப்பதை தடுத்தது. அதையும் மீறி நிதி அளித்தவர்களை தீவிரவாதத்திற்கு துணைபோகிறவர்கள் என்று கூறி கைது செய்தது.



▲ தமிழினப்படுகொலை குற்றவாளி மகிந்த ராசபக்சேவோடு ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட்

## கியூபா:

லத்தின் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பான கிலிஙிகி வில் உள்ள பொலிவியா மற்றும் நிராகுவா ஆகிய நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்ததைத் தொடர்ந்து, 2008இல் ஃபிடல் காஸ்ட்ரோவும் கியூபாவின் ஆதரவை அறிவித்தார்.



▲ தமிழினப்படுகொலை குற்றவாளி மகிந்த இராசபக்சே கியூபா அதிபர் ராயல் காஸ்ட்ரோவை கியூபதலைநகர் ஹாவானாவில் சந்தித்தபோது

2012 ஆம் ஆண்டு, மனித உரிமை ஆணையத்தில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறுதலை விசாரிக்க கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக, இலங்கை அரசிற்கு ஆதரவாக கியூபாவும், ALBA கூட்டமைப்பில் உள்ள நாடுகளும் வாக்களித்தன.

“இந்த உலகத்தில் சுரண்டப்படுகிறவர்கள் அனைவருமே எங்கள் தோழர்கள்.. சுரண்டுபவர்கள் அனைவருமே எங்கள் எதிரிகள். இந்த உலகமே எங்கள் நாடு. புரட்சியாளர்கள் அனைவருமே எங்கள் சகோதரர்கள்” என்று முன்பு அறிவித்த காஸ்ட்ரோ, அதற்கு நேர் எதிரான முடிவை எடுத்தார்.

## இந்தோனேசியா

செந்திரா சூரிய ஏகஜாயா என்ற இந்தோனேசிய நிறுவனம் தயாரித்த P2 APC இராணுவ வீரர்களை ஏற்றிச் செல்லப் பயன்படும் வாகனங்கள் பல இலங்கை அரசிற்கு அளிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தங்களுக்கான ஆயுதங்களை வாங்கும் முக்கிய பகுதியாக இந்தோனேசியா இருந்தது. விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல்களைப் பற்றிய உளவுத் தகவல்களை இலங்கை அரசாங்கத்திற்கு அளித்தது. அதைக் கொண்டே விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பலை 2007இல் இலங்கை அரசாங்கம் அழித்தது.

### கிரேக்கம்

மூன்று மில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை, குறிப்பாக 32,400 81mm மோர்டார் துப்பாக்கிகளை இலங்கை இராணுவத்திற்கு 2007 ஆம் ஆண்டு அளித்தது.

### கனடா:

இந்தியா, அமெரிக்கா, மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் தொடர் வற்புறுத்தலின் காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்பாக மே 6,2006 அன்று அறிவித்தது.புலம்பெயர் தமிழீழ மக்கள் மிகுதியாக வாழ்வது கனடாவில் தான். புலிகள் மீதான தடையின் காரணமாக 3,00,000 தமிழர்கள் நிதி அளிப்பது தடை செய்யப்பட்டது.

ஐரோப்பாவை அடுத்து, கனடாவில் தான் விடுதலைப் புலிகளின் புலம்பெயர் தமிழர் கட்டமைப்பு இருந்தது. விடுதலைப் புலிகள் மீதான தடையை எதிர்த்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் போராடிய பிறகும் கூட, தடை நீக்கப்படவில்லை. உலகத் தலைவர்கள் அனைவரும் போரின் வெற்றிக்கு இலங்கை அரசுக்கு வாழ்த்து தெரிவித்த போதும் கூட, கனட பிரதமர் ஸ்டீஃபன் கார்பெர் மட்டும் தெரிவிக்க மறுத்து விட்டார். முதலாம் ஆண்டு வெற்றி விழாவிற்கும் வர மறுத்துவிட்டார்.

கனடா அரசாங்கம் மட்டுமே அப்பாவி ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டத்தைப் பற்றி தங்களுடைய அதிகாரப் பூர்வ அறிக்கையில் தெரிவித்தது. மற்ற நாடுகள் அனைத்தும் பாராட்டுகள் தெரிவித்ததோடு நிறுத்திக் கொண்டன. 39க்கும் மேற்பட்ட நாடுகளின் உதவியுடன், லட்சக்கணக்கான டாலர்களை செலவளித்து, ஒட்டுமொத்த தமிழர்களையும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கிய பிறகே ஒரு தமிழனை தோற்கடிக்க முடிந்தது இலங்கை அரசால். ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com



# புதிய கல்விக் கொள்கையை இந்த கல்வி ஆண்டிலிருந்தே அமல்படுத்தப் போவதாக மத்திய அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் தெரிவித்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

## மோடி அரசே! போராட்டத்தைத் தூண்டாதே!



தமிழர்களும், இந்தியா முழுதிலுமுள்ள கல்வியாளர்களும் கடுமையாக எதிர்த்து வரும் புதிய தேசிய கல்விக் கொள்கையினை கொரோனா ஊரடங்கினைப் பயன்படுத்தி எதிர்ப்பில்லாமல் நடைமுறைப்படுத்திட மோடி அரசு முயன்று வருகிறது. மக்கள் ஒரு பேரிடரில் இருப்பதை பயன்படுத்திக் கொண்டு, இதுநாள் வரை மக்கள் எதிர்த்துவந்த கொள்கைகளை திணிக்க முயலும் அரசின் செயல் மிகவும் இழிவானது. கொரோனாவை எதிர்கொள்ள முறையான நிதியைக் கூட ஒதுக்காமல், எந்த முன்னெடுப்பையும் செய்ய முடியாத இந்த மோடி அரசு, கல்வியை காசாக்கும் மக்கள் விரோத கொள்கையை திணிப்பதில் மட்டும் அபார வேகம் காட்டி வருகிறது.

புதிய தேசியக் கல்விக் கொள்கை என்பது இந்தியாவின் தேசிய இனங்களின் மீது திணிக்கப்படும் வன்முறையாகவே இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அந்த கல்விக் கொள்கை என்பது பயணிக்கக் கூடாத ஒரு ஓட்டை படகினைப் போன்றது. அந்த படகிற்குள் ஏற்றி நம் குழந்தைகளை ஆற்றில் பயணிக்கச் செய்ய பார்க்கிறது மோடி அரசு. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. நமது குழந்தைகளின் எதிர்காலத்தைக் காப்பதற்காக நாம் குரலெழுப்பியே ஆக வேண்டிய தருணம்.

கல்விக் கொள்ளைக்கு எதிராகவும், தேசிய இனங்களின் மாநில உரிமைகளை பாதுகாத்திடவும் இந்த கல்விக் கொள்கையை எதிர்த்து நாம் நடத்த வேண்டிய போராட்டங்கள் தான் இரண்டாவது விடுதலைப் போராட்டமாகும். தமிழ்நாடு அரசுக்கு மோடி அரசினை எதிர்த்துக் கேள்வியெழுப்பும் துணிவில்லை என்றால் பதவியிலிருந்து வெளியேற வேண்டும். எந்த நிலையிலும் புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாது என்று தமிழ்நாடு அரசு தீர்மானம் நிறைவேற்றி அறிவிக்க வேண்டும். நீட் தேர்வில் ஏமாற்றியது போல் இனிமேலும் மக்களை ஏமாற்ற முயலக் கூடாது. இவை எல்லாவற்றையும் மீறி அடக்குமுறையின் வாயிலாக புதிய தேசிய கல்விக் கொள்கையை திணிக்க நினைத்தால் தமிழ்நாடு மிகப் பெரிய போராட்டத்திற்கு அணியமாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

### புதிய தேசிய கல்விக் கொள்கையை ஏன் எதிர்க்க வேண்டும்?

1. புதிய கல்விக் கொள்கை குலக்கல்வி முறையை மீண்டும் திணித்து பிசி, எம்பிசி, எசி.எஸ்டி மற்றும் ஏழை மாணவர்களின் கல்வி உரிமையினை கேள்விக்குள்ளாக்குகிறது.

2. கலை, அறிவியல், பொறியியல், சட்டம் உள்ளிட்ட அனைத்து கல்லூரி படிப்பிற்கும் நீட் மாதிரியான அகில இந்திய நுழைவுத் தேர்வைத் திணித்து நமது மாணவர்கள் கல்லூரிக்கு செல்லும் வாய்ப்பை பறிக்கிறது.

3. 8ம் வகுப்பிற்கு பிறகிலிருந்தே தொழிற்கல்வி பெறும் நிலையினை உருவாக்கி, குழந்தைத் தொழிலாளர்கள் உருவாவதை ஊக்குவிக்கிறது. அறிவியல், தொழில்நுட்ப மற்றும் இதர படிப்புகளுக்கு ஏழை மாணவர்களுக்கு இருக்கும் வாய்ப்பை பறிக்கிறது.

4. மூன்று, ஐந்து மற்றும் 8-ம் வகுப்பு மாணவர்களுக்குக் கூட பொதுத்தேர்வு வைத்து, ஏழை மாணவர்கள் பள்ளியிலிருந்து இடைநிற்றல் அதிகமாகச் செய்கிறது.

5. சர்வதேச மற்றும் கார்ப்பரேட் பெரு நிறுவனங்களை கல்வித் துறையில் நுழைத்து கல்வியை லாபப் பொருளாக்கி ஏழை மாணவர்கள் கல்வி பெறும் வாய்ப்பை மறுக்கிறது.

6. இந்தி மற்றும் சமஸ்கிருதத்தை திணிக்கிறது.

7. எல்லாவற்றுக்கும் மேலாக மாநில அரசுகளின் கல்வி அதிகாரத்தைப் பறிக்கிறது.

8. வேறு பண்பாடு, கலாச்சாரம், மொழி, பொருளாதார நிலை கொண்ட தேசிய இனங்களின் கூட்டமைப்பில் ஒற்றைக் கல்வி முறை என்ற அயோக்கியத்தனத்தை திணித்து இந்திய அரசியல் சாசனத்தின் கூட்டாட்சி அம்சத்தினை கேலிப் பொருளாக்குகிறது. அர்த்தமில்லாத இயந்திரங்களாக குழந்தைகளை உருவாக்குவதையே இக்கல்வி முறை செய்கிறது.

புதிய கல்விக் கொள்கையை உடனடியாக நடைமுறைப்படுத்தப் போகிறோம் எனும் ஆணவப் பேச்சுக்கு மத்திய அமைச்சர் மன்னிப்பு கோர வேண்டும். புதிய கல்விக் கொள்கைக்கு எதிரான தனது நிலைப்பாட்டை உடனடியாக பகிரங்கமாக அறிவித்து, மோடி அரசின் சர்வாதிகாரத்திற்கு எதிரான போராட்டத்தினை தமிழ்நாடு அரசு துவங்க வேண்டும். படிப்படியாக நுழைவுத்தேர்வுகள், பொதுத்தேர்வுகள் போன்றவற்றைக் கொண்டு வருவதன் மூலம் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்தி தமிழ்நாட்டின் அதிமுக அரசு மோடி அரசுக்கு சேவகம் செய்ய நினைத்தால், வரும் காலங்களில் அதிமுக அரசு அடியோடு தூக்கியெறிப்படும் என்ற நிலையை மக்கள் அதிமுக-விற்கு உணர்த்த வேண்டும்.

புதிய தேசிய கல்விக் கொள்கையை உடனடியாக திரும்பப் பெறு!

**மே பதினேழு இயக்கம்**
6 மே 2020



## இசுலாமியரும், தமிழீழப் போராட்டமும்

## தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில்

# இசுலாமியச் சிக்கல்

சிங்கள அரசின் சிதைக்கும் திட்டம் வெற்றியடையும் வரை தமிழீழத் தேசிய எழுச்சியில் முஸ்லீம்களின் பங்கு மிக முக்கியமானதாக இருந்து வந்திருக்கிறது. தமிழீழ நிலத்தைப் பங்குபோட ஆரம்பிக்கத் தடையாக இருந்த தமிழீழ மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்க தீட்டப்பட்ட திட்டத்தில் முதல் குறியாக முஸ்லீம்கள் அமைந்தார்கள். தமிழீழத்தின் வடக்கு கிழக்குப் பகுதியில் கணிசமான மக்கள் தொகையில் இசுலாமியத் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஒன்றுபட்ட தமிழ்த் தேசிய இனமாகத் தமிழீழத் தமிழர்கள் எழுச்சி பெறுவது சிங்களப் பேரினவாதத்திற்கு பேரிடியாக அமையுமென்று பல்வேறு சதிகள் அரங்கேற்றப்பட்டு தமிழ் மக்கள் பிரிக்கப்பட்டனர். இவ்வாறு பிரிக்கப்படுவது சாதி, மத, பிராந்திய ரீதியானதாகச் சிங்கள ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இசுலாமியத் தமிழர்கள் பிற சைவ–கிருத்துவ தமிழர்களைப் போல மதரீதியாக இசுலாத்தைத் தழுவியவர்கள். இனரீதியாகத் தமிழர்களாகவும், மொழிவழி தமிழ்த்தேசிய மக்களாகவும் இரண்டறக் கலந்தவர்கள். தமிழ் மொழி உரிமைப் போராட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்று சிறை சென்றவர்கள் இசுலாமியத் தமிழர்களே. வேறெவரையும் விட, தமிழை உறுதியாகப் பற்றி நிற்பவர்கள் இவர்களே. இவர்கள் அரபு மூலத்தைக் கொண்டவர்கள் எனும் பிரச்சாரம் வலுக்கொள்வதற்குரிய ஆதாரங்களை பண்பாட்டியல் ரீதியாகவோ, மொழி ஆளுமை வழியாகவோ நாம் காண இயலாது. தமிழின பண்பாட்டு கூறுகளை உள்ளடக்கிய வாழ்விற்குரியவர்களாகவே இவர்களது வாழ்க்கை இருந்து வருகிறது. அரபு மொழி இவர்களது தொடர்பு மொழியாகவோ, பயன்பாட்டு மொழியாகவோ, கல்வி மொழியாகவோ இருந்ததில்லை.

தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்கவும், தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைக்கவும், தமிழீழத் தமிழர்களை இவ்வாறு பிரித்தாளும் சூழ்ச்சியை சிங்களம் மேற்கொண்டது. மலையகத் தமிழர்களுக்கான குடியுரிமையை பறித்துக் கொண்டதன் மூலம் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைப் பெருமளவில் குறைத்தது. இவ்வாறு செய்ததன் மூலம் மலையகத் தமிழர்களின் தொழிலாளர் உரிமை, அரசியல் உரிமை, போராட்ட பங்கேற்பு ஆகியவை மறுக்கப்பட்டன. பெருமளவிலான மலையகத் தமிழர்களைச் சூழ்ச்சியின் வழியாகவும், தமிழின விரோத இந்தியப் பார்ப்பனிய வன்மத்தாலும் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். இவ்வாறு தமிழர்களின் மக்கள் தொகையும், அரசியல் வலிமையும் குறைக்கப்பட்டன.

சிங்களப் பேரினவாதத்தின் முதன்மைத் திட்டமென்பது தமிழர்களை பிரித்து, பின்னர் மக்கள் தொகையினை குறைத்து அதன் மூலம் அவர்களது அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து பலவீனமடையவைப்பது. இதனூடாக தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து சிங்களமயமாக்குவது. இந்த சதியினை நடைமுறைப்படுத்த பல்வேறு யுக்திகளைக் கையாண்டார்கள். இதனடிப்படையில் மலையகத் தமிழர்கள், இசுலாமியத் தமிழர்கள் என பிரித்து வலிமையைக் குறைக்கச் செய்தனர். தமிழர்களுக்கிடையே ஒற்றுமையின்மையை உருவாக்க முயன்று வெற்றியும் கண்டனர். இந்தியாவில் ஆரியப் பார்ப்பனியம் எவ்வாறு தமிழ்த் தேசிய மக்களைச் சாதியாகப் பிரித்துக் கொண்டிருக்கிறதோ இதற்கு ஒப்பான யுக்திகளை பல்வேறு முனைகளில் நகர்த்தியது சிங்களப் பேரினவாதம். அடிப்படையில் சிங்கள பௌத்த பேரினவாதம் ஆரியப் பார்ப்பனிய சார்பின் நீட்சியாகவே இலங்கையில் விரிவடைந்து அந்நிலத்தை ஆக்கிரமித்தது. இன்றும் சிங்கள மொழி எனும் ஆரிய மொழிக்குடும்பத்தினை முதன்மைப்படுத்தச் சிங்கள முயன்ற சமயங்களில் இந்தியப் பார்ப்பனீயம் கள்ள மௌனம் காத்திருக்கிறது. சிங்களம் ஆரிய மொழிக்குடும்பமாக தமிழின் மீது தனது வன்மத்தைத் தீர்த்துக் கொள்ளுகிறது. தமிழர்களின் மதநம்பிக்கை என்பது அவர்கள் பிரித்தாள்வதற்குரிய கருவியாகவே பயன்படுத்தப்பட்டது.




## தமிழீழ இசுலாமியப் பகுதிகளில் சிங்களமயமாக்கல்.

இசுரேலின் சியோனிசம் பாலஸ்தீன மக்களிடமிருந்து நிலத்தை அபகரிக்க மேற்கொண்ட யுக்திகளைச் சிங்களமும் மேற்கொண்டது. இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்த இறுதிக் காலத்தில் 1946இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும், சிங்கள ஆட்சியாளர்கள் கையில் அதிகாரம் சென்ற பின்னரான மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும் கவனித்தால் சிங்கள சதிகள் எளிதில் புரியும். 1946இன் மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி கிழக்குப்பகுதியில் 39.0 வீதம் இசுலாமியத் தமிழர்கள் இருந்தார்கள். இதன் பின்னர் 1981இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கின் படி கிழக்கு மாகாணத்தில் இசுலாமியத் தமிழர் மக்கள் தொகை 32.2 வீதம் குறைந்தது. இதே காலத்தில், இதே கிழக்குப் பகுதியில் 9.0 வீதமாக இருந்த சிங்களர் மக்கள் தொகை 1981இல் 24.9 சதமாக உயர்ந்தது. அதாவது இசுலாமியத் தமிழர் மக்கள் தொகை வளர்ச்சி பெறாமல் மிகவும் குறைந்தது. ஆனால் சிங்களர் மக்கள் தொகை அபரிமிதமாக வளர்ந்தது. இதே போல மேற்கு தமிழீழ மாவட்டமான மன்னாரில் இதே காலகட்டத்தில் இசுலாமியத் தமிழரின் மக்கள் தொகை 7 சதம் குறைந்தது. சிங்களர் மக்கள் தொகை 5 சதம் அதிகரித்தது.

மிகமுக்கியமாக புத்தளம் மாவட்டத்தைத் தமிழர்கள் சிங்களத்திடம் முழுமையாக இழந்தார்கள். இந்த மாவட்டத்தில் 1921இல் 33 சதமாக இசுலாமியத் தமிழர், 28 சதம் இதர தமிழர்கள் வாழ்ந்தார்கள். அதாவது 61 சதமாக தமிழர்கள் வாழ்ந்தார்கள். 40 சதமாக சிங்களர்கள் வாழ்ந்தார்கள். இந்நிலையில் இம்மாவட்டத்தை கைப்பற்றும் முயற்சியில் சிங்கள ஆட்சியாளர்கள் 'சிலாபம்' எனும் சிங்களர் அதிகம் வாழும் மாவட்டத்தை புத்தளம் மாவட்டத்தோடு இணைத்தார்கள். இதனால் 'புத்தளம்' தனது தமிழ்ப் பெரும்பான்மையை இழக்க ஆரம்பித்தது. மிக முக்கியமாக இசுலாமிய தமிழரின் வியாபார கேந்திரப்பகுதிகள் பிடுங்கப்பட்டு சிங்களர் வசமாகியது. தமிழ்நாட்டில் கோவை நகரின் வணிகப்பகுதியில் இருந்த இசுலாமியத் தமிழர்கள் 1998 கோவை கலவரத்தின் போது ஒடுக்குமுறைக்குள்ளாகி, பின்னர் இப்பகுதிகள் குஜராத்தி-ராஜஸ்தானி மார்வாடிகளின் கைக்குக் கொண்டுபோய் சேர்த்ததை ஆரிய-பார்ப்பனிய பாஜக கூட்டம் செய்ததற்கு ஒப்பானது இந்நடவடிக்கை. ஆனால், இந்நிகழ்ச்சிகள் 1950களிலேயே சிங்கள ஆட்சியாளர்களாலும், சிங்கள இனவெறியர்களாலும் நடத்தப்பட்டது. சிங்களம் இது போன்ற மாவட்ட உருவாக்கம், எல்லை மாற்றம், ஒன்றிணைப்பு எனச் செய்தது அனைத்துமே சிங்களமயமாக்கலுக்காகவே செய்யப்பட்டது.

இசுலாமியத் தமிழர் தலைவர்கள் 'புத்தளம்' பற்றியான அக்கறையை மேற்கொள்ளாத காரணத்தினால் அம்மாவட்டம் சிங்களர் கைகளுக்குச் சென்றது. பின்னர் இதே கதி 'அம்பாறை' மாவட்டத்திற்கும் ஏற்பட்டது. இவ்வாறு நில ஆக்கிரமிப்பு செய்யவே தமிழ்த்தேசிய இனத்தை மதமாக சிங்களம் உடைக்க முனைந்தது. இதே சதிகளையே தமிழ்நாட்டிலும் ஆர்.எஸ்.எஸ் ஆரிய இனவெறி கும்பல் செயல்படுத்த முனைகிறது. இந்த சதிகள் புரிந்த காரணத்தினாலேயே மே17 இயக்கம் இக்கும்பலின் அரசியலை எதிர்த்து தமிழ்த்தேசிய ஒற்றுமைக்காகப் போராடுகிறது. இல்லையெனில் பாலஸ்தீனத்திலிருந்து விரட்டப்பட்ட பாலஸ்தீனியர்களைப் போல தமிழர்கள் தமிழ்நாட்டில் அனாதைகளாக்கப்படுவார்கள்.

பாலஸ்தீனத்தில் 'மேற்குகரை'ப் பகுதி நிலங்கள் வளமான பகுதி. இந்நிலங்கள் இசுரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டன. இதைப் போலவே தமிழீழத்தின் வளமான பகுதிகள் சிங்களர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. தமிழீழத்தின் வளமான கிழக்குப்பகுதிகள், கடற்கரைப்பகுதிகள் இவ்வாறே சிங்களத்தாலும் ஆக்கிரமிப்பிற்குள்ளாகின.

நில அபிவிருத்தித் திட்டம், புனிதநகர்த்திட்டம், உல்லாச பயணத்துறை அபிவிருத்தித் திட்டம், கரும்புப் பயிற்செய்கைத் திட்டம் என்கிற திட்டங்களின் அடிப்படையில் தமிழர் நிலங்கள் கைப்பற்றப்பட்டன. மறுமுனையில் பாதுகாப்புத் திட்டமெனும் பெயரில் தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இதுவரை இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்ட தமிழர்களுக்கு நட்டஈடு, மாற்று நிலமோ தரப்பட்டதில்லை. நிலத்தை இழந்த இனம் ஒட்டுமொத்த அடையாளத்தையும், வாழ்வாதாரத்தையும் இழந்து ஏதலிகளாகவே சொந்த மண்ணில் மாற்றப்படுகிறார்கள். இந்த சதித் திட்டத்தை சிங்களப் பேரினவாத அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, "இலங்கையில் தமிழர்களுக்கு தங்கள் சொந்தப்பகுதியென்று ஒன்று கிடையாது. தமிழர்கள் தங்கள் சொந்தப்பகுதியென்று உரிமைக் கொண்டாடுவதை நிறுத்த வடக்குக்கிழக்கு மாகாணங்களில் 3 லட்சம் சிங்களவர்களை-அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளுடன் குடியேற்றுவேன்" என்று பகிரங்கமாகவே அறிவித்தார்.

இத்திட்டங்களால் பாதிக்கப்பட்டது தமிழ் இசுலாமிய ஏழை எளிய மக்கள். இவர்களே பேரினவாதத்தினால் நேரடியான பாதிப்பிற்குள்ளானார்கள்.

இப்படியாகப் பாதிப்பிற்குள்ளானவர்களின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் கருத்துக்கள் சிங்கள ஆட்சியாளர்களிடத்தில் நெருக்கமாக இருந்த அதிகாரவர்க்க, பெரும் பணக்கார கொழும்பு நகரில் வாழ்ந்த இசுலாமியர்களின் வழியே பரப்பப்பட்டன. தமிழீழ ஒன்றிணைப்பும், விடுதலையும் நடந்தால் இசுலாமியத் தமிழர்கள் சிறுபான்மையினராகிப் பாதிக்கப்படுவர் என்று திட்டமிடப்பட்ட பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. உண்மையில் சொல்வதெனில், தமிழர்கள் ஒற்றுமை கொழும்பு நகரத்தில் வாழ்ந்த அதிகாரவர்க்கம், பெரும் தொழில்களிலிருந்த பணக்காரர்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. இதனால் இந்நகரில் வாழ்ந்த சைவ, இசுலாமியத் தமிழ்ச் செல்வச்சீமான்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு ஒத்துழைத்தார்கள். இந்தக் கூட்டமே சிங்களப் பேரினவாதம் வலிமை பெறுவதற்கான கருங்காலிகளாக மாறினார்கள் என்பதை தற்போது வரலாறு நிரூபித்திருக்கிறது.

## தமிழ் இசுலாமியரை வஞ்சித்த சிங்களம்

தமிழீழ விடுதலைக் கோரிக்கை எழுச்சிபெருவதற்கு முன்பே இசுலாமியத் தமிழர்கள் சிங்களர்களால் வஞ்சிக்கப்பட்டனர். இதற்கு முன்னதாக சிங்களம் ஒரு சதியைச் செய்தது. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டத்தை 1963இல் உருவாக்கியது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இசுலாமியர் அதிகம் வாழ்ந்த பகுதிகளை உள்ளடக்கியதாக புதிய மாவட்டத்தை இசுலாமியத் தமிழர்களுக்காக உருவாக்குவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. இப்பிரிவினை மூலம் தமக்கு நன்மை கிடைக்குமென அப்பாவி இசுலாமியத் தமிழரும் நம்பினர். இவ்வாறு பிரிக்கப்பட்ட இசுலாமிய தமிழர் அதிகமுள்ளதாக அறியப்பட்ட அம்பாறை மாவட்டம் 18 ஆண்டுகளுக்குப் பின்னர் சிங்களர் பெரும்பான்மையினர் வாழும் மாவட்டமாக அறியப்படுகிறது. அதாவது இந்த மாவட்டப் பிரிவினைக்குப் பின்னர் சிங்களக்குடியேற்றங்களின் மூலமாக அம்பாறை மாவட்டம் சிங்கள்பெரும்பான்மை வாழும் மாவட்டங்களில் ஒன்றாக மாற்றப்பட்டுவிட்டது. சிங்களர் எண்ணிக்கை 29 சதத்திலிருந்து 37 சதமாக உயர்த்தப்பட்டுவிட்டது. 46 வீதமாக இருந்த இசுலாமியத் தமிழர்கள் 41.5 சதமாக குறைக்கப்பட்டார்கள். தனிமாவட்டமாகப் பிரித்தால் இசுலாமிய தமிழரின் தனித்தன்மை பாதுகாக்கப்படும் என செய்யப்பட்ட பிரச்சாரம் என்னவானது? இவ்வாறு நிலத்தை ஆக்கிரமிக்கும் அரசியலை மிகச்சூழ்ச்சிகரமாக சிங்களம் செய்து வந்தது. இப்போது இந்த அம்பாறை மாவட்டம் 'திகாமடுல்ல' எனச் சிங்களப் பெயர்மாற்றம் பெற்றுவிட்டது. அம்மாவட்டத்தின் ஆட்சித்தலைவராக, மாவட்ட அமைச்சராகச் சிங்களர்களே அமர்த்தப்படுகின்றனர். 'திகவாபி புனித நகர்த்திட்டம்' எனும் திட்டத்தின் பெயரால் தமிழ் இசுலாமியருக்குச் சொந்தமான புராதன நிலமான 10,000 ஏக்கருக்கும் அதிகமான நிலம் பிடுங்கப்பட்டு சிங்களர்களிடம் கொடுக்கப்பட்டது.

1947இன் தேர்தலின் போது 2394 சிங்கள வாக்காளர்களை மட்டுமே கொண்டிருந்த அம்பாறை மாவட்டம் 1982இல் 78,378 சிங்கள வாக்காளர்களைப் பெற்றது. தமிழ் இசுலாமியரின் வாக்காளர் சதவீதம் நான்கு வருடத்திற்கு 9 சதவீதமாக இருந்தது. ஆனால், சிங்கள வாக்காளர் சதவீதம் 500 வீதமாக உயர்ந்தது. வெறும் 3000 நபர்களாக இருந்த சிங்களர் எண்ணிக்கை 146,371 ஆக மாறியது. இவ்வாறு 30 ஆண்டுகளுக்கும் இசுலாமியத் தமிழர்கள் தங்கள் நிலங்களை சிங்களவர்களிடம் இழந்தார்கள். ஆனால், இதைப் பற்றி இசுலாமியத் தமிழர்கள் கவனம் கொள்ளாமல் தமிழீழ விடுதலைக்குச் சம்பந்தப்படாதவர்களாகத் திட்டமிட்டு மாற்றப்படும் பணியைச் சிங்களம் தீவிரப்படுத்தியது.

இலங்கையில் 60க்கும் மேற்பட்ட தேர்தல் தொகுதியில் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்கும் ஆற்றலாக இருந்ததாக நம்பிக்கொண்டிருந்த இசுலாமியரின் வலிமையை வேறு விதமாக இலங்கை சிங்களப்பேரினவாதம் முடக்கியது.

இலங்கையின் அதிபர் ஜெயவர்த்தனா புதிய தேர்தல் விதிகளைக் கொண்டு வந்தார். இதன் படி போட்டியிடும் கட்சிகள் பதிவாகும் மொத்த வாக்குகளில் 12.5 சதம் வாக்குகளைப் பெற இயலாத கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலக்கப்படும். தமிழீழத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டத்தில் மட்டுமே 10 சதத்திற்கு அதிகமாக இசுலாமிய தமிழர்கள் வாழ்கிறார்கள். அப்படியெனில், இம்மாவட்டங்கள் தவிர்த்த வேறெந்த மாவட்டத்திலும் இசுலாமியத் தமிழர்கள் தேர்தலில் தகுதியற்றவர்களாக்கப்படுகிறார்கள். இதன்மூலம், இசுலாமியத் தமிழர்கள் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளை நம்பியே தேர்தல் பிரதிநிதித்துவம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். எனவே, இசுலாமியத்

தமிழரின் வாக்குகளுக்கான ஆற்றலை சிங்களம் சூழ்ச்சிகரமாகச் சிதைத்துவிட்டது. ஏற்கனவே இம்மாதிரியான நெருக்கடிக்குள்ளாகிய மலையகத் தமிழர்களைப் போலவே, இசுலாமியத் தமிழர்களும் சிங்களப்பெரும்பான்மையை நம்பியே தங்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டு அரசியல் அநாதைகளாக்கப்பட்டனர். வாக்குரிமை இருந்தும் தமக்கான பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்ப இயலாதவர்களாக மாற்றப்பட்டது தான் சிங்களம் இசுலாமியத் தமிழர்களுக்குச் செய்த மாபெரும் அநீதி.

வளைகுடா நாடுகளில் இராஜதந்திர ரீதியாக தங்களது உறவுகளை மேம்படுத்துவதற்காக மட்டுமே இசுலாமியர்களை தமது ஆட்சியில் அமைச்சர்களாக்கிக் கொண்டனர். அதுவும் தங்களது பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கிடைக்கவேண்டுமெனில், இசுலாமியப் பிரதிநிதிகளைத் தூக்கி எறிந்தனர். உதாரணமாக பெருவளை பாராளுமன்ற உறுப்பினரான ஜனாப். பாக்கீன் மக்காரிடமிருந்த சபாநாயகர் பதவியைப் பறித்து சிங்களரும் ஊழல்வாதியுமான சேனநாயக்காவிடம் கொடுத்தது. இந்த பாக்கீன் மக்கார் தேர்தல் காலத்தில், "முஸ்லீம்கள் சிங்களவர்களின் வழித்தோன்றல்கள்" என்று பொது மேடைகளில் முழங்கியவர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இப்படியான எவ்வித நெருக்கடியும் சந்திக்காமல் பிரதிநிதித்துவத்துடன் இசுலாமியத் தமிழர்கள் வாழுவது தமிழீழப்பகுதியே. தமிழீழமே இசுலாமியர்களுக்குப் பாதுகாப்பானது என்பதை மக்கள் தொகை விகிதங்கள் தெளிவாக விளக்கிய பொழுதிலும், தமிழ்த்தேசிய கருத்தியலுக்கு எதிரான கருத்துக்கள் இசுலாமியரிடத்தில் திட்டமிட்டு பரப்பப்பட்டன. அதாவது ஒட்டு மொத்த இலங்கையில் 1982 வரையில் இசுலாமியத் தமிழர்களின் மக்கள் தொகை என்பது 7.1 சதம் தான். ஆனால், தமிழீழத்திற்குள்ளாக இசுலாமியத் தமிழர்களின் வீதம் என்பது 28 வீதமாகும். இப்பிரதிநிதித்துவத்திலிருந்து இசுலாமியத் தமிழரைப் பிரித்தெடுக்கும் சிங்களத்தின் முயற்சியை வெற்றிகரமாகச் சாத்தியப்படுத்தியது இசுரேலிய பயங்கரவாத அரசு.

## இசுலாமியரின் வாழ்வாதாரத்தை–வணிகத்தைச் சிதைத்த சிங்களப் பேரினவாதம்

தமிழ் இசுலாமியரின் வணிகம், வாழ்வாதாரத்தை முற்றிலுமாக சிதைப்பது சிங்களப்பேரினவாதத்தின் திட்டத்தில் ஒரு பகுதியாகவே செயல்படுத்தப்பட்டது. நிலங்கள் அபகரிப்பு, தேர்தல் பங்கேற்பு குறைப்பு, பாராளுமன்ற பிரதிநிதித்துவ மறுப்பு என்பதுடன் வணிக–வாழ்வாதார சிதைப்பு இணைந்து நடத்தப்பட்டது.

தமிழ் இசுலாமியர்கள் செய்துகொண்டிருந்த மீன்பிடித்தலைச் சிங்கள மீனவர்கள் ஆக்கிரமிக்க ஆரம்பித்தனர். அவ்வப்போது வந்த சிங்களவர்கள், அரசின் ஊக்குவிப்பால் நிரந்தரமாகத் தங்கி தொழில் செய்து இசுலாமியரை ஒதுக்க ஆரம்பித்து ஆக்கிரமித்துவிட்டனர். வணிகக்கடன்கள், வேலைவாய்ப்பு, பதவி உயர்வு, நிவாரணம் ஆகியவை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன.

அனைத்து மட்டங்களிலும் இசுலாமியர்கள் தமிழர்கள் என்கிற காரணத்தினால் இனவெறித்தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இதே போல புத்தளம் நகரில் பேருந்து நிலையத்தில் முழுவதுமாக வணிகம் செய்தவர்கள் தமிழ் இசுலாமியர்கள். ஆனால், சிங்கள அரசு புதியதாக பேருந்து நிலையத்தை நகருக்கு வெளியே உருவாக்கியது. இந்நிலையத்தில் புதியதாகக் கட்டப்பட்ட வணிகக்கட்டிடங்களில் சிங்கள வணிகர்களை அமர்த்தியது. பின்னர், பழைய பேருந்து நிலையத்தை மூடி தமிழ் இசுலாமியர்கள் வணிகத்தைச் சீரழித்தது. இந்த கொடுமையை எதிர்த்து இசுலாமியத் தமிழர்கள் போராட்டத்தைத் துவக்கினர்.

புத்தளம் நகரின் வணிகத்தை இசுலாமியரிடமிருந்து சூழ்ச்சியில் பறித்துக் கொண்ட சிங்களம் இதே யுக்திகளை இசுலாமியரின் வணிக நிலையங்கள் மீது நடத்தியது. உதாரணமாக, இலங்கையின் இரத்தினக்கல் வணிகம் இசுலாமியத் தமிழர்கள் உயர்ந்து விளங்கினார்கள். இதைச் சிங்களர் கைகளுக்கு மாற்ற ஆட்சியாளர்கள் திட்டமிட்டனர். ஏற்கனவே தமிழ் இசுலாமியர் கைகளிலிருந்த இரத்தனக்கல் சுரங்கப் பகுதிகள் கைவிடப்பட்டன. புதிய இடங்களில் இரத்தினக்கல் சுரங்கங்களை ஏற்படுத்தியது சிங்களம். இதன் மூலமாகச் சிங்களவர்கள் பெரும்பான்மையாகக் கொண்ட இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் நிறுவனத்தினை உருவாக்கியது.

## சிங்களத்தின் பயங்கரவாத தாக்குதலும், சூழ்ச்சியும்.

இசுலாமியத் தமிழருக்கு எதிரான சிங்களத்தின் வன்முறை புதியதாக தோன்றியதல்ல. 1915ஆம் ஆண்டே தமிழ் இசுலாமியர்கள் சிங்களப்பகுதிகளில் தாக்கப்பட்டனர். அன்றிலிருந்து தொடர்ந்து இசுலாமியத் தமிழர்கள் தாக்கப்படுவது நிகழ்ந்து வருகிறது.

புத்தளம் பேருந்து நிலையத்தினை மாற்றியதால் வணிகத்தை இழந்த இசுலாமியத்தமிழர்கள் போராட்டத்தினை துவக்கினார்கள். இந்த போராட்டத்திற்கு அணியமான இசுலாமியத்தமிழர்கள் புத்தளம் பெரிய பள்ளிவாசலில் திரள ஆரம்பித்தார்கள். இப்பள்ளி வாசலுக்குள்ளேயே நுழைந்து 1976 பிப்ரவரி 2இல் ஏழு இசுலாமியத் தமிழர்களை சுட்டுக்கொலை செய்தனர். இதைச் செய்த சிங்கள காவல் அதிகாரிகளான 'டீமெல்', 'எட்வர்ட்' ஆகியோருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இந்தப் படுகொலையை அடுத்து புத்த பிக்கு ஒருவன் தலைமையில் காவலர்கள், சிங்களக் காடையர்கள் இணைந்து இசுலாமியத் தமிழர்களின் வீடுகள், கடைகளைச் சூறையாடினர். இதில் 271 வீடுகள் கொளுத்தப்பட்டன, 44 கடைகள் சூறையாடப்பட்டன, இருவர் படுகொலை செய்யப்பட்டனர்.

1980ஆம் ஆண்டு சனவரி மாதம் 21ம் தேதியில் கொழும்பு கொம்பனித்தெருவில் இருக்கும் பள்ளிவாசலில் தொழுகை நடத்தியவர்கள் மீது சிங்கள காவல்துறையினர் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் முகமது ஹுசேன், ஜப்பார் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். 1982ஆம் ஆண்டில் காலி நகரிலும் மற்றும் அதனைச் சுற்றி இருக்கும் 15 கிராமங்களில் சிங்கள இனவெறியர்கள் தாக்குதல்

நடத்தி இசுலாமியத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் பயங்கரவாதத்தின் அடிப்படையிலிருந்தது இசுலாமிய எதிர்ப்பு மனநிலை என்பதை விட தமிழின விரோத இனவெறியே இப்படுகொலைக்குக் காரணம் என்பதைப் பட்டவர்த்தனமாக இந்நிகழ்ச்சிகள் நமக்கு தெரிவிக்கின்றன. அடிப்படையில் சிங்கள இனவெறி தமிழர்களுக்கு எதிரான இனவெறியே அன்றி, பிற மதத்திற்கு எதிரான வெறுப்பல்ல.

தமிழ்ப் போராளிகளை ஒழித்துக்கட்டச் சர்வதேச பயங்கரவாதிகளான மொசாட் கூலிப்படையை இசுலாமிய தமிழர்களின் எதிர்ப்பிற்கும் விரோதமாகச் சிங்களம் கொண்டுவந்து இறக்கியது. இந்த முயற்சியை பாலஸ்தீன விடுதலை இயக்கம் கடுமையாக எதிர்த்தது. லிபியா, ஜோர்டான், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தன. ஆனால், இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை இலங்கை அரசு. இதைக் கண்டித்து இசுலாமியத் தமிழர்கள் போராடினார்கள். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய இசுலாமியத் தமிழர்கள் மீது வாழைச்சேனை, சாந்தமருது, நிந்தாவூர், காத்தான்குடி போன்ற இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஊடக தணிக்கையையும் செய்து மொசாட் வருகை மக்களிடம் சென்று சேராத வண்ணம் தடுத்தனர்.

இந்த மொசாட் பயங்கரவாத படையின் பங்கேற்பு பின்னர் இலங்கையில் நிகழ்ந்த பல்வேறு பயங்கரவாத நிகழ்வுகளுக்கு அடித்தளமாகியது. தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்குப் பகுதியை முழுமையாக இராணுவமயமாக மாற்றும் சமயத்தில் தமிழீழ மக்களிடம் இருக்கும் ஒற்றுமையானது சிங்களப் பேரினவாதத்திற்கு பெரும் தொல்லையெனக் கருதியது இலங்கை அரசு. இராணுவ ஆக்கிரமிப்பின் ஊடாக நில அபகரிப்புப்பணியை தீவிரப்படுத்த முடியும். இதை எளிமையாக சாத்தியப்படுத்த வேண்டுமெனில் தமிழீழ மக்களை மதரீதியாக உடைக்கப்பட வேண்டுமெனும் சிங்கள சதி கிழக்குப்பகுதியில் வேர்விட இசுரேலின் மொசாட் பயிற்சி பேருதவி செய்தது. இதை பின்னர் வரும் தொடர் கட்டுரையில் விரிவாக காண்போம். அரசியல் கூர்மையடையாத எந்த ஒரு இனமும், அடக்குமுறையை எதிர்கொண்டு வெற்றி கொள்ள இயலாது என்பதை இப்பிளவு அரசியல் சூழ்ச்சிகள் நமக்குச் சொல்லித்தருகின்றன. இதே யுக்தி முறைகளைத் தமிழ்நாட்டிலும் இந்துத்துவ பார்ப்பனீய ஆற்றல்கள் செயல்படுத்த முனைகின்றன. இதை தமிழீழத்திலும் தீவிரப்படுத்தியுள்ளன. இந்த சதிகளைக் கூர்மைப்படுத்தி, அரங்கேற்றிய சர்வதேச சதிகளை நாம் இனி வரும் தொடர் கட்டுரைகளின் வழியே புரிந்து கொள்வோம். தமிழீழப் போராட்டம் கூர்மையடைவதற்கு முன் இசுலாமியத் தமிழர்களுக்கு நிகழ்ந்த இனவெறித்தாக்குதலைப் பற்றி இக்கட்டுரையில் மிகச்சுருக்கமாக விவரித்திருந்தோம். இனவிடுதலைப் போர் தீவிரமடைந்திருந்த காலத்தில் மக்களைப் பிரிக்கும் சதிகள் எவ்வாறு நடத்தப்பெற்றன என்பதை இனிவரும் கட்டுரை தொடர்களில் பார்க்கலாம். ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

## ஈரானில் சிக்கி தவிக்கும் 700க்கும் அதிகமான தமிழக மீனவர்களை உடனடியாக மீட்டிடு!

### மத்திய மாநில அரசுகளை மே17 இயக்கம் வலியுறுத்தல்!

– 7 மே 2020





தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 42கிராமத்தை சேர்ந்த 700-க்கும் அதிகமான மீனவர்கள் பல்வேறு தேதிகளில் மீன்பிடிக்க சென்றவர்கள் சொந்த ஊருக்கு திரும்ப முடியாமல் ஈரானின் பல்வேறு தீவுகளில் சிக்கித் தவித்து வருகிறார்கள். இவர்களுக்கு தேவையான எந்த அடிப்படை வசதியையும் பலமுறை இந்திய அரசிடம் கேட்டும் இதுவரை இந்திய அரசு செய்யவில்லை என்று அவர்கள் வருத்தம் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே ஈரானில் சிக்கித் தவிக்கும் 700க்கும் அதிகமான தமிழக மீனவர்களை மத்திய மாநில அரசுகள் உடனடியாக மீட்டு சொந்த ஊருக்க்கு அழைத்து வரும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

தொடர்புக்கு
ஆஸ்கர்: 989917062985
ப்றவியாண்ஸ்: 989055933556

# கொரோனா பேரிடர்
# நிவாரணப் பணியில் மே 17 இயக்கம்








**05 மே 2020:** இந்த கொரோனா ஊரடங்கால் பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்ட இராணி அன்னா நகர், அசோக்நகரிலுள்ள புதூர், கோவிலம்பாக்கம் எம்.ஜி.ஆர்.நகர் உட்பட சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கு மே 17 இயக்கத்தின் சார்பில் தோழர்கள் உதவிகளை வழங்கினார்கள்.






**07 மே 2020:** தொடர்ச்சியாக வேலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டிருக்கிற குடும்பங்களுக்கு மே17 இயக்கம் முடிந்த உதவிகளை செய்து வருகிறது. அதன்படி வேலூர் அலமேல் ரங்கா புறத்தில் தினக்கூலி வேலைக்கு செல்வோர் மிகவும் வறுமையான கட்டத்தில் உள்ளதாக கேள்விப்பட்டோம் ஆகவே அங்கிருக்கிற 32 குடும்பத்துக்கும் அரிசி மளிகை பொருட்கள் கொடுக்கப்பட்டது. மேலும் வேலூருக்கு வடநாட்டிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முன் வந்த ஒரு குடும்பத்தார்க்கு ஒரு மாதத்துக்கு தேவையான அரிசி மளிகை பொருட்கள் கொடுக்கப்பட்டது. காட்பாடி அருகில் இருக்கும் நரிக்குறவர் களுக்கு 10 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் அரிசி கொடுக்கப்பட்டது. 07 மே 2020 அன்று மட்டும் 52 குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டது.









08 மே 2020: கொரோனா ஊரடங்கால் மிக கடுமையாக பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு மே 17 இயக்கத்தின் சார்பில் உதவிகள் செய்யப்பட்டது.





13 மே 2020: திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள தொழுநோயாளிகள் குடியிருப்பில் இருக்கும் குடும்பங்கள் இந்த ஊரடங்கால் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு மே17 இயக்கத்தின் சார்பாக தேவையான பொருட்கள் கொடுக்கப்பட்டது.



**14 மே 2020:** சென்னை எம்.ஜி.ஆர் நகர் மற்றும் ஒட்டகபாளையம் பகுதியில் இருக்கும் கந்தன் மற்றும் 60வயது முதாட்டி உஷா என்பவர்கள் இந்த ஊரடங்கால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து அவர்களுக்கு மே17 இயக்கத்தின் சார்பாக தேவையான உதவிகள் செய்யப்பட்டது.









**15 மே 2020:** ஆம்பூரில் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மே17 இயக்கம் சார்பில் உதவி செய்யப்பட்டது.

# மேரி கால்வின்

செய்தி நிறுவன அதிகாரி: **"நீ பாலஸ்தீனத்திற்குச் செல்ல வேண்டும். சிறிலங்காவிற்கு வேண்டாம்".**

செய்தியாளர்: **"ஆனால், அங்கு ஒரு பதிவு செய்யப்படாத போர் நடந்து வருகிறது. ஆகவே நான் அங்கு தான் போகவேண்டும்".**

செய்தி நிறுவன அதிகாரி: **"அங்கு ஆறு வருடங்களாக எந்த ஒரு பத்திரிக்கையாளரும் அனுமதிக்கப்படவில்லை."**

செய்தியாளர்: **"அங்கு ஆயிரக்கணக்கான குழந்தைகள் பசியில் மடிந்துகொண்டிருக்கிறார்கள்".**

செய்தி நிறுவன அதிகாரி: **"இலங்கை அரசிடம் நீ சிக்கினால் கொல்லப்படுவாய்."**

**இது** 'A Private War' திரைப்படத்தில் ஒரு செய்தி நிறுவனத்தின் உயரதிகாரிக்கும் அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் செய்தியாளருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல். செய்தி தேவைப்படும் உயரதிகாரியே 'அரசினால் கொல்லப்படுவாய்' என்று எச்சரித்தும், ஆறு வருடங்களாக எந்த ஒரு பத்திரிக்கையாளரும் அனுமதிக்கப்படாத ஈழத்தில் பதிவு செய்யப்படாமல் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டு வந்த இனப்படுகொலையினைப் பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் 'மேரி கால்வினைப்' பற்றியான படம்தான் 'A Private War'.



செசன்யா, கொசோவோ, சியரா லியோன், ஜிம்பாப்வே, கிழக்கு தைமூர், ஈழம், சிரியா என்று பல்வேறு இடங்களில் போர்க்களச் செய்தியாளராக இருந்த மேரி கால்வின் தமிழீழ இனப்படுகொலையின் முக்கிய சாட்சி!

மேரி கால்வின் ஒரு அமேரிக்கர்; பிரித்தானியச் செய்தி இதழில் பணிபுரிந்து வந்தவர். லண்டனில் அவர் பெற்ற சில தொடர்புகளின் மூலம் தான் 2001 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்குத் தெரியாமல், விடுதலைப் புலிகள் துணையுடன், வன்னியில் செய்தியினைச் சேகரிக்கக் கிளம்பினார் மேரி.

வன்னியின் கிராமங்களில் சுற்றித்திரிந்து தமிழ் மக்களின் மீது பேரினவாத இலங்கை அரசு வெளியில் தெரியாமல் நடத்தி வந்த போர், பொருளாதாரத் தடை, ஐநா சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் வழங்கிய உணவு மற்றும் மருந்து போன்ற நிவாரணப் பொருள்கள் தடுப்பு பற்றியான செய்தியினை பல்வேறு நெருக்கடிகளுக்கு நடுவே பல மைல்கள் தூரம் நடந்தே சேகரித்தார், மேரி. காட்டு விலங்குகள், காட்டு மரங்களின் முள்கள், இடுப்பு வரை நிறைந்திருக்கும் நீர், சேறு, விவசாய நிலங்கள் என்று இலங்கை அரசின் பிடியில் சிக்காமல் இருக்க அவர் மேற்கொண்ட நீண்ட பயணம் நிச்சயம் இனிமையானதாக இருந்திருக்காது. ஒரு போர்க்களச் செய்தியாளராக அது அவருக்குப் பழகியும் போயிருக்கலாம். செய்தியினைச் சேகரித்த பின் இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிக்குச் சென்று அதன் பின் இலங்கையை விட்டு வெளியேறுவது தான் திட்டம். ஆனால், அதன் பின் நடந்த சம்பவம் மேரியின் வாழ்நாள் அடையாளமாகியது.

வன்னியில் இருந்து இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிக்குச் செல்லும் வழியில் திடீரென இலங்கை இராணுவம் துப்பாக்கியினால் சுடத்தொடங்கியது. மேரி கால்வினைப் பாதுகாப்பாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிக்குள் விட்டுவரும் வேலையில் ஈடுபட்ட புலிகள் அன்றைக்கு அந்தப் பகுதியின் வழியே செல்வது பாதுகாப்பானது என்று வந்த தகவலின் அடிப்படையிலேயே மேரி கால்வினை அழைத்துச் சென்றனர். துப்பாக்கிச்சூட்டில் இருந்து தப்பிக்க மேரி உள்ளிட்ட அனைவரும் தரையோடு தரையாகப் படுத்தனர்.

அதன் பின் ஏப்ரல் 16 (2001) ஆம் தேதி நடந்த சம்பவங்கள் மேரியின் வார்த்தைகளில்

"நாங்கள் தரையில் பதுங்கிய போது யாரோ ஒருவர் (பாதுகாப்புக்காக உடன் வந்த புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்) தவழ்ந்து என் மீது ஏறினார். என்னுடைய பாதுகாப்புக்காகவா பயத்தினாலா என்று தெரியாது. அதன் பின் நான் தனியாக இருந்தேன். ஒரு மரம் 10 அடி தூரத்திலிருந்தது. ஆனால், அது தூரமாக இருந்தது. துப்பாக்கிச்சூடும் நின்றபாடில்லை. இப்படி நடக்கும் என்று யாரும் யூகிக்கவில்லை. ஒரு வழியாக துப்பாக்கிச்சூடு நின்றது. இருளும் அமைதியும் சூழ்ந்தது. துப்பாக்கிச்சூட்டில் அடிபட்ட ஒரு மாட்டினைத் தவிர நான் இருந்த பக்கத்தில் இருந்து எந்த சத்தமும் வரவில்லை. யார் எங்கு இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் எல்லாம் முடிந்தது; நான் தப்பித்துவிட்டேன் என்று நினைத்தேன். ஆனால், எனக்குத் தெரியும் அது உண்மை இல்லை என்று. எங்களை அவர்கள் கண்டுகொண்டார்கள். அவர்கள் இது புலிகளின் படை என்று நினைத்து எங்களைக் கட்டாயம் பிடிக்க வருவார்கள். அது அவர்களுக்கு மகிழ்ச்சியையும் பயத்தையும் தூண்டும்.

இரண்டு படைகளில் இலங்கை ராணுவம் அதிக வீரர்கள் மற்றும் ஆயுதங்களுக்கும், கிளர்ச்சியாளர்கள் (புலிகள்) தந்திரங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்கும் பெயர்போயிருந்தார்கள். இந்த இரவில் இராணுவத்துக்குத்தான் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. நான் ஒரு முடிவினை எடுத்தாக வேண்டும். ஒன்று ஓடுவது. அல்லது அங்கேயே படுத்திருப்பது. அல்லது கத்துவது.

நான் அரைமணி நேரம் அங்கேயே படுத்திருந்தேன். எனக்கு நேர் எதிராக ஒருவர் வந்தபோது என்னுடைய வெள்ளைத்தோல் காட்டிக்கொடுத்துவிடும் என்பதால் என்னுடைய முகத்தைப் பூமியில் புதைத்துப் படுத்திருந்தேன்.

மீண்டும் அரை மைல் தொலைவில் துப்பாக்கிச்சூடு தொடர்ந்தது. (எங்களை) கண்டுபிடித்து அழிப்பதற்காக இராணுவப் படை வந்திருந்தது. சாலைகளில் இராணுவ வீரர்கள் பேசுவதையும் சிரிப்பதையும் நான் கேட்டேன். ஒரு இராணுவ வீரன் தானியங்கி ஆயுதத்தினை செலுத்தினான். அது நான் மறைந்து இருந்த இடத்துக்கு சற்றே முன்னால் வெடித்து அங்கு இருந்த பச்சை தளர்கள் என்னை மூடின.

இப்போது நான் கத்தவில்லை என்றால், என்மீது (தேடுதலின் போது) கால் இடறினால் கட்டாயமாக அவர்கள் சுடுவார்கள்.

'பத்திரிக்கையாளர்! பத்திரிக்கையாளர்! அமேரிக்கர்! யூஎஸ்ஏ!'

என் சத்தத்தைக் கண்டுகொண்ட இராணுவ வீரன் ஒருவன் என்னை நோக்கி குண்டெறிந்தான். கைதிகளாக யாரையும் கொண்டு செல்லும் இராணுவம் இல்லை அது.

வலி, சத்தம், தோல்வியோடு சேர்ந்து அது என்னைத் துளைத்தது. நான் கண்ணில் சுடப்பட்டதாக நினைத்தேன். என் கண் மற்றும் வாயிலிருந்து இரத்தம் பீரிட்டு வந்தது. நான் சாகப்போகிறேன் என்ற மிகப்பெரிய துன்பம் என்னைச் சூழ்ந்ததை உணர்ந்தேன்"

இப்படியாக குண்டடி பட்ட மேரி கால்வின், பல மணிநேர போராட்டத்துக்குப்பிறகு, இராணுவத்திடம் தான் பத்திரிக்கையாளர் தான் என்று நிரூபித்து அடிப்படை மருத்துவ உதவியினைப் பெற்றதாகச் சொல்கிறார். எப்படி இராணுவம் 'உங்கள் பக்கத்தில் இருந்து தான் முதலில் தாக்குதலைத் தொடர்ந்தார்கள்' என்று ஒத்துக்கொள்ள முயற்சி செய்தது என்றும், 'நீங்கள் தான் (இராணுவம்) தாக்குதல் நடத்தினீர்கள்; நான் இருந்த இடத்திலிருந்து (புலிகள்) எந்தவிதமான தாக்குதலையும் உங்கள் மீது நடத்தவில்லை' என்று தீர்க்கமாகத் தான் கூறியதையும் பதிவு செய்கிறார். இதில் மேரி சென்ற காலம் என்பது புலிகள் இயக்கம் யுத்தநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த காலம். எனினும், 'கைதிகளைக் கொண்டு செல்லாத' புலிகள் என்று சந்தேகப்படுபவர்களைக் கொல்லத்துடித்த இராணுவமாக இலங்கை இராணுவம் செயல்பட்டது என்பதை உலகுக்கு








▲ **மேரி கால்வின் இலங்கை இராணுவத்தால் தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பெற்ற புகைப்படங்கள். இத்தாக்குதலில் தனது இடது கண்ணை இழந்திருந்தார்..**

உணர்த்தும் சாட்சியாகிப்போனார் மேரி கால்வின். மேலும், இராணுவத்தால் விசாரணை நடத்தப்பட்ட விதத்தை வைத்து, தான் கொல்லப்படப்போவதாக எண்ணியதாகவும் பதிவிடுகிறார். அமேரிக்கராகப் பிறந்ததற்குத் தான் முதன்முதலில் மகிழ்ச்சியடைந்ததாகவும் பின்னாளில் பதிவு செய்கிறார். [அமேரிக்கர் என்பதாலேயே மேரிக்கான மருத்துவ சிகிச்சை உடனடியாக அளிக்கப்படவேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்தது].

குண்டெறியப்பட்டதில் மேரியின் உடலில் கிட்டத்தட்ட மூன்று இடங்களில் ஷெல்கள் துளைத்திருந்தன. அதில் முக்கியமாக அவரது இடது கண். எவ்வளவோ முயன்றும் அவரது கண் பார்வையினை மருத்துவர்களால் சரிசெய்ய இயலவில்லை. பின்பு, இடதுக்கண்ணில் கருப்பு நிற ஒட்டு அவரது அடையாளமாகவே ஆகிப்போனது.

"நான் ஏன் போர்க்களச் செய்தியைச் சேகரிக்கிறேன்? கடந்த வாரத்திலிருந்து [ஏப்ரல் 22, 2001-ல் எழுதுகிறார்] இந்த கேள்வி என்னிடம் அடிக்கடி கேட்கப்படுகிறது. இது பதில் சொல்வதற்குக் கடினமான கேள்வி. நான் போர்க்களச் செய்தியாளராக ஆக வேண்டும் என்று புறப்படவில்லை. என்னைப் பொறுத்தவரை தீவிரமான சூழலில், தாங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்படும் மனிதத்தைப் பற்றியே நான் எழுதுகிறேன். மேலும், அறிவிக்கப்படாத மற்றும் அறிவிக்கப்படும் போர்களில் என்ன நடக்கிறது என்பதை மக்களுக்கு சொல்வது என்பது மிகவும் முக்கியமான விடயம்.

போர் என்பது ஒரு பிரச்சாரம். உண்மைகள் இரு பக்கங்களிலும் மறைக்கப்படலாம். இலங்கை செல்லும் சர்வதேச செய்தியாளர்களிடம் இலங்கை அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக அழைத்துச் சென்றுவிடுவார்கள் என்பதற்காகக் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பாமல் வீடுகளில் வைத்திருப்பதாகச் சொல்கிறது. ஆனால், நான் நேரில் சென்ற போது, பெற்றோர்கள் அவர்களின் குழந்தைகள் பசியில் மயங்கி விழுந்துவிடக்கூடாது என்பதாலும் பள்ளிகளுக்குத் தேவையான பொருள்களை வாங்கி தருவதற்கான பணம் இல்லை என்பதாலுமே பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை என்று கூறினார்கள்" என்கிறார் மேரி கால்வின்.

மேரி கால்வின் இலங்கை இராணுவத்தால் தாக்கப்பட்டபிறகு உலகம் முழுக்க இருந்த தமிழீழ மக்கள் அவர் விரைவாக உடல்நலம் பெற வேண்டியும், நடத்தப்பட்டு வரும் இனப்படுகொலைப் பற்றி செய்தி சேகரிக்க பல்வேறு ஆபத்துகளைக் கடந்து சென்றதற்கு நன்றி தெரிவித்தும் கடிதங்களை அனுப்பினர்.

ஏப்ரல் 16, 2001 நடந்த குண்டுவெடிப்பில் பலத்த காயம்பெற்ற பிறகு பல்வேறு நிலைகளில் மேரி சிகிச்சை மேற்கொள்ளவேண்டியிருந்தது. பலகட்ட சிகிச்சைகளுக்குப் பிறகு ஜூலை 15, 2001 இல் மேரி எழுதுகிறார்.

"என்னிடம் இலங்கைக்கு சென்று வந்த பயணத்தில் ஏதேனும் உருப்படியாக இருந்ததா என்று கேட்கிறார்கள்.

ஒரு பிபிசி செய்தியாளர் சென்ற வாரம், 'சிலர் நீங்கள் அங்கு சென்றது பைத்தியக்காரத்தனமான முடிவு என்பார்கள், மேரி' என்றார். பைத்திக்காரத்தனமா? இது பதில் சொல்வதற்குச் சற்று கடினமான கேள்வி.

நிச்சயமாக, இலங்கையில் நடக்கும் போர் மறக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 83,000 குடிமக்கள் 1983-க்குப் பிறகு இறந்திருக்கிறார்கள். அவர்களது குடும்பங்களைத் தவிர இது வெளியுலகத்திற்கு தெரியாது. புலிகள் என் மூலமாகச் சொன்ன பொதுசெய்தி கூட இலங்கை அரசினால் கவனிக்கப்படவில்லை. 18 வருடங்களாக அவர்கள் நடத்திவந்த விடுதலைப் போராட்டத்தினை தன்னாட்சி உரிமை வழங்கினால் விடுவதாகத் தெரிவித்தனர். நான் அங்கிருந்து கிளம்பிய பின், இலங்கை அரசு கடைப்பிடிக்க மறுப்பதால் நான்கு மாதங்களாகப் புலிகள் கடைப்பிடித்து வந்த யுத்தநிறுத்தத்தை நிறுத்திவிட்டனர்.

மீண்டும்சண்டைதொடர்கிறது. ஆனால், என்னுடைய பயணம் ஒரு குறிப்பிட்ட அளவில் மதிப்புமிக்கது தான். நான் [இந்த பயணத்தில்] சோர்ந்தும் பயந்தும் போயிருக்கலாம். ஆனால், அங்கு இருந்த எல்லா காட்சிகளுமே என்னை பயமுறுத்தவில்லை. வன்னியில் ஒரு நகரில் அரசு முகவர் ஒருவர், புலிகளால் கட்டுப்படுத்தப்படும் பகுதியிலும் அஞ்சாமல் ஒரு தகவலைச் சொன்னார். அரசு முகவரான அவரே அரசுக்கு அஞ்சி அவர் பற்றிய தகவல்களை வெளியே சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

அவரிடம் பல்வேறு தகவல்கள் இருந்தன. எனக்குக் கிடைத்த இரண்டு முரண்பட்ட கதைகளில் உண்மையினைக் கண்டறிய நான் விரும்பினேன். ஒன்று கொலும்புவில் இருக்கும் அரசு தமிழ் மக்களுக்கு உணவுப் பொருள்களை மாதாமாதம் தருவதாகச் சொன்னது. ஆனால், நான் கிராமங்களில் சந்தித்த மக்களோ என்னிடம் அவர்களுக்கு வெகு குறைவாகவே உணவுப் பொருள்கள் வந்து சேர்வதாகச் சொன்னார்கள். அங்கிருந்த பலர் மிக மோசமாக மெலிந்து காணப்பட்டார்கள்.

அந்த அரச முகவர் எனக்கு விளக்கினார்ஞ் அவரது மாவட்டத்தில் 36,400 குடும்பங்கள் (கிட்டத்தட்ட 1,40,000 பேர்) அரசு தரும் உணவு நிவாரணத்துக்குத் தகுதி பெறுவதாகத் தகவல் அனுப்பியிருக்கிறார். அரசு 8,900 குடும்பங்களுக்கான (கிட்டத்தட்ட 35,000 பேர்) பொருள்களை மட்டுமே அனுப்பியிருக்கிறது.

'எனவே, முதலில் வரும் பொருள்களை அப்படியே வைத்துக்கொண்டு ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கும் நான் தர வேண்டியதை பிரித்துக் கொடுப்பேன். இந்த கொடுந்துயரத்திற்கு எந்த ஒரு அடிப்படையும் இல்லை.' என்றார்.

அங்கே நான் பேசுவதற்குத் தகுதியானவள் என்று எல்லோரும் உடனடியாக நம்பவில்லை. மல்லாவியைச் சேர்ந்த கத்தோலிக்க அருட்தந்தை சேவியர் கடும் கோவத்துடன் நிறையக் கருத்துகளை வைத்திருந்தார். அவர் என்னிடம் 'தான் மேற்குலகின் மீதான நம்பிக்கையைக் கைவிட்டுவிட்டதாகக் கூறினார். தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அவலநிலையைப் பற்றி யாரும் அக்கறைகொள்ளவில்லை எனும் போது, அவர் ஏன் என்னிடம் பேசி அவரது நேரத்தை வீணாக்கவேண்டும் என்று கேட்டார். ஆறு ஆண்டுகளில் வன்னிக்கு வந்த முதல் பத்திரிக்கையாளராக நான் இருந்தால் என்ன? மேற்குலக நாடுகளின் கேமராக்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆப்பிரிக்காவில் நடக்கும் பஞ்சங்களை மட்டுமே படம்பிடிக்கச் செல்கின்றன. அவர்கள் செரிபிய படுகொலையில் கொசோவோ படங்களைத் திருப்பி அனுப்பினர். ஆனால், இங்கே என்ன நடந்தது (செய்தார்கள்)?' என்றார்.

அவர் அமைதியான பின்பு, எனக்கு இனிப்பு யயினை வழங்கினார். அதன் பின் அவரது திருச்சபையினைப் பற்றி நாங்கள் பேசினோம். அவர் மக்கள் போரினால் சோர்வுற்றிருப்பதாகத் தெரிவித்தார். ஆனால், அது வேறொரு தன்மையைப் பெற்றிருந்தது.

'மக்கள் என்னிடம் அவர்கள் நிறையக் கொடுமைகளை அனுபவித்து விட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், முன்பு இருந்த அதே அவலநிலைக்குச் செல்லும் அளவுக்குப் போர் நிறுத்தத்துக்கு மதிப்பில்லை' என்றார். 'மக்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள்; நிலத்தினை; மகன்களை; மகள்களை இழந்திருக்கிறார்கள். போரினை முடிக்க ஒரே வழி தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையினைப் பெறுவதுதான்' என்றார்.

அரசின் முற்றுகை (தாக்குதல்) தமிழ் மக்களை விடுதலைப் புலிகளை நோக்கி நகர்த்தியிருக்கிறது. 'நீங்கள் உங்கள் மேற்குலகில் அவர்களைத் தீவிரவாதிகள் என்று சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால், இங்கு அவர்கள் மட்டும் தான் எங்களை, தமிழ் மக்களை வெட்டப்படுவதிலிருந்து பாதுகாக்கிறார்கள்' என்றார்.

என்னுடைய அறுவை சிகிச்சைக்கு சில வாரங்களுக்குப் பின் காவி நிறத்தில் சுற்றப்பட்ட ஒரு கடிதம் வந்தது. எந்த மின்சார வசதியும், வாகன வசதியும், அஞ்சல் வசதி கூட இல்லாத வன்னியிலிருந்து பெரும் ஆபத்துக்கு நடுவே எப்படியோ அந்த கடிதத்தினை அனுப்பியிருந்தார் அருட்தந்தை சேவியர்.

'உங்களுக்கு ஏற்பட்டு இருக்கும் காயங்கள் குறித்து வருந்துகிறேன். நீங்கள் இங்கு (ஈழத்தில்) துணிச்சலான மற்றும் நேர்மையான நபராக நினைவில் கொள்ளப்படுகிறீர்கள்' என்று எழுதியிருந்தார். அந்த வார்த்தைகள் எனக்கு மிகவும் முக்கியமானவையாக இருந்தன.

நான் குணமடைந்த பிறகு இலங்கையிலிருந்து எனக்கு ஆச்சரியமளிக்கும் அளவிலான அஞ் சல்கள் வந்தடைந்தன. தமிழ் மக்களிடம் இருந்து வந்த பெரும்பாலான செய்திகள் அனுதாபங்களைத் தாங்கியிருந்தது.

அதில் எந்த செய்தியுமே, அவர்களது போராட்டத்தை நான் ஆதரிப்பதாக நினைத்து எழுதப்படவில்லை. அவர்களது தாய்மண்ணைப் பற்றிப் பல வருடங்களுக்குப் பிறகு முதல் செய்தியினைப் பதிவு செய்ததற்காக மனதாரப் பாராட்டி நன்றி தெரிவித்து எழுதியிருந்தனர்.

சிங்களர்களிடம் இருந்து வந்த அஞ்சல்கள் இரண்டு விதமாக இருந்தன. கொழும்புவில் இருந்து எழுதிய ஒருவர், 'நான் தமிழர் இல்லை. ஆனால், உங்களைப்

போன்று நிறைய பத்திரிக்கையாளர்கள் இங்கு நடக்கும் உண்மையினைப் பற்றி உங்களைப் போலவே வெளியே சொன்னால் இந்தப் போர் 24 மணிநேரத்தில் முடிந்து விடும்' என்று எழுதியிருந்தார்.

மற்ற சிங்களர்களிடம் இருந்து வந்த அஞ்சல்கள் அவ்வளவு அன்பானதாக இல்லை.

எனவே, நான் செய்வது பைத்தியக்காரத்தனமா? என்னைப் பொறுத்தவரையில் பைத்தியக்கராரத்தனம் என்பது நேற்று நடந்த இரவு விருந்து பற்றியானச் செய்தியினை எழுதுவதுதான். அதற்குப் பதிலாக நான் மேசை வேலைக்கும், குண்டடிபடுவதற்கும் இடைப்பட்ட தளத்திலேயே வேலை செய்வேன்.

போர்கள் இது போன்று பத்திரிக்கையாளர்களால் சொல்லப்படக்கூடாது அல்லது அவை அரசின் செய்தியாளர் சந்திப்பின் மூலமாகத்தான் சொல்லப்படவேண்டும் என்று நம்பும் நபராக நீங்கள் இருந்தால் நான் செய்வதை பைத்தியக்காரத்தனம் என்று நீங்கள் நம்பலாம். போர்களில் என்ன நடக்கிறது, அங்கு நடக்கும் அடக்குமுறைகள், வலி, உயிரிழப்புகள் பற்றி பத்திரிக்கையாளர்கள் பேசினால் நிச்சயம் அபாயங்களை சந்தித்துத்தான் ஆகவேண்டும்.

என்னுடையபங்கிற்கு, நான் அடுத்த போரினைப் பற்றியான செய்தியினை வெளியிடும்போது, நான் என் வாழ்க்கையில் எப்போதும் சந்திக்கவிருக்காத துன்பங்களைச் சகித்துக்கொண்டு அந்த இடங்களில் இருக்கும் மக்களின் அமைதியான துணிச்சலைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போவேன். அவர்கள் அவர்கள் இருக்கும் இடத்திலேயே தான் இருக்க வேண்டும். ஆனால், எனக்கு வீடு என்ற ஒன்று லண்டனில் இருக்கிறது. அந்த செய்தியினை முடித்துவிட்டு நான் எனது வீட்டிற்குச் செல்லலாம்." என்று எழுதுகிறார் மேரி கால்வின்.

மேரியின் மீது தாக்குதல் நடந்து சில நாள்களுக்குப் பின், சிங்கள அரசின் தகவல் இயக்குநர் ஆரிய ரூபசிங்கே, "நாங்கள் பத்திரிக்கையாளர்களைப் போர் நடக்கும் பகுதிகளுக்கு அனுமதிக்கிறோம். ஆனால், அவர்கள் உயிருக்கு அவர்களே பொறுப்பு" என்று எச்சரிக்கை விடுக்கும் வகையிலே பேட்டி அளித்தார்.

பல வருடங்களுக்குப் பிறகு சர்வதேச சமூகத்திற்கு ஈழத்தில் இலங்கை அரசு நடத்திவரும் இனப்படுகொலையினை பற்றியான செய்தியினைச் சொன்னது மட்டுமல்லாமல், அதன் சாட்சி குறியீட்டையும் இடது கண்ணில் தாங்கி வந்த மேரி கால்வின், 2009 ல் இன்னுமொரு படுகொலையின் சாட்சியாகினார். அது தான் வெள்ளைக் கொடி சம்பவம்.

## வெள்ளைக் கொடி சம்பவம்

(மேரி கால்வின் வெள்ளைக் கொடி சம்பவம் பற்றி பிபிசிக்கு அளித்த பேட்டித் தொகுப்பிலிருந்து)

மே 17 (2009) ஆம் தேதி மேரி கால்வினுக்கு ஒரு தொலைப்பேசி அழைப்பு வந்தது. அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பாலசிங்கம் நடேசன் அவர்களிடமிருந்து வந்தது.

அந்த அழைப்பில் அரசியல் துறையினைச் சேர்ந்தவர்கள் அரசியல் கைதிகளாகச் சரணடைய முற்சிப்பதாகவும் ஆனால், யார் இலங்கை இராணுவத்தைத் தொடர்புகொள்ள முயற்சி செய்தாலும் அவர்கள் சுடப்படுவதாகவும் நடேசன் கூறியதாக மேரி கால்வின் கூறுகிறார்.

அவர் அதன்பின் ஐநா பொதுச் செயலாளரின் தலைமைப் பணியாளர் விஜய் நம்பியாருக்கு தொலைப்பேசியில் அழைப்பு விடுக்க, அவர் இலங்கை அதிபரிடம் பேசிவிட்டதாகவும் அவர் திரு. நடேசன் உள்ளிட்டவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடையும் போது பாதுகாப்பாக நடத்தப்படுவார்கள் என்றும் கால்வினிடம் உறுதியளித்ததாகச் சொல்கிறார் கால்வின்.



"சர்வதேச சட்டத்தின் கீழ் அவர்கள் நடத்தப்படுவார்கள்" என்ற வார்த்தைகளை விஜய் நம்பியார் தன்னிடம் கூறியதை மேற்கோள் காட்டுகிறார்.

மேரியிடம் நம்பியார் அங்கு மூன்றாம் தரப்பு இருக்க வேண்டிய எந்த ஒரு அவசியமும் இல்லை என்றிருக்கிறார்.

இலங்கை அதிபர் நம்பியாரிடம் வெள்ளைக் கொடியினை உயரே பறக்கவிட்டு நடேசன் வரும்போது அவர்கள் சரணடைய அனுமதிக்கப்படுவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையினை வழங்கியிருந்ததாக நம்பியார் மேரியிடம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அதிபர், பாதுகாப்பு செயலாளர் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆகியோரிடம் நேரடித் தொடர்பிலிருந்த





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சந்திரநேரு சந்திரகாந்தன் இந்த சரணடைவு நிகழ்வுக்குச் சாட்சியாக இருக்க முன்வந்திருக்கிறார். ஆனால், அதன்பின் அவருக்கு இலங்கை அரசினால் அளிக்கப்பட்ட உறுதியளிப்பின் பெயரில் அவர் அங்கு செல்லவில்லை.

அந்த நிகழ்வு நடைபெறும் போது அதிகாலை ஒரு மணி இருக்கும் என்று மேரி நினைவு கூர்கிறார்.

மேரியைப் பொறுத்தவரையில் ஐநா பொதுச்செயலாளரின் தலைமை பணியாளர் விஜய் நம்பியாருக்கு இலங்கை அதிபர் ராஜபக்ஷே உறுதியளித்த சில நிமிடங்களுக்குப் பின் அந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தான் நடேசனிடம் பேசிய கடைசியாகப் பேசியவர்.

மே 18, 2009- அதிகாலை 1:06க்கு நடந்த அந்த தொலைப்பேசி அழைப்பில் இலங்கை ராணுவத்தை நோக்கி நடந்து வருவதாகவும், வெள்ளைக் கொடியை எவ்வளவு உயரத்தில் பிடிக்க முடியுமோ அவ்வளவு உயரத்தில் பிடிப்பதாக நடேசன் சந்திரநேருவிடம் கூறியதாக, சந்திரநேரு மேரியிடம் கூறியிருக்கிறார். அதன் பிறகு எங்களுக்கு வந்த தகவலானது அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டார்கள் என்ற இலங்கை அரசின் அறிவிப்பே, என்கிறார் மேரி.

(அவர்கள் அனைவரும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டதற்கான சாட்சிகளும் ஆதாரங்களும் பல்வேறு ஊடகங்களில் கிடைத்தன)

"நான் எதை மிக மிக ஆழமான கவலைக்குரிய விஷயமாகப் பார்க்கிறேன் என்றால், சரணடைவதற்கான பேச்சுவார்த்தைகள் சிங்கள அரசாங்கத்திடம் (பல நாள்களாக) நடப்பது பிரிட்டன், அமெரிக்கா, ஐநா சபை, கொழும்புவிலிருந்த ஐநா பொதுச்செயலாளரின் தலைமை பணியாளர் நம்பியார் என்று அனைவருக்குமே தெரியும்" என்று நினைவு கூர்கிறார் மேரி கால்வின்.

"அங்கு ஒரு மூன்றாம் தரப்பு இருந்திருந்தால், சரியாக இருந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஐநா பொதுச்செயலாளரின் தலைமை பணியாளர் பொறுப்பினைச் சேர்ந்த நம்பியார் அங்கு சரணடைவதைப் பார்க்க சாட்சியாகச் சென்றிருந்தால்" என்று தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார் மேரி.

விடுதலைப் புலிகள் சமாதான செயலகத்தைச் சேர்ந்த சீவரத்தினம் புலித்தேவனும் நடேசனுடன் அரசியல் கைதியாக சரணடையச் சென்ற கிட்டத்தட்ட 12 பேரில் ஒருவர். அனைவருமே இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டனர். மேரி கால்வின் என்கிற ஒரு சர்வதேச பத்திரிக்கையாளர், ஐநா பொதுச்செயலாளரின் தலைமை பணியாளர், மேரியின் கூற்றுப்படி அமெரிக்க-பிரிட்டன் நாடுகளுக்குத் தெரிந்தே நடந்த சர்வதேச சமூகம் அறிந்திருந்த அதுவும் இலங்கை அரசு பாதுகாப்பாக நடத்தப்படுவார்கள் என்று உறுதிப்படுத்திய அரசியல் சரணடைவில் வெள்ளைக்கொடி இலங்கை அரசின் இரத்த வெறியினை உலகுக்கு அம்பலப்படுத்தியது. உலக நாடுகள் இணைந்து நடத்திய இனப்படுகொலையைக் காட்டிய முக்கிய நிகழ்வாக வெள்ளைக் கொடிச் சம்பவம் மாறியது.

மேரி மீண்டுமொருமுறை சர்வதேச சமூகத்துக்குத் தமிழீழ இனப்படுகொலையின் முக்கிய சாட்சியானார்!

2012 ஆம் ஆண்டு சிரியாவில் போர் என்ற பெயரில் மக்கள் மீது நடத்தப்பட்ட இனஅழிப்பினைப் பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற போது குண்டு வீச்சில் உயிரிழந்தார்.

A Private War திரைப்படத்தில் ஒரு காட்சி வரும். 2003 ஈராக் போரினைப் பற்றி செய்தி சேகரிக்க சென்றிருப்பார்கள். ஒரு இளம் பத்திரிக்கையாளர் அமெரிக்கப் படையும் கூட்டுச்சேர்ந்து நடத்தும் போரினைப் பற்றியான செய்தியினை எப்படிச் சொல்வது என்பதுபோல் ஒரு கேள்வியினைக் கேட்பார். அதற்குத்தான் மேரி, போரினை நடத்துவது யார் என்பது ஒரு செய்தியாளருக்குத் தேவையில்லாதது; அதில் ஒடுக்குமுறைகளை சந்திக்கும் மக்களைப் பற்றியான செய்தியினை வெளியிடுவதே செய்தியாளருக்கான வேலை என்பதாக ஒரு பதிலினைச் சொல்வார்.

கால்வினும் அப்படியான ஒரு செய்தியாளராகவே இருந்தார். அவர் அமெரிக்கராக இருந்தாலும், அவரது நாடு ஒரு போரினை நடத்துகிறது என்பதற்காகவே அந்தப் போரினைப் பற்றிய செய்தியினை எழுதலாமா என்று அவர் யோசிக்கவில்லை. வெள்ளைக் கொடி சம்பவத்திலும், அமெரிக்காவும், பிரிட்டனும், ஐநா வும்




இந்த சரணடைவு பேச்சுவார்த்தையை அறிந்தே இருந்தன என்பதை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார்.

அநியாயம் செய்யும் நாடுகளுக்கும், போரை முதலீடாக்கும் முதலாளிகளுக்கும் கைக்கூலிகளாய் பணிபுரியும் பத்திரிக்கையாளருக்கு இடையில் பாதிக்கப்பட்ட மக்களின் வலியைப் பதிவு செய்த பத்திரிக்கையாளராக மேரி கால்வினின் தார்மீக அறம், துணிச்சல், நேர்மை ஆகியவை ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலை வெளிச்சம். இவரின் இழப்பு ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கூடுதலாகத் தமிழீழ மக்களுக்கும் மாபெரும் இழப்பாகும். ●

## பாக்ஸ்
## வெள்ளைக் கொடிச் சம்பவங்கள்

நடேசன் உள்ளிட்ட அரசியல் துறைத் தலைவர்கள் வெள்ளைக்கொடி தாங்கி அரசியல் சரணடைவுக்குச் சென்றபோது பேரினவாத இலங்கை அரசினால் கொல்லப்பட்டது பெரும்பாலும் 'வெள்ளைக் கொடிச் சம்பவம்' என்று அறியப்படுகிறது. அதேபோல பல வெள்ளைக் கொடிச் சம்பவங்கள் இறுதி போர்க்காலத்தில் நடைபெற்றன. இந்த வெள்ளைக்கொடி சம்பவங்கள் உலக நாடுகளுக்கும் ஐநாவிற்கும் தெரிந்தேதான் நடைபெற்றன.

மே 15-18 வரை இடைப்பட்ட காலத்தில் பல்வேறு விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் தளபதிகள் இலங்கை இராணுவத்திடம் வெள்ளைக் கொடியுடன் அரசியல் கைதிகளாகச் சரணடையச் சென்றனர். பலர் அவர்களது குடும்பங்களுடன் சென்றனர். அதில் பலர் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. பலர் காணாமல்போனவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இதில் அப்போது இலங்கை அதிபராக இருந்த மகிந்த ராஜபக்சேவினுடைய சகோதரன் பசில் ராஜபக்ஷேதான் சரணடைவுகளுடைய பேச்சுவார்த்தையை முன்னின்று நடத்தினார். பாதுகாப்பான சரணடைவுக்கு மஹிந்திர ராஜபக்ஷேவும் பாதுகாப்பு செயலாளரான கோத்தபய ராஜபக்ஷேவும் ஒப்புதல் அளித்தனர். வெளியுறவு செயலாளர் பலித்த கொஹன்னா சரணடைய வருபவர்கள் எந்த மாதிரியான வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்பதான செய்திகளைப் பகிர்வதில் முக்கிய பங்காற்றினார். இரணுவத்தின் 58வது பிரிவினை தலைமை தாங்கிய ஷாவேந்திர சில்வா சரணடைந்த புலிகளின் அரசியல் தலைவர்களை ஏற்றுக்கொள்ளும் பணியினைச் செய்தார். இதில் கொஹன்னா பின்பு ஐநாவுக்கான நிரந்தர பிரதிநிதியாகவும், சில்வா கொஹன்னாவின் துணை பிரதிநிதியாகவும் உயர்வு பெற்றனர். தற்போது வரை சில்வாவிற்கு பல்வேறு இராணுவ பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கடைசியாகப் பார்த்த சாட்சிகள், இலங்கை அரசு வெளியிட்ட புகைப்படங்கள், வெவ்வேறு பத்திரிக்கைகளில் வெளிவந்த புகைப்படங்களைக் கொண்டு இறுதிப் போர் நாள்களில் சரணடைந்தவர்களாகக் கிட்டத்தட்ட 280 பேரின் பட்டியலினை 2018 ஆம் ஆண்டு The International Truth and Justice Project அமைப்பு வெளியிட்டது.

இதில் இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்முறை செய்யப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட இசைப்பிரியா, கொல்லப்பட்ட சிறுவன் பாலசந்திரன், காணாமலடிக்கப்பட்ட கவிஞர் புதுவை இரத்தினதுரையும் அடங்குவர்.

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

# கொரோனா பேரிடரை பயன்படுத்தி மாநில உரிமைகளைப் பறிக்கும் இந்திய அரசு!

## இதனை கண்டித்து 9-5-2020 அன்று பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு நடத்திய இணையவழி போராட்டத்தில் மே17 இயக்கம் பங்கேற்பு

2-5-2020 -அன்று இணையவழி நடைபெற்ற பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் நடுவக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

கொரானா நோய்த்தொற்று உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிற நெருக்கடிச் சூழலில், எரிகிற வீட்டில் பறிப்பது ஊதியம் எனக் கொள்ளை அடிக்கிற கொடூரனைப் போல இந்திய அரசு மொழித் தேச மாநில உரிமைகளையெல்லாம் பறித்துக் கொண்டு போவதைப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வகையில் எல்லாம் இந்திய அரசின் மாநில உரிமைகளைப் பறிக்கும் போக்கைக் கண்டித்து 9-5-2020 அன்று

**`பறிக்காதே! பறிக்காதே!**
**மாநில உரிமைகளைப் பறிக்காதே!!**
**கொரானா தாக்கிடும்**
**சந்தடி சாக்கில்**
**மாநில நலன்களை அழிக்காதே!**
**இந்திய அரசே! மோடி அரசே!**
**மாநில உரிமைகளை விழுங்காதே!'**

என்கிற முழக்கங்களை வலியுறுத்திப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு இணையவழியில் ஆர்ப்பரித்து முழக்கமிடத் திட்டமிட்டிருக்கிறது..

அம் முழக்கங்களைத் தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் முழங்க வைக்கவும், அதற்கு அனைத்து கட்சிகளிடமிருந்தும், அனைத்து இயக்கங்களிடமிருந்தும் ஒருங்கிணைந்த ஆதரவைக் கூட்டமைப்பு கோருகிறது...

(கொரானா தொற்று அறியப்பட்டு ஊரடங்கு அறிவிப்பு செய்யப்பட்ட மார்ச்சு 22 - ஆம் நாள் தொடங்கி இந்த ஒன்றரை மாதத்திற்குள் இந்திய அரசு பறித்திருக்கும் மாநில உரிமைகளின் பட்டியல்...



- நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரண்டு ஆண்டுகளுக்கான தொகுதி நல்கைத் தொகையை அவர்களின் ஒப்புதல் இல்லாமலேயே மோடி அரசு பறித்துக் கொண்டது..
- மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு மாதச் சம்பளத்தையும் அவர்களின் இசைவைப் பெறாமலேயே எடுத்துக்கொண்டது..
- மாநில முதலமைச்சர்கள் நிவாரண நிதிக்குக் கொடுக்கப்படும் நன்கொடைகளுக்கு இதுநாள்வரை அளித்துவந்த வரிச்சலுகையை நீக்கிவிட்டு, இந்தியத் தலைமை அமைச்சர் (பிரதமர்) நிவாரண நிதிக்குக் கொடுக்கும் தொகைக்கு மட்டுமே அந்த வரிச்சலுகை உண்டு என அறிவித்து அனைவரையும் அதற்குக் கொடுக்க வலியுறுத்துவதுஞ்
- 1949 தொடங்கி இப்போதுவரை தலைமை அமைச்சர் (பிரதமர்) நிவாரண நிதிக்கு அளிக்கப்பட்டு வரும் தொகையை இனி, 'பிஎம் கேர் பண்ட்' எனும் தனிக் கணக்குக்கே அனுப்ப வேண்டும் என்று அறிவித்துள்ளது.. அப்புதியக் கணக்கில் உள்ள விளக்கம் தகவல் உரிமை சட்டத்தின்வழி எவரும் அறிந்துகொள்ள முடியாதாம்..
- தனி அதிகாரம் படைத்திருக்கும் காவிரி நீர் உரிமை ஆணையத்தை 'ஜல் சக்தி' என்கிற இந்திய அரசு நிறுவனத்திற்குள் அடக்கி, தமிழகத்தின் காவிரி உரிமைகளை முற்றாகப் பறித்திருக்கிறது .
- தமிழக அரசு சீனாவில் இருந்து நேரடியாகப் பெற இருந்த விரைவு ஆய்வுக் கருவிகளை (ராப்பிட்கிட்) இந்திய அரசு சூழ்ச்சிக்குப் பறித்துக் கொண்டது மட்டுமல்லாமல், அதைத் தமிழகத்திற்கு அதிகப்படியான விலைக்கு விற்றதோடு, இனி வெளிநாடுகளில் இருந்து எந்தப் பொருளை வாங்குவது என்றாலும் இந்திய அரசின் இசைவோடேயே வாங்க வேண்டும் என்பதாக இதுநாள் வரைக்கும் இருந்த மாநில உரிமையை பறித்துக் கொண்டது..
- ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளும் மாநில அரசுக்கு அப்பாற்பட்டுக் கொரானா நிலைமையைத் தாங்களே தங்கள் கட்டுப்பாட்டில் அறியவேண்டும் என்பதற்காக இந்திய அரசு, ஒரு மருத்துவக் குழுவை எல்லா மாநிலத்திற்குள்ளும் அனுப்பி கவனிக்கச் சொல்லி தன் அதிகாரத்தின் கீழ் ஆய்வு செய்து வருகிறது...
- இதுவரை உழவர்களுக்கும் எளிய ஏழை மக்களுக்கும் அளிக்கப்பட்டு வரும் மின்சார மானியங்களை நிறுத்திவிட்டு, அதை விலைக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதும், பின்னர் அதை மானியமாக வங்கியில் போடுவதுமான அதிகாரம் கொண்ட நடைமுறையை நேரடியாக இந்தியஅரசு அதன் கையில் எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.. தமிழக அரசிடம் இருக்கும் மின்சாரத்துறையை இந்திய அரசு பறித்துக் கொள்ளும் நோக்கமே அந்த நடைமுறைக்குள் இருக்கிறது..

- கரோனா காலத்தை மாநிலங்கள் அளவில் நீட்டிப்பு செய்வது என்பதைக்கூட இந்திய அரசே தன் விருப்பத்திற்கு அறிவிக்கிறது, இது மாநில அரசின் அதிகாரத்தை முற்றிலுமாக சிதைப்பதாகவே உள்ளது..

- உழவர்களுக்குத் தனி அட்டை வழங்குவதன்வழி, உழவு நிலங்களுக்கும், விளைச்சல் பொருள்களுக்குமான முழு ஆய்வையும் இந்திய அரசு தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுசெல்வதுடன், உழவு நில வருவாயையும், விளைச்சல் வருவாயையும் ஜிஎஸ்டி வழிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுசெல்லத் திட்டமிட்டிருக்கிறது.

- கடுமையான பொருளியல் நெருக்கடிகள் வாழ்வியல் நெருக்கடிகளுக்குள் இருந்துகொண்டிருக்கக்கூடிய மக்களிடமிருந்து ஜிஎஸ்டி வரியையோ, நெடுஞ்சாலை சுங்கச்சாவடி வரியையோ நீக்காமல் தொடர்ந்து மக்களைச் சுரண்டுவதன்மூலம் தன் அதிகாரத்தை நிறுவுகிறது

- பள்ளி, கல்லூரிகளைத் திறப்பது குறித்தான அதிகாரம் இதுநாள் வரை மாநில அரசுகளிடம் இருந்துவருவதை இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு தன் அதிகாரத்தைக் கொண்டு தானாக அறிவிக்கிறது..

- ஊடகங்களின் உரிமைகளை கட்டுப்படுத்தி இந்திய அரசுக்கு எதிரான எல்லா வகை செய்திகளையும் வெளியிடாத படி தடுத்து வைத்திருக்கிறது..அதற்கு மாறாகச் செய்தி வெளியிடுவோரைத் தண்டிக்கிறது..

- இந்திய அரசைப் பற்றியோ, தலைமை அமைச்சர் மோடியைப் பற்றியோ எந்த வகைத் திறனாய்வையும் எவரும் ஊடகவழி செய்தாலும் அவர்களை உடனே சிறைப் படுத்துகிறது..

- மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட மதுக்கடைகளை நிலையாக மூடுவதோ அல்லது திறப்பதோ, திறப்பது என்றால் எப்போது திறப்பது என்பது குறித்தோகூட மாநில அரசுகள் முடிவெடுக்காமல் அதிலும் இந்திய மோடி அரசு தலையிட்டு மாநில உரிமைகளைப் பறிக்கிறது..

2. மாநில உரிமைகளைப் பறித்திடும் வகையில் இந்திய மோடி அரசு செய்துவரும், மேற்படி சூழ்ச்சிகளுக்குத் தமிழகத்தில் எவ்வகையிலும் இடம் கொடுக்காமல் தடை செய்திட வேண்டும் எனத் தமிழக அரசை பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு கட்டாயப்படுத்துகிறது.. காவிரி உரிமையில் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் ஜல்சக்தி நிறுவனத்திலிருந்து காவிரி ஆணையத்தை முழுமையாக விடுவித்திட தமிழக அரசு வலியுறுத்திப் போராடியாகவேண்டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

3. மும்பைப் பெரு நகரத்தை உருவாக்குவதில் முழுப்பொறுப்பு கொண்ட தாராவி பகுதி வாழ் தமிழர்களுக்கு எவ்வகை அடிப்படைப் பாதுகாப்பையும் மராட்டிய அரசு முறைப்படி செய்து தருவதாக அறியமுடியவில்லை..

   எனவே உடனடியாக மராட்டிய அரசு தாராவி தமிழர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்யவேண்டுமெனப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கிறது.. தமிழக அரசு உடனடியாக மராட்டிய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது..

4. இந்த நெருக்கடியான சூழலில் மதவெறியையும், சாதி வெறியையும் தூண்டும் படியான நிகழ்வுகள் சில ஆங்காங்கே நடைபெற்று வருவதைப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு கடுமையாகக் கண்டிக்கிறது..

தமிழக அரசு அவற்றிலெல்லாம் தலையிட்டு எவ்வகை வெறித்தனங்களுக்கும் இடம் கொடுக்காத படி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது. ●

## அந்தமானில் சிக்கித்தவிக்கும் 280க்கும் மேற்பட்ட தமிழ் மீனவர்களை உடனடியாக மீட்டிடு!

### மத்திய மாநில அரசுகளை மே17 இயக்கம் வலியுறுத்தல்!

– 11 மே 2020



ஏற்கனவே ஈரானில் 700க்கும் மேற்பட்ட தமிழ் மீனவர்கள் சிக்கித் தவித்து வருகிற சூழ்நிலையில் தற்போது அந்தமானிலும் 280-க்கும் மேற்பட்ட தமிழ் மீனவர்கள் மிகுந்த சிரமத்திற்கு இடையில் சொந்த ஊருக்கு திரும்ப முடியாமல் இருக்கிறார்கள்.

இவர்களை உடனடியாக மத்திய மாநில அரசுகள் மீட்க வலியுறுத்தி நாளை 12.5.2020 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு #ஸிமீஃநீஹ்மீஜிழியீவீஃலீமீக்ஷீனீமீஸீ என்ற டிவிட்டர் பரப்புரை நடைபெற இருக்கிறது. அதில் தமிழக மீனவர்களை காக்க அனைவரும் இணைய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.



ஓவியம்: இரா ரத்னம்

'பேரிடரிலும் தொடரும் ஈழத்துயரம்'

# கொரோனாவும் தொடரும் ஈழ இன அழிப்பும்

**அடிப்படை உரிமைக்காக 60 ஆண்டு காலமாகப் போராடிவரும் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை 2009–ல் இந்தியா அமெரிக்கா போன்ற உலக நாடுகளின் உதவியுடன் இனப்படுகொலை செய்தது இலங்கை அரசு. இன்று கொரொனா நோய்த்தொற்றைப் பயன்படுத்தி அந்த இன அழிப்பைத் தொடர்கிறது.**

உலகையே இந்த கொரொனா தொற்று ஆட்டிப்படைத்துவருகிறது. ஆட்சியாளர்களின் அக்கறையின்மையால் மக்கள் குவியல் குவியலாகச் செத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் இந்தப் பேரிடரைப் பயன்படுத்தி திரைமறைவில் முதலாளித்துவ நாடுகள் சில, தங்களது ஆதாயத்துக்கான வேலைகளில் மும்முரமாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, கொரொனாவால் அதிக பாதிப்புகளை சந்தித்துக்கொண்டிருக்கிற அமெரிக்கா, சிரியாவுக்கு அருகில் புதிய இராணுவத் தளத்தை அமைத்துக்கொண்டிருக்கிறது. மேலும், இங்கிலாந்தும் அமெரிக்காவும் பொருளாதார உடன்படிக்கைகளைப் போடுவதற்காகப் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்கின்றன. இப்படியாகச் சொந்த மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் தனது அதிகாரத்தை உலகில் நிலைநிறுத்தும் வேலைகளைச் செய்து வருகிறது. இதில், ஆசியாவில் இருக்கிற இந்தியாவும் இலங்கையும் வித்தியாசமானவை. கொரொனா தொற்றைச் சமாளிக்க முடியாமல் சொந்த மக்களில் ஒரு பகுதியினரான (இஸ்லாமியர்களையும் தமிழர்களையும்) எதிரிகளாக்கி இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்தையும், இலங்கையில் சிங்கள பவுத்த ஆதிக்கத்தையும் நிலைநிறுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

**“ ஆசியாவில் இருக்கிற இந்தியாவும் இலங்கையும் வித்தியாசமானவை. கொரோனா தொற்றைச் சமாளிக்க முடியாமல் சொந்த மக்களில் ஒரு பகுதியினரான (இஸ்லாமியர்களையும் தமிழர்களையும்) எதிரிகளாக்கி இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்தையும், இலங்கையில் சிங்கள பவுத்த ஆதிக்கத்தையும் நிலைநிறுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.**

இலங்கையைப் பொறுத்தவரை அங்கு மார்ச் 20 ஆம் தேதி ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. கண்டி, கொழும்பு, புத்தாளம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஆறு பகுதிகள் கொரொனா தொற்று அதிகமுள்ள பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. இதில் தமிழர் பகுதிகளில் முறையாகச் சோதனை செய்யாமலும் உரிய நிவாரணம் கொடுக்காமலும் தனது தமிழின வெறுப்பை காட்டிவருகிறது சிங்கள அரசு. ஏப்ரல் 6 ஆம் தேதி வரை அங்கு ஒருநாளைக்கு 750 -லிருந்து 1000 பேர் மட்டுமே பரிசோதனை செய்யப்படுவதாகவும், 166 பேருக்குச் சோதனை செய்தால் அதில் 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே, சோதனையை அதிகப்படுத்த வேண்டுமென்று 'இலங்கை அரசு மருத்துவர்கள் சங்கம்' அறிக்கை விடுமளவுக்கு மெத்தனமாக இனப்படுகொலை இலங்கை அரசின் செயல்பாடுகள் அமைந்திருந்தன. ஆனால், இதனையெல்லாம் பற்றித் துளியும் கவலையில்லாமல் தமிழர் பகுதிகளில் இராணுவத்தைக் குவிப்பது, தமிழர்களின் பூர்வீக இடங்களை அபகரிப்பது, அதில் சிங்கள குடியேற்றங்களை அமர்த்துவது எனத் தமிழின அழிப்பைத் தொடர்ந்து சிங்கள அரசு செய்து வருகிறது.

## தமிழர் பகுதிகளில் இராணுவ குவிப்பு:

இந்தப் பேரிடரைப் பயன்படுத்தி தமிழர் பகுதிகளில் அதிகளவு இராணுவத்தைக் குவிக்கும் வேலையில் சிங்கள அரசு ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக, 2009-க்குப் பிறகு முல்லைத்தீவு பகுதிகளில் நான்கு ஈழத்தமிழருக்கு ஒரு இராணுவ வீரர் என்றிருந்த நிலை தற்போது இரண்டு ஈழத்தமிழருக்கு ஒரு இராணுவ வீரர் என்று மாறியிருப்பதாக ஏப்ரல் 6 ஆம் தேதி தமிழ்நெட் இணையதளம் செய்தி வெளியிட்டு இருக்கிறது. மேலும், இந்த இராணுவக் குவிப்பு மூலம் தமிழ்ப்பகுதிகளில் அனைத்து அரசு வேலைகளும் அரசு அதிகாரிகளிடமிருந்து இராணுவத்திற்கு மாறிவிட்டதாகவும், அதனால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் அரசு கிராம நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட யாரையும் அவர்களது வேலைகளைச் செய்யவிடாமல் இராணுவம் தடுப்பதாக யாழ்ப்பாண அரசு அதிகாரிகள் வடக்கு மாகாண ஆளுநரிடம் மனு அளிக்கும் கொடுமை நடந்திருக்கிறது.

தமிழர் பகுதிகளில் நிலைப்பெற்றிருக்கும் இந்த சிங்கள இராணுவ வீரர்கள் தான் நிவாரணப் பொருள்களை வீடு வீடாக விநியோகித்தல், தடுப்பு முகாம் அமைத்துக்கண்காணித்தல் உள்ளிட்ட வேலைகளில் ஈடுபடுகிறார்கள். அதிலும், தமிழர் பகுதிகளில் இருக்கும் அரசு அதிகாரிகள் கொடுக்கும் நுழைவுச்சீட்டைக் கொண்டு வருபவர்களுக்கு அனுமதி மறுக்கும் இராணுவம், தனியாக இராணுவத்திடமும் அனுமதி வாங்கவேண்டுமென்று வாய்மொழி உத்தரவு போட்டிருக்கிறதாம். இதே கெடுபிடியைத்தான் கடல் வழி போக்குவரத்து மற்றும் மீன்பிடித்தல் உள்ளிட்ட வேலைகளிலும் இராணுவம் செய்கிறது.

அதுமட்டுமில்லாமல், இலங்கையில் தமிழர் அல்லாத பகுதிகளில் குறிப்பாக தெற்கில் கொரொனாவால் பாதிக்கப்பட்ட சுமார் 1100 பேரை உள்ளூர் அதிகாரிகளுக்கு எந்தவித அறிவிப்பும் செய்யாமல் தமிழர்கள் அடர்த்தியாக வாழும் பகுதியில் 'தனிமைப்படுத்தும் முகாம்கள்' இலங்கை இராணுவ தளபதி இனப்படுகொலை குற்றவாளி சவேந்திர செல்வாவின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு, 2009 போரின் போது கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளைச் சித்திரவதை செய்து கொலை செய்யப்பயன்படுத்தப்பட்ட இரகசிய அறைகள் போல இந்த பேரிடர் காலத்திலும் இரகசிய அறைகள் அமைக்கப்படுவதாக யாழ்ப்பாண அரசு சாரா நிறுவனம் மனித உரிமை



டாக்டர் முரளி வள்ளிபுரநாதன்

அமைப்புக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. இந்த இரகசிய அறையில் என்ன நடக்கிறதென்று வெளியுலகத்திற்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த முகாம்களை கண்டறிந்து அகற்றவேண்டுமென்று அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

மேலும், தமிழர் பகுதிகளில் சிங்கள இராணுவத்தால் அமைக்கப்பட்டிருக்கும் 'தனிமைப்படுத்தும் முகாம்களில்' எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை எனவும், அனைவரும் அமர்ந்து சாப்பிடுவதற்கு ஒரே ஒரு டைனிங் டேபிள் மற்றும் அனைவரும் கைகழுவுவதற்கு ஒரே ஒரு 'வாஷ் ரூம்' மட்டுமே இருக்கிறது; இப்படி இருக்கக்கூடாது; இதனாலேயே தொற்று அதிகமாகும் என்றும் இங்கிலாந்தில் படித்த சிறந்த மருத்துவரும் இலங்கை அரசின் சிறப்பு ஆலோசகருமான தமிழர் 'முரளி வள்ளிபுரநாதன்' ஏப்ரல் 6 மற்றும் ஏப்ரல் 15 ஆகிய இரு தினங்களிலும் அறிக்கை கொடுத்திருந்தார். இதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத இலங்கை அரசு ஏப்ரல் 17 ஆம் தேதி அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் (ஜி.எம்.ஓ.ஏ) செயலாளர் டாக்டர் ஹரிதா அலுத்ஜேவைக் கொண்டு ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில், வள்ளிபுரநாதன் தமிழர் என்பதால் இனப்பகையுடன் நடந்துகொள்கிறார் என்று ஆதாரமற்ற தமிழின வெறுப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

இதன்பின் இந்த உண்மைகள் மூடிமறைக்கப்பட்டு, சிங்கள இராணுவத்தால் தமிழர் பகுதிகளில் இருக்கும் 50 பள்ளிகள் ம ற்றும் 6 கல்லூரிகள் 'தனிமைப்படுத்தும் முகாம்களாக' மாற்றப்பட்டிருக்கின்றன. அங்கு என்ன மாதிரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்குமென்பதை நாமே யூகித்துக்கொள்ள வேண்டியதுதான். ஏற்கனவே 2013-லிருந்து தமிழர் பகுதிகளில் இருக்கும் மழலையர் பள்ளிகளைச் சிங்கள இராணுவம் நடத்தி வருவது மிகுந்த சர்ச்சைக்குள்ளாகி இன்றுவரை தொடர்ந்து வரும் நிலையில் தற்போது தமிழர் பகுதிகளின் அனைத்து நடவடிக்கையிலும் காவல்துறை, அரசு அதிகாரிகள் உள்ளிட்ட 'குடிமை சமூக அதிகாரிகள்' அனைவரையும் புறந்தள்ளிவிட்டு சிங்கள இராணுவம் கைப்பற்றியிருப்பது, தமிழர் பகுதியை இராணுவ மயமாக்கும் சிங்கள அரசின் தமிழினப்படுகொலையின் தொடர்ச்சியே.

## தமிழரின் பூர்வீக இடத்தை அபகரித்தல் மற்றும் சிங்கள குடியேற்றம்:

தமிழர்கள் தனித்த தேசிய இனம் என்பதற்கு அடிப்படையாக இருப்பதே அவர்கள் குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் (வடக்கு கிழக்கில்) வாழ்கிறார்கள் என்பதுதான். ஆகவே, அதனை மாற்றவேண்டுமென்று சிங்கள அரசுகள் தொடர்ச்சியாகத் தமிழர் பகுதிகளை ஆக்கிரமிப்பதையும், அங்குச் சிங்கள குடியேற்றங்களைத் திட்டமிட்டு ஏற்படுத்துவதையும் ஒரு வேலைத்திட்டமாக பல ஆண்டுகளாகச் செய்துவருகிறார்கள். இலங்கை சுதந்திரமான பின், சுமார் 14 ஆயிரம் சதுர கிலோமீட்டராக இருந்த தமிழர் பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிங்கள அரசு அபகரித்து, 7500 சதுர கிலோமீட்டர் என்றளவில் விடுதலைப் புலிகளின் வருகைக்கு முன் சுருக்கிவிட்டது. 2009 வரைக்கும் தமிழர் பகுதியின் ஒரு பிடி மண்ணைக்கூடச் சிங்கள அரசு அபகரித்துவிடாதபடி விடுதலைப் புலிகள் தங்கள் தாய்மண்ணைக் காத்தார்கள். ஆனால், 2009-க்குப் பிறகு நிலைமை மாறி இன்று அதிவேகமாகத் தமிழர் பகுதிகளைப் பறிப்பதும், அங்குச் சிங்கள குடியேற்றம் நடத்துவதும் நடைபெற்று வருகிறது. இடையில் இதற்கு எதிராக ஈழத்தமிழர்கள் தங்களது நிலம் மீண்டும் தங்களுக்கு வேண்டுமென்று போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால், சர்வதேசத்திடம் தனது இன அழிப்பு அம்பலப்பட்டுப்போனதை அடுத்து, சிறிது காலம் நிலப்பறிப்பை நிறுத்திவைத்தது இலங்கை அரசு. இப்போது பேரிடரைப் பயன்படுத்தி மீண்டும் தமிழர்களின் நிலத்தை அபகரிப்பதையும் சிங்கள குடியேற்றத்தையும் செய்ய ஆரம்பித்திருக்கிறது.

மன்னார் மாவட்டத்திலிருந்து 45 கிலோமீட்டருக்கு தெற்கில் 1000 ஏக்கரில் இருக்கும் 'முள்ளிக்குளம்' எனும் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் இலங்கை கடற்படை தனது 'வடமேற்கு கடற்படை கட்டளை தலைமையகம்' அமைக்கும் வேலையில் ஈடுபட்டுவருகிறது.




2013-ல் இலங்கையின் இராணுவ அமைச்சராக கோத்தபய இராசபக்சே இருந்தபோது, 35 ஏக்கரில் கடற்படை கட்டளை தலைமையகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. சுமார் 77 ஏக்கர் இடம், பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க மன்னார் மாவட்ட கத்தோலிக்க திருச்சபையினால் வீடு கட்டுவதற்காக இருந்தது.



5 வயதுக் குழந்தை உள்ளிட்ட எட்டு தமிழர்களை 2000-ல் படுகொலை செய்த இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்க 2015-ல் கைதுசெய்யப்பட்டபோது

இந்நிலையில், தற்போது மீண்டும் அதிபராக கோத்தபய பொறுப்பேற்றவுடன், இந்த பேரிடரைப் பயன்படுத்திக் கிடப்பிலிருந்த திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது. அதிலும், ஏற்கனவே இருந்த 35 ஏக்கருடன் சேர்ந்து ஈழத்தமிழர் மறுவாழ்வுக்கென ஒதுக்கப்பட்ட 77 ஏக்கர் நிலத்தையும் சிங்கள கப்பற்படை எடுத்துக்கொண்டது. தங்களின் கண்ணெதிரே தங்களது பூர்வீக இடத்தை சிங்கள இராணுவம் அபகரிப்பதைத் தடுக்க ஈழத்தமிழர்கள் போராடியும் ஒரு பலனுமில்லை. மேலும், இங்கே கப்பற்படை தளம் அமைக்கப்படுமாயின் அவர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்படும். எனவே, மீதமிருக்கிற தமிழர் நிலமும் விரைவில் பறிக்கப்பட்டுவிடும். அதேநேரத்தில் சிங்கள குடியேற்றமும் பெருவாரியாக நடைபெறும். இதேநிலை தொடர்ந்து ஏற்பட்டால் முள்ளிக்குளத்தில் தமிழர்கள் இருந்தார்கள் என்பதற்கான சுவடே எதிர்காலத்தில் இல்லாமல் துடைத்தெறியப்படும். இப்படித் திட்டமிட்ட இன அழிப்பை இந்த பேரிடரைப் பயன்படுத்தி மிக வேகமாகத் தமிழர் பகுதிகளில் இனப்படுகொலை இலங்கை அரசு செய்து வருகிறது.

> **சர்வதேச நாடுகள் தங்களது நலனுக்காக இலங்கையை அணுகுகின்றன என்பது தெரிந்ததால்தான் சிங்கள அரசு எந்தவித சர்வதேச சட்டங்களையும் மதிக்காமல் தமிழின அழிப்பைத் தொடர்ந்து செய்து வருகிறது. ஆக, விடுதலைப்புலிகள் இல்லாமல் இருந்திருந்தால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும், இலங்கையில் ஆட்சி மாற்றம் வந்தால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும், இலங்கையின் அரசியல் சட்டம் மாறினால் தமிழருக்கு விடிவு கிடைக்கும், அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்தால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று சொல்லப்பட்ட அனைத்தும் பொய்யென்று நிரூபணமாகியிருக்கிறது.**

## தமிழ் அரசியல் சிறைவாசிகளை விடுதலை செய்ய மறுக்கும் இலங்கை அரசு

இந்த பேரிடரைப் பயன்படுத்தி இலங்கை சிறையில் இருக்கும் (கடுமையான) சிங்கள குற்றவாளிகள் 2,961 பேரை இனப்படுகொலை இலங்கை அரசு விடுதலை செய்திருக்கிறது. இதில் பத்தாண்டுகளுக்கு மேலாக எந்தவித குற்ற அறிக்கையும் தாக்கல் செய்யப்படாமல் வெறும் விசாரணை சிறைவாசியாக இருக்கும் 84 தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரைக்கூடச் சிங்கள அரசு விடுதலை செய்யவில்லை. இதில் கொடுமை என்னவென்றால், 2000 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 5 வயதுக் குழந்தை மற்றும் 2 இளைஞர்கள் உள்ளிட்ட 8 தமிழர்களைப் படுகொலை செய்த இலங்கை அரசின் இராணுவ அதிகாரி ‘சுனில் ரத்நாயக்கவுக்கு’ 2015-ல் மரணதண்டனை விதிக்கப்பட்டது. இந்த பேரிடரைப்

பயன்படுத்தி அவசர அவசரமாக அந்த கொலையாளிக்கு பொது மன்னிப்பு கொடுத்து விடுதலை செய்திருக்கிறது.

10,000 பேர் மட்டுமே இருக்கக்கூடிய சிறையில் 26,000 பேரை அடைத்துவைத்திருக்கிறது இலங்கை அரசு. இதனால், கொரொனா தொற்று இங்குப் பரவ வாய்ப்பிருக்கிறது என்று மருத்துவ வல்லுநர்கள் எச்சரித்தபின், சிங்கள கொலையாளிகளை விடுதலை செய்த சிங்கள அரசு, தமிழ் அரசியல் சிறைக்கைதிகளின் விடுதலையை மறுத்திருக்கிறது. இத்தனைக்கும் தமிழர்களின் நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பின், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசியல் சிறைக் கைதிகளை விடுதலை செய்வோமென்று தேர்தல் வாக்குறுதி கொடுத்துத்தான் தற்போதைய இராசபக்சேக்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், 2009-ல் இருந்த அதே இனவழிப்பை தான் இப்போதும் இந்த இராசபக்சேக்கள் தொடர்கிறார்கள்.

இப்படி அப்பட்டமாக, சர்வதேச சமூகத்திடம் 2015-ல் ஐ.நாவில் அமெரிக்கா இந்தியா கொண்டுவந்த தீர்மானத்தை ஒப்புக்கொண்ட அனைத்து சாரத்தையும் இந்த பேரிடர் காலத்தைப் பயன்படுத்தி மீறுகிறார்கள். இதைச் சம்பந்தப்பட்ட இந்தியா உள்ளிட்ட நாடுகள் கேட்குமா என்றால் அவர்கள் தற்போது இந்தப் பிரச்சனையை தங்களுக்குச் சாதகமாக எப்படி மாற்றலாமென்று கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதாவது, தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த பேரிடரால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை மிகக் கடுமையாகக் குறைந்திருக்கிறது. இதனால், தற்போது அதிகளவில் எண்ணெய்யை வாங்கி சேர்த்து வைத்துக்கொண்டால் பிற்காலத்தில் நல்ல பலன் என்று இந்தியா யோசித்துவருகிறது. இதனால் தான், ஒருபக்கம் இந்த பேரிடரில் இந்திய மக்களுக்குப் பெரிதாக எந்த நிதியுதவியும் செய்யாமல் இந்தியப் பிரதமர், 'கைதட்டுங்கள், விளக்கு ஏற்றுங்கள்' என்று மக்களை ஏமாற்றி வருகிறார். மறுபக்கம், இந்த நிதியைக்கொண்டு அரபு நாடுகளிலிருந்து அதிகப்படியான எண்ணெய்யை இறக்குமதி செய்யத் தயாராகி வருகிறது இந்திய அரசு. ஒருவேளை இது நடக்கும்பட்சத்தில், எண்ணெய்யைச் சேமித்து வைக்குமளவுக்கு இந்தியாவிடம் 'சேமிப்புத் தொட்டிகள்' இல்லை. ஏனென்றால், ஏற்கனவே இந்தியாவில் எண்ணெய் இருப்பு அதிகமாகவே இருக்கிறது. எனவே, இந்த சமயத்தில் சேமிப்பதற்கு புதிய சேமிப்புத் தொட்டிகள் இந்தியாவுக்குத் தேவை. அதற்கு இலங்கை அரசு தேவை. ஏனென்றால், இலங்கையில் தமிழர் பகுதியில் இருக்கும் இயற்கைத் துறைமுகமான திரிகோணமலையில் எண்ணெய்யைச் சேமித்துவைக்கும் 99 டேங்குகள் இருக்கிறது. ஏற்கனவே இதில் 50 தொட்டிகள் இந்தியாவின் 'இந்தியன் ஆயில் கார்ப்ரேசனுக்கு' இலங்கை அரசால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது மீதமிருக்கிற தொட்டிகளையும் கேட்டு வாங்கவேண்டுமென்று பெங்களூரைச் சேர்ந்த 'தக்சசீலா இன்ஸ்டிடியூஷன்' என்ற சிந்தனைக் குழுவின் உதவி பேராசிரியர் அனுபம் மனூர் ஏப்ரல் 22 அன்று இந்துஸ்தான் டைம்ஸில் கட்டுரை எழுதினார்.

ஆனால், இந்தியாவின் இந்த முயற்சிக்குச் சீனாவும் ஜப்பானும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. ஏனென்றால், இதே திரிகோணமலை தொட்டியை ஏனைய நாடுகளும் கோருகிறது. ஆகவே, இதை எப்படியாவது தங்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று நாடுகள் துடிக்கின்றன. அதற்கு இலங்கையில் தற்போதைக்கு இருக்கும் தமிழர் பிரச்சனையைப் பேசுவதுபோல் நாடகமாட முயற்சி செய்துவருகிறது இந்தியா. சமீபகாலத்தில் தொடர்ச்சியாக, தமிழர் பகுதிகளில் இலங்கை அரசு சரியாக நிவாரணம் கொடுக்கவில்லை என்று சிங்கள இரத்னா விருது வாங்கிய என். ராம் தலைமையிலான இந்து பத்திரிக்கை எழுதுகிறதென்றால் அதற்குப் பின்னால் இந்தப் பொருளாதார நன்மை மறைந்திருக்கிறது.

இப்படி சர்வதேச நாடுகள் தங்களது நலனுக்காக இலங்கையை அணுகுகின்றன என்பது தெரிந்ததால் தான் சிங்கள அரசு எந்தவித சர்வதேச சட்டங்களையும் மதிக்காமல் தமிழின அழிப்பைத் தொடர்ந்து செய்து வருகிறது. ஆக, விடுதலைப்புலிகள் இல்லாமல் இருந்திருந்தால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும், இலங்கையில் ஆட்சி மாற்றம் வந்தால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும், இலங்கையின் அரசியல் சட்டம் மாறினால் தமிழருக்கு விடிவு கிடைக்கும், அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்தால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று சொல்லப்பட்ட அனைத்தும் பொய்யென்று நிரூபணமாகியிருக்கிறது. இலங்கையில் தொடரும் தமிழின அழிப்பு தீரவேண்டுமென்றால் 'தனித்தமிழீழம்' என்பதே ஒரே தீர்வு என்பதை வரலாறு மீண்டுமொருமுறை உணர்த்தியிருக்கிறது.

●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com


மே17 இயக்கக் குரல்
தமிழின புவிசார் அரசியல் செய்தி இதழ்

தமிழ்நாட்டுக்கான ஆண்டு சந்தா ரூ.400
வெளிமாநிலத்திற்கு ரூ.600

மாதாந்திர இதழினைப் பெற
தொடர்பு கொள்ளவும்: 9884072010

மின்னஞ்சல்: may17voice@gmail.com



# இனப்படுகொலை எதிர்ப்பு ஓவியங்கள்

ஓவியம்: **பப்லோ பிகாசோ**



மக்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளைக் கண்டித்தும், அம்பலப்படுத்தியும், மக்களின் துயரங்களை வெளிப்படுத்தியும் ஓவியங்கள் வரலாறு முழுவதும் வரையப்பட்டுள்ளது. கலைப்படைப்புகள் மனிதச் சமூகத்தின் அவலங்களை பதிவு செய்வதும், அதை மக்களிடம் கொண்டு சேர்ப்பதும், வன்முறைகளை எதிர்த்த உணர்வுகளை, சிந்தனைகளை கூர்மைப்படுத்துவதுமாக ஒரு வலிமையான பாரம்பரியத்தை வைத்திருக்கிறது. 1808இல் பிரஞ்ச் நெப்போலியனின் படைகள் ஸ்பானிய மக்களை படுகொலை செய்யும் பயங்கரவாதத்தை தனது ஓவியத்தினால் ப்ரான்ஸிஸ்கோ கொயா வெளிப்படுத்தினார். இந்தப் புகழ் பெற்ற ஓவியத்தின் வழிமுறையில் பப்லோ பிகாசோ எனும் உலகப்புகழ்பெற்ற ஓவியர்

18 ஜனவரி 1951இல் கொரிய நாட்டின் மீது அமெரிக்கா தொடுத்த போரை கண்டித்து ஓவியத்தை உருவாக்கினார். பிரான்ஸிஸ்கோ கோயாவின் ஓவியத்திற்கும், பப்லோ பிகாசோவின் ஓவியத்திற்குமான ஒப்புமையை நன்கு காணமுடியும். இடப்புறத்தில் அப்பாவி மக்களும், வலப்புறத்தில் அரச படைகளுமாக எதிரெதிர் நிலையில் நின்று நிகழும் இந்த வன்முறையை வெளிப்படுத்திய இருவரின் ஓவியங்களும் உலகப்புகழ் பெற்றவை.

பிக்காசோவின் ஓவியமானது வடகொரியாவின் அகதிகள் முகாமில் அமெரிக்க ராணுவம் நடத்தியப் படுகொலையினை சித்தரிக்கும் படைப்பாக வெளியானது. அமெரிக்கப்படைகளின் கொடுமைகளை அம்பலப்படுத்தும் விதமாக இப்படம் வரையப்பட்டது.

இந்த ஓவியத்தில் கொல்லப்பட இருக்கிற பெண்களின் முகங்கள் முகமூடியை ஒத்ததாக மாற்றியமைத்திருந்தார் பிகாசோ. கோயாவின் ஓவியத்தில் வெளியான அப்பாவிகளின் மரண ஓலத்தையும், அரச பயங்கரவாதத்தையும் தனக்கே உரிய பாணியில் பிகாசோ ஓவியமாக்கி இருந்தார். மனித சமூகம் எதிர்கொள்ளும் வன்முறையை, துயரத்தை தத்துரூபமான ஓவியங்கள் அதிகம் வெளிப்படுத்துவதில்லை. தாங்கவியலாத துயரத்தை மனிதகுலம் சந்திக்கும் பொழுது அவ்வலியை ஓவியம் வெளிப்படுத்துகிறது. மனிதர்களால் உணரமுடியாத வலியை, ஓவியங்கள் அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றன. வலியை கொண்டு சேர்க்கின்றன. பிகாசோவின் ஓவியத்தில் அரசப்படைகளான அமெரிக்கப் படைகள் கற்காலத்திலான மிருகங்களுக்கு ஒப்பான உடல்வாகைப் பெற்றிருக்கின்றன. ஒழுங்கமைந்த நிலையில் நிற்கின்றன. கொலைக்கருவிகள் அப்பாவி பெண்களை நோக்கி நீட்டியபடி கொல்லத்துடிக்கும் நிலையிலிருப்பதை சித்தரிக்கின்றன. அரச



ஓவியம்: ப்ரான்ஸிஸ்கோ கொயா


படைகள் ஆண்குறிகளற்று இருப்பதை பிகாசோ, இந்த வன்முறை நிறுவனங்களும், போர்களும் அடுத்தத் தலைமுறையை உருவாக்கும் தகுதியற்றவை என்பதைக் காட்டுகிறார். இந்த அரசபடைகளில் பழங்கால படைகளைப் போன்ற உடைகளோடும், ஆயுதங்களோடும் இருப்பதையும், நவீன ஆயுதங்களையும் தரித்திருப்பதையும் ஒருசேர காட்டும் பொழுது, இந்த போர் நிறுவனம் காலம் காலமாக இவ்வாறே மக்களுக்கு எதிரானதாக, அப்பாவிகளுக்கு எதிரானதாக வலுப்பெற்றிருப்பதை காட்டுகிறது. இப்படியான ஒரு மலட்டுத்தன்மை கொண்ட அரசப் படைகளை எதிராக பலியாடுகளாக நிற்பவர்களில் கற்பினிப்பெண்களும், குழந்தைகளுமாக இருப்பதை காட்டுகிறார். அரசப் படைகளுக்கு அருகே நிற்கும் இளம்பருவப் பெண் அதீத துயரத்தில் மனநிலை மறந்தவளாக இருப்பதைக் காட்டுகிறது ஓவியம். அவள் அவ்விடத்திலேயே இல்லாதது போன்ற தோற்றத்தையே அவள் வெளிப்படுத்துகிறாள். இந்தக் கொர்டூர சூழலின் துயரத்திலிருந்து விடுபட்டு நிற்பவளாக, இத்துயரத்தை தாங்க இயலாதவளாக நிற்கிறாள். இத்தகைய காட்சியை இசைப்பிரியாவின் இறுதிக் கணங்களில் நாம் காண முடியும். பதட்டமற்ற இறுக்கமான அமைதியோடு சிங்களப்படைகளுக்கு நடுவில் அவர் அமர்ந்திருக்கும் அக்காட்சி நம் மனத்தை குலைத்துப் போடுகிறது. இந்த தாங்கொண்ணா துயரத்தையே போர் தருகிறது என்பதை பிகாசோ சித்தரிக்கிறார். கொரிய இனப்படுகொலையை சித்தரித்த ஓவியம் நம் தமிழீழ இனப்படுகொலை போருக்கும் பொருந்தும். இசைப்பிரியாவின் இறுதிக்கணங்களில் அவர் மனதில் ஓடியவை உலகிற்கு சொல்லப்படவேண்டியவை.




இப்பெண்களுக்கு கீழே தரையில் விளையாடும் குழந்தைக்கு முகம் முழுமையடையவில்லை. அக்குழந்தையால் இந்த மிருகத்தனமான போரை புரிந்து கொள்ள இயலாத பருவம், இதையே முள்வேளிமுகாமில், கிளிநொச்சியிலிருந்து மக்கள் நகரும் பொழுது குழந்தைகள் தூக்கிச் சென்ற பொம்மைகளின் வழியே புரிந்து பொறுத்திப் பார்க்க இயலுகிறது. வளர்ந்த நிலையிலிருக்கும் சிறுவன் இந்த பயங்கரவாதத்தை உணர்ந்தவனாக தன்னைக் காக்க தன் குடும்பத்தினரை நோக்கி ஓடுவதை காட்டுகிறது. சிறுவனை சுமந்திருக்கும் தாய் தன் மார்போடு அணைத்து வானத்தை பார்க்கிறாள். மரணத்தின் நிழலை புரிந்து கொண்டுவிட்ட செயலாக இது வெளிப்படுகிறது. இடது புறமிருக்கும் வயது முதிர்ந்த சிறுவன் தன் கண்ணை தாயின் உடம்போடு புதைத்துக் கொள்கிறான். அச்சத்தின் உச்சத்திலிருக்கிறான் அவர். இந்த அப்பாவிகள் வெளிப்படுத்தும் தாங்கொண்ணா துயரம் போரை–அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் மானுட உலகிற்கு பொதுவானது. இவ்வாறான அரச பயங்கரவாதத்திற்கு எதிரான ஓவியப்படைப்புகள் குறிப்பாக இனப்படுகொலைக்கு எதிரான ஓவியப்படைப்புகள் ஒரு சிலவற்றை இங்கே தொகுத்திருக்கிறோம். கலை என்பது மக்களுக்கானது, மானுட விடிவிற்கானது, மாற்றத்திற்கானது என்பதை இக்கலைஞர்கள் நம்மிடையே உறத்துச் சொல்கிறார்கள். ஓவியர் மருது, ஓவியர். வீரசந்தானம், ஓவியர் புகழேந்தி, ஓவியர் புருசோத்தமன் போன்ற ஓரிரு கலைஞர்கள் தமிழினப்படுகொலையின் வலிகளை தமது படைப்புகளில் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். கலையுலகின் ஊடான இப்போராட்டம் தொடர்ந்து நடக்கட்டும், மானுடம் வெல்லட்டும். ●

# தமிழீழ இனப்படுகொலை ஓவியங்கள்

ஓவியம்: டிராட்ஸ்கி மருது







ஓவியம்: டிராட்ஸ்கி மருது



சிற்பம்: வீரசந்தானம்



ஓவியம்: புருசோத்தமன்



'கொலையில் உதித்த தெய்வம்' இனப் படுகொலை செய்யப்பட்ட கோனேஸ்வரி என்ற இளம் தங்கையின் நினைவாக வரையப்பட்ட ஓவியம்.

ஓவியம்: அருட்யூன் கோஸுக்குஷியன்




## அர்மினியன் இனப்படுகொலை

துருக்கியில் 1914 ஆண்டு முதல் 1923 ஆண்டு வரை கிட்டத்தட்ட 15 இலட்சம் அர்மினிய இன மக்கள் ஒட்டமான் அரசால் படுகொலை செய்யப்பட்டார்கள். 100 ஆண்டுகள் கடந்தும் அர்மினிய இன மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலையை இன்றும் நினைவு கூறுகிறார்கள். உலகில் 25 நாடுகளில் 135க்கும் மேற்பட்ட இடங்களில் அர்மினிய இனப்படுகொலை நினைவு சின்னங்களை அர்மினயர்கள் அமைத்துள்ளார்கள். இதுவரை துருக்கி அரசு அர்மினிய இனப்படுகொலையை மறுத்து வந்த போதிலும் இப்போது 32 நாடுகளின் அரசுகள் அர்மியனிர்களின் இனப்படுகொலையை அங்கிகரித்து உள்ளது.

ஓவியம்: வான் நாத்





## கம்போடியன் இனப்படுகொலை

கம்போடியாவில் 1975 ஆண்டு முதல் 1979 ஆண்டு வ‌ை Khmer Rouge என்ற கம்யூனிச கட்சி 'போல் பட்' தலைமையின் கீழ் கிட்டத்தட்ட 20 இலட்சம் கம்போடியன் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். 1998 ஆம் ஆண்டு போல் பட் இறப்பதற்கு முந்திய மாதம் கூட கம்போடியன் இனப்படுகொலையை மறுத்தார். ஆனால் 2013 ஆண்டு கம்போடியன் பிரதமர் கன் சீன் நாடமன்றத்தில் லுஜூதுளஷெ ஷெலிற்ஆள செய்த கம்போடியன் இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றம் சட்ட மசோதாவை ஒருமனதாக நிறைவேற்றினார்.

ஓவியம்: சாம் பாக்



## யூத இனப்படுகொலை

செர்மனியில் 1933 ஆண்டு முதல் 1945 ஆண்டு வரை கிட்லர் தலைமையிலான ஆரிய இனவெறி நாசி படை கிட்டத்தட்ட 60 இலட்சம் யுத மக்கள் இனப்படுகொலை செய்தது. கோலோகோசுடு என்ற யூத இனப்படுகொலை வரலாற்றில் இடம் பெற்று துயரமான நிகழ்வு. பன்னாட்டு கோலோகோசுடு இனப்படுகொலை நினைவு நாளாக சனவரி 27 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. உலகில் பல்வேறு நாடுகளில் கோலோகாசுடு இனப்படுகொலை நினைவு சின்னங்கள் மற்றும் அருங்காட்சியங்களை யுதர்கள் கட்டி எழுப்பி உள்ளார்கள்.

ஓவியம்: சிலாஸ்




## ருவாண்டா இனப்படுகொலை

ருவாண்டாவில் 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 தேதி முதல் சூலை 15 தேதி வரை துட்சி மற்றும் துவா சிறுபான்மை இன மக்களை ருவண்டா குட்டு இன பெரும்பான்மை தேசியவாத அரசு இனப்படுகொலை செய்தது. கிட்டத்தட்ட 10 இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 7ஆம் தேதி ருவண்டா இனப்படுகொலை நினைவு கூறப்படுகிறது

ஓவியம்: முகமது சபானே





## பாலஸ்தீன் இனப்படுகொலை

மத்திய கிழக்கு ஆசியாவில் இப்போது நிகழ்காலத்தில் யுத இசுரேல் அரசு பயங்கரவாதத்தால் நடைபெற்று கொண்டிருக்கும் பாலஸ்தீன் மக்களின் பூர்வீக நில ஆக்கரமிப்பு மற்றும் படுகொலைகள் பாலஸ்தீன் இனப்படுகொலை. 1948 ஆம் ஆண்டு இசுரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டதிலிருந்து பூர்வீகபாலஸ்தீன் மக்களின் தனி நாடு போராட்டம் தொடர்கிறது. இசுரேல் அரச பயங்கரவாதத்தால் கிட்டத்தட்ட 25,000 மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் இதுவரை படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள 138 நாடுகள் பாலஸ்தீன் தனி நாடு கோரிக்கையை அங்கிகரித்து உள்ளன. ஆனால் இசுரேல்,அமெரிக்கா,இங்கிலாந்து,ஆசுத்திரேலியா மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் பாலஸ்தீனத்தின் தனி நாடு கோரிக்கையை அங்கிகரிக்கவில்லை.

ஓவியம்: அம்மர்






## யசிடி இனப்படுகொலை

**வடக்கு ஈராக்கில் 2014 ஆண்டு முதல் 2017 வரை யசிடி என்ற பூர்வகுடி மக்கள் இசுலாமிய ஈராக் அரசால்(ISIL) மத மாற்ற அடிப்படையில் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.இதில் கிட்டத்தட்ட 5000 யாழ்டி மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் 10,000 மக்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். வடக்கு ஈராக்கில் நடந்த யாழ்டி இனப்படுகொலையை ஐக்கிய நாடுகள் சபை,ஆசுத்திரேலியா, காட்லாந்து, அர்மினிய மற்றும் யூரோப்பிய நாடாளுமன்றம் அங்கரித்துள்ளது.**

# ஆர்எஸ்எஸ்-பாஜகவினால் பிற்படுத்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் அநீதி!

## மருத்துவ மேற்படிப்பில் உயர்சாதியினர் பயன்பெறும் வகையில் OBC பிரிவினரின் இடஒதுக்கீடு உரிமைகள் பறிக்கப்படுவதை மே17 இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது – 14 மே, 2020

சமீபத்தில் வெளிவந்த மருத்துவ மேற்படிப்பிற்காக மாணவர்கள் ஒதுக்கீட்டு பட்டியலில் இந்திய அரசின் வசம் மொத்தமுள்ள 9,550 இடங்களில், OBC பிரிவினருக்கு வெறும் 371 இடங்களை மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. இது 3.8 சதவீதம் மட்டுமே. இடஒதுக்கீடு உரிமையின் அடிப்படையில் OBC பிரிவினருக்கு 27% ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதாவது, OBC பிரிவினரின் உரிமையான 2578 இடங்களை ஒதுக்கப்பட வேண்டிய நிலையில், ஆளும் ஆர்எஸ்எஸ்-பாஜக அரசு வெறும் 371 இடங்களை மட்டுமே ஒதுக்கி, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின நடுத்தர-ஏழை மாணவர்கள் மருத்துவ மேற்படிப்பை மேற்கொள்ள முடியாமல் தடுத்துள்ளது.

அதே வேளை, உயர்சாதி ஏழைகள் என்ற பெயரில் மாதம் ரூ.60,000 வருமானமுள்ள பார்ப்பனர்களுக்கு 653 (6.8%) இடங்களை பொருளாதார அடிப்படையில் (EWS) இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இது போக 7125 (74.6%) இடங்கள் பொதுப்பிரிவு அடிப்படையில் பணம்படைத்த உயர்சாதியினருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. மேலும் பட்டியல் (SC) பிரிவினருக்கு 1385 (14.5%) இடங்களும், பழங்குடி (ST) பிரிவினருக்கு 669 (7%) இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில், இடஒதுக்கீடு முறையை முழுமையாக பின்பற்றாமால், பொதுப்பிரிவு மூலம் உயர்சாதியினர் பயன்பெறும் வகையில் மருத்துவ இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக 27% இடங்களில் 3.8% மட்டுமே ஒதுக்கீடு செய்து OBC பிரிவினருக்கு மாபெரும் துரோகம் இழைக்கப்பட்டுள்ளது.

மத்தியில் மோடி தலைமையிலான பாஜக அரசு பதவியேற்றதிலிருந்து, சூத்திரர்கள் கல்வியறிவு பெற மறுக்கும் மநுதர்மத்தை அடிப்படையாக கொண்ட ஆர்ஆர்எஸ் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டுகிறது. அதன்படியே, அண்ணல் அம்பேத்கரும் தந்தை பெரியாரும் போராடி பெற்றுத்தந்த இடஒதுக்கீடு முறையை சீர்குலைக்கும் நோக்கில், உயர்படிப்பிற்கு NEET போன்ற நுழைவுத்தேர்வுகளையும், பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடு முறையையும் அறிமுகப்படுத்தி ஆர்எஸ்எஸ்-பாஜக அரசு சமூக நீதிக்கு எதிராக செயல்படுகிறது. அப்படியாகவே முதலில் மருத்துவ படிப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட NEET நுழைவுத்தேர்வு, தொடர்ந்து மருத்துவ மேற்படிப்பிற்கும், பல் மற்றும் சித்தா உள்ளிட்ட மாற்று மருத்துவத்திற்கு கட்டாயமாக்கியது. இதனாலே அனிதா உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட-பட்டியலின-பழங்குடி மாணவர்களுக்கு மருத்துவ படிப்பு மறுக்கப்பட்டது.

NEET என்னும் நுழைத்தேர்வை திணித்த பின்பு , இந்தியா முழுவதும் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ கல்லூரிகளின் மருத்துவ மேற்படிப்பிற்கான 50% இடங்களை ஆர்எஸ்எஸ்-பாஜக அரசு பறித்துக்கொள்கிறது. அதாவது மொத்தமுள்ள 19100 இடங்களில் 9550 இடங்களை மாநிலங்களிடமிருந்து பெறப்பட்டவையே. தமிழ் நாட்டை பொறுத்தவரை மொத்தமுள்ள 26 மருத்துவ கல்லூரிகளில் மருத்துவ மேற்படிப்பிற்காக மொத்தம் 1758 இடங்கள் உள்ளன. இதில், 879 இடங்கள் இந்திய அரசின் மத்திய தொகுப்பிற்கு செல்கிறது. இவை தமிழ் நாட்டோடு இருந்திருக்குமானால், 69% இடஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், மாநில வளங்களை சுரண்டும் பாஜக அரசு 50% இடங்களை பறித்து இடஒதுக்கீட்டை முறையாக நடைமுறைப்படுத்தாமல், பிற்படுத்தப்பட்ட-பட்டியலின-பழங்குடி மக்களின் மருத்துவ கனவை சிதைக்கிறது.





ஆர்எஸ்எஸ்-பாஜக அரசின் இந்த அப்பட்டமான கல்வி உரிமை பறிப்பை மே பதினேழு இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது. தமிழர்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட மருத்துவ இடங்களை களவாடிசெல்லும், தமிழர்களின் கல்வி உரிமையை பறிக்கும், சமூகநீதிக்கு எதிராக செயல்படும் பாஜக அரசோடு கூட்டணி என்ற பெயரில் அனைத்தையும் வேடிக்கை பார்க்கும் அதிமுக அரசையும் கண்டிக்கின்றோம். இடஒதுக்கீட்டிற்கு எதிராக செயல்படும் பாஜக அரசினை கண்டிக்க தமிழ்நாட்டிலுள்ள அரசியல் அமைப்புகள் முன்வர வேண்டும். உயர்சாதியினர் பயன்பெறும் வகையில் கொண்டுவரப்பட்ட NEET தேர்வையும், பொருளாதார அடிப்படையிலான 10% இடஒதுக்கீடை இரத்து செய்வதோடு, பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இடஒத்துகீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கல்வி என்பது மாநில உரிமை. அதனை முழுமையாக மீண்டும் மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்பதே இதற்கு நிரந்தர தீர்வாக இருக்கும். இடஒதுக்கீட்டை காப்பது எனபது சமூகநீதியை காப்பதற்கு ஒப்பாகும்.

தமிழ்த்தேசிய போராளி **புலவர் கலியபெருமாள்** அவர்களுக்கு

# வீரவணக்கம்

இன்று நமக்குக் கிடைத்திருக்கிற உரிமைகள் யாவும் யாரோ இட்ட பிச்சை அல்ல.பல தலைவர்களின் இடைவிடாத தொடர் போராட்டங்களினால் இன்று நமக்கு கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட தலைவர்களில் ஒருவர்தான் தமிழகத்தில் 'புலவர்' என்று அறியப்படுகிற தோழர் கலியபெருமாள்.

சாதி ஆதிக்கத்தையும், நிலப்பிரபுத்துவ பண்ணையார்களின் அடாவடித் தனத்தையும் எதிர்த்து உழைக்கும் மக்களை தமிழ்த்தேசியம் என்ற ஒற்றை புள்ளியில் இணைத்த மாபெரும் போராளி புலவர் கலியபெருமாள். இதற்காக அவரும் அவர் குடும்பம் மொத்தமும் பட்ட இன்னல்கள் சொல்லி மாளாதவை. ஆனால் அதை எதையும் எப்போதும் அவர் சொல்லிக்கொண்டதில்லை. 'என்னை பொறுத்தமட்டில் எனது வாழ்வில் எத்தனையோ அடக்குமுறைகளையும் சித்திரவதைகளையும் எதிர் கொண்டுள்ளேன். எனது அரசியல் பணிகளுக்கு எனது குடும்பமே தாங்க முடியாத கொடுமைகளை எல்லாம் சந்தித்துள்ளது. ஒரு புரட்சியாளர் என்ற முறையில் இவற்றை நான் சாதாரணமாகவே கருதுகிறேன். மரணம் என்பது சாதாரணமானது தான்.இந்த மரணம் இறுதியாக என்னை அணைக்கும் நாள் வரை தமிழினத்தின் விடுதலைக்காக தமிழ் மொழியின் ஏற்றத்திற்காக மக்களின் சனநாயக உரிமைகளுக்காக, மனித உரிமைகளுக்காக தொடர்ந்து போராடுவதையே எனது இலட்சியமாக நான்



பிரகடனப்படுத்துகிறேன் என்றார். ஒரு வழக்கில் புலவர் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பொழுது கருணை மனு போட தோழர்கள் வற்புறுத்திய போது 'அடிப்படை சமூக மாற்றத்திற்கான போராளியாக உருவெடுக்க முடிந்த என்னால், என் உயிரைக் காக்க கருணை மனு கொடுக்கும் அளவுக்கு தாழ்ந்து போக முடியவில்லை' என்று மறுத்து விட்டார். பின் வெளிப்புற அழுத்தத்தின் காரணமாக அப்போதைய தமிழக அரசு அவரை விடுதலை செய்தது.

அவரின் இறுதி வேண்டுகோள் என்பது 'முற்போக்கு சிந்தனையாளர்கள் அனைத்து சமூகத்திலிருந்தும் சமூகக் கொடுமைகளைக் களைய தோள் கொடுக்கின்றனர். ஆனால் பெரும் எண்ணிக்கையில் போராளிகளாக தியாகம் செய்பவர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களிடம் இருந்து வருகிறார்கள். எனவே இந்த இரு சமூகத்தின் ஒற்றுமை என்பது நடப்பு அரசியலுக்கும் சரி, எதிர்கால புரட்சிகர அரசியலுக்கும் சரி மிக மிக அவசியமானது. சமூக மாற்றத்தில் அக்கறையுள்ள முற்போக்கு சிந்தனையாளர்களும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட தலைவர்களும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தங்களது பங்களிப்பை தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள் என்று இறுதிவரை தமிழ்தேசிய விடுதலைக்காகவே வாழ்ந்தவர் தோழர் புலவர் கலியபெருமாள். அவருக்கு மே17 இயக்கத்தின் செம்மார்ந்த வீரவணக்கத்தை செலுத்துகிறோம்.

**மே பதினேழு இயக்கம்**
15 மே 2020

## தமிழக அரசே! ஈரான் நாட்டிற்கு கூலி வேலைக்கு சென்ற மீனவர்களை மீட்டிடு! - மே17 இயக்கம் – 16 மே 2020

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடுகளுக்கிடையேயான போக்குவரத்து தடைபட்டுள்ள நிலையில், ஈரான் நாட்டிற்கு மீன்பிடி தொழிலுக்கு சென்ற குமரி மாவட்டத்தை சேர்ந்த 562 மீனவர்கள் உட்பட தமிழ் நாட்டை சேர்ந்த 750 மீனவர்கள் தாயகம் திரும்ப முடியாமல், கடந்த மூன்று மாதங்களாக அங்கு சிக்கி தவித்து வருகின்றனர். மூன்று மாதம் முன்னரே இந்திய அரசுக்கு தகவல் அளிக்கப்பட்டும் அவர்களை மீட்பதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் இந்திய அரசு மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில், 06-03-20 அன்று தமிழ் நாட்டு முதலமைச்சரை சந்தித்து மீனவர்களை மீட்க அவர்களது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்தனர். அதனை தொடர்ந்து மீனவர்களை மீட்க கப்பல் அனுப்பப்படுவதாக இந்திய வெளியுறவுத்துறை தகவல் அளித்தது. ஆனால், ஒவ்வொருவரும் பயணக்கட்டணமாக ரூ.7,600 கட்ட வேண்டும் என்று இந்திய அரசு தெரிவித்தது. அது மட்டுமல்லாமல், விசா ரத்துக்கான செலவையும், கப்பல் புறப்படும் பந்தர் அப்பாஸ் துறைமுகத்திற்கு வருவதற்கான செலவையும் மீனவர்களே ஏற்க வேண்டும் தெரிவித்தது. இதனால் ஒரு மீனவர் குறைந்தபட்சம் ரூ.10,000 செலவு செய்தால் மட்டுமே தாயகம் திரும்ப முடியும் என்ற சூழல் உருவாகியுள்ளது. ஈரான் நாட்டிற்கு பெருநிறுவனங்களுக்கு வேலைக்கு சென்றவர்களை போல் இவர்களுக்கு மாதச்சம்பளம் கிடையாது. மீனவர்கள் தினக்கூலியாக வேலைக்கு சென்றவர்கள். தினக்கூலிகள் என்பதினாலேயே, ஒரு வேலை உணவை மட்டுமே உட்கொண்டு, மீன்பிடி படகிலேயே தங்கியுள்ளனர். ஆகையால் மற்ற நிறுவன வேலைகளில் இருப்பவர்கள் போல் செலவு செய்து தாயகம் திரும்புவது சாத்தியமில்லாதது. இச்சூழலை அறிந்தும் அரசு எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. வந்தே பாரத் என்னும் திட்டத்தின் கீழ், சிறப்பு விமானங்களை அனுப்பி அமெரிக்கா, UAE, குவைத், ஏமன் உள்ளிட்ட வெளிநாடுகளில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான பணக்கார இந்தியர்களை மீட்டு வரும் இந்திய அரசு, இந்தியாவிற்குள் வேலைக்காக புலம்பெயர்ந்த ஏழை மக்களை ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நடக்கவிட்டது போல், ஈரானில் சிக்கித்தவிக்கும் தமிழ் நாட்டு மீனவர்களையும் கைவிட்டுவிட்டது. கூலிக்கு வேலைக்கு சென்றவர்களை மீட்பதற்காக பணம் கேட்ட இந்திய அரசை மே பதினேழு இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது. மீனவர்களின் குடும்பத்தினர் கோரியது போல், அவர்களை மீட்க தமிழ் நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அவர்களது செலவுகளை தமிழ் நாடு அரசே ஏற்றுக்கொண்டு, இந்திய கப்பல் மூலம் அவர்களை மீட்க வேண்டுமென தமிழக அரசிடம் மே பதினேழு இயக்கம் கோரிக்கைவிடுக்கிறது.

### மலேயா தொழிலாளர்கள், தமிழர்களின் எழுச்சிக்கு வித்திட்ட

# தோழர் 'மலேயா' கணபதி தோழர் வீரசேனன்

### மலேசியத் தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக் குரல்
### 71 ஆம் ஆண்டு வீரவணக்கம்

ஆங்கிலேயரால் பல்வேறு வழிகளில் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டு மலேசியாவிற்கு கூலிகளாக கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் தமக்குள்ளாக அரசியல் ஆற்றலாக திரள இயலாமல் இருந்தனர். இதில் சாதியும், ஆங்கில அரசின் ஒடுக்குமுறையும் முதன்மையானவை. இந்நிலையில் 1929-ல் பெரியாரின் மலேசியா பயணத்திற்குப் பின் மலேசியா-சிங்கப்பூரிலிருந்த தமிழர்களிடத்தில் பெரிய அளவிலான எழுச்சி உருவாகியிருந்தது. தங்களது சாதிய பிளவுகளைக் கடந்து ஒன்று திரள ஆரம்பித்தனர். தமது அடிமை நிலையிலிருந்து மீளும் கருத்துக்கள் தமிழர்களிடத்தில் பரவின. சஞ்சிக் கூலிகள் என்றழைக்கப்பட்ட பெருமளவில் உழைப்புச்சுரண்டலில் சிக்குண்டிருந்த, அடிமைகளாக நடத்தப்பட்ட தமிழர்கள், பெரியாரின் மானமிகு பேச்சினால் அவர்களது உரிமையைக் கோரும் நிலைக்கு மாறியிருந்தனர். முதலாளிகள் வந்தால் காலணிகளைக் கழட்டி கையில் வைத்துக்கொள்வதிலிருந்து மாறி காலணிகளை அணிந்தே நடக்கத் தொடங்கினர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஆங்கிலேய காலனிக்கு கீழ் ஒன்றாக இருந்த மலாயா (மலேசியா) சிங்கப்பூர்-ல் கூலிகளாக இருந்த தொழிலாளர்கள், ஆங்கிலேய காலனியத்திற்கு எதிராகவும், தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட உழைப்புச் சுரண்டலுக்கும் எதிராகவும் பெருமளவில் அணியமானார்கள். இந்த எழுச்சியை சாத்தியமாக்கியவர் மலேயா கணபதி. புரட்சிகர செயல்பாட்டில் ஈடுபட்ட கணபதியுடன் இணைந்து செயல்பட்டவர் வீர சேனன்.

### மலேயா கணபதியும் சிங்கப்பூர் வீரசேனனும்:

தோழர். மலேயா கணபதி அகில மலாயா தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராக இருந்தவர். 1912-ல் தமிழ்நாட்டில் ஆறுமுகம் தேவர்-வைரம்மாள் ஆகியோருக்கு தம்பிக்கோட்டை எனும் ஊரில் பிறந்தவர்.





தோழர் வீரசேனன்



தோழர் 'மலேயா' கணபதி

தோழர். வீரசேனன் சிங்கப்பூர் பொதுத்தொழிலாளர் சங்க தலைவராகவும் துறைமுகத் தொழிலாளர் சங்க செயலாளராகவும் இருந்தவர். மலேயா கணபதிக்குப் பிறகு மலேயா தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராகவும் இருந்தார். இவர் 1927 ஆம் ஆண்டு பிறந்தவர் என்பதைத் தவிர அவரைப் பற்றிய வேறு தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

## தொழிலாளர்கள் போராட்டம்

மலேயா கணபதியும் வீரசேனனும் மலேசியா மற்றும் சிங்கப்பூரில் தொழிலாளர்களை பெருமளவில் ஒன்றிணைத்து அடிப்படை தொழிலாளர் உரிமைக்கான பல்வேறு வெற்றிகரமான போராட்டங்களை முன்னெடுத்தனர். மேலும், இந்திய விடுதலைப் போராட்டத்திலும் தங்களை இணைத்துக்கொண்டு நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்திலும் பங்காற்றினர். பின்னர், 1946 ஆம் ஆண்டு முதல் இருவரும் இணைந்து தொழிலாளர் உரிமைக்காக களம் கண்டனர். பல்வேறு பொது வேலை நிறுத்தங்களை அரசே அஞ்சும்படி நடத்தினர்.

எடுத்துக்காட்டாக, 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ராபின்சன் பூங்காவில் மிகப்பெரிய அளவில் தொழிலாளர்களது போராட்டம் நடைபெற்றது. அதில் மலேயா கணபதி, வீரசேனன், சம்சுதீன் ஆகியோர் வீர உரை ஆற்றினார்கள். அவர்களது உரை தொழிலாளர்களது உணர்ச்சிகளை தட்டி எழுப்பியது. அவர்களை ஒடுக்க நினைத்த அரசு கைது செய்ய முயற்சி செய்தபோது, ஆங்கிலேய காவல்துறை துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டது. அதில் இரண்டு சீன தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஆனால், அந்த எழுச்சி மிகு பேரணியின் விளைவாக தொழிலாளர்களின் கோரிக்கைகள் பல அரசால் நிறைவேற்றப்பட்டன.

இப்படியாக தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்டங்கள் தொடர்ந்தன. குறிப்பாக, 1947 ஆம் ஆண்டு வாரத்துக்கு இரண்டு நாள் வேலைநிறுத்தம் என்ற கணக்கில் அந்த ஆண்டு மட்டும் 89 தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் நடத்தப்பட்டன. 1946,1947,1948 ஆம் ஆண்டுகளில் தொழிலாளர்களால் மே தின கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

தொழிலாளர்களது வேலைநிறுத்தங்கள் நாள்களில் தொடங்கி வாரங்கள் பிறகு மாதங்களாக நீடித்தன. அவற்றிற்கு தலைமை தாங்கிய மலேயா கணபதி மற்றும் வீரசேனன் ஆகியோரை அச்சுறுத்தலாக அரசும் முதலாளிகளும் பார்த்தனர். இதுமட்டுமல்லாமல், மலேயா கம்யூனிச கட்சி அரசுக்கு எதிராக ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது. இந்நிலையில், 1948 ஆம் ஆண்டு மலேசிய-சிங்கப்பூர் மண்ணில் ஆங்கிலேய அரசால் அவசரநிலை அறிவிக்கப்பட்டது. கம்யூனிச கட்சி உறுப்பினர்களுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு மலேயா தொழிற்சங்க மேளனத்தின் அலுவலகத்தில் தொடர் சோதனைகளை காவல்துறை நடத்தியது.

அரசுக்கு எதிரான தலைவர்களையும் தொழிலாளர் தலைவர்களையும், கம்யூனிஸ்ட் கட்சியோடு தொடர்பிருப்பவர்கள் என்றுகூறி கைது செய்யும் நடவடிக்கைகளில் இறங்கியது அரசு. இதனால், மலேயா கம்யூனிச கட்சியினைச் சேர்ந்தவர்கள் காடுகளில் தஞ்சம் அடைந்து அங்கிருந்து போராட்டங்களை ஒருங்கிணைக்கத் தொடங்கினர். மலேயா கணபதியும் காடுகளில் தலைமறைவாகி தொழிலாளர் போராட்டங்களை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார்.

## தூக்கு மேடையிலும் தொழிலாளர் நலன் முழங்கிய தோழர்.மலேயா கணபதி

1948 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மலேயா கணபதி ஆங்கிலேய காவல்துறையால் கைது செய்யப்பட்டார். 'அவர் ஒரு கம்யூனிஸ்ட், அவர் கம்யூனிஸ்ட்டுகளுக்கு உதவுகிறார் என்று நம்பப்படுகிறார், கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்ற ஆயுதப் போர் செய்வார், கைது செய்த போது துப்பாக்கியுடன் ஆறு தோட்டக்களை வைத்திருந்தார்' ஆகிய காரணங்களுக்காக அவசரகால சட்டத்தின்படி அவருக்கு தூக்குதண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு எதிராக தமிழ்நாட்டில் பெரியார், அண்ணா, குத்தூசி குருசாமி, ப.ஜீவானந்தம், பி.இராமமூர்த்தி, கல்யாணசுந்தரம்,

சிந்தன் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். தூக்குதண்டனையை தவிர்க்க வேண்டும் என்பதாக ஜவஹர்லால் நேரு பிரிட்டனுக்கான இந்தியத் தூதுவர் மூலம் நேரடி முயற்சிகளை மேற்கொண்டார்.

தண்டனைக்கு எதிராக மலேயா கணபதி மேல்முறையீடு செய்தார். அதில் அவருக்கான தூக்குதண்டனை உறுதிசெய்யப்பட்டது. அவருக்கு விதிக்கப்பட்ட தூக்குதண்டனைக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. முதலில் நிறுத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டு பின்னர், மலேயா கணபதிக்கு எதிராக 4.05.1949-ல் தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டது.

தூக்குதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன் சிறையில் இருந்த தொழிலாளர்களிடத்தில் தமிழிலும், சீன மொழியிலும் உணர்ச்சிமிக்க உரையினை நிகழ்த்தினார் மலேயா கணபதி. தன்னோடு மக்களுக்கான மற்றும் தொழிலாளர்களுக்கான போராட்டங்களில் ஈடுபடுத்திக் கொண்டவர்களை நினைவு கூர்ந்து, தன்னாட்சி, மக்கள் விடுதலை, தொழிலாளர் உரிமை என்று தொழிலாளர்களிடம் தன்னிடம் கனன்ற நெருப்பினைக் கடத்துவதாக உரையாற்றினார்.

தூக்கிலிடும் முன்னும், "மலாயா மண் மாற்றாரிடமிருந்து விடுதலை பெறட்டும், மலாயா நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் வெற்றி காணட்டும், மலாயா நாட்டு மக்களுக்குப் புதிய வாழ்வு மலரட்டும், மலாயா மட்டுமின்றி உலகின் எந்தவொரு பகுதியிலும் அடிமைதனம் விரைந்து முடிவிற்கு வரட்டும், இதுவே எனது இறுதியான உறுதியான விருப்பம், வாழ்க வையகம்!" என்று தூக்குமேடையிலும் மக்களைப் பற்றி சிந்தித்த மாபெரும் போராளி மலேயா கணபதி.

**'மாமனிதர்**
**கணபதிக்கு மறைவு**
**ஏது?**
**காரிருளால் சூரியன்தான்**
**மறைவதுண்டோ?**
**கரைசேற்றால் தாமரையின்**
**வாசம் போமோ?**
**பேரெதிர்ப்பால் உண்மைதான்**
**இன்மையாமோ?**
**பிறர் சூழ்ச்சி செந்தமிழை**
**அழிப்பதுண்டோ?**
**நேர் இருத்தித் தீர்ப்புரைத்துச்**
**சிறையில் போட்டால் நிறை**
**தொழிலாளர்களுணர்வு**
**மறைந்த போமோ?'**

என்று மலேயா கணபதி பற்றி உணர்ச்சிமிகு வரிகளை பாரதிதாசன் எழுதினார்

## தோழர். வீரசேனன் கொலை

மலேயா கணபதி தூக்கிலிடப்படுவதற்கு ஒருநாள் முன்பு (3.05.1949) ஜெலுபூ எனும் இடத்தில் நடைபெற்ற ஆயுதம் ஏந்திய தாக்குதலில் ஆங்கிலேய சிப்பாயால் வீரசேனன் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது அவருக்கு வயது 22!

தோழர். மலேயா கணபதி மற்றும் தோழர். வீரசேனன் தொழிலாளர்களது உரிமைக்காகவும், மக்களின் உரிமைக்காகவும் பல்வேறு போராட்டங்களை அரசுக்கு எதிராக நிகழ்த்தி மலேசியா-சிங்கப்பூர் மண்ணில் ஆங்கிலேய அரசுக்கு பெரும் மிரட்டலாக இருந்தனர். இவர்களது வரலாறு தமிழ்ச் சமூகத்துக்கு மிகவும் அவசியமானதாக இருக்கிறது. தமிழ் மக்களுக்காகவும் தொழிலாளர் நலனுக்காகவும் உயிரையும் துச்சமென மதிக்காமல் போராடி உயிர்த்தியாகம் செய்த தோழர். மலேயா கணபதிக்கும், தோழர். வீரசேனனுக்கும் 71ஆம் ஆண்டு வீரவணக்கம் செலுத்துவோம். புலம்பெயர் தேசத்தில் கணக்கின்றி சுரண்டப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களுக்கும், ஆங்கில அரசினால் இது போல சுரண்டப்பட்ட பல தேசிய தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அயராது போராடி சாவைத் தழுவிய வீரத்தமிழர்கள், பொதுவுடமைப் போராளிகள், தொழிலாளர் தலைவர்களான இருவருக்கும் தாய்த் தமிழகத்திலிருந்து வீரவணக்கம் செலுத்துவோம். ●



கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

ஓவியம்: இரா ரத்னம்



மே 17
2020
ஞாயிறு மாலை
6.30 மணி

# தமிழீழ இனப்படுகொலைக்கான
# 11ஆம் ஆண்டு
# நினைவேந்தல்

## தமிழீழ இனப்படுகொலைக்கு வீட்டிலிருந்து நினைவேந்துவோம்!

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை தமிழர் கடலான மெரீனா கடற்கரையில் கண்ணகி சிலை பின்புறமாகக் கூடி தமிழீழத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழர்களுக்கு நினைவஞ்சலி செலுத்துவதனை தமிழர்களின் பண்பாட்டு நிகழ்வாக மாற்றும் வண்ணம் மே பதினேழு இயக்கம் நினைவேந்தலை ஒருங்கிணைத்து நடத்தி வந்திருக்கிறது.

இந்த ஆண்டு கொரோனா பெருந்தொற்று உலகம் முழுவதும் அனைத்து மக்களையும் மிகப் பெரிய அளவில் அச்சுறுத்தி வருவதால், நினைவேந்தல் நிகழ்விற்கு நாம் நேரடியாக ஒன்று கூட முடியாத சூழல் ஏற்பட்டது. நாம் தனித்து இருப்பதன் காரணத்தினால் நம் நீதிக்கான குரலையோ, நம் மக்களுக்கான அஞ்சலி செலுத்துதலையோ இந்த ஆண்டு நாம் கைவிட இயலாது. நமது எண்ணங்களும், கண்ணீரும், உரிமை முழக்கங்களும் கூடுவதற்கு எந்தப் பேரரசும், எந்தப் பெருந்தொற்றும் தடை போட்டு விட முடியாது.எத்தகைய சூழல் வந்தாலும் இனப்படுகொலையை மறக்க மாட்டோம் என்ற உரிமைக் குரலை இந்திய அரசுக்கும், உலக ஏகாதிபத்தியங்களுக்கும், இனவெறி இலங்கைக்கும் தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. தமிழீழ இனப்படுகொலையை தமிழர்கள் மறக்கவில்லை என்பதனை பறைசாற்ற வரும் மே 17, 2020 ஞாயிறு அன்று மாலை 6 மணிக்கு நாம் ஒவ்வொருவரும் அவரவரின் வீட்டில் இருந்தபடியே, தனிமனித இடைவெளியினை கடைபிடித்து நினைவேந்தலை மேற்கொள்வதற்கான அழைப்பினை மே பதினேழு இயக்கம் விடுத்தது. இதற்கு தமிழகத்திலுள்ள முற்போக்கு மற்றும் சனநாயக கட்சிகள் மற்றும் இயக்கங்கள் ஆதரவளித்தன.

மேலும் ட்விட்டர் இணையதளத்தில் மே 17 அன்று காலை 10 மணி முதல் #Justice4TamilGenocide மற்றும் #Referendum4TamilEelam எனும் Hashtag பரப்புரையினை நிகழ்த்தி, தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட படுகொலைக்கு நீதி கேட்கும் பரப்புரையை இந்தியா முழுதும் கொண்டு சேர்க்கவும் திட்டமிடப்பட்டு வெற்றிகரமாக அனைத்து தரப்பு மக்களின் பங்கேற்போடு சாத்தியமானது.

**மே பதினேழு இயக்கம்**

# 11ஆம் ஆண்டு நினைவேந்தலுக்கு பல்வேறு கட்சிகள் மற்றும் இயக்கங்கள் தங்களது ஆதரவை அளித்தனர்



### ஈழத்தமிழ் இனப்படுகொலை
### 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் சுடர் ஏந்திடுவீர்!
### ஐயா வைகோ வேண்டுகோள்

ஈழத்தமிழ் இனப்படுகொலையை நினைகூறும் வகையில், ஆண்டுதோறும் மே திங்கள் 17 ஆம் தேதியை ஒட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை மாலையில், மே -17 இயக்கத்தின் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் அன்புச் சகோதரர் திருமுருகன் காந்தி அவர்கள் ஏற்பாட்டின் பேரில் சென்னை மெரினா கடற்கரையில் சுடர் ஏந்தி புகழ் அஞ்சலி நடத்துவது வழக்கம்.

கடந்த ஆண்டு அப்படி நடத்தியதற்காக திருமுருகன் காந்தி மீதும், என் மீதும் மற்றும் மூவர் மீதும் காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. அந்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது.

இந்த ஆண்டு கொரோனா கொடும் தொற்றுநோய் காரணமாக அந்தப் புகழ் அஞ்சலி நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்த இயலாமல் போயிற்று.

ஆயினும் மே -17 இயக்கத்தினர் தங்கள் இல்லங்களிலேயே சுடர் ஏந்தி நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளனர். ஈழத்தமிழர் ஆதரவாளர்கள், உணர்வாளர்கள் அவ்விதமே தங்கள் இல்லங்களில் மே-17 அல்லது மே 18 நாட்களில் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் சுடர் ஏந்தி நிகழ்ச்சியை நடத்திடுமாறு வேண்டுகிறேன்.

**ஐயா வைகோ** மாநிலங்களவை உறுப்பினர்
பொதுச்செயலாளர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்



இலங்கையில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் கொல்லப்பட்ட அப்பாவி தமிழர்களுக்குநீதி கேட்டு, மே-17 இயக்கம் வருடந்தோறும் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் வகையில் நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்தி வருகிறது.

இவ்வாண்டு கொரோனா ஊரடங்கு காரணமாக மே 17 அன்று மாலை 6 மணிக்கு பதாகை ஏந்தி அதை சமூக இணையத்தில் பதிவிடும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

இதற்கு மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம். அன்று மாலை 6 மணிக்கு அவரவர் வீட்டு வாசலில் 5 நிமிடங்கள் பதாகை ஏந்தி தங்கள் உணர்வுகளை மஜக-வினர் வெளிப்படுத்துவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தோழர் மு.தமிமுன் அன்சாரி** சட்டமன்ற உறுப்பினர்
பொதுச்செயலாளர், மனிதநேய ஜனநாயக கட்சி



### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு!

2009 ம் ஆண்டு மே மாதம் தமிழீழத்தில் சர்வதேச நாடுகள் உதவியுடன் நடைபெற்ற தமிழின அழிப்பின் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகம் பங்கேற்கிறது .

நாளை 17.05.2020 அன்று மாலை 6.00 மணிக்கு கழகத்தோழர்கள் மெழுவர்த்தி ஏந்தி தங்களின் படங்களை முகநூலில் பதிவு செய்வதின் மூலம் நாம் இன அழிப்பிற்கு நீதிவேண்டும்,

தமிழீழ மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் வைக்கிறோம்.

மே 17 இயக்கம் முன்னெடுக்கும் இந்த இணையதள நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்கும் தமிழின உணர்வாளர்களோடு திராவிடர் விடுதலைக் கழகம் கரம் கோர்த்து நிற்கிறது.

**தோழர் கொளத்தூர் மணி**
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்



மே 17 இயக்கம் சார்பாக 17 மே 2020 அன்று முன்னெடுக்கப்படும் தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வில், தந்தை பெரியார் திராவிடர் கழகம் பங்கெடுக்கும்

**தோழர் கோவை ராமகிருட்டிணன்**

தலைவர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்



## சூளுரையோடு நினைவேந்துவோம்!

2009 முள்ளிவாய்க்கால் கொடும் நிகழ்வு ஈழத்தமிழர்களின் வாழ்வையே அழித்திருக்கிறது...!

ஓர் இன அழிப்பை உலகமே வேடிக்கை பார்த்தது..!

இந்தியத்திடம் அடிமைப்பட்ட தமிழகம் காலத்தைக் கைவிட்டுவிட்டது!!

தமிழீழ விடுதலைக்கு ஈழத்தமிழர்கள் உரிமைகளுக்கு ஆதரவளிப்பதும் துணை நிற்பதும் தமிழக மக்களின் கடமை!

தமிழர்களின் உரிமைகளை நசுக்கும் இந்திய, சிங்கள வெறி அரசுகளின் அதிகாரங்களுக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்புவோம்!

2009 முள்ளிவாய்க்கால் ஈகியர்களின் நினைவேந்தி இல்லங்களின் முன்பு மே17 அன்று மாலை 6 மணியளவில் விளக்கேற்றுவோம்!

வெல்க தமிழீழம்! வெல்க தமிழ்த்தேசம்

**தோழர் பொழிலன்**

ஒருங்கிணைப்பாளர், தமிழக மக்கள் முன்னணி



## மே 17 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்! - இலங்கை தமிழினப் படுகொலையில் நீதிக்காக குரல் கொடுப்போம்!

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் போது நடந்த கொடூர இனப்படுகொலையின் 11ம் ஆண்டு நினைவேந்தல் எதிர்வரும் மே 17 அன்று தமிழின ஆதரவாளர்களாலும் மனித உரிமை ஆர்வலர்களாலும் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகின்றது.

போரின் பெயரால் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் அப்பாவி தமிழ் மக்களை கொன்றொழித்த கொடூரமான செயல்கள், பாலியல் வன்மங்கள்; ஆட்கடத்தல்கள்; சித்திரவதைகள் என்ற மிகமோசமான அநியாயங்கள், அக்கிரமங்கள் இலங்கை இறுதிப் போரின்போது நிகழ்த்தப்பட்டன.

இந்த இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை தேவை என்ற குரல் உலகம் முழுவதும் தொடர்ந்து எழுப்பட்டு வருகின்றது. ஆயினும் உலக நாடுகளுக்கிடையேயான அரசியல் காரணமாக அந்த கோரிக்கைக்கு எதிராக பல்வேறு தடைகள் தொடர்ந்து நீடித்து வருகின்றன. எனினும் இலங்கை இனப்படுகொலைக்கு எப்படியேனும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும், அதன் கொடூரங்களை தமிழர்கள் மறக்கவில்லை என்பதனை பறைசாற்றும் வகையில் மே 17 அன்று நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

அந்த நினைவேந்தல் நிகழ்வின் ஒருபகுதியாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் மூன்றாவது ஞாயிறு அன்று, தமிழ் உணர்வாளர்கள், கட்சிகள் மற்றும் அமைப்புகளை ஒருங்கிணைத்து தோழர் திருமுருகன் காந்தி தலைமையில் இயங்கும் மே 17 இயக்கம் சார்பாக நடத்தப்படும் நினைவேந்தல் நிகழ்வில், இலங்கை தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி எஸ்.டி.பி.ஐ. கட்சியும் கலந்துகொள்ளும். இந்த ஆண்டும் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வில் மே 17 இயக்கத் தோழர்களின் தோளோடு தோள் நின்று இலங்கை தமிழினப் படுகொலையில் நீதிக்காக குரல் கொடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தோழர் நெல்லை முபாரக்**

மாநில தலைவர், SDPI கட்சி

V



## கொல்லப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழர் மரணத்திற்கு நீதி கேட்டு மே 17 இயக்கம் நடத்துகிற இணைய வழி போராட்டத்தில் தமிழக மக்கள் ஜனநாயக கட்சி பங்கேற்கும்

இலங்கை இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழர்கள் மரணத்திற்கு நீதி கேட்டு ஒவ்வொரு ஆண்டும் மே 17 இயக்கம் நினைவேந்தல் நிகழ்வை நடத்தி வருகிறது. அதில் தொடர்ச்சியாக தமிழக மக்கள் ஜனநாயக கட்சி பங்கேற்று வருகிறது.தற்போது கொரோனோவால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் இந்நிகழ்வை மே 17 அன்று இணைய வழிப் போராட்டமாக ஞாயிறு மாலை 6 மணிக்கு அறிவித்துள்ளது.எனவே தமிழக மக்கள் ஜனநாயக கட்சி தோழர்கள் வீட்டிலிருந்தே படுகொலைக்கு நியாயம் கேட்டு போராட்டத்தில் பங்கேற்போம்.மேலும் மே 17அன்று காலை 10 மணிக்கு ட்விட்டரில் நடைபெறும் "Justice for Tamil Genocide" பரப்புரையிலும் தோழர்கள் பங்கேற்க வேண்டுகிறேன்

நன்றி

**தோழர் கே.எம்.செரீப்**

தலைவர், தமிழக மக்கள் சனநாயகக் கட்சி



மே 17 இயக்கம் சார்பாக 17 மே 2020 அன்று முன்னெடுக்கப்படும் தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வில், தமிழ்ப்புலிகள் கட்சி பங்கெடுக்கும்.

**தோழர் நாகை.திருவள்ளுவன்**

தலைவர், தமிழ்ப்புலிகள் கட்சி



## மே 17 அன்று மாலை 6.30 மணியளவில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை குறித்து பதாகை ஏந்தி விளக்கேற்றி வீரவணக்கம் செய்வோம்!

2009ஆம் ஆண்டு தமிழீழத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை கண்டித்தும் சர்வதேச பொது விசாரணைக்கும் தமிழீழ மக்களின் பொது வாக்கெடுப்புக்கும் வலியுறுத்தி பதாகை ஏந்தி ஒளிவிளக்கேற்றி இம்மண் விடுதலைப் போராட்டத்தில் இன்னுயிரை ஈகம் செய்த போராளிகள், தம்பி பாலசந்திரன் இனப்படுகொலைக்குள்ளான ஈழத்தமிழர்களுக்கும் வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மே 17 இயக்கத்தின் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்டு வந்துள்ளது.அந்த வகையில் தமிழர் கடல் கரையில் (மெரினா கடற்கரையில்) கடந்த சில ஆண்டுகளாக வீரவணக்க நிகழ்வை நடத்தவிடாமல் தமிழக அரசும் இந்திய அரசும் காவல் துறையும் தடுத்து வந்தது. இந்த வருடம் கொரான வைரஸ் தொற்று காரனமாக இருப்பதற்காக பொது ஊரடங்கு விதியை அமல் படுத்தி வைத்திருக்கிற இந்நிலையில் அவரவர் தனித்திருந்து விலகி இருந்து அவரவர் இல்லத்திலேயே நாளை மாலை விளக்கேற்றி நம்முடைய கோரிக்கையை வலியுறுத்தி பதாகை ஏந்தி விளக்கேற்றி வீரவணக்கம் செய்ய வேண்டும் என விடுதலை தமிழ் புலிகள் கட்சியினுடைய அனைத்து மட்டத்திலான நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களையும் இச் செய்தியைப் படிக்கும் இம்மண் விடுதலையை ஆதரிக்கும் அனைவரும் செய்யும்படி தோழமையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**தோழர் குடந்தை அரசன்**

தலைவர், தமிழக மக்கள் புரட்சிக் கழகம்



மே 17 இயக்கம் சார்பாக 17 மே 2020 அன்று முன்னெடுக்கப்படும்
தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வில்,
தமிழக மக்கள் புரட்சிக் கழகம் பங்கெடுக்கும்.

**தோழர் அரங்க குணசேகரன்**
தலைவர், தமிழக மக்கள் புரட்சிக் கழகம்



மே 17 இயக்கம் சார்பாக 17 மே 2020 அன்று முன்னெடுக்கப்படும்
தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வில்,
திராவிட தமிழர் கட்சி பங்கெடுக்கும்.

**தோழர் வெண்மணி**
தலைவர், திராவிட தமிழர் கட்சி



மே 17 இயக்கம் சார்பாக 17 மே 2020 அன்று முன்னெடுக்கப்படும்
தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வில்,
தமிழக டிசம்பர் 3 இயக்கம் பங்கெடுக்கும்.

**தோழர் தீபக்நாதன்**
ஒருங்கிணைப்பாளர் , டிசம்பர் 3 இயக்கமும்



## தமிழீழ இனப்படுகொலையின் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு!

சிங்கள பௌத்த பேரினவாத இலங்கை அரசால் 2009இல் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை மே 17 இயக்கத்தின் சார்பில் தமிழர் (மெரினா) கடற்கரையில் நினைவேந்தல் நிகழ்வு அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழர்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி நினைவு அஞ்சலி செலுத்துவதோடு, தமிழீழ தாயகத்தை வென்றெடுப்போம் என்கிற உறுதிமொழியும் எடுக்கப்படும்.

கொரோனா பெருந்தொற்றால் இந்த ஆண்டு அப்படியான நிகழ்வு நடைபெற வாய்ப்பு இல்லாத காரணத்தினால், வருகிற ஞாயிற்றுக்கிழமை 17. 5. 2020 அன்று மாலை 6 மணிக்கு அனைவரும் அவரவர் வீட்டிலிருந்தே இறந்த மாவீரர்கள், இனப்படுக்கொலையில் இறந்த மக்களின் நினைவை ஏந்த மே 17 இயக்கத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருகிறது.

இந்த அழைப்பினை ஏற்று தமிழர் விடியல் கட்சி நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்கிறது. தமிழர் விடியல் கட்சியின் தோழர்கள் அவரவர் வசிக்கும் பகுதிகளில் தனிமனித இடைவெளியினை கடைபிடித்து இனப்படுகொலைக்கு நீதி கோரி பதாகைகள் மற்றும் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட படுகொலைக்கு நீதி கேட்கும் வகையில், இதை இந்தியா மற்றும் உலகம் முழுவதும் கொண்டு சேர்க்கும் விதமாக #Justice4TamilGenocide மற்றும் #Referendum4TamilEelam எனும் Hashtag ஐ டுவிட்டர் இணையதளத்தில் 17/05/2020 அன்று காலை 10 மணி முதல் தொடர்ச்சியாக பதிவேற்றி அதனை வெற்றியடையச் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

**தோழர் இளமாறன்**
ஒருங்கிணைப்பாளர், தமிழர் விடியல் கட்சி

# 11ஆம் ஆண்டு நினைவேந்தலுக்கு ஆதரவை அளித்த பல்வேறு கட்சிகள் மற்றும் இயக்கங்களுக்கு மே 17 இயக்கத்தின் நன்றிகள்

தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வு மே பதினேழு இயக்கத்தின் சார்பாக ஒருங்கிணைக்கப்பட்டது. தமிழீழ இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்த வேண்டும், தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கைக முன்வைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களை நினைவுகூறும் விதமாக மே 17, 2020 ஞாயிறு அன்று நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொரோனா பரவல் காரணமாக இந்நிகழ்வு வீடுகளில் இருந்தபடியே மே 17 அன்று மாலை 6 மணியளவில் குடும்பத்தினரோடு, குறிப்பிட்ட இடைவெளியில் நின்றவாறு கோரிக்கை பதாகைகளோடு முழக்கமிடுவதும், 6:30 மணியளவில் மெழுகுவர்த்தி அல்லது விளக்கு ஏற்றுவது என்றும், சமூக வலைத்தளங்களில் காலை 10 மணி முதல் #Justice4TamilGenocide மற்றும் #Referendum4TamilEelam எனும் Hashtag பரப்புரையினை மேற்கொள்வது என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நினைவேந்தல் நிகழ்விற்கு ஆதவளித்து பங்கேற்குமாறு தோழமை கட்சிகள் மற்றும் அமைப்புகளுக்கு மே பதினேழு இயக்கம் அழைப்பு விடுத்திருந்தது. அதன்படி பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் அறிக்கையின் வாயிலாகவும், ட்விட்டர் பரப்புரையின் மூலமும் ஆதரவளித்து, ஞாயிறு அன்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றனர்.

- மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் ஐயா வைகோ
- தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் ஐயா பழ.நெடுமாறன்
- மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேரா ஜவாஹிருல்லா
- மனிதநேய ஜனநாயகக் கட்சியின் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தோழர் தமிமுன் அன்சாரி
- கொங்கு இளைஞர் பேரவையின் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தோழர் தனியரசு
- தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் தோழர் வேல்முருகன்
- SDPI கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக்
- தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன்
- திராவிடர் விடுதலை கழகத்தின் பொதுசெயலாளர் தோழர் கொளத்தூர் மணி
- தந்தைப் பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் தோழர் கோவை கு.ராமகிருட்டிணன்
- தமிழக மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் தோழர் கே.எம்.செரீப்
- தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் தலைவர் தோழர் அரங்க குணசேகரன்
- தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் தோழர் நாகை திருவள்ளுவன்
- விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் தோழர் குடந்தை அரசன்
- திராவிட தமிழர் கட்சியின் தலைவர் தோழர் வெண்மணி
- பச்சை தமிழகம் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் சுப.உதயகுமார்
- தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் இளமாறன்
- டிசம்பர் 3 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் தீபக் நாதன்
- தமிழர் விடுதலை கழகத்தின் தலைவர் தோழர் சுந்தரமூர்த்தி

தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்விற்கு ஆதரவளித்து, பங்கேற்ற தோழமை கட்சிகள் மற்றும் அமைப்புகளை சேர்ந்த தலைவர்களுக்கும், தோழமைகளுக்கும் மே பதினேழு இயக்கம் நன்றி தெரிவித்து கொள்கிறது.

## தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தலை அனுசரிக்கவிடாமல் தடுத்து மனிதநேய ஜனநாயகக் கட்சியின் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தமிமுன் அன்சாரி அவர்களை கைது செய்த தமிழக அரசையும், காவல்துறையையும் வன்மையாக கண்டிக்கிறோம் – மே பதினேழு இயக்கம், 17 மே 2020

தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தலை அனுசரிக்கவிடாமல் தடுத்து மனிதநேய ஜனநாயகக் கட்சியின் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தமிமுன் அன்சாரி அவர்களை கைது செய்த தமிழக அரசையும், காவல்துறையையும் வன்மையாக கண்டிக்கிறோம்.

தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தலை வீட்டிலிருந்து அனுசரிக்க அழைப்பு விடுத்த மே பதினேழு இயக்கத்தின் அழைப்பினை ஏற்று, சமூக இடைவெளியை முறையாக கடைபிடித்து பதாகை ஏந்தி முழக்கமிடும் நிகழ்வை மேற்கொள்ள தமிமுன் அன்சாரி அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்.திருவாரூர் மாவட்டம் கட்டிமேட்டில் நினைவேந்தலை மேற்கொள்ள விடாமல் தடுத்து, திருத்துறைப்பூண்டி காவல்துறையினர் அவரையும், அவரது கட்சி நிர்வாகிகளையும் கைது செய்திருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் இனப்படுகொலைக்கு நீதி கோரும் தீர்மானம் 2013-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் சட்டமன்றத் தீர்மானத்தைக் கூட மதிக்காமல், ஒரு சட்டமன்ற உறுப்பினரை கைது செய்திருப்பது தமிழக அரசின் துரோகத்தினையே காட்டுகிறது.கொல்லப்பட்ட மக்களுக்கு நினைவேந்துவதைக் கூட தடுக்கும் அரசு எப்படி மக்களுக்கான அரசாக இருக்க முடியும்?



நினைவேந்தல் நடத்தினால் குண்டர் சட்டம், வீட்டிலிருந்து நினைவேந்த முயன்றால் கைது என்று தொடர்ச்சியாக தமிழின துரோகப் போக்கினை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இது எடப்பாடி அரசின் வன்மத்தினையே காட்டுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தமிமுன் அன்சாரி அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டு அவர் நினைவேந்தலை அனுசரிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழக அரசின் தமிழர் விரோத அராஜகப் போக்கினை மே பதினேழு இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது.

மே பதினேழு இயக்கம் சார்பாக

17 மே 2020 ஞாயிறு அன்று நடைபெற்ற

# தமிழீழ இனப்படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்ற மக்களின் சில புகைப்படங்களின் தொகுப்பு



# உயிரா? உரிமையா?

## கொரோனா வைரஸ் முன்வைத்து அரசுகள் கேட்கும் மனிதாபிமானமில்லா கேள்வி



கடந்த 15 வருடங்களாக 2020ம் ஆண்டு என்பது ஓர் கனவுலகமாக சென்ற தலைமுறையினரால் கற்பனை செய்யப்பட்டது. இந்தியா 2020 வல்லரசாகும் என மேடைக்கு மேடை பேசாத அரசியல்வாதிகளே இல்லை. முற்போக்கு சிந்தனையாளர்கள் கூட 2020 இல் இந்திய வல்லரசாக வேண்டும் என விரும்பினர். எப்படியிருப்பினும், 2020 என்பது ஒரு கனவுலகமாக நம் முன்னே கட்டமைக்கப்பட்டது என்பதே நிதர்சனமான உண்மை. ஆனால் கனவுலகமாம் 2020 இன் முதல் ஐந்து மாதங்கள் இந்த நூற்றாண்டின் சோகமாக மாறியிருக்கிறது. ஆயிரக்கணக்கான உயிர் இழப்பும், இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வுரிமை கேள்விகுறியாவதும், கோடிக்கணக்கில் பொருளாதார இழப்பும் ஈடுசெய்ய முடியா துயரங்கள். மருத்துவர்கள், பொருளாதார ஆய்வாளர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் என அனைவரும் இன்னும் 2லிருந்து 5 வருடம் வரை கொரோனாவினால் ஏற்பட்ட பாதிப்பு தொடரும் என கருதுகிறார்கள்.

இந்நிலையிலும், பல அரசாங்கங்கள் இத்தருணத்தை தனக்கான வாய்ப்பாகக் கருதி, மிகவும் மோசமான, மனித சுதந்திரத்திற்கு எதிரான பல செயல்களில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக உலகெங்கும் கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக வளர்ந்துள்ள வலதுசாரி அரசுகள் மனித மாண்பையும், உரிமையும் குழிதோண்டிப் புதைக்கும் வேலைகளைச் செய்து வருகின்றன. ஒரு சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்லும் அபாயம் தெரிகிறது. ஐக்கிய நாடுகள் சபையும் கொரோனா காலத்தை காட்டி மனித உரிமை மீறல்களும், ஜனநாயக உரிமைகளும் பறிக்கும் சூழல் நிலவுவதாக கருத்து தெரிவித்துள்ளது. அரசுகளோ பலகாலங்களாக மக்களாலும், அரசியல் செயல்பாட்டாளர்களாலும் எதிர்க்கப்பட்ட சட்டத்திட்டங்களை முன்மொழிகின்றன. அவற்றில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய இரண்டு விடயங்கள், ஒன்று நெருக்கடி நிலையை சட்டரீதியில் உருவாக்குவது, இரண்டு கட்டற்ற அரச கண்காணிப்பு (Totalitarian Surveillance) சாத்தியபடுத்துவது. கடந்த சில வாரங்களாகவே சர்வதேச ஊடகங்களில் இவை தான் முக்கியமான சிக்கலாகவும், தீர்வாகவும் இரு எதிர் கருத்துகளுடன் விவாதங்கள் நடைபெறுகின்றன.

இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்து தான் சர்வாதிகார ஆட்சிக்கு இட்டுசெல்லும். இந்த இரண்டு சிக்கல்களையும் நாம் ஒரு சர்வதேச பின்னனியுடன் படிக்க வேண்டிய அவசியமாக இருக்கின்றது. கொரோணாப் பிரச்சனையை முன்வைத்து உலகத்தில் முக்கியமான பல நாடுகளில் பலவிதமான நெருக்கடி நிலைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உருவாகின்றன. அவற்றுள் ஹங்கேரியும் (Hungary), இஸ்ரேலும் (Israel) இருவேறு தளத்தில் ஒரே நோக்கத்துடன் சட்ட மாற்றங்களை செய்துள்ளன. இருநாடுகளில் நடந்துள்ள மாற்றங்களின் வழியில் இந்தியா எதை நோக்கி செல்கிறது என்பதே இக்கட்டுரையின் மையக்கரு. இந்த மூன்று நாடுகளும் வலதுசாரி ஆட்சியாளர்களால் ஆளப்படுகிறது என்பதை நினைவில் நிறுத்துக.



Sébastien Thibault

## நெருக்கடி நிலை:

நாம் பெரிதும் அறிந்த சட்டரீதியிலே நெருக்கடி நிலையை அறிவிப்பது என்பது சென்ற தலைமுறை ஆட்சி காலங்களில் நாடளுமன்றத்தை இராணுவத்தால் முடக்கி நெருக்கடி நிலையை அறிவிப்பதும். இந்தியாவில் 1975யில் அறிவித்தது போல உள்நாட்டு பயங்கரவாதம், சதித்திட்டம் என்ற போர்வையில் நெருக்கடி நிலையை அறிவிப்பதும். ஆனால், ஹங்கேரி வலதுசாரி ஆட்சியாளர் ஒரு மருத்துவ, பொது சுகாதார பிரச்சனையை முன்வைத்து ஒரு அரசியல் நெருக்கடியை அறிவித்துள்ளார்.

ஹங்கேரி பிரதமர் விக்டர் ஒர்பன் (Viktor Orban) கடந்த மார்ச் மாதம் 30ம் தேதி கொரோணா பிரச்சனையை முன்வைத்து ஒரு அவசரகால கொரோணா (நெருக்கடி) சட்டத்தை முன்மொழிந்தார். அரசுக்கு அளவுகடந்த அதிகாரத்தை இது வழங்கியுள்ளது. இந்த சட்டத்தினால் மிகப்பெரிய ஆபத்தை எதிர்கொள்வது பத்திரிக்கை சுந்திரம். தவறான செய்தியைப் பரப்புதல் (spreading falsehoods) என்ற சரத்தின் கீழ் அரசின் தவறை சுட்டிக்காட்டும் அனைத்து பத்திரிக்கையாளை கைது செய்து இரண்டு முதல் ஐந்து ஆண்டு வரை சிறையில் அடைக்கலாம். மேலும், அரசு கூறும் தவறான வழிகாட்டுதலை கூட பத்திரிக்கைகள் சுட்டிக்காட்ட முடியாத சூழல் நிலவுகிறது. ஒரு பொதுசுகாதார ஆபத்து காலகட்டத்தில் தான் பத்திரிக்கையாளர்களின் பங்கு இன்றியமையாதது. அரசு நிறுவனம் தவறும் அல்லது விடும் இடங்களை சுட்டிக்காட்டுவதால் தான் ஜனநாயகத்தின் நான்காம் தூண் என்ற பெருமையை பத்திரிக்கைத் துறை பெற்று உள்ளது. அத்தேவையுள்ள இக்காலத்தில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது ஹங்கேரி அரசு.

**அரசு நிறுவனம் தவறு செய்யும் அல்லது தவற விடும் இடங்களைச் சுட்டிக்காட்டுவதால் தான் சனநாயகத்தின் நான்காம் தூண் என்ற பெருமையைப் பத்திரிக்கைத்துறைப் பெற்றுள்ளது. அத்தேவை உள்ள இக்காலத்தில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது ஹங்கேரி அரசு.**

மேலும், இந்தச் சட்டத்தில் குறிப்பிட வேண்டிய மிக முக்கிய சிக்கல் என்னவென்றால் கால நிர்ணயம் செய்யாமல் நிறைவேற்றப்பட்டுள்ளதே. சட்டநிபுணர்கள் இந்த சட்டத்தை ஒரு நெருக்கடி சட்டமாகத் தான் கருதுகின்றனர். இந்த சட்டத்தை அந்நாட்டின் எதிர்கட்சி, மனித உரிமை செயல்பாட்டாளர்கள் மற்றும் பல ஆயிரம் மக்கள் இணையத்திலும் மற்ற தளங்களிலும் எதிர்த்துப் போராடுகின்றனர். இதை சர்வதேச பத்திரிக்கையாளர்களும், அய்ரோப்பிய அரசும் இந்த சட்டத்தின் தீவிரம் குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர். சர்வதேச எதிர்ப்பை அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் “நாய் குரைக்கதான் செய்யும் நாம் முன்னேறி செல்ல வேண்டும்” (Dogs bark, the caravan carries on) என்று ஏளனம் செய்துள்ளார். கடந்த சில ஆண்டுகளாகவே, ஹங்கேரி அரசு அந்நாட்டு அரசியல் சாசனத்தையும், நாடளுமன்றத்தையும் செயலிழக்கச் செய்து தனது சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தும் முயற்சியை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் வெளியான சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் (Human Rights Watch) அறிக்கையில் ஹாங்கேரி மக்களாட்சியில்

இருந்து சர்வாதிகார ஆட்சிக்கு வேகமாக நகர்ந்ததாக அறிவித்துள்ளது. கொரோணா காலத்தில் மக்கள் விரோத சட்டங்கள் எவ்வாறு சாத்தியப்படும் என்பதற்கு ஹங்கேரி கண்முன்னால் உள்ள ஒரு சாட்சி.

அரசாங்கம் எவ்வாறு நெருக்கடிகால சட்டங்களை நிறைவேற்றுகிறது என்பதை ஹங்கேரி ஓர் உதாரணம் என்றால், இஸ்ரேல் அரசு மற்றொருபுறத்தில் இந்த சிக்கலான காலக்கட்டத்தில் பயன் படுத்தி எவ்வாறு மக்கள் விரோத அரசு கட்டமைப்பை எந்த எதிர்ப்புமின்றி உருவாக்குகிறது என்பது அடுத்த உதாரணம். இஸ்ரேல் அரசு இந்த கொரோணாவை காட்டி தன் அரசு கண்காணிப்பை எவ்வாறு வலுபடுத்துகிறது, அரசு கண்காணிப்பின் சிக்கல் என்ன என்பதை விரிவாகப் பார்கலாம். உள்நாட்டு மக்களை கண்காணிக்க அவர்களின் கைப்பேசியின் மூலம் அவர்களின் (குடிமக்களின்) நகர்வுகளை உளவு பார்ப்பதே இதன் முக்கிய குறிகோள். இருபத்தோராம் நூற்றாண்டின் மிக முக்கிய பிரச்சனையாக வரலாற்று ஆய்வாளர்களால் வர்ணிக்கப்படுவது இந்த அரச கண்காணிப்பு. அரசு கண்காணிப்பு (Mass Surveillance/ Surveillance State) என்றால் என்ன? எவ்வாறு அது மக்களாட்சிக்கு விரோதமானது? அதன் வரலாறு என்ன? என்று சுருக்கமாக முதலில் தெளிவுபடுத்தலாம்.

## அரசு கண்காணிப்பு:


வரலாறு நெடுக கண்காணிப்பும், உளவும் அரசுகளின் முக்கியமான செயலாகவே கருதப்பட்டன. குறிப்பாக அரசுக்கு எதிரான மக்கள் புரட்சி வந்துவிடுமோ என்ற அச்சம் அனைத்து அரசர்களிடமும், அரசுகளிடமும் இருந்தன. உளவும், கண்காணிப்பும் புரட்சியை தடுக்கும் ஒரு கருவியாகவே கருதப்பட்டன. ஆனால் இன்றைய நவீன அரசுகள் கண்காணிப்புகளை அச்சவுணர்வால் மேற்கொள்ளவில்லை, தனது அரசின் அஸ்திவாரமாகவும் தனது மூலதனமாகவும் பார்க்கிறது. பல வருடங்களாக ஆதாரமில்லா புரளியாக கருதப்பட்ட இந்த கருத்துகள், 2013இல் முன்னாள் அமெரிக்க உளவு நிறுவனத்தில் வேலை செய்த ஊழியரும், விசில்ப்ளோவரான எட்வர்ட் ஸ்னோடன் (Edward Snowden) வெளியிட்ட ஆதாரங்கள் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது. முகநூல், கூகிள், மைக்ரோசாஃப்ட் எனும் ஏனைய நிறுவனங்கள் வழியாக எவ்வாறு பயங்கரவாதிகளுக்கு சிறிதும் தொடர்பற்ற கோடிக்கணக்கான மக்களின் தனிப்பட்ட தகவல்களை இரகசியமாக சேகரிக்கவும், காண்காணிக்கவும் படுகிறது என்று உலகிற்கு அறிவித்தார்.




வரலாறு நெடுக கண்காணிப்பும், உளவும் அரசுகளின் முக்கியமான செயல்பாடாகவே கருதப்பட்டன. குறிப்பாக, அரசுக்கு எதிரான மக்கள் புரட்சி வந்துவிடுமோ என்ற அச்சம் அனைத்து அரசர்களிடமும், அரசுகளிடமும் இருந்தது. உளவும், கண்காணிப்பும் புரட்சியைத் தடுக்கும் ஒரு கருவியாகவே கருதப்பட்டன.

அப்போது, பல அரசு சார்புள்ள லிபரெல் (Liberal) சிந்தனையாளர்கள் தீவிர கண்காணிப்பு என்பது தேச பாதுகாப்புக்கு இன்றிமையாத ஒன்று. மேலும், முழுபாதுகாப்பும், முழுசுதந்திரமும் என்பது என்றுமே சாத்தியமற்ற ஒன்று. பாதுகாப்பா அல்லது வரையறுக்கப்பட்ட சுதந்திரமா என கேள்வி எழுப்பினார். ஆனால் குடிமக்களின் ஏந்த ஒரு அனுமதியுமின்றி அரசு சட்டவிரோதமாக அவர்களை ஒரு பயங்கரவாதியாக பாவித்து உளவுப்பார்பதையும், இது ஒரு அப்பட்டமான ஜனநாய படுகொலை என்பதையும் வசதியாக மறந்து(மறைத்து) விட்டனார்.

மேலும், இப்படி குடிமக்களை உளவு பார்த்து திரட்டப்பட்ட தகவல்கள் அரசு மட்டுமா பயன்படுத்துகிறது




அல்லது வேறு எந்தந்த நிறுவனங்கள் இதனை சேமித்து வைத்துள்ளார்கள் எனும் கேள்வி முக்கியமானது. குறிப்பாக இந்த தகவல்களை திரட்டி தரும் இணையதளங்களான முகநூல், கூகுள் போன்றவை எவ்வளவு தூரம் பாதுகாப்பாகவும் அத்துடன் வேறு யாருக்கு எல்லாம் இந்த தகவல்கள் விற்கப் படலாம் போன்ற கேள்விகள் மிகமுக்கியமானவை. இவ்வாறு விவாதங்கள் செல்ல, இரண்டு வருடங்கள் முன்பு, கேம்பிரிஜ்ட் அனாலிடிக்கா எனும் தனியார் நிறுவனம் 2016 அமெரிக்கத் தேர்தலில் குடியரசு கட்சிக்கு ஆதரவாக எவ்வாறு மக்களின் கருத்துக்கள் பொய்களின் மூலம் உருவாக்கப் பட்டு தேர்தல் வெற்றியையே மாற்றியமைத்தது என்ற செய்தி விவாதத்தை தீவிர படுத்தியது. கேம்பிரிஜ்ட் அனாலிடிக்கா என்பது தேர்தலுக்கான யுத்திகளை வகுத்து கொடுக்கும் ஒரு பிரிட்டானிய தனியார் நிறுவனம். அமெரிக்கா மட்டுமின்றி பல நாட்டின் முக்கிய தேர்தகளிலிலும் இந்த நிறுவனம் பங்குவகித்துள்ளது. மேலும், அய்ரோப்பிய கூட்டமைப்பினை விட்டு பிரிட்டன் வெளியேறுவது குறித்த முடிவு எடுக்கும் பிரக்சிட் தேர்தலிலும் இது முக்கியப் பங்காற்றியது.

இந்த நிறுவனத்தின் முக்கிய பணி, அவர்களுக்கு சாதகமான கருத்தை உருவாக்க பல பொய்களை முகநூல் மற்றும் இன்னும் பல இணையதளம் வழி பரப்புவதும், அதற்கான யுத்திகளை உருவாக்குவதும். இன்றைய பல வலதுசாரி ஆட்சியாளர்கள் இவர்களின் தயவால் தான் கட்டற்ற அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். அமெரிக்காவில் 2016 தேர்தலில் கருப்பின வெறுப்பையும், உருவாக்கப் பல போலி புள்ளிவிவரங்களை உருவாக்கிப் பரப்பினர். பலர் ஆதாரபூர்வமாக இதை மறுத்தும் அவை (அந்த பொய்யான புள்ளிவிவரம்) பல அமெரிக்க நடுத்தர மக்களின் வாக்குகளை மாற்றியமைத்தது. நம் நாட்டில் சங்கிகள் சிறுபான்மையினர்க்கு மற்றும் முற்போக்கு சக்திகளுக்கு எதிராக மேற்கொள்ளும் அதே யுத்திதான். இதில் நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் எப்படி பொய் தகவல்கள் நம்ப வைக்கப்படுகின்றன என்பதே. மீண்டும் மீண்டும் பகிரப்படுவதும், அரசியல் தெளிவின்மை என்பது போன்ற காரணங்கள் ஒரு பக்கம் இருந்தாலும் தொழில்நுட்ப ரீதியில் ஒரு முக்கிய விடயத்தையும் விளக்க வேண்டும்.

பிரிட்னி கைசிர் (Brittany Kaiser) எனும் கேம்பிரிஜ்ட் அனாலிடிக்காவின் முன்னாள் இயக்குனர் கூறுகிறார், நம் செயல்களின் மூலம் திரட்டப்படும் தகவல்கள் கொண்டு நம்மை வகைப்படுத்தி அதற்கு ஏற்றாற் போல் தகவல்கள் நம்மை வந்தடையும். எடுத்துகாட்டாக, ஒருவர் ஜனநாயக வாதியாக இருக்கிறார் மற்றும் அவரின் மதத்தின் மீது அவர் ஈடுபாடு கொண்டவர் என்றால் அவருக்குத் தொடர்ச்சியாக மதம் சார்ந்த தகவலும், அதன் அடிப்படை கொண்ட அரசியல் செய்திகளும் தொடர்ந்து அனுப்பப்படும், இதன் மூலமே ஒரு சராசரியான ஜனநாயக எண்ணம் கொண்ட நபர் கூட வலதுசாரிகளுக்கு சாதகமாக வாக்களிக்கிறார். ஓர் தனியார் நிறுவனம் நம்மை வேவு பார்த்து தகவல்களை திரட்டி நம்மை முட்டாள் ஆக்கி, சக மனிதர்கள் மீது வெறுப்புணர்வை விதைத்து (பொய்களின் மூலம்) நம் தகவல்களை வியாபாரம் செய்கிறது. அதன் உதவியால் ஜனநாயக விரோத ஆட்சியாளர்களை வேறு ஒரு தனியார் நிறுவனம் ஆட்சியில் அமர வைக்கிறது.

உலகளவில் நடக்கும் இந்தத் தகவல் வியாபாரத்திற்கும் நமக்கும் இந்த கொரோணா காலத்தில் என்னதான் சம்பந்தம் என்றால். இன்றுவரை சட்டரீதியாக இவை தடுக்கப்பட்டு வருகிறது. உலகளவில் இரகசிய உரிமை, தனிமனித உரிமை என அனைத்து தளங்களிலும் இதை ஒரு முக்கிய சிக்கலாகப் பேசி ஒரு எதிர்வினையை ஜனநாயக சக்திகள் உருவாக்கியுள்ளன. ஆனால், இன்று பல அரசாங்கங்கள் மேலே குறிப்பிட்டது போல இந்த கொரோணா காலத்தில் அரசு கண்காணிப்பிற்கான சட்டரீதியான அனுமதிகளை அவரச அவரசமாக நிறைவேற்றுகின்றன. அப்படிபட்ட சட்டத்தைத் தான் இஸ்ரேல் அரசு அனுமதித்துள்ளது. அதுவும், நாடளுமன்ற ஒப்புதலின்றி, அமைச்சர் அவைக் கூட்டத்தின் மூலமே.


இஸ்ரேல் அரசு கொரோணா வைரஸ் தொற்று ஏற்பட்ட நோயாளிகளின் கைப்பேசியின் இணையதள வசதியோடு அவர்கள் அருகில் இருந்தோர், அவர்கள் பக்கத்தில் இருந்தோர் என அனைவரையும் கண்காணித்து தகவல் தருவதாக கூறுகிறார்கள். இதற்காக அவர்கள் ஒவ்வொரு குடிமக்களின் கைப்பேசியையும் அவர்களின் அனுமதியின்றி டிராக் செய்கிறார்கள். இது ஒரு அவசர கால சட்டம் தானே என நினைக்கலாம் ஆனால் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் யுவால் நோவா ஹாராரி (Yuval Noah Harari) கூறுகிறார், 1948யில் இஸ்ரேல் போரின் போது அறிவிக்கப்பட்ட அவசரச் சட்டம் (பத்திரிக்கை தணிக்கை இன்னும் பிற உரிமை மறுப்பு சரத்துகளுடன்) போர் முடிந்து அரை நூற்றாண்டு காலம் வரை நடைமுறையில் இருந்தது. இவ்வாறு வரலாறு இருக்க எப்படி இந்த சட்டம் தற்காலிகம் என நம்புவது என்கிறார். மேலும், இஸ்ரேல் உயர்நீதிமன்றம் இந்த முன்னெடுப்பை கடுமையாகச் சாடியுள்ளது. இது தனிமனித உரிமையை வேரோடு அழிக்கும் முயற்சி என கருத்து தெரிவித்துள்ளது. எப்படியிருப்பினும், இந்த

சட்டம் ஒவ்வொரு சமயமும், இரண்டு வாரம், மூன்று வாரம் என நீட்டிக்கப்பட்டு வருகிறது.

இஸ்ரேல் மட்டுமல்ல, தென்கொரியா, சிங்கப்பூர், சீனா என பல நாடுகள் இவ்வாறு கண்காணிப்பு சட்டத்தைச் முன்மொழிகிறார்கள். சென்றமுறை, அரசின் கட்டற்ற கண்காணிப்பு குறித்து கேள்வி எழுப்பிய போது, முழுபாதுகாப்பா அல்லது சுதந்திரமா என கேட்டவர்கள். இன்று நம் முன்னே உங்களின் உயிரா இல்லை உரிமையா என கேட்கிறார்கள். இந்த நெருக்கடிக் காலத்தை முன்வைத்து இந்த அரசாங்கங்கள் இன்றியமையாத நம்முடைய உரிமையைப் பறிக்கின்றன. இவ்வாறு உலகம் முழுவதும் எதிர்காலத்தில் நம் உரிமையை மொத்தமாக அழிக்கும் திட்டங்கள் நிறைவேற்றுவது குறித்து விவாதிக்கும் போது இந்திய ஊடகங்கள் மௌனம் காக்கின்றன.

## இந்தியா:

இந்தியாவில் முழுஊரடங்கு தவிர வேறு எந்த சரியான நடவடிக்கையையும் இந்த அரசு செய்தபாடு இல்லை. மேலும், இந்த காலத்தைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக மாநில உரிமையை பறிப்பது, நாம் கடுமையாக எதிர்த்த புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்துதல், காவிரியில் தமிழர் உரிமையை பறிப்பது என மக்கள் விரோதமான திட்டங்களை நிறைவேற்றுவது ஒரு பக்கமாகவும், காவல்துறை கொண்டு அரசின் நடவடிக்கையை கேள்வி கேட்போரை கைது செய்வதும் என மோசமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. காவல்துறைக்கு அளவுகடந்த அதிகாரத்தை அளித்து குடிமக்களை பயத்தில் ஆழ்த்தி தனது திட்டங்களை நிறைவேற்றுகிறது.




மக்கள் விரோத திட்டங்களை நிறைவேற்றுவதோடு இல்லாமல் இஸ்ரேல் போல் கட்டற்ற கண்காணிப்புக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பையும் உருவாக்க எண்ணியுள்ளது. அது தான் ஆரோக்யா சேது எனும் செயலி.  ஆதார் போல இந்த செயலியும் தனிமனித இரகசிய உரிமையை கேள்விகுள்ளாக்கியுள்ளதாகச் செயல்பாட்டாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த செயலியில் உள்ள பிரச்சனைகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம். ஒன்று தொழிற்நுட்பம் சார்ந்த போதாமை மற்றும் குளறுபடிகள். இரண்டு சட்டரீதியான பாதுகாப்பின்மை. மூன்றாவது பொது சுகாதாரத்தைத் தனியாருக்கு தாரை வார்ப்பதற்கான ஒரு முன்னேற்பாடு.

ஆரோக்யா செயலி இந்திய அரசாங்கத்தால் கொரோனா தொற்று ஏற்பட்டோர் குறித்து தகவல் திரட்டுவதற்கு இஸ்ரேல் பயன்படுத்தும் அதே போன்ற contact tracing தொழிற்நுட்பத்தை பயன்படுத்துகிறது. ஆனால் இந்த செயலியில் தொழிற்நுட்ப பாதுகாப்பு அம்சங்கள் மிகவும் வருந்தத்தக்க முறையில் உள்ளன. பிரெஞ்சு எதிகல் ஹாக்கர் (Ethical Hacker) எலியாட் ஆண்டர்சன் (Elliot Alderson) இந்த செயலியின் பாதுகாப்பின்மையை வெளிபடுத்தியுள்ளார். குறிப்பாக அவர் கோடிட்டு காட்டியுள்ள ஒரு பிரச்சனை, எந்த எந்த பகுதியில் யார் எல்லாம் பாதிக்கப்பட்ட நோயாளிகள், அவர்களின் பெயர்கள் மற்ற விவரங்கள் எளிமையாக எடுக்கும் நிலையில் உள்ளதாக கூறியுள்ளார். மேலும், செயலியின் இடத்தை மாற்றியமைத்து வேறு இடங்களில் இருக்கும் நோயளிகளின் தகவல்களையும் எடுக்க முடிகிறது என்கிறார். இந்தியாவில் எந்த இடத்திலில் இருந்தும் மற்ற இடத்தில் உள்ள நோயாளிகளின் விவரங்களை ஒரு மூன்றாம் நபர் எடுக்க முடியும் என கூறியுள்ளார். இந்த தகவலை பிரெஞ்சு நாட்டை சேர்ந்த ஒருவர் கூறிய பிறகு இந்திய அரசு சரி செய்துள்ளதாக அறிவித்துள்ளது. ஆனால் அவர் கூறிய மற்ற பிரச்சனைகளை மறுத்துள்ளது ஆனால் அதை அவர் செய்துகாட்டியுள்ளார். இவர் தான் ஆதார் தகவல்களை யாரலும் எடுக்க முடியாது என்று வீராப்பாய் சொல்லிய ஆதார் இயக்குநரின் தகவல்களை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு வேவு பார்ப்பதும், அதை தனியாரின் உதவியோடு பெறுதல் போன்ற பிரச்சனைக்கு மத்தியில் இந்த ஆரோக்யா சேது செயலியும், ஆதாரும், எளிமையாக எந்த ஒரு மூன்றாம் நபரும் ஹாக் செய்து தகவல்களை எடுக்கும் நிலையில் இருப்பது நமக்கான அச்சத்தை மேலும் அதிகரிக்கிறது. இரண்டாவதாக மிக முக்கியமான கேள்வி, நம்மிடம் இருந்து திரட்டப்படும் தகவல்கள் எங்கு சேமிக்கப்படுகிறது என்பதுதான் அரசு சொல்லுகிறது, நம் கைப்பேசியில் மட்டுமே சேமிக்கப்படுவதாக ஆனால் அதன் உண்மைத் தன்மையை சோதிக்க இந்த செயலியின் source codeஐ (எவ்வாறு இந்த செயலி வடிவமைக்கப்பட்டது இதன் கட்டளை குறித்த விவரங்கள்) வெளியிடாமல் இருந்தது. பல போராட்டங்களுக்குப் பிறகு இப்பொழுது தான் androidக்கான source code மட்டும் வெளியிட்டுள்ளது. ஆனால் இன்னும் IOS (iphone), மற்றும் மிக முக்கியமாக நம் தகவல்களை பெறும் server ,கான source codeஐ வெளியிட மறுக்கிறது. இவ்வாறு இன்றிமையாத தகவல்களை மறைப்பதன் நோக்கம் என்ன என்பதே நமது முதல் கேள்வி. ஒரு புறம் மூன்றாம் நபரே எளிமையாக திருடும் அளவுக்கு அஜாக்கிரதையாக செயலியின் வடிவமைப்பு, மறுபுறம் நம் தகவல்கள் எங்கு எல்லாம் சேமிக்கப்பட்டு யாருக்கெல்லாம் கிடைக்கப் போகிறது என்பது குறித்த தெளிவின்மை.

இப்படியான குழப்பதிற்கு பதில் தரவேண்டிய சட்டத்துறையில் இதன் பாதுகாப்பு குறித்தும், இதன்

பரிமாற்றம் குறித்தும் இன்னும் சரிவர சட்ட வரையறை செய்யமுடியவில்லை. கடந்த பத்து வருடங்களாகவே ஆதாரை முன்வைத்து தனிமனித தகவல் மற்றும் இரகசிய பாதுகாப்பு குறித்து பெரும் விவாதம் இந்தியாவில் நடக்கிறது. எனவே இது குறித்து தெளிவான வரையறை வல்லுனர்கள் வகுக்கும் வரை தற்போதைய குழப்ப நிலையே நீடிக்கும். இதைப் பயன்படுத்தி நிறுவனங்களும், அரசும் நமது தகவல்களை எடுத்து செல்ல முடியும். ஆதாருக்கு எதிராக சட்ட போராட்டம் நடத்திய சட்ட வல்லுனர்களில் ஒருவரான வழக்கறிஞர் பிரசன்னா கூறுகிறார், ஆதார் தனிமனித உரிமைக்கு எதிரானதா என நீதிமன்றம் விசாரிக்கும் போதே அரசு '80 சதவீததிற்கும் அதிகமான மக்களை மறைமுகமாக கட்டாயப்படுத்தி வாங்க வைத்து விட்டது. அந்த எண்ணிக்கையை வைத்தே அதன் சட்ட அங்கீகாரத்தை வேண்டியது அரசு' என்கிறார். ஆரோக்கிய செயலியின் மூலம் தகவல் திரட்டலிலும் இவை நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மேலும், சட்ட வல்லுனர்கள் முன்வைக்கும் மிக அடிப்படையான எந்த கேள்விக்கும் அரசு பதில் அளிக்கவில்லை. குறிப்பாக, கொரோணா காலத்திற்குப் பிறகு இந்த செயலியின் மூலம் திரட்டப்பட்ட தகவல்கள் அழிக்கப்படுமா? அவரச காலத்தில் முன்வைக்கப்பட்ட இந்த திட்டத்தின் எதிர்கால நிலைபாடு என்ன? இதற்கும் நிதி ஆயோக் ஜுலை 2018யில் வெளியிட்ட National Health Stack திட்டதிற்கும் தொடர்புள்ளதா?

இவை அனைத்தும் நமது மூன்றாவது பிரச்சனையான பொதுத்துறையை தனியாருக்கு தாரைவாக்கும் புள்ளிக்கு இட்டு செல்லும். National Health Stack என்பது இந்திய குடிமக்களுக்கான ஒரு மையப்படுத்தப்பட்ட மின்னனு சுகாதார தகவல் பதிவு. 2018யில் நிதி ஆயோக் இதன் செயல்பாடு குறித்த வரைவை வெளியிட்டது. இதன்படி ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு மருத்துவ எண் (Health ID) உருவாக்கப்பட்டு அதன் கீழ் உங்களுடைய மருத்துவ தகவல் பதிவு செய்யப்படும். தனிநபரின் தகவல்கள் அரசு, மருத்துவர் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் பகிரப்படும். தற்போதைய நிலையில் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் இந்த திட்டத்தின் அங்கமாக்கப்பட வில்லை என்றாலும். விரைவில் அவர்களை இணைப்பதற்கான வாய்ப்பு சட்டவரைவில் இருக்கிறது. மேலும், இந்த கட்டமைப்பை உருவாக்குவது எளிமையானது அல்ல மிகவும் செலவு செய்யவேண்டும். எனவே தான் தனியார் நிறுவனங்கள் தற்காலிகமாக இந்த திட்டத்தில் இருந்து விலகி உள்ளன. ஆனால் அடிப்படையான செயல்திட்டம் வரும் போது கட்டாயம் தனியாரிடமே இந்த கட்டமைப்பு அளிக்கப்படும். எவ்வாறு உறுதியாக கூறுகிறோம் என்றால் தற்போதைய நிலை இது ஆயுஷ்மான் பாரத் (Ayushman Bharat) எனும் பிரதம மந்திரி காப்பீட்டு திட்டத்திற்காக உருவாக்கபடுகிறது. இதன் அடுத்தகட்டம் என்பது தனியார் காப்பீட்டு திட்டங்களுக்கும் இதை விரிவு படுத்துவது தான் ஒரே வழி. முதலில் அரசுதுறைக்கு என மிகவும் பொருட் செலவில் உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பை தனியார் துறைக்கு பின்னால் அளிப்பது ஒன்றும் புதியது அல்லவே. ஙிஷிழிலி தொடங்கி இன்று விண்வெளி ஆராய்ச்சி வரை அது தான் நடக்கிறது. கடந்த ஒரு வருடமாக இந்த திட்டத்திற்கான செயல் வடிவத்தை அரசால் உருவாக்க முடியவில்லை. அதற்கு இரண்டு பிரதான காரணங்கள் ஒன்று இந்த கட்டமைப்புக்கான செலவு, இரண்டு இது ஏற்கனவே உலக அளவில் தோல்வியடைந்த ஒரு திட்டம். 2002யில் இங்கிலாந்து நாட்டில் இந்த திட்டம் (National Health Service Information Authority) முதலில் முயற்சி செய்யப்பட்டு மிகப் பெரிய தோல்வியைத் தழுவியது. கிட்டதட்ட 12.5 பில்லியன் பவுண்ட்(pounds) செலவு செய்து இந்தத் திட்டத்தை மூடிவிட்டனர், மேலும் தங்களது பொது சுகதார துறையை பல கோடி செலவு செய்து மீட்ருவாக்கம் செய்ய வேண்டியிருந்தது.

இங்கிலாந்து போன்ற பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் சிறிய நாட்டிற்கே இந்த நிலையெனில், இந்தியாவில் எவ்வாறு சாத்தியப்படும் என்று வினவினர். எனவே அரசு இதை சிறிது காலம் இந்த திட்டத்தை நிறுத்தி வைத்து இருந்தது. ஆனால் இன்றைய அசாத்திய நிலையை பயன்படுத்தி இந்த தோல்வியடையந்த திட்டத்தை நம் மீது திணிக்கப் பார்க்கிறது. அரசு மக்களுக்கு தேவையான மருத்துவமனையை உருவாக்காமல் தனியார் மருத்துவமனையில் சென்று சிகிச்சை பாருங்கள் அதற்கான செலவு நாங்கள் தருகிறோம் என்று ஏமாற்றுகிறது.

இந்த contact tracing தொழிற்நுட்பம் மூலம் திரட்டப்படும் தகவல்கள் தொற்று நோய் பரவாத காலத்தில் எதற்காக பயன்படுத்தப்படும் என்பது இன்றும் விடை தெரியாத கேள்வி. ஒரு குடிமகனின் நகர்வுகளை காண்காணிக்கும் ஒரு கருவியை அரசு கட்டாயப்படுத்துவது நமது சுதந்திரத்திற்கு ஏதிரானது இல்லையா? கொரோணா எனும் தொற்று நோய் பரவும் இந்த நேரத்தில் அரசுக்கு எது கடமையாக இருக்க வேண்டும். அனைவருக்கும் முககவசம், கையுறை, உணவு அளிப்பது என்பதே முதன்மையான செயல்கள், ஆனால் இதுவரை அரசு இதை செய்துள்ளதா? இன்றுவரை பெரியாரிய, தமிழ்தேசிய, இஸ்ஸாமிய தோழர்களே அத்தியாவசிய பொருட்களை மக்களுக்கு வழங்குகிறார்கள். மோடியோ ஆரோக்கியா சேது செயலியை பதிவிறக்கச் சொல்லுவதும் அது ஏதோ கொரோணாக்கான மாற்று மருந்து போல பேசுவதும் ஆக இருக்கிறார்.

ஹங்கேரியில் அரசு அவசர சட்டத்தின் வழியே கட்டற்ற அதிகாரத்தை தன்வயப்படுத்தியுள்ளது, இஸ்ரேல் இந்த நெருக்கடி காலத்தைப் பயன்படுத்தி அரசு கண்காணிப்புக்கு தேவையான கட்டமைப்பை உருவாக்குகிறது. இந்த இரண்டையும் ஒருசேர சேர்த்து இந்திய அரசு நடைமுறைப் படுத்துகிறது. ஒரு பக்கம் காவல் துறை அதிகாரத்தைக் காட்டி அப்பாவி மக்களை துன்புறுத்துவது மறுபக்கம் மக்கள் விரோத சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றுதல் என அறிவிக்கப்படாத ஒரு நெருக்கடி நிலையை இந்த கொரோணா காலத்தில் செயல்படுத்துகிறது ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க அரசு. தனது எதிர்கால தேவையை கணக்கில் கொண்டு மக்களின் தகவல்களை எடுக்கவும், மக்கள் விரோத கட்டமைப்பை உருவாக்கவும் ஆரோக்யா சேது செயலியை அறிமுகப்படுத்துகிறது. இந்த செயலியை பதிவிறக்கம் செய்வது விருப்பத்தின் பெயரிலே என்கிறது அரசு ஆனால் அரசு ஊழியர்கள் அனைவரும் கட்டாயப் பதிவிறக்கம் செய்யுமாறு கட்டாயபடுத்தப்படுகிறார்கள். இவை அனைத்திற்கும் மேல் டில்லி அருகில் உள்ள நொய்டாவில் இந்த செயலியை பதிவிறக்கம் செய்யாதற்காக மக்களை கைது செய்துள்ளார் அந்தப் பகுதி காவல்துறை அதிகாரி. ஹாரியானாவில் பேருந்து பயணத்திற்கு இந்த செயலி கட்டாயம் என்கிறது அந்த மாநில அரசு. “பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்” எனும் வரிகள் தான் நினைவுக்கு வருகின்றது.

●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

# 'கொரோனா' தொற்றுக்கான தீர்வைத் தேடி...

ஹாலிவுட் திரைப்படங்களில் வரும் படக்காட்சியைப் போல இன்று நம் ஊர் தெருக்கள் காட்சியளிக்கின்றன. "ஸாம்பி" படங்களை எல்லாம் அருவருப்பான கற்பனைகள் என்று நினைத்த நாள்கள் போய் "அப்படியும் ஒரு நாள் வந்திடுமோ?!" என்ற அச்சம் ஆழ்மனதில் எட்டிப் பார்க்கிறது.



இந்தத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் தடுப்பு மருந்துகளை ஆராய்ந்து வருவதை அறிவோம். ஆனால், அது நிரந்தர தீர்வாகுமா? இன்று போய் நாளை வேறாக வந்தால் வரலாம் என்கிறார்களே! நிரந்தரத் தீர்வு தான் என்ன? இந்த கேள்விகளை ஆராய்வதே இந்தக் கட்டுரை.

31.12.2019 அன்று வூகான் மாநகராட்சி சுகாதாரத்துறை முதன்முதலாக ஒரு புது ரக சுவாசத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகச் செய்தி வெளியிட்டது.

கோவிட்-19 வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் விபரம் (28.4.2020) நிலவரம்.

| நாடு | பாதிக்கப்பட்டவர் | இறந்தவர் | இறப்பு விகிதம் |
|---|---|---|---|
| இத்தாலி | 1,99,414 | 26,977 | 13.5% |
| ஸ்பெயின் | 2,32,128 | 23,822 | 10.3% |
| இங்கிலாந்து | 1,57,149 | 21,092 | 13.4% |
| அமெரிக்கா | 10,10,507 | 56,803 | 5.6% |
| இந்தியா | 29,451 | 939 | 3.2% |

அடுத்த 30 நாள்களில், 30.1.2020 அன்று உலக சுகாதார அமைப்பு தனது அறிக்கையில் இந்த நோய்த்தொற்று 18 நாடுகளுக்குப் பரவி மொத்தம் 7818 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டது.

தற்போது, உலகின் பாதிக்கும் மேலான மக்கள், வீட்டில் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

**தடுப்பூசி ஆராய்ச்சி, உற்பத்தி மற்றும் விநியோகம் அனைத்தும் பன்னாட்டு முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் இருந்து விடுவிக்கப்படவேண்டும். கோவிட்-19 தொற்று நோயை குணமாக்கக்கூடிய உயிர் காக்கும் நோய் தடுப்பு மருந்துகளை, பெனிசிலின் (penicillin vaccine) போன்று, பொதுவுடைமையாக்கப்பட வேண்டும். சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் எளிமையாக கிடைக்கும்படி செய்திட வேண்டும்.**

வளர்ச்சி பெற்ற நாடுகளின் மருத்துவமனைகள் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. “இறந்தவர்களைப் புதைக்க எங்களிடம் இடமில்லை” என்று இத்தாலி பிரதமர் கண்கலங்கியதைப் பார்த்தோம். இறந்தவர்களைப் புதைக்க இடம் தேடி வருவதாக நியூயார்க் (அமெரிக்க மாகாணம்) ஆளுநர் கூறியதைக் கேட்டோம். இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு 37 நாள்கள் கழிந்தும் ஒன்றியம் மற்றும் மாநில அரசுகள் சரியான சோதனை முறையைக் கண்டறிந்து மக்களைச் சோதனை செய்யும் திறனற்று உள்ளதை நேரடியாகக் கண்டு வருகிறோம். கொரொனா தொற்றுநோய் உலக நாடுகளின் உண்மை நிலவரத்தை அம்பலமாக்கியுள்ளது. தற்போதைய தொற்று குழந்தைகளைப் பெரும்பாலும் பாதிப்பதில்லை என்பது ஒரு ஆறுதலான செய்தி.


28.4.2020 வரை உலகளவில் 30,79,972 பேர் இந்த COVID-19 (கோவிட்-19) கொரொனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 9,28,995 பேர் குணமாகியுள்ளனர். 2,12,265 பேர் உயிரிழந்துள்ளனர். அதாவது, உலகளவில் நோய்த்தொற்று ஏற்பட்டதில் இறப்பு விகிதம் சுமார் 7% ஆக உள்ளது. அதேநேரம், இந்தியாவில் கொரொனா இறப்பு விகிதம் 3% ஆக இருக்கிறது. தமிழ்நாடு அளவில் இறப்பு விகிதம் 1.2% ஆக மட்டுமே உள்ளது.

ஒப்பீட்டளவில், H5N1 பறவை காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் இறப்பு விகிதம் 60% ஆகவுள்ளது. பறவை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 50% ஆகவுள்ளது. 2017-ல் பரவி வந்த பறவை காய்ச்சல் நின்று போனதின் காரணத்தை இதுவரை யாராலும் கணிக்கமுடியவில்லை.

ஒருவேளை, H5N1 பறவை காய்ச்சல் நோய் கோவிட்-19 அளவிற்கு எளிமையாகப் பரவும் தொற்றாக மாறி மீண்டும் தாக்கினால் மனித சமூகம் நினைத்துப் பார்க்க முடியாத இழப்பைச் சந்திக்க நேரிடும். அது, மீண்டும் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து அமெரிக்காவின் தொற்று நோய் கட்டுப்பாட்டு வாரியத்தின் மருத்துவர் நான்சி காக்ஸ் “இந்த கதை எங்கு, எப்படி முடியும் என்று யாருக்கும் தெரியாது” என்று கருத்து தெரிவித்தார்.

இந்தியாவின் குறைந்த இறப்பு விகிதம் உலகளவில் வியாதமாகியுள்ளது. இதுவரை தெளிவான காரணம் அறியப்படவில்லை. இந்தியாவில் கொரொனாவினால் பாதிக்கப்பட்டவர்களில் 80% பேருக்கு அறிகுறிகள் தென்படுவதில்லை.

மற்ற நாடுகளில் தொற்று அறிகுறி தென்படாதவர் 25% - 50% வரை உள்ளனர். மேலும், இத்தாலி, ஸ்பெயின், இங்கிலாந்து, அமெரிக்கா தங்களது ஒவ்வொரு 10 லட்சம் மக்கள் தொகைக்கும் முறையே 29600, 28779, 10605, 17211 சோதனைகளை செய்துள்ளன. இந்தியாவில் 10 லட்சம் பேருக்கு வெறும் 519 சோதனைகளே செய்யப்பட்டுள்ளது. மிகக் குறைந்தளவு சோதனைகள் மற்றும் 80% நோய் அறிகுறி இல்லாதது இணைந்து இந்தியாவின் பெரும்பான்மையான கொரொனா பாதிப்புகள் கண்டறியப்படாமலே போகின்றன. இதன் விளைவாக, நோய்த்தொற்று அறிகுறி இல்லாமல் இறந்து போவோரின் எண்ணிக்கை அரசின் கணக்கில் வராமல் போகும் வாய்ப்புகள் மிக அதிகம். இந்தியாவின்



Ann Kiernan

மிகக் குறைவான நோய்த்தொற்று எண்ணிக்கை மற்றும் இறப்பு விகிதத்திற்கு இது காரணமாக இருக்கலாம்.

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை 12 மேற்குலகு நாடுகளின் இறப்பு விகிதத்தை ஆய்வு செய்ததில் மார்ச் மாதத்தில் மட்டும் கூடுதலாக 40,000 பேர் இறந்திருக்கக்கூடும் என்கிறது. பினான்சியல் டைம்ஸ் பத்திரிகை, 14 நாடுகளின் கொரொனா இறப்பு எண்ணிக்கை 60% அதிகமாக இருக்க வாய்ப்புள்ளதாகக் கூறியுள்ளது. பேரிடர் காலங்களில் இப்படி கணக்கில் முரண்பாடுகள் வருவது இயல்பு தான் என்கின்றனர். இதில் இந்தியா இடம்பெறவில்லை. வளர்ந்த நாடுகளின் இறப்பு எண்ணிக்கையில் இவ்வளவு வித்தியாசம் வர வாய்ப்பிருக்கும் போது மக்கள் அடர்த்தி மிகுந்த நகரங்களையும், பரந்து விரிந்த கிராமங்களையும் கொண்ட இந்தியா அறிவித்துள்ள எண்ணிக்கைகளை நாம் ஐயத்துடனேயே அணுகவேண்டியுள்ளது.

**“**

**தடுப்பு மருந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வரையிலான இடைப்பட்ட காலத்தில் தொற்று பரவுவது குறையும்போது ஊரடங்கை சில நாள்கள் தளர்த்தலாம். மருத்துவமனைகள் கையாளும் அளவிற்கு புது நோயாளிகள் வந்தவுடன் மீண்டும் ஊரடங்கு பிறப்பிக்கலாம். தடுப்பூசி வரும்வரை இந்த முறையைக் கடைப்பிடிக்கலாம்.**

கொரொனா வைரஸ் வரலாறு காணாத சமூக-பொருளாதார பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் வேளையில் இதுவரை கோவிட்-19 வைரஸ் எந்த விலங்கிடமிருந்து மனிதருக்கு “தாவியது” என்பது சர்ச்சையாகவே நீடிக்கிறது.

2002-ல் சார்ஸ் (SARS) வைரசானது வவ்வாலில் இருந்து இடைநிலை விலங்கான சைவட் பூனை வழியாக மனிதர்களை அடைந்தது. இதேபோல, கோவிட் -19 வைரஸ் வவ்வாலில் இருந்து இடைநிலை விலங்கான எறும்புண்ணி மூலமாக மனிதனை வந்தடைந்து இருக்கலாம் என்று அறிஞர்கள் சந்தேகிக்கின்றனர். சில ஆராய்ச்சியாளர்கள் இதை ஏற்க மறுக்கின்றனர்.

வவ்வால்களில் உள்ள வைரஸ்களை பற்றி ஆராய்ச்சி செய்யும் நோயெதிர்ப்பு நிபுணர் ஆஸ்திரேலியாவின் மிச்செல் பேக்கர், “இந்த கோவிட்-19 வைரஸ் அநேகமாக வவ்வால்களில் இருந்துதான் வந்திருக்கக்கூடும். வூகான் இறைச்சி சந்தையில் பல்வேறு விலங்குகள் ஒன்றோடொன்றாக இருந்திருக்கும் வாய்ப்புகள் அதிகமுள்ளது. இருந்தபோதிலும், இன்னும் வைரசின் தோற்றம் குறித்துத் தெளிவான தகவல் இல்லை” என்கிறார். இந்த விவகாரத்தில் மேற்குலகு நாடுகள், வூகான் இறைச்சி கசாப்பு சந்தை (wet markets) போன்றவை தான் விலங்குகளிடம் இருந்து தொற்றுநோய்களைப் பரப்புகின்றன. ஆகையால், இது போன்ற இறைச்சி சந்தைகளைத் தடை செய்ய வேண்டும் என்று அறிவித்தன.

வைரஸின் தோற்றம் குறித்து உறுதியான தகவல் கண்டறியப்படாத வரை நோய்த்தடுப்பு மருந்துகள் தோல்வி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று ஆராய்ச்சியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## சிகிச்சை வழிமுறைகள்

உலகெங்கும் 185 நாடுகளில் பரவியுள்ளகோவிட்-19 வைரஸ் ஏற்படுத்தி வரும் மனித உயிரிழப்புகளும், தொற்று தடுப்பு

நடவடிக்கையால் ஏற்படும் பொருளாதார இழப்புகளும் மனிதகுல வரலாறு இதற்குமுன் கண்டதில்லை.

ஏழை நாடுகளை விடப் பணக்கார நாடுகளில் உயிரிழப்புகள் மிக அதிகமாக உள்ளது. இதற்கு, "கடந்த நூற்றாண்டில் நோய்த்தொற்றை எதிர்கொள்ளாத சமூகம், நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாடுள்ள சமூகம், முதியோர்களால் நிரம்பிய சமூகம், தனியார் மயமான சுகாதாரத்துறை" என்று பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. பணமும் இராணுவ பலமும் வைத்து எதையும் சாதிக்கலாம் என்று நாட்டாமை செய்த ஏகாதிபத்திய அமெரிக்காவைக் கையுறை, முகக்கவசம் வேண்டிக் கையேந்த வைத்துவிட்டது கோவிட்-19 என்னும் ஒரு செல் நுண்ணுயிர் கிருமி.

## நோய்த்தடுப்பு மருந்து

தங்கள் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் எல்லாவற்றையும்விட தங்கள் சர்வதேச மேலாண்மையை நிலை நிறுத்த பணக்கார அரசுகள் கோவிட்-19 தொற்றுக்கான

இந்தியாவிலும் வெவ்வேறு மரபணு திரிபுகள் பரவியுள்ளது. அதாவது, வைரசின் மரபணு சிறு வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. "இதுவரை நடைபெற்றுள்ளகோவிட்-19 மரபணு பிறழ்வால் வைரசின் நோய்த்தொற்றின் வீரியமோ அல்லது அதன் உயிர் கொல்லும் தீவிரத்தன்மையோ மாற்றமடையவில்லை" என்று உலக சுகாதார கழகத்தின் மருத்துவர் மரியா வான் கெர்கோவே கூறியுள்ளார். ஆதலால், நோய்த் தடுப்பு மருந்துகள் ஆரம்பத்தில் சரியாகப் பணி செய்யக்கூடும். ஒருவேளை, மனித உடலில் நோய்த்தடுப்பு மருந்தைச் செலுத்தியபின் அதை எதிர்கொள்ளும் வேளையில் கோவிட்-19 வைரஸ் தன்னை தற்காத்துக்கொள்ள மரபணு அடிப்படைகளை மாற்றும் மரபணு பிறழ்வுகளை நிகழ்த்தலாம். இது நடைபெறும்பட்சத்தில் நோய்த்தடுப்பு மருந்து செயலிழந்து போக வாய்ப்புள்ளது. இவையனைத்தும், தடுப்பு மருந்து சோதனைகளின் போதே தெரிய வருமென மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப் பல இலட்சம் கோடிகளைக் கொட்டி ஆராய்ச்சி செய்து வருகின்றன. தற்போது, பல்வேறு ஆராய்ச்சிக் கட்டங்களில் உள்ள இந்த மருந்துகளால் இந்த நோயைத் தடுத்துவிடலாம் என்று இந்த அரசுகள் நினைத்தாலும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் வேறு பல சிக்கல்களை முன் வைக்கின்றனர்.

சீனாவின் கோவிட்-19 வைரஸ் மரபணு பிறழ்வால் திரிபு (mutated strain) அடைந்து சிறு மாற்றத்துடன் இத்தாலியில் பரவியுள்ளது. அமெரிக்காவிலும்,

உலகின் இரண்டாம் மிகப்பெரிய பணக்காரர் பில் கேட்ஸ் நடத்தி வரும் பணக்காரத் தொண்டு நிறுவனம் கொரொனா நோய்த்தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கு சுமார் 250 மில்லியன் டாலர் வழங்கியுள்ளது. "கொரொனா சர்வதேசத் தொற்றுநோய் என்பதால் இந்த பூமியில் வாழும் 700 கோடி மக்களும் கோவிட்-19 தடுப்பூசி போடுவது அவசியமாகிறது. தேவை ஏற்பட்டால் பல முறை போட வேண்டிய அவசியம் எழலாம். மேலும், கொரொனா தடுப்பூசி போடாதவர்களை பொது சமூகத்துடன் சேரவிடாமல்

தனிமைப்படுத்துவதன் மூலமே இந்நோயை கட்டுப்படுத்த முடியும்” என்று பில் கேட்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

அதாவது, தடுப்பூசி போடாதவர்களை முத்திரைக்குத்தி சமூகத் தனிமை படுத்தவேண்டும் என்பது கேட்ஸின் முதலாளித்துவ கருத்து. அரசுக்கு வரி கட்ட மூக்கால் அழும் பன்னாட்டு முதலாளிகளா பொது சமூகத்தின் பாதிப்புகளைக் கண்டு மனம் வருந்துவார்கள்? இல்லை! இனிமேல் வரும் தொற்று நோய்கள் ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும் பாதிக்கும் வாய்ப்புகள் அதிகம். ஒட்டுமொத்த மனித இனமும், சுமார் 700 கோடி மக்கள் சந்தை, பல முறை தடுப்பு மருந்து வாங்கும் என்பதை “இரத்தவாடை பிடித்த ஓநாய்களாக” உணர்ந்த பணக்கார முதலாளிகள் இந்த “தொற்று நோய் தடுப்பு மருந்து” துறையில் அதிகமாக முதலீடு செய்து வருகின்றனர். இந்த முதலாளித்துவ லாப வெறியானது தடுப்பூசி போட வசதியில்லாத ஏழை மக்களைப் பலியாக்கும்.


தடுப்பூசி ஆராய்ச்சி, உற்பத்தி மற்றும் விநியோகம் அனைத்தும் பன்னாட்டு முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் இருந்து விடுவிக்கப்படவேண்டும். கோவிட்-19 தொற்று நோயை குணமாக்கக்கூடிய உயிர் காக்கும் நோய் தடுப்பு மருந்துகளை, பெனிசிலின் (penicillin vaccine) போன்று, பொதுவுடைமையாக்கப்பட வேண்டும். சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் எளிமையாக கிடைக்கும்படி செய்திட வேண்டும்.

பொதுவாக, நோய்தடுப்பு மருந்துகள் மனித உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை தட்டியெழுப்பி தயார்படுத்த மட்டுமேயன்றி, இந்த மருந்துகள் நேரடியாக நோய் கிருமிகளுடன் சண்டையிடுவதில்லை. இப்படி வலுவூட்டப்பட்ட மனித உடலின் நோயெதிர்ப்பு சக்தி தான் தொற்று நோய் கிருமிகளுடன் நேரடியாக சண்டையிட்டு நோய் கிருமியை வீழ்த்த வேண்டும்.

## மந்தை நோயெதிர்ப்பு சக்தி

இன்று பல்வேறு ஆய்வுக் கட்டங்களில் உள்ள தடுப்பு மருந்து, மக்கள் பயன்பாட்டிற்கு வர அடுத்த 6 முதல் 18 மாதங்கள் வரை ஆகலாம் என்று செய்திகள் வெளியாகின்றன. இதற்கிடையே, சீனா, சிங்கப்பூர், தென் கொரியா போன்ற நாடுகளில் கொரோனா தொற்று ஏற்பட்டு குணமாகியவர்களுக்கு மீண்டும் நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முறையான தடுப்பு மருந்து பயன்பாட்டிற்கு வரும் வரையில் தற்போதைய ஊரடங்கைத் தொடர்ந்து நீட்டிப்பதே சரியான முடிவாக விவாதிக்கப்படுகிறது. ஏற்கனவே 6 வாரங்கள் ஊரடங்கால் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தினக்கூலிகளும் சிறு-நடுத்தர தொழில் மற்றும் வணிகர்களும் வருமானம் இல்லாமல் போதுமான உணவுக்கு வழியில்லாமல் முற்றிலும் முடங்கிப்போயுள்ளனர். அடுத்து வரும் மாதங்களில் ஊரடங்கால் காப்பாற்றப்படும் உயிர்களைவிடப் பசியால் போகும் உயிர்கள் அதிகரிக்கும்.

பல நூற்றாண்டுகளாகத் தொற்றுநோய்கள் மனிதக் குலத்தைத் தாக்கி வந்துள்ளன. தொற்று நோயால் தாக்கப்பட்ட சமூகம் நோய்க்கிருமியுடன் போராடி தனக்கான “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” யை (herd immunity) வளர்த்திடும் வரை அந்த சமூகம் தொற்றுநோயின் தாக்குதலுக்கு ஆட்பட்டிருக்கும். நோய்த்தொற்றின் தீவிரத்தன்மையை பொருத்து உயிரிழப்புகளும் இருக்கும். தொற்றுநோயின் வீரியத்தைப் பொருத்து ஒரு சமூகம் 70-90% மக்கள் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தால் மட்டுமே “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” உருவாகும். ஒரு சமூகத்தின் 70% மக்கள் “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” பெற்றால், 10ல் 7 பேர் நோய்க் கிருமியின் பாதிப்பு இல்லாமல் இருப்பார்கள். தொற்றுநோய்களை ஒழிக்க இதுவே இயற்கை வழங்கும் நிரந்தரத் தீர்வு. கோவிட்-19 கொரொனா தொற்றை சமூகத்தில் இருந்து ஒழித்திட அச்சமூகத்தின் 70% மக்கள் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தால் மட்டுமே “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” பெற முடியும் என்று அமெரிக்கப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



மந்தை நோயெதிர்ப்பு சக்தி செயல்படும் முறை.

அதிக உயிர் இழப்புகள் இல்லாமல் “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” யைப் பெற்றிடவே தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன. தடுப்பூசிகள் நோய்க் கிருமியைச் சிறியளவில் மனித உடலுக்கு அறிமுகப்படுத்தி முன்கூட்டியே நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்கச் செய்திடும். இந்த முறையாலேயே தட்டம்மை, போலியோ, சின்னம்மை போன்ற நோய்களுக்கு எதிரான “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” ஏற்படுத்தப்பட்டு இன்று முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டன.

தடுப்பூசிக்காக அடுத்த 6 முதல் 18 மாதங்கள் வரை காத்திருந்தால் ஊரடங்கால் ஏற்படும் பாதிப்புகள் கைமீறிப் போகுமென அரசுகள் அஞ்சுகின்றன. அதேநேரம், தடுப்பூசி இல்லாமல் ஊரடங்கினைத் தளர்த்தினால் நோய்த்தொற்று மளமளவென வளர்ந்து மருத்துவமனைகள் நிரம்பி உயிரிழப்புகள் மலையெனக் குவியும் என்றும் அஞ்

சப்படுகின்றன. இதற்கு ஒரு தீர்வாக, "தடுப்பு மருந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வரையிலான இடைப்பட்ட காலத்தில் தொற்று பரவுவது குறையும்போது ஊரடங்கை சில நாள்கள் தளர்த்தலாம். மருத்துவமனைகள் கையாளும் அளவிற்கு புது நோயாளிகள் வந்தவுடன் மீண்டும் ஊரடங்கு பிறப்பிக்கலாம். தடுப்பூசி வரும்வரை இந்த முறையைக் கடைப்பிடிக்கலாம்." என்று ஆராய்ச்சியாளர்கள் ஆலோசனைத் தெரிவிக்கின்றனர். இந்த முறையால் நோய்த்தொற்று மற்றும் பொருளாதார பாதிப்பு இரண்டையும் ஓரளவுக்குச் சமாளிக்கலாம்.

மக்கள் தொகை குறைவான, வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு இந்த நடவடிக்கை பொருந்தலாம். இந்தியா போன்ற பல்வேறு சமூக பொருளாதார நிலையில் உள்ள பலதேசிய இனங்கள் கொண்ட ஒன்றியத்தில் இது மிகப்பெரும் சவாலாகவே இருக்கும். அதே சமயம், பசியால் வாடும் ஏழைகளை வைத்துக்கொண்டு ஊரடங்கைத் தொடர்வது பட்டினிச் சாவுகளை அதிகரிக்கும். குறைந்தபட்சம் மக்களின் பசியைப் போக்க இந்திய ஒன்றிய அரசு தேவையான அளவு தானியங்களை வழங்கலாம். அதை ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் வழங்க மறுப்பதால் பசிக்கொடுமை தாளாத மக்கள் கொரொனாவை பொருட்படுத்தாமல் வெளியே வரும் சூழல் ஏற்படுகிறது. அப்படி பசிக்கொடுமையால் வெளியே வரும் தினக்கூலிகள், தொழிலாளர்கள் தான் கடுமையாகப் பாதிப்பிற்குள்ளாவார்கள்.

## முன்னோடி நாடுகள்

ஐரோப்பிய நாடுகளான ஜெர்மனி, பிரான்சு, நெதர்லாந்து, சுவீடன், நார்வே போன்றவை தங்கள் பள்ளிகளைத் திறக்கப்போவதாக அறிவித்துள்ளன. ஜெர்மனியில் மாணவர்கள் பள்ளிக்குச் செல்கின்றனர். சில நாடுகள் மக்கள் அதிகம் கூடாத சிறு வணிக நிலையங்களைத் திறக்க அனுமதியளித்துள்ளன. இந்த நாடுகள் தடுப்பூசி வரும்வரை பல மாதங்கள் காத்திருக்க விருப்பமின்றி தங்கள் பொருளாதார நிலவரத்தைக் கருத்தில் கொண்டு ஊரடங்கைத் தளர்த்தத் தொடங்கிவிட்டன. தடுப்பு மருந்தின் துணை இல்லாமல் இயற்கையான முறையில் "மந்தை நோயெதிர்ப்பு சக்தி" யை உருவாக்கும் முயற்சியில் இறங்கிவிட்டன.

கோவிட்-19 கொரொனா சுவாச கோளாறு தொற்று முதியோர் மற்றும் வேறு உடல்நல குறைபாடுகள் உள்ளவர்களையே கடுமையாகப் பாதிக்கின்றது. குழந்தைகளைப் பெரிதாகப் பாதிக்கவில்லை என்பதால் பள்ளிக்கூடங்கள் முதற்கட்டமாகத் திறக்கப்படுகின்றன. "எங்கள் குழந்தைகளை வைத்து சோதனை நடத்த அனுமதிக்கமாட்டோம்" என்று குழந்தைகளின் பெற்றோர்களிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையிலும் இந்த அரசுகள் பள்ளிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

சுவீடன் அரசு இதுவரை முழுமையான ஊரடங்கு அமல்படுத்தவில்லை. இதன் காரணமாக, முதியோர்களும் நோய் வாய்ப்பட்டவர்களும் கொரொனா தொற்றால் அதிக அளவில் உயிரிழந்தனர். இதனையடுத்து, 65 வயதிற்கு மேற்பட்டோர், இருதயம், நுரையீரல், நீரிழிவு



மழலையர் பள்ளி, நார்வே. ஏப்ரல் 27.



ஆரம்ப பள்ளி, சுவீடன். ஏப்ரல் 29.

நோய்ப் பாதிப்பு உள்ளவர்களைக் கண்டிப்பாக வீட்டில் இருக்கும்படி வலியுறுத்தியுள்ளது சுவீடன் அரசு. மற்ற மக்கள் அனைவரும் சமூக இடைவெளி கடைப்பிடித்து இயல்பு வாழக்கையை நடத்த அனுமதித்துள்ளது.

கொரொனா தொற்றால் சுவீடனில் ஏற்பட்ட இறப்பு விகிதம் என்பது 12% ஆக உள்ளது. இது, உலகிலேயே அதிகமாகப் பாதிக்கப்பட்ட இத்தாலியின் 13.5% இறப்பு விகிதத்துடன் ஒத்து இருந்தாலும் இத்தாலி முழு ஊரடங்கில் உள்ளது சுவீடன் முழு ஊரடங்கை அமல்படுத்தவே இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

சுவீடனின் பொதுச் சுகாதாரத்துறை தலைமை தொற்றுநோய் மருத்துவர் ஆண்டெர்ஸ் டெக்னேல் இந்த நடவடிக்கை குறித்துக் கூறுகையில், "நாங்கள் மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு நோய்த்தொற்றைக் கண்காணித்து வருகிறோம். தற்போது, மழலையர் பள்ளி தொடங்கி 9 ஆம் வகுப்பு வரை பள்ளிகள் இயங்கி வருகிறது. இன்னும், உயர்நிலை பள்ளி, கல்லூரிகள் திறக்கவில்லை. தலைநகர் ஸ்டாக்ஹோமில் 25% மக்கள் கொரொனா வைரஸ் தொற்று ஏற்பட்டு நோயெதிர்ப்புச் சக்தி பெற்றுள்ளதாக நாங்கள் கணிக்கின்றோம். இங்கு, ஒரு மருத்துவமனையில் 27% பணியாளர்கள் நோயெதிர்ப்பைப் பெற்றுள்ளதைக் கண்டறிந்துள்ளோம். அடுத்த சில வாரங்களில் ஸ்டாக்ஹோம் மக்கள் முழுவதும் மந்தை நோயெதிர்ப்புச் சக்தியினைப் பெற்றுவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்." என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மந்தை நோயெதிர்ப்பு சக்தியே வரலாற்று முழுவதும் தொற்றுநோய்களை நிரந்தரமாக ஒழித்துள்ளன. இந்தப் போக்கில் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்கவே தடுப்பு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. தடுப்பு மருந்து வரும் காலம் தொலைவில் உள்ளதால், மந்தை நோயெதிர்ப்பு சக்தியை மட்டுமே நம்பி சுவீடன் மற்றும் சில நாடுகள் கவனமாகத் திட்டமிட்டு தங்கள் பயணங்களைத் தொடங்கிவிட்டன.

## நமக்கான பயணம்

இந்த “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” நிரந்தர தீர்வை இயற்கையான முறையில் வழங்கினாலும், தடுப்பு மருந்தின் உதவி இல்லாமல் சமூகம் செயல்பட்டால், குறைந்தபட்சம் 30% மேலாக இறப்பு விகிதம் இருக்க வாய்ப்புள்ளது. அதாவது, 1 கோடி மக்கள் தொகையில் 30 லட்சத்திற்கும் அதிகமான இறப்புகள். இன்றைய நாகரீகம் அடைந்த சமூகத்தில் இது மிகப்பெரிய மனித அழிவாக இருக்கும். இதில், நோய்க் கட்டுப்பாடு, மருத்துவ சிகிச்சை மற்றும் அரசின் அத்தியாவசியப் பணியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். அதைவிட முக்கியமாக, நோயெதிர்ப்பு குறைபாடுள்ளவர்கள் மற்றும் தினக்கூலி தொழிலாளர்கள் ஏழை எளிய நலிந்த மக்கள் முழுமையாக பாதிக்கப்படுவார்கள். இந்தப் பிரிவினர்களின் மருத்துவப் பாதுகாப்பை முறையாக திட்டமிடாமல் சுவீடன் மாதிரியான “மந்தை நோயெதிர்ப்பு சக்தி” முறையை செயல்படுத்துவது மிகப்பெரிய சமூக அழிவையே தேடித்தரும்.

அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சில நோர்டிக் நாடுகள் (சுவீடன், டென்மார்க், நோர்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து) இந்த முறையைப் பின்பற்றின. அதில்,

- அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து அரசுகள் கோவிட்-19 தீவிரமாக பரவி வந்த நிலையிலும் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க மட்டுமே வலியுறுத்தின. மற்றபடி, அலுவலகங்கள், தொழிற்சாலைகள் இயங்கின மக்கள் இயல்பு வாழ்க்கையைத் தொடர்ந்தன. 100% ஊரடங்கு பிறப்பிக்கப்படவில்லை. இதனால், கோவிட்-19 வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் கிடுகிடுவென மருத்துவமனைகளில் குவிய தொடங்கினர்.
- தொற்றுநோயை “எதிர்கொள்ள” மக்களின் இயல்பு வாழ்க்கையை அனுமதித்த இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா நோய்த்தொற்றை தங்களால் எதிர்கொள்ள இயலாமல் மருத்துவ சிகிச்சை வேண்டி வருபவர்களுக்குச் சிகிச்சை அளிப்பது குறித்து திட்டமிடவில்லை. தங்கள் மருத்துவக் கட்டமைப்பு சமாளிக்கும் அளவை மீறி நோயாளிகள் வருவதைக் கணித்து ஊரடங்கை பிறப்பிக்க தவறிவிட்டன. இதன் விளைவாக, மருத்துவ சிகிச்சை பெறமுடியாமல் நிறைய இறப்புகள் நிகழ்ந்தன. ட்ரம்ப் மற்றும் ஜான்சனின் தீவிர வலதுசாரி முதலாளித்துவ அரசுகள் பணக்கார முதலாளிகளின் வணிக லாபங்களைப் பாதுகாக்க நினைத்தனவே தவிர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் மக்களின் பாதுகாப்பை முற்றிலும் கை கழுவிவிட்டன.
- சுவீடன் இந்த முறையை விரிவாக திட்டமிட்டு செயல்படுத்தியுள்ளது. தொடக்கத்தில் உயிரிழப்புகள் நிகழ்ந்தாலும் நோய்த்தொற்றை தற்போது கட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. முழு ஊரடங்கை அமுல்படுத்தாத இந்த நாடுகள் நோய்த்தொற்று ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை தேடி வருபவருக்கு உரிய சிகிச்சையை வழங்கி வருகின்றன. நோயாளிகள் வருகையும் நார்டிக் நாடுகளின் பொதுச்சுகாதார மருத்துவ கட்டமைப்புகள் சமாளிக்கும் அளவைவிடக் குறைவாகவே உள்ளன.
- அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா முதலாளித்துவ நாடுகளைப் போன்றில்லாமல் நார்டிக் நாடுகள் தங்கள் மக்களின் பொதுநலன்களில் மிகவும் அக்கறை செலுத்துபவை. உலகின் சிறந்த சமூகக் கட்டமைப்புகளைக் கொண்ட நார்டிக் நாடுகளின் செயல்திட்டங்களை, ஆப்ரிக்க நாடுகளுக்கு இணையான பட்டினி சாவுகளைக் கொண்டுள்ள இந்திய சமூகத்தில் செயல்படுத்துவது பேரழிவில் தான் முடியும்.

காசநோய், நிரிழிவு நோய், இருதய நோய், ஊட்டச்சத்து குறைபாடு, மோசமான பொது சுகாதாரக் கட்டமைப்புகள் உள்ள இந்திய ஒன்றியத்தில் நார்டிக் நாடுகளின் செயல்திட்டத்தை அமுல்படுத்த நினைப்பது கல்லைக் கட்டிக்கொண்டு கிணற்றில் குதிப்பதற்கு ஒப்பாகும். அதேசமயம், இந்திய அரசு வேறு என்ன செயல்திட்டம் தீட்டமுடியும் என்பதும் பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது. நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் சொந்த ஊருகளுக்கு நடந்து செல்லும் மக்களுக்கு போக்குவரத்தைக்கூட ஏற்பாடு செய்ய வக்கற்ற, பட்டினியால் உயிரிழக்கும் மக்களுக்கு சேமிப்பு கிடங்குகளில் நிரம்பிவழியும் தானியங்களை வழங்கிட மனம் இல்லாத பணக்கார வர்கத்தின் அடிவருடியான பாஜக மோடி அரசு பெரும்பான்மை மக்களுக்கு நிச்சயமாக மருத்துவ பாதுகாப்பை வழங்கிடாது. கொரொனாவிற்கு எதிரான போராட்டத்தை மாநில அரசுகளே முன் நின்று நடத்திட முடியும். அதுவே, சரி!

நார்டிக் நாடுகளைப் பின்பற்றி தமிழ்நாடு அரசும் அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு, முறையான அவசரகால சிகிச்சை வழங்கிடும் பொதுச்சுகாதாரத் துறை கட்டமைப்புகளை மாவட்டரீதியாக விரிவாக அமைத்து, பின்னர் ஊரடங்கை தளர்த்திட திட்டமிடலாம். அதற்குமுன், தமிழகத்திற்கு சேர வேண்டிய நிலுவை நிதியை தமிழக அரசு ஒன்றிய அரசிடம் போராடி பெற்றிட வேண்டும். போதுமான நிதியில்லாமல் அவசரக்கால கட்டமைப்பை திட்டமிட்டு உருவாக்கிட முடியாது.

80% தொற்றுக்களில் அறிகுறிகள் தென்படாதலால் ஊரடங்கு காலத்தில் முழுமையாக சோதனைகளை செய்திட வேண்டும். தமிழ் நாட்டில் நிகழும் அனைத்து மரணத்தையும் (100%) கட்டாயம் கொரொனா தொற்றுக்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். இது மட்டுமே நோயின் பரவலையும் தீவிரத்தையும் அறிய உதவும்.

தொடர்ந்து, ஊரடங்கை தளர்த்தும்பட்சத்தில் வேகமாக பாதிக்கப்பட்டு வரும் நோயாளிகளுக்கு, முக்கியமாக வசதி வாய்ப்பில்லாதவருக்கு, முழுமையான மருத்துவ சிகிச்சையை வழங்கிடவேண்டும். கொரொனா தொற்று நோயாளிகளின் வரத்தால் அரசின் மருத்துவ திறன் நிரம்பும் நிலையை முன்கூட்டியே கணித்து மீண்டும் முழு ஊரடங்கை அறிவித்திட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் குணமடைந்து வெளியேறிய பின்னர் போதுமான மருத்துவ கட்டமைப்பை மாநில அரசு தயார்படுத்திகொண்டு மீண்டும் ஊரடங்கை தளர்த்த திட்டமிடலாம்.

கொரொனா நோய் தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டால் அவற்றை, தனியார் லாபவெறிக்கு அனுமதிக்காமல், பொதுவுடைமையாக்கி அனைத்து மக்களுக்குமானதாக அறிவித்திட வேண்டும். கொரொனா தொற்று தடுப்பு மருந்து துணையுடன் கொரொனாவை எதிர்கொள்ளும் போது உடலின் நோயெதிர்ப்பு சக்தி மிக வீரியமாக தொற்றை எதிர்கொண்டு, உயிர் இழப்புகளை குறைத்து, விரைவாக “மந்தை நோயெதிர்ப்பு சக்தி”யை பெற்றிட உதவும்.

இதுவே, கோவிட்-19 “கொரொனா” வைரஸை ஒழித்திட நிரந்தர தீர்வை தேடித்தரும்!! ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com


தமிழ் சிந்தனை மரபின் முன்னோடி
பண்டிதர் அயோத்திதாசர்
பிறந்தநாள் (20 மே 1845)
சாதிய சித்தாந்தத்திற்கும், ஆரிய வைதீகத்திற்கும் எதிராக வலிமையாக குரல் கொடுத்தவர்.
சாதி ஒழிப்பிற்காக 1891–ல் 'திராவிட மகாஜனசபை'யை நிறுவியர்.
அவருடைய 'தமிழன்' இதழ் பகுத்தறிவு, பிராமணிய எதிர்ப்பு, ஒடுக்கப்பட்டோர் பிரதிநிதித்துவம், இந்தி எதிர்ப்பு என பல முக்கியமான அரசியலின் அடித்தளமாக விளங்கியது.
அயோத்திதாசரின் பிறந்தநாளை போற்றுவோம்!
மே பதினேழு இயக்கம்
20 மே 2020


தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராளிகளுக்கு
வீரவணக்கம்
விசாகப்பட்டினத்தில் விஷவாயு கசிவினால் மக்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்விலிருந்து பாடம் கற்போம்!
மத்திய, மாநில அரசுகளே! ஸ்டெர்லைட் ஆலையை எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திறக்க முயலாதே!
ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடி இடித்துத் தள்ள உத்தரவிடு!
கார்ப்பரேட் நிறுவனங்களின் நலனுக்காக மக்களை சூறையாடாதே!
ஸ்டெர்லைட் படுகொலைக்கு காரணமான அதிகாரிகளுக்கு உடனடியாக தண்டனை வழங்கு
மே பதினேழு இயக்கம்
22 மே 2020



# கொரோனா பெயரில் தனியார்மயம்

மே 13ம் தேதி அன்று இரவு 8.20 மணிக்கு தொலைக்காட்சியில் உரையாற்றிய இந்திய ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் “உலகின் மிகப்பெரிய கொரோனா தொற்றுநோய் நிவாரன திட்டத்தை அறிவித்துள்ளதாக” ஊடகங்களும் சமூக வலைத்தளம் மற்றும் வாட்சாப் பல்கலை கழகங்களும் காட்டுத்தீயாக பரப்பின. “2020ல் ரூ.20 லட்சம் கோடி” கொரோனா நிவாரன நிதி ஒதுக்கி “ஆத்மநிர்பார் பாரத்” (தற்சார்பு இந்தியா) உருவாக்கப்போவதாக பிரதமர் மோடி பெருமிதமாக முழங்கினார். இந்த தொகை, இந்திய ஒன்றியத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% என்று தெரிவித்தார்.

அவசரகதியில் இந்தியா முழுவதுமான ஊரடங்கை அறிவித்து 50 நாட்களை நெருங்கிய நிலையில் மோடியின் “உலகில் மிகப்பெரிய” கொரோனா நிதியின் முழு விவரங்களை வழங்கும் பொறுப்பு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் ஒப்படைத்துவிட்டு நழுவினார். மார்ச்சில் ஊரடங்கு வரப்போவதை அறிந்திராத நிதியமைச்சகம் அடுத்த “2 நாட்களில் கிடைத்ததை அள்ளி போட்டு

கொரோனாவை சமாளிக்கும் திட்டத்தை அறிவித்ததை போல, மோடியின் 20 லட்சம் கோடிக்கு “கணக்கு காட்டும்” பணியை அடுத்த 5 நாட்களுக்கு நிதியமைச்சர் செய்தார்.

## நிவாரண நிதி விளக்கம்

### நாள் 1

- சிறு, குறு மற்றும் நடுத்தர (விஷிவிணி) தொழில்களுக்கு அவசர கடனுதவியாக ரூ.3 லட்சம் கோடி வழங்கப்படும்.
- ரூ.50,000 கோடி சிறு குறு நடுத்தர தொழில்களுக்கு நிதி வழங்கும் நிறுவனத்திற்கு நிதி அளிக்கப்படும்.
- தொழில் முனைவோருக்கு கடன் வழங்குவதாக அறிவிக்கப்பட்டதே ஒழிய இன்று பசியால் வாடும் மக்களுக்கு நிவாரணம் அறிவிக்கப்படவில்லை.

### நாள் 2

- பிரதம மந்திரி- கிசான் திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் கோடி விவசாய சலுகை கடன் வழங்கப்படும்.
- தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.5000 கோடி கடன் திட்டம்.
- புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நியாய விலைக் கடையின் மூலம் உணவு தானியம் வழங்கப்படும்.
- இரண்டாம் நாளும் பெரும்பான்மை அறிவிப்புகள் தொழில் முனைவோர் மற்றும் விவசாய உற்பத்திக்கான திட்டங்களாகவே இருந்தன. நெடுஞ்சாலைகள் தோறும் நடந்து செல்லும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு அரசு எவ்வளவு தானியம் எவ்வாறு வழங்கிடும் என்று கூறப்படவில்லை.

### நாள் 3

- தனியார் விவசாய நிறுவனங்கள் உற்பத்தியை தனியாருக்கு விற்பனை செய்ய ஏதுவாக “அத்தியாவசிய பொருட்கள் சட்டம்” திருத்தம் செய்யப்பட்டது.
- தனியார் விவசாய நிறுவனங்களுக்கு உதவிட ரூ.1 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.



- மூன்றாம் நாளன்று விவசாயத்துறையில் கார்பொரேட் நிறுவனங்கள் வளர்ந்திட ஏதுவாக சட்டதிருத்தங்களும் கடனுதவி திட்டங்களும் அறிவிக்கப்பட்டன.

### நாள் 4

- நிலக்கரி சுரங்க துறையில் தனியார் நிறுவனங்களை அனுமதிப்பது.
- இராணுவ தளவாட உற்பத்தியில் 49%ல் இருந்து 74% வரை தனியார் முதலீட்டை அனுமதித்தது.
- மேலும், 6 விமான நிலையங்களை தனியாருக்கு விற்பது.
- விண்வெளி துறை மற்றும் அணுசக்தி துறை இரண்டிலும் தனியாருக்கு திறந்துவிட்டது.
- நான்காம் நாளன்று, இதுவரை தனியார் துறை நுழைய தடை விதிக்கப்பட்டிருந்த துறைகள் அனைத்தையும் தனியார் முதலாளிகளுக்கு திறந்துவிடுதிவதாக அறிவித்தார்.

### நாள் 5

- நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டத்திற்கு ரூ.40,000 கோடி ஒதுக்கியது.
- புதிய பொதுத்துறை நிறுவனங்கள் கொள்கை அறிவிக்கப்பட்டது.

ஐந்தாம் நாளன்று, புதிய பொதுத்துறை நிறுவனங்கள் கொள்கையை நிதியமைச்சர் அறிவித்தார். இதன்படி, சில முக்கிய துறையை தவிர்த்து மற்ற துறைகளில் உள்ள அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் விற்கப்போவதாக அறிவித்துள்ளார். முக்கிய துறைகளில் மட்டும் ஒரு பொதுத்துறை நிறுவனம் அனுமதிக்கப்படும்.

மகாத்மா காந்தி நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டை ஆண்டுக்கு ஆண்டு குறைத்து இத்திட்டத்தை முடக்க நினைத்த மோடி அரசு தற்போது நிதி ஒதுக்கி உள்ளது. நெடுஞ்சாலைகளில் நடந்து செல்லும் மக்கள், ஊரடங்கில் வெளியே செல்ல முடியாத மக்கள் எப்படி ஏரி வேலைக்கு செல்ல முடியும்? அவர்களின் இன்றைய பசிக்கு என்ன உணவு?

ஆகமொத்தத்தில், மோடி அறிவித்த ரூ.20 லட்சம் கோடியில் கொரோனா தொற்று நோய் தடுக்கும் நடவடிக்கை, மருத்துவ பாதுகாப்பு உபகரணங்கள், மருந்து என எதற்கும் நிதி அறிவிக்கப்படவில்லை. 60 நாட்களுக்கு மேலான ஊரடங்கால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, வருவாய் இழப்பு அதன் காரணமாக குடும்பங்களின் பட்டினி கொடுமைகள், கொளுத்தும் வெய்யிலில் பச்சிளம் குழந்தைகளுடன் நடந்து செல்வோரின் துயரம் துடைக்கும் திட்டங்கள் எதுவும் நிதியமைச்சரின் 5 நாட்கள் அறிவிப்பில் தென்படவில்லை.

மாறாக, தனது முதலாளிகளுக்கு தொழில் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து சட்டங்களையும், திட்டங்களையும் வகுத்து அவற்றை "கொரோனா நிவாரன நிதி" என்று மோடி பச்சை பொய் பேசியுள்ளார்.

கொரோனா தொற்று நோய்க்கு பயந்து ஊரடங்கில் முடங்கிப்போயுள்ள மக்கள் தான் செய்யும் துரோகங்களை எதிர்த்து கேள்வியும் கேட்க முடியாது, போராட்டத்திலும் இறங்க முடியாது என்ற கீழ்த்தரமான எண்ணமும் ஒரு காரணம்.

"இந்துக்களாய் ஒன்றிணைவோம்" என்று இந்துக்களை ஏமாற்றி ஆட்சியை பிடித்துள்ள பாஜக அரசு இன்று அதே இந்துக்களின் உயிர்களை தான் நூலிழையில் ஊசல் ஆடவிட்டுள்ளது!

சரி, அந்த 20 லட்சம் கோடி ரூபாயில் என்னவெல்லாம் அடங்கும் என்று பார்ப்போம்.

- கடந்த பிப்ரவரி மாதம் ரிசர்வ் வங்கி கடன் விநியோகத்தை உயர்த்த வங்கிகளுக்கு ரூ.5.47 லட்சம் கோடி வழங்கியதை சேர்த்துள்ளார். (இந்த பணம் முழுவதும் கார்பொரேட் நிறுவங்கங்களின் கணக்குகளில் போய் முடங்கிவிட்டன.)
- கூடுதல் வருமான வரி செலுத்தியவருக்கு அரசு திரும்ப அளிக்கவிருக்கும் ரூ.18,000 கோடியை கொரோனா நிவாரனத்தில் இணைத்துவிட்டனர். (கொரோனா இல்லாவிட்டாலும் அரசு இந்த பணத்தை திரும்ப அளித்திருக்கும். ஏனென்றால், இது அரசின் பணம் அல்ல!)
- வருங்கால வைப்பு நிதிக்கு (PF) நிறுவனங்களின் கட்டாய தொகுப்பை குறைத்து அதை கொரோனா நிவாரன கணக்கில் சேர்ந்துவிட்டது. (அதாவது, அரசு கஜானாவில் இருந்து பணம் கொடுக்காமலே கொடுத்ததாக எழுதும் கணக்கு.)



- வீட்டுக்கடனுக்கு வழங்கப்படும் அரசு மானிய தொகைக்கு பதிலாக மொத்த கடன் தொகையையும் மோடி கொரோனா நிவாரனத்தில் சேர்த்துவிட்டார். (அரசு வழங்கும் சிறிய மானிய தொகைக்கு பதிலாக மொத்த வீட்டு கடனையும் நிவாரன நிதி கணக்கில் காட்டுகிறது.)

நிதியமைச்சரின் விளக்கங்கள் அடிப்படையில் அரசு வெறும் ரூ.40,000 கோடி மட்டுமே கொரோனாவிற்காக புதிய தொகையாக ஒதுக்கியுள்ளது. ஆக, "2020ல் ரூ.20 லட்சம் கோடி" என்ற மோடியின் அறிவிப்பு என்பது அவர் விளம்பரப்பசிக்கு சொல்லிக்கொண்ட வெட்கங்கெட்ட பொய்!

## இந்துத்துவ சிந்தனை

இந்திய ஒன்றியம் முழுவதும் ஏழை எளிய மற்றும் புலம்பெயர் "இந்து" மக்கள் கையறு நிலையில் பசியும் பட்டினியுமாக உழன்று கொண்டிருக்கும் வேளையிலும் அம்மக்களுக்கு போதுமானளவு உணவு தானியமோ, பணமோ கிடைத்துவிடாமல் வஞ்சனை படைத்த மனிதாபிமானமற்ற பிரதமரை இந்தியா இதுவரை கண்டதில்லை. ஏழை மக்களின் பிணங்கள் மீது அமர்ந்துக்கொண்டு மோடி தனது மார்வாரி பனியா முதலாளிகளின் தொழில் செழிக்க திட்டங்களை அறிவித்துள்ளார்.

நோய், பசி பட்டினி என்று அல்லாடும் மக்களுக்கு நேரடியாக உதவிடக்கூடாது என்பது ஆர்.எஸ்.எஸ் இந்துத்துவ முதலாளித்துவ பாசிச கருத்தாகும்.

மக்களிடம் பணம் இல்லாத காரணத்தால் பொருள் நுகர்வு வீழ்ச்சியடைந்ததால் 2019 முதலே இருந்த நிலையில் தொழில் உற்பத்தி பொருட்களும் விற்பனையாகாமல் ஆலைகளிலேயே தேங்கி போயுள்ளது. ஊரடங்கால் மேலும் கடும் பொருளாதார நெருக்கடிக்குள்ளான மக்களிடம் உணவு வாங்கவும் பணமில்லை. இந்நிலையில், அம்மக்களின் உணவு தேவைகளை கூட கருத்தில்கொள்ளாமல் மீண்டும் தொழிற்சாலைகளுக்கு மோடி நிதி சலுகை வழங்குகிறார். ஏற்கனவே தயாரித்த பொருட்கள் வாங்க மக்களிடம் பணமில்லாமல் கிடங்குகளில் உள்ளநிலையில் புதிய உற்பத்தியை யார் வாங்குவார்கள்?



"இலவச உணவு கிடையாது" என்ற பிரதமரின் தலைமை பொருளாதார ஆலோசகர் கி.சுப்பிரமணியனின் கருத்து முக்கியமானது. இந்த முதலாளித்துவ சிந்தனையில் ஊறிப்போன அறிவுஜீவிகள் ஒருபோதும் மக்களுக்கு வழங்குவதை ஆதரிக்கப்போவதில்லை. பல நாட்களாக சோறு தண்ணி இல்லாமல் அவர்கள் இறந்தாலும் ஆதரிக்கப்போவதில்லை! அரசிடம் மலையென செல்வம் குவிந்தாலும் அவற்றை முதலாளிகளிடம் கொடுக்கத்தான் அவர் பரிந்துரைப்பார். மக்களிடம் அல்ல!

## தனியார்மயம்

பிரதமர் மோடியின் அறிவிப்பில் பாதிக்கப்பட்ட மக்களின் துயரை துடைக்கும் திட்டம் ஒன்றுமில்லை என்பதை கண்டோம். அதேநேரம், நிதியமைச்சரின் தொடர் அறிவிப்புகளில் தொழில் துறைகளுக்கு நிதிகளை ஒதுக்கியுள்ளதை காணமுடிகிறது. அதைவிட மிக முக்கியமாக கவனிக்க வேண்டியவை நிதியமைச்சரின் தனியார் மயமாக்கல் கொள்கை அறிவிப்புகள்.

விவசாயத்துறை தொடங்கி விண்வெளி, அணுசக்தி, கனிம வளம், இராணுவ தளவாட உற்பத்தி என இதுவரை அரசின் கட்டுப்பாட்டில் இருந்த துறைகள் அனைத்தும் தனியாருக்கு திறந்துவிடப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும், சில முக்கிய துறைகளில் அரசின் நிறுவனங்களை ஒன்று முதல் அதிகபட்சமாக நான்கு வரை குறைக்கப்படும் என்றும் மற்ற துறைகளில் இருந்து அரசு முழுமையாக வெளியேறும் என்றும் அறிவித்தார்.

## விவசாயத்துறை

மூன்றாம் நாள் விவசாயத்துறையை சீரமைக்கிறேன் என்ற போர்வையில் கார்பொரேட் நிறுவனங்களுக்கு விவசாயத்துறையை முற்றிலும் திறந்துவிடுவதாக அறிவித்துள்ளார். அந்த நிறுவனங்களுக்கு உதவ "அத்தியாவசிய உணவு பொருட்கள்" சட்டத்திருத்தமும் நிதியமும் உருவாக்கப்பட்டுள்ளது.

"அத்தியாவசிய உணவு பொருட்கள்" சட்டத்திருத்தம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இது, 1955ல் உணவு பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட பட்டினி சாவுகளை தடுக்க உருவாக்கப்பட்ட முக்கியமான சட்டம். அடிப்படையில், உணவு பொருட்கள் பதுக்கலை தடுக்கவும் சந்தையில் பொருட்களின் இருப்பு நிலையை உறுதிப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டது. உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளை விடவும் பல மடங்கு லாபத்தை அள்ளும் இடைத்தரகர்களை கட்டுப்படுத்த இது பயன்படுத்தப்பட்டது. ஆனால், இன்று இந்த மார்வாரி பனியா இடைத்தரகர்களின் ஆதிக்கத்தின் காரணமாக இந்த சட்டம் ஒழிக்கப்படுகிறது. வெங்காயம், உருளை கிழங்கு, எண்ணெய் விதைகள், பருப்பு, தானியம் போன்ற உணவு பொருட்கள் வர்த்தகத்தை இடைத்தரகர்கள் மற்றும் ஊகம் வணிகர்கள் வசம் அரசு ஒப்படைத்துள்ளது. மேலும், விவசாய உற்பத்தியை யாரிடம் வேண்டுமானாலும் விற்கலாம் என்ற திருத்தும் கார்பொரேட் விவசாய நிறுவனங்களின் ஏற்றுமதி வணிக நலனை பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

இனி, தமிழ்நாட்டில் 1 கிலோ வெங்காயம் ரூ.200க்கு உயர்ந்தாலும் அதிக லாபம் கொடுக்கும் வெங்காய ஏற்றுமதியை அரசு தடுக்க முடியாது. இதுநாள்வரை தங்கள் விவசாய இழப்புகளுக்கு நிவாரணம் கேட்டபோதெல்லாம் "விவசாயத்தைவிட்டு வெளியேறுங்கள்" என்று கூறியவர்கள் இன்று விவசாய நிறுவனங்களுக்கு அனைத்து கடன் உதவிகளையும் செய்திடும் கட்டமைப்புகளை செய்து வருகிறார்கள். சொந்த நிலங்களில் சிறுகுறு விவசாயம் செய்பவர்களை கார்பொரேட் விவசாய நிறுவனத்தின் விவசாய கூலிகளாக மாற்றும் பணியை முற்றிலும் செய்து முடித்துள்ளனர்.

## திறந்தவெளி துறைகள்

நான்காம் நாள் அன்று நிதியமைச்சரின் அறிவிப்பில் "ஆத்மநிர்பார் பாரத் அபியான்" (தற்சார்பு பாரத திட்டம்) செயல்வடிவத்தை வெளியிட்டார். நிலக்கரி, கனிமங்கள், பாதுகாப்பு துறை உற்பத்தி, விமான போக்குவரத்து, மின்சாரம் பகிர்மானம், சமூக உள்கட்டமைப்பு, விண்வெளி மற்றும் அணுசக்தி துறை போன்ற 8 துறைகளையும் தனியார் முதலீட்டாளர்களை அனுமதிக்கப்போவதாக தெரிவித்தார். ஐந்தாம் நாளன்று "புதிய பொதுத்துறை நிறுவனங்கள் கொள்கை" (New Public Sector Enterprises Policy) ஒன்றை அறிவித்தார். அதன்படி, ஒரு சில துறைகளை தவிர்த்து பிற அனைத்து துறைகளிலும் உள்ள அரசு நிறுவனங்களை முழுவதுமாக தனியாருக்கு விற்கப்போவதாக கூறினார்.

"தற்சார்பு என்பது அந்நிய முதலீட்டிற்கு தடைவிதிப்பது அல்ல. சர்வதேச உற்பத்தி சங்கிலியில் நிலவும் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள இந்தியாவை தயார் செய்வதே உண்மையான தற்சார்பு பாரதமாகும்." என்று நிதியமைச்சர் பத்திரிகையாளருக்கு பதிலளித்தார். எளிமையாக சொன்னால், இந்தியாவின் அனைத்து துறைகளையும் தனியார் முதலாளிகளுக்கு திறந்துவிடுவதும் அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் தனியாருக்கு விற்றுவிட்டு அரசு வெளியேறுவதுமே "தற்சார்பு பாரதம்" ஆகும். சீனாவைவிட்டு வெளியேறும் மேற்குலக நிறுவனங்களை இந்தியாவிற்கு ஈர்க்கிறோம் என்ற இந்துத்துவ சங்கிகளின் வெத்து வாதத்திற்கு இது பயன்படலாம். ஆனால், இந்த நடவடிக்கைகள் உண்மையில் இந்திய பொருளாதாரம் மற்றும் இறையாண்மை பாதுகாப்பிற்கு பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை மட்டும் உறுதியாக கூறலாம். 2008 சர்வதேச நிதி நெருக்கடியில் இருந்து இந்திய பொருளாதாரம் தப்பியதற்கு "உலக சந்தையில் இருந்து சற்று விலகி இருந்தது" முக்கிய காரணமாக கூறப்பட்டது. இனி, அது சாத்திமில்லை!

நிலக்கரி சுரங்கத்தை அரசின் "கோல் இந்தியா" நிறுவனத்தின் பிடிகளில் இருந்து நீக்கி மோடியின் நண்பர்களுக்கு தாரைவார்க்க சொல்லிவிட்டார். சுரங்கத்தில் இருந்து எடுக்கப்படும் நிலக்கரியை வெளியே கொண்டு செல்ல ரூ.50,000 கோடியில் தனி ரயில் பாதையை அமைத்து கொடுக்கவும் மோடி கூறியுள்ளார். இதுவரை, இரும்பு, பாக்சைட், துத்தநாகம் (Zinc) போன்றவையே தனியார் துறையினர் எடுத்து வருகின்றனர். அவர்களுக்கு, அதிக லாபம் கொழுக்கும் தாமிரம், அரிய வகை தாதுக்கள், தங்கம் போன்ற கனிமங்களின் சுரங்கத்தையும் வழங்கிட மோடி முடிவு செய்துள்ளார்.

கனிமங்களை கண்டறிந்து எடுக்க கையாலாகாத மார்வாடி கும்பல் பல நேரங்களில் நட்டப்படுவதால், அவர்களுக்கு அரசு உறுதி செய்யப்பட்ட பகுதிகளில் மட்டும் "குப்பை" விலைக்கு உரிமம் வழங்க வேண்டுமென்று வாதாடி, பெற்றுக்கொண்டனர். அதானியின் விமானத்தில் பறப்பதும், வேதாந்தா அனில் அகர்வாலின் பல்லாயிரம் கோடி பாஜக கட்சி நிதியும் எங்கிருந்து வரும்?

இந்த மார்வாடி பனியா கும்பல் கனிமவளத்தை சுரண்ட, 8 வழி சாலைகள் மட்டுமல்ல மலைவாழ் பழங்குடியின மக்களை காடுகளில் இருந்து இராணுவத்தை வைத்து தூக்கியெறியும் "இந்திய வனச்சட்டம் 2019" என்ற சட்டத்தையும் "ஆகச்சிறந்த தேச பக்தர்" பிரதமர் மோடி நிறைவேற்றி கொடுப்பார்.

கடந்த மார்ச் மாத மே17 குரலில் வெளியாகிய "போரை முதலீடாக்கும் பொருளாதாரம்" என்ற கட்டுரையில் பாஜக மோடியின் அரசு இராணுவ தளவாட உற்பத்தித்துறையை தனியாருக்கு முற்றிலும் தாரைவார்த்துள்ளதை கண்டோம். மேலும், இந்திய ஒன்றிய மக்களின் இறையாண்மையை "2+2" ஒப்பந்தங்களின் மூலம் ஏகாதிபத்திய அமெரிக்காவிடம் அடிமை சாசனம் எழுதி தந்துள்ளதையும் கண்டோம். தற்போது, "பணியில் சுற்றுலா" (Tour of Duty) என்ற திட்டத்தின் கீழ் தேசபக்தி மிகுந்த இளைஞர்களை தேர்ந்துடுத்து இந்திய இராணுவத்தில் பயிற்சி அளித்து 3 ஆண்டுகள் வரை பணியாற்றி ஓய்வு அளிக்கும் திட்டம் தொடங்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது, பெரும்பாலும் ஆர்.எஸ்.எஸ்ன் சங்பரிவார அமைப்புகளுக்கு இந்திய இராணுவம் பயிற்சியளிப்பதில் சென்று முடியும். இப்படி பயிற்சிபெற்று தொடர்ந்து வெளியேறும் இளைஞர்கள் சிவில் சமூகத்தில் துணை இராணுவமாக செயல்பட்டு சமூகத்தில் தீவிர வலதுசாரி இந்துத்துவ தேசியவாதத்தை வளர்த்தெடுக்கும் நிலைக்கு தான் இட்டுச்செல்லும்.

மின் உற்பத்தி கடந்த காலத்தில் தனியார் முதலாளிகளுக்கு திறந்துவிடப்பட்டது. தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் அரசு உற்பத்தியாளர்களைவிட பல மடங்கு லாபத்திற்கு விற்பதை நாம் அறிவோம். அரசின் அனல்மின் நிறுவனம் மலிவான மின்சாரம் வழங்கும் வேளையில் அதானியின் சூரிய சக்தி மின்சாரத்தை தமிழக அரசு மிக அதிக விலை கொடுத்து வாங்குவது தெரிந்ததே. இப்படி, தனியார் முதலாளிகளின் லாபத்திற்காக அதிக விலையில் மின் கொள்முதல் செய்து ஏழை மக்களுக்கும் விவசாயிகளுக்கும் மானியத்தில் வழங்க முடியாமல் தமிழ் நாடு மின்சார வாரியம் இன்று திவாலாகி உள்ளது. இப்படி திவாலானத்திற்கு தவறான மேலாண்மை தான் காரணம் என்று கூறி தமிழ் நாட்டின் மின்சாரத்துறையை உதய் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு தனியாருக்கு வாரி கொடுக்கும் பணியை செய்து வருகிறது. தற்போது, மாநில அரசுகளிடம் உள்ள மின் பகிர்மான கட்டமைப்பை தனியாருக்கு அளிக்க ஒன்றிய அரசு முடிவெடுத்துள்ளது. இதன் விளைவாக, விவசாயிகளுக்கு வழங்கி வந்த இலவச மின்சாரத்தை ரத்து செய்யவுள்ளது.

உணவு, காற்று, குடிநீர் வரிசையில் மின்சாரமும் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படை தேவையாக உள்ளது. ஒரு குடும்பத்தின் மின் பயன்பாட்டை பொறுத்து அந்த குடுபத்தின் சமூக பொருளாதாராமும் முன்னேறுகிறது. இந்த அடிப்படை தேவைகளை எளிய மக்களுக்கு எட்டாத இடத்தில வைப்பது சமூக வளர்ச்சியை பெரிதும் பாதிக்கும். வெறும் லாபநோக்கில் செயல்படும் தனியார் மயமான மின்சாரத்துறையின் காரணமாக ஏற்பட்டுள்ள சமூக பாதிப்புகளை வடமாநிலங்களில் காணமுடியும். அதையே, மோடி அரசு இந்திய ஒன்றியம் முழுவதும் செயல்படுத்த துடிக்கிறது.

தற்போது, விண்வெளி துறையில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக திகழும் இந்தியாவிற்கு இதுவரை எந்த தனியார் தயவும் தேவைப்படவில்லை. தாய்மொழி வழி கல்வி கற்று எளிய குடும்பங்களில் இருந்து வந்த விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தங்களின் கடின உழைப்பால் பல வெற்றிகளை விண்வெளி துறைக்கு தேடித்தந்துள்ளனர். விண்வெளி துறை என்பது ஒன்றியத்தின் முக்கியமான



மூலோபாய துறையாகும். ஆனால், எதையும் "லாபம் ஈட்டும் தொழிலாக" மட்டுமே பார்க்கும் முதலாளிகளுக்காக மோடி இந்த துறையையும் திறந்துவிட்டுள்ளார்.

அணுசக்தி துறையின் பயன்பாடு மருத்துவ துறையில் சிறிதளவு இருந்தாலும், அது பெரும்பான்மையாக மின் உற்பத்திக்கும், இராணுவ தளவாடம் மற்றும் ஆயுத உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றையெல்லாம்விட மிக முக்கியமாக, அணு கசிவு மற்றும் கழிவுகள் சூழலியல் கேடுகளை விளைவிப்பதும் மக்களுக்கு பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருப்பதும் தெரிந்ததே. 2011 ஜப்பானின் புக்குஷிமா அணுஉலை விபத்தை நாம் எப்படி மறக்க முடியும்? இப்படியான ஒரு அபாயகரமான துறையையும் பாஜக பிரதமர் மோடி தனது இந்திய மற்றும் சர்வதேச முதலாளிகளின் லாப குவியலுக்காக திறந்துவிட்டுள்ளார்.

1984ல் அமெரிக்காவின் யூனியன் கார்பைட் நிறுவனத்தின் அலட்சியத்தால் ஏற்பட்ட விசவாயு கசிவு விபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் 36 ஆண்டுகளாகியும் முழுவதும் மீள முடியவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட துப்பில்லாமல் இரவோடுஇரவாக திருட்டு விமானத்தில் தப்பியோடிய தனியார் முதலாளிகளிடம் தான் இன்று அணுசக்தி துறையை மோடி தாரைவார்த்துள்ளார்.

## புதிய அரசுநிறுவன கொள்கை

புதிய பொதுத்துறை நிறுவனங்கள் கொள்கை திட்டத்தின் கீழ் அரசு அனைத்து அரசு நிறுவனங்களையும் தனியாருக்கு விற்றுவிடும். இராணுவ தளவாட உற்பத்தி, கனிமவள நிறுவனங்கள், அணுசக்தி மற்றும் விண்வெளி போன்ற துறைகளில் மட்டும் தலா ஒரு அரசு நிறுவனத்தை மட்டும் வைத்துக்கொண்டு அந்த துறைகளை முழுமையாக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். மற்ற துறைகளில் அனைத்து அரசு நிறுவனங்களையும் விற்கப்போவதாக அறிவித்துள்ளனர். இந்த விற்பனையின் மூலம் நடப்பு நிதியாண்டில் ரூ.3.2 லட்சம் கோடியை திரட்டவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

- வங்கித்துறையில் 4 அரசு நிறுவனங்கள் மட்டுமே வைத்துக்கொண்டு மற்ற சந்தையை தனியாருக்கு கொடுத்துவிட முடிவெடுத்துவிட்டனர். கடைக்கோடி கிராமப்புற மக்களுக்கும் வங்கி சேவை எட்டாக்கனியாகவே இன்றளவுமுள்ளது. ஆனால், அதை எட்டுவது மோடி அரசின் நோக்கமுமல்ல, தேவையுமல்ல.
- தொலைத்தொடர்பு துறையில் அரசின் பி.எஸ்.என்.எல் நிறுவனத்தை திவாலாகும் நிலைக்கு அரசு திட்டமிட்டு தள்ளிவிட்டது. இன்று, தொலைத்தொடர்பு சந்தை முழுவதும் 3 தனியார் முதலாளிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது. உலகின் மலிவான கைபேசி சேவை கிட்டிய இந்திய ஒன்றியத்தில் இன்று சேவை கட்டணம் கடுமையாக உயர்ந்து கொண்டேவுள்ளது.
- பாரத பெட்ரோலியம் போன்று கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்றுவிடும் பணியில் அரசு பலக்காலமாகவே உள்ளது.
- விமான போக்குவரத்து, விமான உற்பத்தி, போர்விமான உற்பத்தி மற்றும் பராமரிப்பு அனைத்தும் தனியாருக்கு வழங்கப்படும்.
- இரயில்வே துறையிலும் தனியார் ரயில்களை இயக்கவும், ரயில் நிலையங்களை இயக்கவும் அனுமதித்துள்ளது. ரயில் பாதை தனியாருக்கு வழங்குவது அடுத்தகட்ட பணியில் வரக்கூடும்.
- மாநில அரசுகளின் பேருந்து போக்குவரத்தை தனியாரின் துணையுடன் செயல்படுத்தும் கொள்கை முடிவுகளை எடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது. அதாவது, தனியார் நிறுவனங்கள் தமிழ்நாட்டு அரசு போக்குவரத்து கழகத்திற்கு பேருந்துகளை வழங்கி பராமரிக்கவும் வேண்டும். ஓலா, ஊபர் போன்று தமிழக அரசின் ஒப்பந்ததார ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் அந்த பேருந்துகளை இயக்குவார்கள். ஆக, பேருந்து போக்குவரத்தும் முழுமையான தனியார் மயத்திற்கு முந்தைய கட்டத்தில் உள்ளதை எளிதாக உணர முடியும்.

"வளர்ச்சிக்கு ஒத்திசைவான கொள்கைகள்", "லைசென்ஸ் ராஜ் (License Raj) முறையை ஒழிக்கிறோம்" என்று தொடர்ந்து எதிர்மறை கதையை கூறும் பாஜக அரசுக்கு, "தற்சார்பு பாரதம் என்பது முழுமையான தனியார் மயம்" என்று சொல்லும் துணிச்சல் ஏனோ இல்லை?!

ஆக, மோடியின் "20 லட்சம் கோடியை கொண்டு தற்சார்பு பாரதத்தை படைப்போம்" என்ற அறிவிப்பு இந்தியாவை முழுமையாக தனியாருக்கு விற்கப்போகிறோம் என்பதும் அதில் முதலீடு செய்வதற்கு முதலாளிகளுக்கு மக்களின் 20 லட்சம் கோடியை வழங்குகிறோம் என்பதேயாகும்.

உலக நாடுகள் முழுவதும் கொரோனாவை கட்டுப்படுத்த பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வரும் நிலையில் விளம்பர பிரியர் பிரதமர் மோடிக்கும் பெரிய அறிவிப்பு செய்யும் ஆசை தோன்றியிருக்கக்கூடும். அதேநேரம், கொரோனாவால் அவதியுறும் மக்கள் கைகளுக்கு நேரடியாக எதுவும் தவறியும் கிடைத்துவிடக்கூடாது என்பதில் தெளிவாக இருந்துள்ளார். நிற்க.

மோடியின் அரசு இதைத்தானே கடந்த 6 ஆண்டுகளாக செய்து வருகிறது, இல்லையா?! 2015ல் மோடி சொன்ன "மேக் இன் இந்தியா" நினைவு உள்ளதா? பாருங்கள், நானும் மறந்தே போனேன்! 2015ல் மோடி போட்ட ஊசிப்போன பகோடாவை தான் 2020ல் "தற்சார்பு பாரதம்" என்று சூடு பண்ணி மீண்டும் கூவி வருகிறார்.

●


இயக்கத் தொடர்புக்கு: +91 98840 72010
இயக்கத்தில் இணைய: may17iyakkam.com/join
இயக்க செயலி: may 17 movement
இயக்க முகநூல்: may17 movement
இயக்க இணையதளம்: www.may17iyakkam.com
புத்தகங்களை பெற: www.nimirbooks.com

தமிழ் சமூகத்திற்காக தொடர்ந்து களப்பணியாற்ற நிதி உதவி தாருங்கள்

Account Name : Susindran P
A/c no : 37936911382
Branch : State Bank of India, Ashok Nagar branch
Account Type : Savings
IFSC code : SBIN0001857
MICRCODE : 600003009

அறம் சார்ந்து ஈழத்தமிழர்களிடம் நிதி பெறுவதை தவிர்க்கிறோம். வெளிநாட்டு வாழ் தமிழர்கள் தங்களது இந்திய வங்கிக்கணக்கில் இருந்து நிதி உதவி செய்யலாம்

# அரசுப்பணிகளில் புதிய பணியிடங்கள் உருவாக்க தமிழ் நாடு அரசு தடைவிதித்திருப்பதை மே பதினேழு இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது!

23 மே 2020

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளினால் அரசிற்கு ஏற்பட்டுள்ள செலவினங்களை ஈடு செய்யும் விதமாக, அரசு நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ் நாடு அரசு திட்டமிட்டு, அதன்படி பல்வேறு அறிவிப்புகளோடு தமிழ் நாடு அரசுப் பணிகளில் புதிய பணியிடங்களை உருவாக்கவும் தடைவிதித்துள்ளது. அரசு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது வரவேற்கக்கூடியது என்றாலும், அரசுப்பணிகளில் புதிய பணியிடங்களை உருவாக்க தடைவிதித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள காலி பணியிடங்களை முழுவதும் நிரப்பப்படாததால், அரசு ஊழியர்களுக்கு பணிச்சுமையும், அலுவலங்களில் பணித்தொய்வும் ஏற்பட்டுள்ளது. இது அரசுப் பணியாளர்களை மட்டுமல்ல, மக்களையும் கடுமையாக பாதித்து வருகிறது. இந்நிலையில் புதிய பணியிடங்கள் உருவாக்கக் கூடாது என்று அறிவித்திருப்பதன் மூலம்



பணிச்சுமையும், பணித்தொய்வும் மேலும் அதிகரிக்கவே செய்யும். இதனால் மக்கள் கடும் துயரத்துக்குள்ளாவார்கள்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அனைத்து துறைகளிலும் தனியார் நிறுவனங்களின் முடங்கியிருக்க, மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய அரச நிர்வாகம் முழுவீச்சில் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அரசு அலுவலகங்கள் சில மாதங்களாக முழுமையாக செயல்படாத நிலையில், அதிகளவில் பணிகள் தேங்கியுள்ளன. கொரோனா பேரிடர் காலம் முழுவதும் இது தொடரும் பட்சத்தில் கோப்புகள் ஆண்டுக்கணக்கில் தேங்கும் நிலை ஏற்படும். இதனை சமாளிக்க புதிய பணியிடங்களை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

போதிய பணியிடங்களை உருவாக்காமல் போனால், அவை பெருநிறுவனங்களை சேர்ந்த ஒப்பந்த பணியாளர்களை கொண்டு நிரப்பப்படுமோ என்ற சந்தேகம் நமக்கு எழுகிறது. அந்நிலை ஏற்பட்டால், ஒன்றிய அரசு விரும்பும், இடஒதுக்கீட்டு முறையை பின்பற்றாத பெருநிறுவனங்களை தமிழக அரசுப் பணிகளில் திணிக்கும் திட்டமாக கூட இருக்கலாம். ஒன்றிய அரசு அனைத்து பொதுத்துறைகளையும் தனியார்மயாக்கப்படும் என்று கூறியுள்ள பின்னணியில் வந்துள்ள இந்த அறிவிப்பு நமது சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

அதேவேளை, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் காத்திருக்கும் நிலையில், இந்திய மாநிலங்களிலேயே உச்சபட்சமாக தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பின்மை விழுக்காடு 50% என இருக்கும் நிலையில், 8 லட்சத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பட்டப்படிப்பை முடித்து வெளிவர இருக்கும் நிலையில், கொரோனாவினால் வேலையிழந்தோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், புதிய பணியிடங்கள் உருவாக்கப்படாமல் சென்றால், வேலைவாய்ப்பற்று இருப்போரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும். அவை பொருளாதார ரீதியாக தமிழ்நாட்டை முடக்கவே செய்யும். வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டிய அரசே, வேலைவாய்ப்பை தடுப்பது கடும் கண்டனத்திற்குரியது.

சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்களை துயரத்திற்குள்ளாக்கும் இது போன்ற செயல்பாடுகளை தமிழ் நாடு அரசு உடனடியாக கைவிட வேண்டும். ஒன்றிய அரசிடமிருந்து வர வேண்டிய ஜிஎஸ்டி இழப்பீட்டுத் தொகை, பேரிடர் கால நிவாரணத் தொகை, பல்வேறு திட்டங்களுக்கான நிதி உள்ளிட்ட அனைத்து நிலுவைத் தொகைகளையும் தமிழ் நாடு அரசு பெற பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவை பெறப்படும் பட்சத்தில் புதிய பணியிடங்கள் மூலம் உருவாகும் செலவினங்களை சந்திப்பதில் சிக்கல் இருக்காது.


எனவே தமிழ்நாடு அரசு, புதிய பணியிடங்களை உருவாக்கக்கூடாது என்று வெளியிட்ட அறிவிப்பை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதோடு,புதிய பணியிடங்களை உருவாக்கி மக்கள் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும். ஒன்றிய அரசின் போக்கிற்கு தமிழ் நாடு அரசு செல்வதை கைவிட்டுவிட்டு, தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக போராடிப் பெற வேண்டும் என்றும் மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது.



### நிழல் போல் மாறும் கொரோனா கால

# கண்காணிப்பு தொழில்நுட்பங்கள்

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உலகின் வாழ்வியலைப் புரட்டிப்போட்டுள்ள முக்கிய நிகழ்வு என்றால், அது கொரோனா நோய்த்தொற்று தான். இந்த கொரோனா நோய்த்தொற்று, சமூகப் பரவல் என்னும் நிலையை அடைவதை தடுக்கவும், நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தவும் அரசுகளுக்கு மிகவும் சவாலாக இருப்பது, நோய்த்தொற்று பரவியவர்களையும் அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களையும் கண்டறிவது தான். இதனை சமாளிக்க, தொழினுட்ப புரட்சியின் உச்சத்திலிருக்கும் இக்காலகட்டத்தில், அரசுகள் நம்பியது இந்த தொழினுட்பங்களை தான். இதற்கு முன்னர் ஏற்பட்ட சார்ஸ், மெர்ஸ், எபோலா, நிப்பா போன்ற வைரஸ் தொற்றுகள், கொரோனா அளவிற்கு உலகம் முழுவதும் வீரியமாகப் பரவவில்லை. ஆகையால், நோய்தொற்றைக் கண்டறிதலும், தொடர்பறிதலும் பெரிய சிக்கலாக இருக்கவில்லை. தற்போது உலக வல்லரசுகளே கடுமையாகப் பாதிக்கப்பட்டதால், தொழில்நுட்பங்கள்




அடிப்படையிலான கண்காணிப்பு முன்னெடுப்புகள் தோன்றியுள்ளன. அவை, என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதற்காக மட்டும் பயன்படுத்தப்பட்டால் பிரச்சனையில்லை. ஆனால், ஏகாதிபத்திய அரசுகளின் கையில் இந்த கண்காணிப்பு தொழினுட்பங்கள் சிக்கும் போது, அவை மக்களுக்கு எதிரான ஓர் ஆயுதமாக மாற்றப்படுகின்றன.


நோய்த்தொற்றைக் கண்டறிவதற்கு அரசுகள் அதிகளவில் நாடியது திறன்பேசி செயலிகளை (Smarphone Apps) தான். அரசு உருவாக்கிய அல்லது பரிந்துரைக்கும்

> **“ செயலிகளின் தனியுரிமை மீறலை அரசுகள் கண்டுகொள்ளவில்லை என்றாலும், குடிமக்கள் குறித்த தகவல்களைச் சேகரிக்கவும், மக்களின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் இதனை ஒரு கருவியாக மாற்றத்துடிக்கின்றன**

செயலியை ஒருவர் தனது அலைபேசியில் நிறுவி வைத்திருக்கும்போது, அதன் புவிசார் இருப்பிடத்தைக் கொண்டு, அவர் வீட்டிலிருக்கும் போதும், வேலைக்குச் செல்லும் போதும், பொது இடங்களுக்குச் செல்லும் போதும், அவரது நடமாட்டத்தை கண்காணித்து, இருப்பிடத் தகவலைச் சேகரித்து வைத்துக்கொள்கிறது. அதனோடு, அந்நபரின் உடல்நிலை குறித்த தகவல்களும் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். சில செயலிகள் அந்நபரை சுற்றி இதே செயலியை நிறுவியிருக்கும் மற்றவர்களுக்கு அந்நபரது உடல்நிலை குறித்த தகவலைக் காட்டுகிறது. இப்படி அருகிலுள்ள மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவதால், நோய்த்தொற்று குறித்த எச்சரிக்கையோடு அணுகுகின்றனர். இதனால் நோய்த்தொற்று ஏற்பட்டவர்களோடு உடலளவிலான இடைவெளி கடைப்பிடிக்கப்படுவதொடு, ஒருவேளை, நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது பின்னர் கண்டறியப்பட்டால், அவருடன் தொடர்பிலிருந்தவர்களை கண்டறிந்து தனிமைப்படுத்துவது எளிமையான செயலாக இருக்கும். முக்கிய நாடுகள் அனைத்தும் ஏறக்குறைய இதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயலியைத் தனது குடிமக்களுக்கு வழங்குகிறது. கொரோனாவை எதிர்த்து உலகமே போராடிக்கொண்டிருக்கும் வேளையில், இவை மக்களை மேலும் நவீன வடிவில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுகளுக்கு வழியைத் திறந்துவிடும் அபாயத்தில் உள்ளது..

இந்த செயலிகள் தனியுரிமைகளை மதித்து செயல்படுவதில்லை என்பது தொழினுட்பரீதியாக உள்ள குறைபாடு. அதற்கு காரணம் பெரும்பாலான செயலிகளை அரசின் உதவிக்கொண்டு உருவாக்குவது தனியார் பெருநிறுவனங்கள் தான். அரசுகள் ஏனைய துறைகளைப் போலச் சிறந்த கட்டமைப்பைத் தகவல் தொழில்நுட்பத் துறையில் கொண்டிருக்கவில்லை என்பது ஒரு காரணம். மேலும், ஏகாதிபத்திய அரசுகளின் அதிகாரவர்க்கம் பெருநிறுவன முதலாளிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாலும் தனியார் நிறுவனங்கள் நாடப்படுகின்றன. செயலிகளின் தனியுரிமை மீறலை அரசுகள் கண்டுகொள்ளவில்லை என்றாலும், குடிமக்கள் குறித்த தகவல்களைச் சேகரிக்கவும், மக்களின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் இதனை ஒரு கருவியாக மாற்றத்துடிக்கின்றன. இதன் மூலம், மக்களின் எண்ணவோட்டத்தை அறிந்து மக்கள் மீது அடக்குமுறைகளை ஏவிவிடுவதற்கும், கட்டுப்பாடுகள் மூலம் மக்கள் ஒன்றிணைதலைத் தடுப்பதற்கு ஏதுவாகவும் பயன்படுத்தப்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. புதிய இயல்புநிலை என்று இவையே நிரந்தரமாக்கப்பட்டால், ஜனநாயகம் வீழ்த்தப்பட்டு மன்னர்கள் காலம் போன்று ஏகாதிபத்தியமே கோலோச்சக் கூடும் நிலை ஏற்படலாம்!

கொரோனா வைரஸ் அதிதீவிரத்தை முதன்முதலில் எதிர்கொண்ட சீனா, அலிபாபா நிறுவனத்தின் அலிபே ஹெல்த் கோட் (Alipay Health Code) என்னும் செயலியை முதலில் ஹாங்சௌவ் (Hangzhou) நகரத்தில் அறிமுகப்படுத்தி, அடுத்த ஒரு வாரத்திற்குள் நூற்றுக்கும் மேற்பட்ட நகரங்களில் பயன்பாட்டிற்குக் கொண்டுவந்தது. தற்போது ஏறக்குறைய 100 கோடி பயனாளர்கள் உள்ளனர். இந்த செயலி, பயனாளர் ஒவ்வொருவருக்கும் அவர்




அளிக்கும் மருத்துவ தரவுகளைப் பொருத்து, பச்சை, மஞ்சள், சிவப்பு இவற்றில் ஒரு நிறக் குறியீட்டை (Color Code) அளிக்கும். ஹெல்த் கோட் (Health Code) என அறியப்படும் இது, பயனாளரின் உடல் நிலையைக் குறிக்கும். அதாவது, பச்சை நிறமென்றால் நோய்த்தொற்று இல்லாதவர் என்றும், சிவப்பு என்றால் நோய்த்தொற்றுடையவர் என்றும் பொருள்படும். பயனாளரின் உடல்நிலை குறித்த பல்வேறு தரவுகள் அடிப்படையில் அவருக்கு வழங்கப்படும் மதிப்பெண்ணைப் பொருத்து இந்த நிறக்குறியீடு வழங்கப்படுகிறது. இந்தியாவில் சிபில் எண் (CIBIL Score) எப்படி ஒருவரது பொருளாதார நிலையைக் குறிப்பிடுகிறதோ, அதே போல் சீனாவில் இந்த நிறக்குறியீட்டிற்கான மதிப்பெண் ஒருவரது உடல் நலன் நிலையைக் குறிப்பிடுகிறது.


பொது இடங்களுக்கு அல்லது வேலைக்கு செல்லும் போதும், வணிக சேவைகளை பெறும்போதும் இந்த செயலி கொண்ட அலைப்பேசியைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொருவரது நிறக்குறியீட்டையும் சோதித்த பின்னரே அவர் தொடர்ந்து செல்லவோ, சேவைகளைப் பெறவோ அனுமதிக்கப்படுவார். பச்சை நிறக்குறியீடை கொண்டிருக்கும் ஒருவர் எங்கு வேண்டுமானாலும் செல்ல அனுமதிக்கப்படுவார். மஞ்சள் அல்லது சிவப்பு நிறக்குறியீட்டை பெற்றவர்கள் அனைத்து மட்டங்களிலும் தடுக்கப்படுவார்கள். அதாவது, இது குடிமக்களை இரண்டு வகையாகப் பிரித்து அதற்கேற்றாற் போல் அவர்களை நடத்துகிறது. 1793-ல் அமெரிக்காவில் பரவ துவங்கிய மஞ்சள் காய்ச்சல் காலத்தில், 1853-ம் ஆண்டு லூசியானா மாகாணத்தில், நோய்வாய்ப்பட்டு குணமடைந்து நோய் எதிர்ப்பாற்றலை பெற்றவர்கள், நோய்த்தொற்று ஏற்படாதவர்கள் என பிரிக்கப்பட்டு, நோய் எதிர்ப்பாற்றலை பெற்றவர்கள் மட்டும் வேலைக்குச் செல்வதற்கும், திருமணம் செய்துகொள்ளவும் அனுமதிக்கப்பட்டது போன்ற ஒரு பாகுபாடு சீனாவில் தற்போது இச்செயலி மூலம் ஏற்பட்டுள்ளது. பச்சை நிறக்குறியீட்டை பெறாதவர்கள் குழந்தை பெற்றுக்கொள்வது, அரசின் சேவைகள் பெறுவது உட்பட அனைத்தும் மறுக்கப்பட்டு, மூன்றாம்தர குடிமக்களைப் போல் நடத்தப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த செயலி ஒருவரைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பிற்கு உட்படுத்துகிறது. உடல்நிலை தரவுகளோடு புகைப்பழக்கம், மது அருந்துதல் உள்ளிட்ட ஒருவரது வாழ்வியல் முறை பழக்க வழக்கங்களும் பதியப்படுகின்றன. இவை செல்லுமிடமெல்லாம் சோதிக்கப்படும் போது, அவரின் உடல்நிலை தரவுகளோடு, அவர் இதுவரை சென்று வந்த இடங்கள், மேற்கொண்ட பரிசோதனைகள், பழக்க வழக்கங்கள் அனைத்தும் கிடைக்கப்பெறுகிறது. அவை காவல்துறையினருக்குத் தானாகத் தெரிவிக்கும்படி இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் குடிமக்களின் தனியுரிமை பறிக்கப்படுகிறது. அதேபோல், சமூகத்தில் ஒருவரது நிலையை இந்த செயலி தீர்மானிக்கிறது. ஒருவருக்கான சேவைகள் வழங்குவதை வணிக நிறுவனங்கள் இந்த செயலி வழங்கும் தரவுகளைக் கொண்டே தீர்மானிக்கின்றன. அவரை தொடர்ந்து வேலையில் நீட்டிப்பதைக் கூட இச்செயலியின் அடிப்படையில் அவர் வேலை செய்யும் நிறுவனம் தீர்மானிக்கிறது. இப்படிப்பட்ட முக்கிய முடிவுகள் எடுக்க அடிப்படையான அந்த உடல்நிலை மதிப்பெண்கள் எப்படி வழங்கப்படுகின்றன என்பதும் வெளிப்படையாக இல்லை. சீரான உடல்நிலையோடு நோய்த்தொற்றுக்கான எந்த அறிகுறியும் இல்லாத ஒருவர், நோய்த்தொற்று பகுதிக்குச்

> **ஆதார் பாதுகாப்பை அம்பலப்படுத்திய பிரெஞ்சு ஹேக்கர் எலியட் ஆல்டர்சன், ஆரோக்ய சேது செயலின் பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் அதிலுள்ள தனியுரிமை மீறலை ஆய்வு செய்து அம்பலப்படுத்தினார்**

சென்று வந்தாலே சிவப்பு நிறக்குறியீடு வழங்கப்படுகிறது. இவை மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கி கடும் எதிர்ப்புகளையும் சந்தித்து வருகிறது.

பாதுகாப்பு விடயத்தில் உறுதியான சீனாவிலேயே இந்நிலை என்றால், இந்தியாவில் ஆரோக்ய சேது என்னும் செயலி பல்வேறு குறைபாடுகளோடு ஏப்ரல் மாத துவக்கத்தில் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. சீனாவின் அலிபே செயலியை போலவே, ஆரோக்ய சேது செயலியின் மீதும் ஆரம்பம் முதலே தனியுரிமை தொடர்பான கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. பயனாளர் அளிக்கும் தரவுகள் அடிப்படையில் உடல்நிலை



குறித்த சுயமதிப்பீடு செய்து செயலியில் சேமித்து வைக்கப்படுகிறது. அலைபேசியின் ப்ளூடூத் மற்றும் ஜி.பி.எஸ். கொண்டு இயங்கும் இச்செயலி, பயனரின் நடமாட்டத்தைத் தொடர்ந்து கண்காணித்து, இந்த செயலியைப் பயன்படுத்தும் மற்றவர்கள் அருகில் செல்லும் போது அவர்களுக்கு நோய்த்தொற்று குறித்த எச்சரிக்கையை அனுப்புகிறது. இச்செயலி சேமித்து வைத்திருக்கும் தரவுகளையும் அவர்களுடன் பகிர்கிறது. மேலும், சர்வர் கணினிக்கு அனுப்பப்படும் தகவல்கள் போன்றவற்றின் பாதுகாப்பும், அதனடிப்படையில் எழும்

> **ஒரு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, ஒருவரது விருப்பமில்லாமல் அவரது மருத்துவ தகவல்களை பெறுவதற்குக் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆனால், மருத்துவ தகவல்கள் கட்டாயமாக வழங்க வேண்டும் என்னும் ஒரு செயலியை, அரசே பணியாளர்களுக்குக் கட்டாயப்படுத்துவது தனியுரிமைக்கு மட்டுமல்ல, உச்சநீதிமன்ற தீர்ப்பிற்கும் எதிரானது**

ஆதார் பாதுகாப்பை அம்பலப்படுத்திய பிரெஞ்சு ஹேக்கர் (கணினி பாதுகாப்பை ஊடுருவுபவர்) எலியட் ஆல்டர்சன், ஆரோக்ய சேது செயலின் பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் அதிலுள்ள தனியுரிமை மீறலை ஆய்வு செய்து அம்பலப்படுத்தினார். செயலியின் உள் ஊடுருவ முடிந்த அவரால், செயலியின் உள் தரவுத்தளத்தை (Internal Database) அணுக முடிந்தது. இது மிகப்பெரிய பாதுகாப்பு குறைபாடு. இதன் மூலம், ஒருவரது அலைபேசியில் ஊடுருவ முடிந்தால், செயலியில் சேமிக்கப்பட்டிருக்கும் தகவல்களைப் பார்க்க இயலும். மேலும் இருப்பிட தகவலை, சுற்றளவைத் திருத்துவதன் மூலம், அந்த இருப்பிடத்தை மையமாகக் கொண்டு குறிப்பிட்ட சுற்றளவு பரப்பில் இருப்போரின் நோய்த்தொற்று குறித்த தகவலை அறிய முடியும். அதன்படியே, பிரதமர் அலுவலகத்தில் 5 நபர்களுக்கு உடல்நிலை குறைபாடு இருப்பதாகவும் கூறினார். இதன்மூலம் இந்தியாவில் எந்த ஒரு இடத்திலுள்ள நோய்த்தொற்று உடையோரையும் அறிய முடியும். இது, சுற்றுப்பகுதியில் உள்ளவர்களுக்கு மட்டுமே தெரியப்படுத்தும் என்பதற்கு எதிரான தனியுரிமை மீறல். மேலும், ஆல்டர்சன்னால் செயலியின் கோப்புகளைத் திறந்து பார்க்கவும் முடிந்தது. இவை அம்பலப்படுத்தப்பட்ட



தனியுரிமையும் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. எந்த ஒரு சட்டத்தின் படியும் உருவாக்கப்படாத ஆரோக்ய சேது செயலி, பயனாளர்களுக்கு எந்த ஒரு சட்ட பாதுகாப்பையும் வழங்கவில்லை. மேலும், இது Public Private Partnership (PPP) முறையில் உருவாக்கப்பட்டதாக இந்திய அரசு சொன்னாலும், அரசுடன் இணைந்து இச்செயலியை உருவாக்கிய அந்த தனியார் நிறுவனம் என்ன என்று சொல்லவே இல்லை. தாமாக முன்வந்து உதவியதாக சில தனிபர்களின் பெயரை மட்டுமே அரசு குறிப்பிடுவது, இச்செயலியின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

பிறகு, குறைபாடுகளைச் சரிசெய்த பின்பு, ஆரோக்ய சேது சார்பாக ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் குறைபாடுகளைச் சரி செய்ததைக் குறிப்பிடாமல், குறைபாடுகளை அம்பலப்படுத்திய ஆல்டர்சன்னிற்கு விளக்கத்தை மட்டுமே அளித்தது. மேலும், தனியுரிமை கொள்கை அறிக்கையில் சொல்லப்படாத அல்லது பயனாளர்களுக்கு தனியுரிமை மாற்றங்கள் குறித்த தகவல் தராமல், பல விதிமீறல்களைச் செய்ததும் அம்பலமானது.





இத்தகைய சூழலில், மத்திய மாநில அரசு ஊழியர்களும், தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் இந்த செயலியைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்றும், 100% அது பயன்படுத்தப்படுவதை நிறுவனங்களின் தலைமை உறுதி செய்ய வேண்டும் என்றும் ஏப்ரல் 29 அன்று உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. நொய்டாவில் ஒருபடி மேலே சென்று, ஆரோக்ய சேது செயலி அலைபேசியில் நிறுவப்படவில்லை என்றால், அது 6 மாத சிறை தண்டனைக்குரிய குற்றம் என்று அறிவிக்கப்பட்டது. 2017-ல் வழங்கப்பட்ட ஒரு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, ஒருவரது விருப்பமில்லாமல் அவரது மருத்துவ தகவல்களை பெறுவதற்குக் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆனால், மருத்துவ தகவல்கள் கட்டாயமாக வழங்க வேண்டும் என்னும் ஒரு செயலியை, அரசே பணியாளர்களுக்குக் கட்டாயப்படுத்துவது தனியுரிமைக்கு மட்டுமல்ல, உச்சநீதிமன்ற தீர்ப்பிற்கும் எதிரானது. மேலும், தனியார் நிறுவனங்கள் ஊழியர்களின் மருத்துவ தகவல்களை அறியும்பட்சத்தில், உடல்நிலை குறைபாடு உடையோரை வேலையை விட்டு நீக்கவும் கூடும் என்ற அச்சம் ஏற்படுகிறது. இதனால், கொரோனா காரணமாக வருமானத்தை இழந்தவர்கள், நிரந்தரமாக வேலையை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் இன்னும் இரண்டு வருடங்களுக்கு இந்த செயலி பயன்பாட்டில் இருக்கும் என்கிறார். தனியுரிமையின் கண்ணிவெடி வயல் (Privacy Minefield) என்று இச்செயலியைக் குறிப்பிடும் இணைய சுதந்திர டிஜிட்டல் உரிமைகள் அமைப்பு (Digital rights organisation Internet Freedom Foundation), அது நோக்கத்தின் வரம்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புகூறல் போன்ற அடிப்படை கொள்கைகளை கூட பின்பற்றவில்லை என்று கூறுகிறது.

சீனா, இந்தியா மட்டுமல்ல கொரோனாவினால் கடுமையாகப் பாதிப்புக்குள்ளான பெரும்பாலான நாடுகள் இதே போன்ற ஒரு செயலியைப் புழக்கத்தில் விட்டுள்ளது. இந்த கொரோனா கால செயலிகள், கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க கொண்டுவரப்பட்டுள்ளது என்றாலும், அவை மக்களைத் தொடர் கண்காணிப்பிற்குள் வைக்க அரசிற்கு ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. அரசின் ஒழுங்கு நடவடிக்கைக்குள் குடிமக்களைக் கொண்டு வரும் ஒரு கருவியாகவும் பயன்படுத்தக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. திரையரங்கம், வணிக வளாகம் போன்ற பொது இடங்களில், பணியிடங்களில், விளையாட்டு மற்றும் கேளிக்கை நிகழ்வுகளில், அரசியல் நிகழ்வுகளில், உரிமைக்கான போராட்டங்களில் என ஏறக்குறைய அனைத்து மட்டங்களிலும், ஒருவரது செயலியின் மூலம் மதிப்பிடப்பட்ட உடல்நிலை குறியீட்டைக் கொண்டு அனுமதிப்பது என்பது இனி இயல்பாக மாறக்கூடும். இன்று ஈ.பாஸ் வழங்கும் சேவையைச் செய்யும் இந்த செயலி, நாளை அரசின் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்குக் கட்டாயமாக்கப்படலாம். எந்த ஒரு சட்ட வரம்பிற்குள்ளும் இல்லாத இந்த செயலி குடிமக்களின் அடிப்படை உரிமைகளை நிர்ணயிக்கும் கருவியாக பயன்படுத்தப்படலாம். அப்படி ஒரு நிலை ஏற்படுமெனில், மக்களின் அடிப்படை உரிமைகள் மீது எந்த ஒரு சட்ட பாதுகாப்பும் இல்லாமல் செல்லலாம்.

இந்த கண்காணிப்பு வழிமுறைகள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பெருநிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்படக்கூடும். அத்தகைய பெருநிறுவனங்கள், காப்பீடு, கடன் போன்ற சேவைகளை வழங்கும் நிறுவனங்களோடு சேகரிக்கப்பட்ட இருப்பிட வரலாறு மற்றும் மருத்துவ தகவல்களை பரிமாறிக்கொள்ளலாம். இதனால், ஒருவருக்கு நியாயமாகச் சேர வேண்டிய காப்பீட்டுத் தொகையோ இல்லை, கடன் பெறுவதற்கான உரிமையோ மறுக்கப்படலாம். இனி வரும் காலங்களில் பிக் டேட்டா (Big Data) எனப்படும் தொழில்நுட்பம் கோலோச்சக்கூடும் என்ற நிலையில், கண்காணிப்பின் மூலம் சேகரிக்கப்படும் குடிமக்களின் மருத்துவ தகவல்கள் ஒரு வியாபார பண்டமாக மாறிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டு, பெருமுதலாளிகளின் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்ட பொதுமக்களுக்கான திட்டங்கள் உருவாக்கப்படும். நாடுகளுக்கிடையே ஏற்படும் வணிக ஒப்பந்தங்களில் இவை ஒரு பெரிய தாக்கத்தை உண்டாக்கும். அதேபோல், குடிமக்களை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டு எண்களை வழங்கும் வழிமுறையில் பல்வேறு சமூக குறியீடுகளைச் சேர்த்து, சமூக மதிப்பீட்டு எண்ணாகவும் மாற்றப்படக்கூடும். இவை ஆதார் அட்டையுடன் இணைக்கப்படுகையில் விளைவுகள் அபாயகரமானதாக இருக்கும்.

இங்கு அலைபேசி செயலிகள் மட்டுமல்ல, கண்காணிப்பு கேமராக்கள் (CCTV), ட்ரோன் கேமராக்கள், வங்கி மற்றும் கிரெடிட்கார்டு பரிவர்த்தனைகள், காரின் எண் தட்டு (Number Plate), ரோபோட்டுகள், முக அங்கீகார கேமராக்கள், உடல் வெப்பநிலையைக் கண்டறியும் கேமராக்கள் என அரசுகள் கண்காணிப்பு வழிமுறைகளை அதிகரித்துள்ளன. இதுவரை அந்நியமாக அறியப்பட்ட அரசின் கண்காணிப்பு, கொரோனா காலத்திற்குப் பிறகு, பழக்கப்பட்ட ஒரு விசயமாக மாறக்கூடும். இதனால் அரசின் அடக்குமுறைகள் அதிகரிக்கப்படும். சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, சமூக குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கும் முறையும் கொண்டுவரப்படலாம். உரிமைகளுக்காக போராடுபவர்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு, அவர்களது வேலைவாய்ப்பு, பயணம் போன்றவை கட்டுப்படுத்தப்படக்கூடும். அரசிற்கு





எதிராகப் போராடுபவர்களைப் பழிவாங்க எண்ணினால், சர்வர் மூலமாக அவர்களது செயலியில் மதிப்பீட்டு எண்ணை அல்லது குறியீட்டை மாற்றி, அவரை தனிமைப்படுத்தும் நிலைக்குத் தள்ளலாம். தனிநபர்களின் செயல்பாடுகளை பொருத்து, அவரின் அடிப்படை உரிமைகள் வகுக்கப்படலாம். இதனால் சமூக அளவில் ஏற்படக்கூடிய வளர்ச்சி, தனிநபர்கள் என்றளவில் சுருக்கப்படும்.

சென்ற 'மே 17 இயக்க குரல்' இதழில், தடுப்பூசி தொழில்நுட்பங்கள் எவ்வாறு ஆக்கிரமிக்கப்போகிறது என்று விரிவாக எழுதியிருந்தோம். அதனோடு இந்த கண்காணிப்பு முறைகளும் இணையும் போது, பிறப்பிலிருந்தே ஒருவரின் சமூக மதிப்பெண் கணக்கிடப்படும். மேலும் உடலளவிலான தனிநபர் இடைவெளியும், கையால் தீண்டாமையும் நிரந்தர பழக்கமாக மாறிவிடும் போது, அனைத்து கண்காணிப்பு முறைகளும் ஆர்டிபிசியல் இன்டலிஜென்ஸ் (கிமி) எனப்படும் செயற்கை அறிவின் பின்னணியில் இயங்கும் எந்திரங்களின் கட்டுப்பாட்டில் சென்றுவிடும். பணத்தாளை கையால் தொடுவதைத் தவிர்க்க, ஏற்கனவே சீனா தனது டிஜிட்டல் கரன்சியை அறிமுகப்படுத்திவிட்டது. இப்படியான டிஜிட்டல் கரன்சி முறையும் சமூக மதிப்பீட்டு எண்ணோடு இணைக்கப்படும் போது, ஒருவரது சமூகப் பொருளாதாரம் கிமி தொழில்நுட்பத்தோடு பிணைக்கப்பட்ட கண்காணிப்பு செயல்முறைக்குள் கட்டுப்படுத்தப்படும். சமூகத்தில் இது ஏற்படுத்தும் விளைவுகள் கற்பனைக்கெட்டா நிலையில் இருக்கும். மேலும், இந்த கண்காணிப்பு கட்டுமானம், உலகிலுள்ள சில பெருநிறுவனங்களே கட்டுக்குள் செல்லும் போது, அந்த பெருமுதலாளிகளால் கட்டுப்படுத்தப்படும் அதிகார வர்க்கத்தினால் இயங்கும் ஏகாதிபத்திய அரசுகள் மக்கள் மீது அடக்குமுறைகளை ஏவி, பெருநிறுவனங்களின் சுரண்டலுக்குத் துணைபோகும். இந்தியா, சாதியக் கட்டுமானத்தில் 2000 வருடங்கள் பின்னோக்கி தள்ளப்படும். அப்போது, அரசுக்கு எதிரான கலகக்குரல்களை நசுக்கும் வேலையைப் பார்ப்பனியம் செவ்வனே செய்யும். ஒட்டுமொத்தத்தில், சர்வாதிகார முடியாட்சியில் மக்கள் மீது செலுத்தப்படும் அடக்குமுறைகள் ஜனநாயக குடியாட்சியில் இயல்பானதாக மாற்றப்படும் சூழலையே இந்த கண்காணிப்பு வழிமுறைகள் ஏற்படுத்தியுள்ளன.

●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

# மின்சாரம் முழுவதையும் தனியார்மயமாக்கப்படுவதற்கான முன்னோட்ட கூட்டத்தை நடத்தி முடித்த மோடி



இந்தியாவில் தொழில்த்துறை உட்பட பல துறைகள் வளர்ச்சி அடைந்ததென்றால் அதில் மின்சாரத்தின் பங்கு முதன்மையானது. அப்படிப்பட்ட மின்சாரத்தை தொடர்ந்து இந்தியாவை ஆண்ட மற்றும் தற்போது ஆளும் கட்சிகள் கொஞ்சம் கொஞ்சமாக தனியாருக்கு கொடுக்கும் வேலையை செய்து வந்தார்கள். தற்போது பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியிலிருக்கும் பாசிச பாஜகாவின் மோடி அரசு மின்சாரம் முழ்வதையும் தனியாருக்கு கொடுக்கும் வேலையில் இறக்கியிருக்கிறது. இதற்காகவே மின்சார திருத்தச்சட்டம் 2020என்ற மசோதா ஒன்றை தயாரித்து மாநிலங்களெல்லாம் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில் இருக்கும்போது அனுப்பியிருக்கிறது.

இந்த சட்ட மசோதாவின் தீமையை முதன்முதலில் மே17 இயக்கம் தான் மக்களுக்கு அறிவித்தது. இதன் பின் விவசாயிகள் மற்றும் தொழில்துறையினரிடையே மிகப்பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு தற்போது நாடுமுழுவதும் போராட்டங்கள் நடைபெற்றுவருகிறது. ஆனால் இதைபற்றியெல்லாம் கவலைப்படாமல் மின்சார திருத்தச்சட்டம் 2020ஐ எப்படியாவது நிறைவேற்றியே தீருவது என்கிற ரீதியில் நேற்று 27.05.20 புதன் அன்று மின்சார அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தியிருக்கிறார். இந்த கூட்டத்தில் பேசிய மோடி

- மின்சார விநியோகத்தை தனியாருக்கு கொடுப்பதால் நன்மை என்று மாநில அரசு மக்களுக்கு விளக்கவேண்டும்.
- மின்சார் விநியோகத்தில் இருக்கும் தனியார் நிறுவனங்கள் தங்களது வேலைத்திறனை மாதந்தோறும் நாட்டு மக்களுக்கு தெரிகிற மாதிரி விளம்பரப்படுத்தவேண்டும். போன்ற பொன்னான அறிவுரைகளை அள்ளிவீசியிருக்கிறார்.


ஆக கிட்டதட்ட மின்சாரம் முழ்வதும் (உற்பத்தி, விநியோகம்) தனியாருக்கு கொடுக்க மோடி கும்பல் முடிவெடுத்துவிட்டது என்பதை தான் அவரின் இந்த கூட்டத்தின் பேச்சு உணர்த்துகிறது.

https://www.business-standard.com/article/economy-policy/pm-modi-reviews-power-sector-says-state-specific-solutions-needed-120052800333_1.html

**மே பதினேழு இயக்கம்**
**29 மே 2020**

# தமிழர்களை வஞ்சித்த இந்திய மோடி அரசு!

## மே பதினேழு இயக்கம் – 29 மே 2020




ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் மருத்துவ கல்லூரிகளில் குறிப்பிட்ட மருத்துவ இடங்களை மத்திய தொகுப்பு கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கப்படும் மத்திய அரசின் இடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு வழங்க வேண்டும்.

ஆனால் மோடி அரசு கடந்த மூன்றாண்டுகளில் இந்த நடைமுறையை செயல்படுத்தாமல் விட்டுவிட்டது. இதனால் இந்தியா முழுவதும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கிடைக்கவேண்டிய சுமார் 11027 மருத்துவ இடங்களும், தமிழகத்தில் சுமார் 1167 மருத்துவ இடங்களும் கிடைக்காமல் போயிருக்கிறது.

இதைவிடக் கொடுமை பிற்படுத்தப்பட்டோருக்கான அந்த இடங்களை உயர்சாதி பார்ப்பனர்களுக்கு தாரை வார்த்திருக்கிறது மோடி அரசு. ஏற்கனவே 3%க்கும் குறைவாக இருக்கும் பார்ப்பனர்களுக்கு 10% இடஒதுக்கீட்டை வாரிவழங்கிய மோடி. தற்போது பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் மருத்துவ இடங்களையும் பறித்து பார்ப்பனர்களுக்கு கொடுத்திருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மாணவர்களே பாஜகாவின் இந்த சமூக அநீதியை எதிர்க்க தமிழர்களாய் ஒன்று திரள்வோம்.

‘மே 17 இயக்கக் குரல்’ இதழை தரவிறக்கம் செய்ய

**www.may17kural.com**

**www.may17iyakkam.com**

தொடர்பு எண் (பேச / வாட்சாப்)

**+91 98840 72010**

கருத்துகள் தெரிவிக்க மின்னஞ்சல்

**may17voice@gmail.com**

குரல் வளர்ச்சிக்கு நன்கொடை செலுத்த

**+91 98840 72010**



## நிமிர் பதிப்பகத்தின் வெளியீடுகள்

நிமிர் பதிப்பகம்

நிமிர் பதிப்பகத்தின் புத்தகங்களை இணையத்தில் பெற

**www.nimirbooks.com**

98414 85116 | nimirbooks@gmail.com




விலை ரூ.400 | விலை ரூ.60 | விலை ரூ.55 | விலை ரூ.50